திருப் பேரூர்,

ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள்,

திரு வாய் மலர்ந் தருளிய,

# வைராக்ய தீபம்.

இதற்கு,

திருப் போரூர்,

ஸ்ரீ சிதம்பர சுவாமிகள்,

இயற்றிய — பொழிப் புரையும்,

—o—

கோவிலூர் மடாலயம்,

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள்

மாணுக்கரும், பர சமய கோளரியாரும்,
உபயபாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும்,
மண்டலேசுவரரும், திருப் பூவண
மடாதிபதியும் ஆகிய,

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்

மேற்படி பொழிப் புரையினையே
புத் துரை யாக்கிய, பத வுரையும்,
இவை மூன்றும்,
மேற்படி சுவாமிகளால் பரிசோதிக்கப் பெற்று,
அச்சிடப் பெற்றது.

ரைட்] 1938. [விலை அணா எட்டு.

ராஜேஸ்வரி
பிரஸ்,
மதுரை.
1938.

சிவமயம்.

# உபோத்காதம்.

உலகில் மக்களால் விரும்பப்படுவது சுகம் ஒன்றே யாகும். அச் சுகம் சவிஷய, நிர் விஷய பேதத்தால் இரு வகைத் தாம். சவிஷயம், மநுடர் முதல் இரண்யகர்ப்ப பரியந்தம் பதி னொரு வித மாக உயர்வு தாழ்வோடு கூடி யிருத்தலின், அவற்றால், வரப் பட்ட சுகமும், உயர்வு தாழ் வுடையன வாம். நிர் விஷய சுகம் ஒரே படித் தாம். அந்த நிர் விஷய சுகத்தினை அடைவதற்குப் பதி னொரு வகையான சவிஷய சுகமும், ராக - விராக வாயிலாகப் படிப் படியாகப் பரம்பரா சாதந மாம். அவற்றுள், ராக வாயிலாக வுள்ள சுகத்தினை விளக்க, உலகில் அநேக வித்வான்கள் அநேக பிரகார மாக நூல்கள் செய்திருக்கின்றார்கள். விராக வாயிலாக வுள்ள சுகத்தினை விளக்க, அநேகம் பெரியார் சம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளில், அநேக நூல்கள் விரிவாகவும், சுருக்க மாகவும் எழுதி யிருக்கின்றார்கள். அங்ஙன மாயினும், திருப் பேரூரின்கண், முந் நூறு வருடங்கட்கு முன் சமாதி யுற்றிலங்கும் சாந்த லிங்க சுவாமிகள் 100 எழு சீர்க் கழி னெடி லடி ஆசிரிய விருத்தப் பாக்களில், மந்தர்கட் குபயோக மா மாறு பல மேற்கோ ளோடு கூடிய, வைராக்ய தீபம் என ஒரு நூல் செய்திருக்கின்றார் கள். அந் நூல் துறவிகளுக்கும், இல் லற விராகிகளுக்கும் மிக உபயேக முடைய தாகும். இதற்கு, மேற்படி சாந்த லிங்க சுவாமி களின் மாணுக்கர் - விருத்தாசலம் - குமார தேவ சுவாமிகள், அவர் மாணுக்கர், திருப் போரூர் - சிதம்பர சுவாமிகள், ஓர் பொழிப் புரை, (26) நாலில், (73) உதாகரணச் செய்யுளோடு கூட வியற்றி யிருக்கின்றார்கள். அந்த நூல் இந்த வுரையோடு கூட

இது காறும் விளங்கி வந்தும், பொழிப் புரையின்படி மூலச் செய்யுளின் பொருளை யாவரும் உணராமையைக் கண்டு, இதற் கோர் பத வுரை யிருக்கின், யாவருக்கும் பொழிப் புரையின்படி செய்யுளுக்குப் பொருள் விளங்கு மெனக் கருதி, பலர் வேண்டு கோட் கிணங்கி, உடய பாஷா வேதாந்த பிரவர்த்தகாசாரியரும், மண்டலேசுவரரும், பர சமய கோளரியாரும், திருக் [illegible]ர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் அவர்கள் மாணாக்கரும்; திருப் பூவண மடாதிபதியு மாகிய, ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள், இந் நூலுக்கு, மேற்படி சிதம்பர சுவாமிகளின் பொழிப் புரையினையே, கூடு மான வரைச் சரிக்கட்டிப் பத வுரை இயற்றினார்கள். பொழிப் புரையினையும் சேர்த்துப் பத வுரை யுடன் வெளி வர வேண்டு மென்று அநேகர் விரும்பினமையின், பொழிப் புரையினை, முன்னர், சென்னையில், ஸ்ரீ ஆறு முக நாவலவர்கள் - சென்னை - ஊ. புஷ்ப ரத செட்டியா ரவர்கள் - பேரூர் - சாந்த லிங்க ஸ்வாமிகள் மடத்தார், முதலியவர்கள், அநேக முறை அச்சிட்டு வெளியிட் டிருப்பினும், அவற்றில், 'விடைய தூரிறையே' என்ற பாட்டின் அவதாரிகை பிறழ்ந்து, "பிறப்பெனு முவரி" என்ற பாட்டின் பொழிப் புரையின் கீழும், "வேண்டி னுண்டாக" என்ற பாட்டின் அவதாரிகை, "தனதகத் தகலா" என்னும் செய்யுளின் தாத்பரியத்திலும், "உச்சியம் போதின்" என்ற பாட்டின் அவதாரிகை, "பகர்தரு தொழில்" என்னும் செய்யுளின் தாத்பரிய மத்தியிலும், "நித்திரை தடைமீறிடில்" என்னும் செய்யுளின் உதாகரணமா யுள்ள, "உறங்கிடிற் பிணமே" என்ற செய்யுள், "நடந்துறங் கொருவன்" என்ற செய்யுளின் உதாகரணத்தினோடு சேர்த்தும் அச்சிட்டிருக் கின்றார்கள். அவை பிறழ்ச்சி யாகலின், அவற்றினை எல்லாம் நன்கு பரிசோதித்துத் திருத்தி, இருக்க வேண்டு மிடங்களில் வைத்துச் செப்பம் செய்து, பொழிப் புரையினையும், பத வுரையினையும்

சேர்த்துப் படிப்பவர்கட்குச் சௌகரியமா யிருக்கும் வண்ணம் ஒரு புத்தகமாகவே அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பத வுரையினையும், பொழிப் புரையினையும், ஒப்பிட்டு நோக்குவார்க்கு இதனது அருமை புலனும். சிதம்பர சுவாமிகள் இயற்றிய உரை உதாகரச் செய்யுட்கள், இன்ன நூலில், இன்ன இடத்தில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு, அச் செய்யுளின் முதற் குறிப்பும். அத்தியாயம் செய்யுள் நம்பர்களும், அடங்கிய விவர அட்டவணை ஒன்று இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆகலின்; யாவரும் வாங்கிப் பார்த்து இன்புறு மாறு விரும்புகின்றனம்.

திருப் பூவணம்.

## பாட்டு முதற் குறிப்பு அகராதி.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடுத்தவி | 63 | ஒருவனுக் | 171 | துன்னியாண | 3 |
| அரம்பை | 69 | ஒன்றிய | 79 | தென்பாவை | 147 |
| அரிதுபெற் | 26 | கயல்விழி | 13 | தேர்ந்திடி | 61 |
| அருந்தவம் | 154 | கருடனை | 122 | தேவர்மா | 169 |
| அருந்தவ வி | 167 | கருப்பமா | 51 | தோன்றினின் | 16 |
| அருந்திய | 7 | கருமமொன் | 31 | நடந்துறங் | 144 |
| அரும்பொறி | 130 | கற்பழ மாக | 10 | நித்திரை | 146 |
| அரையன்வா | 8 | காரிய மா | 119 | நிறந்தருந் | 36 |
| அறவுநித் | 149 | கான்றசோ | 107 | நீரிடத் தன்றி | 114 |
| அறைதலிற் | 105 | குலவுசெங் | 123 | பகர்தரு | 131 |
| இக்கணத் | 47 | சமரமுற் | 112 | படையெடுத் | 83 |
| இத்தரை | 163 | சற்குரு | 128 | பவத்தனிப் | 33 |
| இத்திற ன | 109 | சாதக தசை | 80 | பாரினட் டா | 126 |
| இதுநெறி | 116 | சிறந்த | 157 | பிறந்தவப் | 49 |
| இந்திர ஜால | 85 | சிறியவர் | 57 | பிறப்பிறப் | 24 |
| இம்மையி | 104 | செப்பிருங் | 121 | பிறப்பெனு | 37 |
| இருவகைச் சார் | 70 | சொற்றிடின் | 86 | பிறிதுநோய் | 99 |
| இருவகைப் பற் | 72 | ஞானசா த | 135 | பெண்ணை | 142 |
| இளமையிற் பிணி | 22 | ஞானியஞ் | 52 | பெற்றதாய் | 155 |
| இளமையின் மனை | 44 | ஞானியே | 59 | பொருளறத் | 98 |
| ஈங்கறை | 117 | தத்துவ மு | 88 | மிகுத்திடு | 136 |
| ஈதலே | 34 | தந்தைதாய் பல | 162 | முள்ளில்சில் | 75 |
| உச்சியம் | 133 | தந்தைதாய் முத | 93 | மைப்படி | 158 |
| உடலிதுற் | 17 | தம்மிடத் | 103 | யாதியா | 110 |
| உருட்கறங் | 14 | தனக்கினி | 101 | யோகசா | 64 |
| உள்ளதுண் | 166 | தனதகத் த | 41 | வதுவைநாண் | 125 |
| உறக்கமும் | 150 | தனித்திருந் | 91 | வருத்தமொன் | 56 |
| ஊனையோம் | 164 | தனைநனி | 160 | விடத்தகு | 77 |
| எங்குள | 152 | தன்னரு கு | 141 | விடுக்குநர் | 95 |
| எடுத்துள | 89 | திரிவித வுலகத் | 54 | விடையதா | 39 |
| எப்பொருள் | 5 | திருவருள | 2 | வினைப்பிறப் | 29 |
| எய்தவ றற | 139 | துணையில் | 12 | வேண்டினுண் | 42 |
| எரிந்தெழு | 138 | துறந்தவ | 96 | வேறக் கொ | 74 |
| ஐம்புல ன | 66 | துன்பவெம் | 28 | | |

# உதாரண சாத்திரங்கள் 26. கவி-73.

1. சிவ தருமோத்தரம்--9.

1. வலஞ்செய்து 2 25
2. இறந்தே முனமே 8-20
3. என்றென்றெண்ணி 8-21
4. அங்கி யதனிற் 8-22
5. கருப்பா சயமே 8-23
6. பொற்க டத்தில் 8 31
7. தநத்தினை 8-86
8. பரண மாகிய
9. வந்திடு மரணத்

2. திருக் குறள்—2.

10. நன்றறி வாரிற் 2-13-2
11. அகலா தணு 2-7-1

3. தேவி காலோத்தரம்--4.

12. ஒருபொருளைக் காலத்து
13. துக்கசுக
14. சமயா சார
15. தனக்கினிய
16. நடுங்காம

4. வாசிட்டம்—4.

17. மிகமுயன்று 2-0-4
18. வெங்காதற் 4-4-43
19. வெம்புதல்போய் 5-7-22
20. எனக்கீ தென்னு 6-0-63

5. சம்பந்த ஸ்வாமிகள் தேவாரம் 2.

21. புலனைந்தும்- திருவையாறு 1
22. தந்தைதாய் புத் - திருவாரூர் 9

6. தத்வ ரத்நாகரம்--1.

23. வாக்கொடு மநமு

7. திரு மந்திரம்—7.

24. பிறப்பறி யார் 1626
25. இருந்தவ ருந்தி 1627
26. அச்சினு ணின்ற 1885
27. பறந்தல கேழும் 1888
28. விரைந்தன்று 2087
29. உடலாங்கு கை
30. நிற்றலி ருத்தல்

8. திரு நாவுக் கரசு சுவாமிகள் தேவாரம்--2.

31. பழகி னல்வரும் -. திருச்சேறை 9
32. நங்க டம்பனை - திருக்கடம்பூர் 9

9. ஞாநாசாரம்—1.

33. மருளுறு மெவையு

10. அருட் பிரகாசம்—1.

34. உயிர்சித்த

11. அறி வாநந்த சித்தியார்—1.

35. அளிமலர் விட்டுவிட்

12. காசி காண்டம். 1.

36. கருவிடை யழுந்தூந்

13. சுந்தர சுவாமிகள் தேவாரம்—1.

37. தேனைக் காவல் - ஊர்த்தொகை 7

14. மெய்ஞ் ஞாந விளக்கம் 5.

38 நலமிலா
39. பிணியினுல்

40. பிறிவி லாத
41. முன்னமே பாக
42 உறங்கிடிற்

15. திரு வள்ளுவ மாலை--2.

43. செய்யா மொழி 23 வெள்ளி வீதியார்
44. ஆரியமுஞ் - 43 வண்ணக்கஞ் சாகரனார்

16. கூர்ம புராணம்--3.

45. ஈங்கிவைபி ற
46. இல்லறமு ய
47. இவ்வகை யைய

17. சமாதி--2.

48. ஒழுக்கமே
49. பலன்கள்

18. சமயாசாரம்--1.

50. புத்திரர் மனை

19. அநுபவ சித்தி--3.

51. மறைக ளாகம
52. இறைக ணன்
53. தெய்வ வாணிநற்

20. ஆநந்த போதம்--1.

54. கள்ளக் கோலக்க

21. குறுந் திரட்டு--8.

55. பிறந்தவ ரி
56. தீய வசுரர்
57. குருடன் புகரா
58. வில்வி ளங்கிய
59. அண்டமெண்
60. தூமங் காட்டுஞ்
61. பாய்ந்துமா
62. ஒப்பி லம ஞேதி

22. பெருந் திரட்டு--3.

63. அத்தனொ டன்னைக்
64. வையினு வாழ்த் (தோன்றி)
65. தன்னெஞ்சந் (ஞாந சித்தி)

23. திவ்யப் பிரபந்தம்--2.
(திரு வாய் மொழி)

66. முதுகு பற்றிக்
67. பண்டு காம

24. பகவற் கீதை--2.

68. எண்டிகளு 6-13.
69. காரண மிறந் 12-41.

25. பிரஹ்ம கீதை--1.

70. ஆதலா லறியு 9-13.

26. தத்துவ ராய சுவாமிகள் அடங்கன் முறை--3.
(நான் மணி மாலை-1.)

71. ஒளித்தகு மறி 9
(ஷை அஞ்ஞ வதைப் பரணி 1)
(காமாதி படைச் செருக்து)
72. கோப மிக்கபோ 22
(ஷை அமிர்த சாரம் 1)
73. செவ்வே யுடலுஞ் 111

ஆக சாத்திரம் 26, கவி 73.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 16 | கானலின் | கானல். |
| 4 | 6 | ஒளி | ஒளி -. |
| 4 | 12 | அபிந்நா சத்தி | அபிந்நா சத்திகள். |
| 4 | 13 | அலேகள் | அலேகளே. |
| 5 | 14 | பொருள்களும் | பொருள்க ளெல்லாம். |
| 5 | 26 | நாம தேயத்தை | நாமத்தை. |
| 6 | 10 | நாம தேயத்தை | நாமத்தை. |
| 7 | 13 | வியாதிகள் | வியாதிகளே. |
| 9 | 4 | சொல்லிய | சொன்ன. |
| 9 | 14 | எ - று. | எ - று. 'முடங்கலது' என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. மற்று - அசை. |
| 11 | 26 | முற்றவத்தா | 'முற்றவத்தா. |
| 14 | 9 | எ - று. | எ - று. ஆல் - அசை. |
| 15 | 9 | விளங்காநின்ற | விளக்காநின்ற |
| 15 | 17 | குறைந்தது | குறைந்தது. ஏ - அசை. |
| 15 | 23 | விளங்காநின்ற | விளக்காநின்ற. |
| 17 | 10 | ஏ - ஆல் - அசை | ஏ - ஆல் - தான் - அசை. |
| 18 | 17 | வியாதி (களினுற் | வியாதி(காம வியாதிகளினுற். |
| 18 | 20 | வியாதியைத் | அவ் வியாதியைத். |
| 20 | 9 | பசி நோய்களினுலும் | பசி நோய் காம நோய் களினுலும். |
| 22 | 25 | இராசாவைச் சாரும் | இராசாவை வந்து சாரும். |
| 23 | 13 | எ - று. | எ - று. கொல் - ஏ - அசை. |
| 23 | 26 | மிகுத் திருப்ப | மிகுந் திருப்ப. |
| 24 | 26 | தறப்பெருஞ் | தறப் பெருங். |
| 25 | 11 | குறுக்கி | குறுக்கு. |
| 25 | 17 | எ - று. | எ - று. மற்று - ஏ - அசை. |
| 25 | 18 | போல | போல். |
| 25 | 26 | செல்வதென் | சொல்வ தென்னே. |
| 27 | 12 | விரும்புதலே | விரும்புதல். |
| 27 | 12 | எ - று. | எ - று. மற்று - ஏ - அசை. |
| 28 | 22 | பிறவியே யாயினும் | பிறவி யாயினும். |
| 30 | 12 | பய னுய | பய னுகிய. |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 30 | 14 | வீணாளாகப் | வீணாகப். |
| 30 | 19 | மென்றும் | மென்னும். |
| 30 | 11 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 30 | 27 | பயனாய | பயனாகிய. |
| 30 | 28 | வீணாளாகப் | வீணாகப். |
| 32 | 11 | எ - று. | எ - று. மற்று - ஏ - அசை. |
| 33 | 8 | குரவையை | குரவை. |
| 33 | 9 | பாவை | பாவையை. |
| 33 | 25 | எ - று. | எ - று. ஆல் அசை, 'பாவை குரவையை' என்பதில், 'குரவை பாவையை' என - ஐ - பிரித்துக் கூட்டப் பட்டது. |
| 34 | 17 | அறனெனப்பட்டது'' | "அற னெனப்பட்டது". |
| 34 | 18 | வினை | வினை,. |
| 35 | 2 | ஈதல் | ஈதலே. |
| 35 | 16 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 36 | 8 | யிதற்குரியா | யிதற்குரிய. |
| 37 | 5 | எ - று. | எ. - று. ஆங்கு - ஏ - அசை. |
| 37 | 18 | திகழ்த்தும் | திகழ்த்திடும். |
| 38 | 4 | சாரவும் | சார்வும். |
| 38 | 14 | என் | என. |
| 38 | 16 | எ - று. | எ - று. ஆல் - அசை, |

38-வது பக்கம். 26-வது, 27-வது வரியில், "மாதா பிதாக்களை நீ இன்னாரென்று அறியாய் என்று கூறி, மேல் மாதா பிதாக்களாவார் இன்னாரென்று கூறுகின்றார்" என்ற இரண்டு வரிகளையும், இங்கே நீக்கி விட்டு, 29-வது பக்கம் "விடையதூரிறையே" என்ற செய்யுளுக்கு முன்னர், அவதாரிகையாகப் படித்துக் கொள்க. இவ் வித தப்பிதம் முன்னோர் போன வழி போயினமையின் வந்தது, என்று உணர்க.

| | | | |
|---|---|---|---|
| 39 | 25 | எ - று. | எ - று. மற்று - தான் - ஏ - |
| 41 | 23 | எ - று. | எ - று. ஏ - அசை. [அசை. |
| 43 | 10 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 43 | 28 | புண்ணியர்' | 'புண்ணியர்'. |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 45 | 18 | எ - று. | எ - று. ஆல் - ஆங்கு - ஏ - [அசை. |
| 47 | 8 | இருந்த | இருந்தது. |
| 47 | 25 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 49 | 30 | எ - று. | எ - று. ஏ - ஏ - அசை. |
| 51 | 17 | ஞானம | ஞானம். |
| 51 | 30 | எ - று. | எ - று. கொல் - ஏ - அசை. |
| 52 | 24 | அஞ்ஞானம் | அஞ்ஞானம் தான். |
| 53 | 11 | அசை நிலை | ஆல் - அசை நிலை. |
| 56 | 9 | பிரம்ம | பிரமம். |
| 57 | 16 | மென்பதும் | மென்பதும். |
| 60 | 9 | எ - று. | எ - று. தான் - ஏ - 'புரிதல் தானும்' என்பதில், தான் - [அசை. |
| 68 | 23 | யாகுந் | யாக்குந். |
| 68 | 24 | சிவ | சிவம். |
| 72 | 12 | ஏ. | எ. |
| 74 | 24 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 76 | 7 | ஒழித்தலே | ஒழித்தல். |
| 76 | 10 | ஏ - அசை. | ஏ - ஓ - அசை. |
| 77 | 11 | திரிட வரிதா | திட வரிதா. |
| 85 | 15 | நன் | நல். |
| 85 | 24 | எ - று. | எ - று. ஏ - அசை. |
| 86 | 18 | குடும் பாம் | குடும்ப பாம். |
| 93 | 27 | எ - று. ஏ - அசை. | எ - று. ஏ - அசை. 'நெறியது' என்பதில், அது பகுதிப் பொருள் விகுதி. |
| 96 | 22 | ஞான - . | தூய - ,, , ஞான - . |
| 96 | 26 | அச்சமும் | அச்சம். |
| 97 | 10 | எ - று. | எ - று. உம் - அசை. |
| 103 | 25 | அடையினும் | அடையின் |
| 103 | 28 | எ - று. ஏ - அசை. | எ - று. ஏ - உம் - அசை. |
| 109 | 27 | எ - று. | எ - று. 'அன்னோன்றனை' என்பதில் தன் - அசை. |
| 111 | 13 | எ - று. | எ - று. ஏ - ஆல் - அசை. |
| 111 | 20 | சிறந்த | செறிந்த. |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 112 | 9 | எ - று. ஆல் - அசை. | எ - று. ஆல் - 'குருபரன் றன்னை' என்பதில், தன் - அசை. |
| 115 | 8 | எ - று. | எ - று. மற்று. 'இலார் தமை' என்பதில், தம் - அசை. |
| 116 | 23 | எ - று. | எ - று. மற்று 'அதுதனில்' என்பதில், தன் - அசை. |
| 125 | 6 | மானுடன் | மானிடன். |
| 125 | 23 | மானுடன் | மானிடன். |
| 126 | 26 | மற்று - அசை. | மற்று. 'போலிகள் தமக்கும்' என்பதில், தம் - அசை. |
| 127 | 18 | எ - று. | எ - று. 'இவன் றனக்கு' என்பதில், தன் - அசை. |
| 129 | 8 | போக்காநிற்பன் | போக்காநிற்பன். |
| 130 | 20 | வரும்படிக்கு | வரும்படிக்கு. |
| 131 | 18 | செய்து | செய்து, |
| 133 | 5 | சுப முயலவை | சுப முயலவை. |
| 135 | 17 | வரத்தனையாம் | வர்த்தனையாம். |
| 135 | 26 | அசை நிலை | அசை நிலை. 'ஊனது' என்பதில், அது பகுதிப் பொருள் விகுதி. |
| 136 | 25 | (என்றும், | (என்றும்), |
| 139 | 7 | எ - று. | எ - று, ஏ - அசை. |
| 140 | 15 | எ-று. மற்று-அசை. | எ - று. மற்று - மற்று - ஏ - அசை. |
| 141 | 19 | திவினைகளுக்கு | தீவினைகளுக்கு. |
| 143 | 17 | ஏ - அசை நிலை | ஏ - அசை நிலை. 'விடன் றன்னை' என்பதில், தன் - அசை. |
| 145 | 6 | எ - று. ஏ - அசை. | எ - று. ஏ - அசை. 'ஒருவன் றன்னை' என்பதில், தன் - அசை. |
| 150 | 25 | உறக்கமும் | உறக்கம். |
| 150 | 26 | பசியும் | பசி. |
| 150 | 26 | மிகுந்திடில் | மிகுந்திடில் உம். |
| 151 | 2 | போழ்து | போழ்து உம். |
| 159 | 19 | ஏ - அசை | மற்று - ஏ - அசை. |

உ

கணபதி துணை.

# வைராக்ய தீபம்

## மூலமும், பத உரை, பொழிப்பு உரையும்.

### பாயிரம்.

#### கணபதி வணக்கம்.

ஆரண முகம்புகழ், வாரணந் துதிசெயக்,
காரண சுகபரி, பூரணம் வருமே.

#### சுப்பிரமணியர் வணக்கம்.

போரூ ரிறைவன், சீரூர் தாளே,
யேரூர் தாநினை - நேரூர் நெஞ்சே.

#### நூ லாசிரியர் வணக்கம்.

ஆய்ந்த வின்பம், வாய்ந்துள நிறையச்,
சாந்தை யன்பதம், யாந்தொழு வோமே.

#### குரு வணக்கம்.

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு
டூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கர மலர்க டூய்த்தொழ
நேயமோ டநுதிந நினைக நெஞ்சமே.

## கடவுள் வணக்கம்.

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன் றிகழ்தரு முலகெலாந் தன்பான், மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தால் வந்தெழு கானனீ ராக, விருமையா மதிமாய்த் தறிஞராங் காந்தத் திடையருட் சுட*ருமிழ்ந் திலங்கு, மொருசிவா தித்தன் றனைநம திருள்போ யொழியநா டொறுமிறைஞ் சிடுவாம். (1)

பத வுரை. திரு - அழகு, வளர் - வளராநின்ற, கமலத்து - தாமரை மலரின்கண் (எழுந் தருளி யிருக்கின்ற). அயன் - பிரமனாலே, செய் - சிருட்டிக்கப்பட்ட, இ - இந்த புவி - பிருதிவி தத்துவம், முன் - முதலாக (நாத தத்துவ மீறாக), திகழ்தரும் - விளங்காநின்ற, உலகு - பிரபஞ்சம், எலாம் - எல்லாம், தன்பால் - தன்கண், மருவு - பொருந்திய, சித் சக்தி - சிற் சக்தி. எனும் - ஆகிய, கிரணத்தால் - கிரணத்தினாலே, வந்து - வந்து, எழு - தோன்றின, கானல்- கானலின், நீர் - ஜலம்,ஆக - ஆக, அறிஞர் - அறிஞர்களது, இருமை ஆம் - துவித (புத்தி) ஆகிய, மதி - சந்திரன் (ஒளியை), மாய்த்து - மறைத்து, ஆம் - (அவர்கள்) ஆகிய, காந்தத்திடை - காந்தக் கற்களிடத்து, அருள் - கிருபை யாகிய, சுடர் - அக்கினியை, உமிழ்ந்து - தோன்றச் செய்து, இலங்கும - விளங்காநின்ற, ஒரு - ஒப் பற்ற, சிவ - சிவ, ஆதித்தன் தனை - சூரியனை, நமது - நமது, இருள் - (அஞ்ஞான மாகிற) இருள், போய் - போய், ஒழிய - நீங்கும்படி, நாள் தொறும் - எக் காலமும், இறைஞ்சிடுவாம் - வணங்குவாம், என்றவாறு.

## பொழிப் புரை.

எ - து. அழகு வளராநின்ற தாமரை மலரின்கண் எழுந் தருளி யிருக்கின்ற பிரமனாலே சிருட்டிக்கப்பட்ட இந்தப் பிருதிவி

---

* உமிழ்ந்து - பிறவினைப் பொருளில் வந்தது.

தத்துவ முதலாக நாத தத்துவ மீருக விளங்காநின்ற பிரபஞ்ச மெல்லாம், தன்கட் பொருந்திய சிற் சத்தி யாகிய கிரணத்திஞலே வந்து தோன்றின கானற் சலமாக, அறிஞர்களது துவித புத்தி யாகிய சந்திர னொளியை மறைத்து, அவர்க ளாகிய காந்தக் கற்களிடத்துக் கிருபை யாகிய அக்கினியைத் தோன்றச் செய்து, விளங்காநின்ற ஒப்பற்ற சிவ சூரியனே நமது அஞ்ஞான மாகிய விருள் போய் நீங்கும்படி எக் காலமும் வணங்குவாம், எ - று.

சூரியனை விட்டு நீங்காத கிரணமும், அக் கிரணத்தை விட்டு நீங்காது பொய்யாய்த் தோன்றுகின்ற கானற் சலமும், அச் சூரியனது மிருந்த பிரகாசத்திஞலே சந்திரப் பிரகாச மறைதலும், காந்தக் கல்லினிடத்து அக்கினி தோன்றுதலும், அவனது சந்நிதியி லியல்பா யுண்டாவது போல், சிவனை விட்டு நீங்காத அபிந்நா சத்தியும், அச் சத்தியை விட்டு நீங்காது பொய்யாய்த் தோன்றுகின்ற பிந்நா சத்தியும், அச் சிவனது ஞானத்திஞலே அறிஞரது துவித புத்தி மறைதலும், அவரிடத்து அருள் தோன்றுதலும், இவனது சந்நிதியி லியல்பா யுண்டா மென்பதும், ஜீவனு, மீசுவரனும் பிந்நா சத்தியி லிருத்தலிஞலும், அப் பிந்நா சத்தி பொய்யாய்த் தோன்றுதலிஞலும், அபிந்நா சத்தி சிவனது பிரகாச மாதலிஞலும், இச் சிவ ஞகிய சத்திமானை விட அச் சத்திகள் வே றல்லாமையாலும், பொரு ளொன் றென்பதும் கண்டு கொள்க. சூரியனைக் கண்டபேர்க்குப் பூத விருள் நீங்குதல் போற், சிவனை யெக் காலமும் வணங்குவோர்க்கு அஞ்ஞானம் நீங்கு மாதலின் 'நம திருள் போ யொழிய நா டொறு மிறைஞ்சிடுவாம்' என்ருர். (க)

துன்னியா ணவப்பாம் பெமதறி வெனுமோர் சுடர்கெழு பூரண மதியை, முன்னமே தீண்டிற் ருெளிவெளிப் படலான் மோசந காலமெய் தியதாற், றன்னிடத் தீசன் முதற்புவி முடிவெண் டருநரை யாதிவந் தொடுங்கப், பின்னைய பிணையாந் திரைகள்வீ சிடுமோர் பிரமவே லையி லினிப் படிவாம். (2)

ப - ரை. ஆணவ - ஆணவ மாகிய, பாம்பு - பாம்பு, துன்னி - செறிந்து, எமது - எமது, அறிவு - அறிவு, எனும் - ஆகிய, ஓர் - ஒப் பற்ற, சுடர் - (ஞானப்) பிரகாசம் கெழு - பொருந்திய, பூரண - (பரி) பூரண, மதியை - சந்திரனை, முன்னமே - அநாதியே, தீண்டிற்று - மறைத்தது, ஒளி (இப்போது ஞானப்) பிரகாசம், வெளிப்படலால் - விளக்குதலின், விமோசந - விடுதலை, காலம் - காலம், எய்திய தால் - (வந்து) பொருந்திய தாகையால், தன்னிடத்து - தன திடத்து, ஈசன் - நாத தத்துவம், முதல் - முதலும், புவி - பிருதிவி தத்துவம், முடிவு - ஈறு மாக, எண்தரு - எண்ணப்பட்ட, நுரை ஆதி - நுரை திவலை குமிழிகள், வந்து - தோன்றி, ஒடுங்க - ஒடுங்கும்படி, பின்னை - பிந்நா சத்தி, அபின்னை - அபிந்நா சத்தி, ஆம் - ஆகிய, திரைகள் - (இரண்டு) அலைகள், வீசிடும் - வீசா நின்ற, ஓர் - ஒப் பற்ற, பிரம வேலையில் - பிரம சாகரத்திலே, இனி - இனி, படிவாம் - மூழ்குவாம், எ - று.

பொ - ரை. எ - து ஆணவ மாகிய பாம்பு செறிந்து எமது அறி வாகிய ஒப்பற்ற ஞானப் பிரகாசம் பொருந்திய பரிபூரண சந்திரனை அநாதியே மறைத்தது. இப்போது ஞானப் பிரகாசம் விளங்குதலின் விடுதலைக் காலம் வந்து பொருந்திய தாகையால் தனதிடத்து நாத தத்துவ முதலும், பிருதிவி தத்துவ மீறு மாக வெண்ணப்பட்ட நுரை திவலை குமிழிகள் தோன்றி ஒடுங்கும்படி பிந்நா சத்தி அபிந்நா சத்திக ளாகிய விரண் டலைகளை வீசாநின்ற ஒப் பற்ற பிரம சாகரத்திலே இனி மூழ்குவாம், எ - று.

உயிரினது இச்சா ஞானக் கிரியை யாகிய சந்திரனை அநாதி யிலே மறைத்த ஆணவ மாகிய பாம்பு இப்போது விடுதலை யாக ஞானப் பிரகாசம் விளங்குதலின், இனிப் பிரமத்தை அடையலா மென்பது துணிந்து 'பிரம வேலையி லினிப் படிவாம்' என்றார். பிந்நா சத்தியால் அநேக மாகக் காண்குதல், அபிந்நா சத்தியால்

ஏக மாகக் காண்குதல். இங்ஙனம் ஏக மாகக் காண்குதலும் ஓ ரசை வாகலின், இச் சத்தியையும் அலை யாகக் கூறினு ரென்க. நுரை திவலை குமிழிக ளென்றது தத்துவங்களையும், நாநா வாகிய தேகங் களையும், அண்டங்களையும் எனக் கொள்க. (உ)

அரு ளிறை வணக்கம்.

எப்பொருள் களுமா யொப்புயர் வின்றி யிருந்ததன் னுருவிறை குறையா, தப்படி யிருக்க வாலியா நீரி னருளிறை யாயெமக் கேம, வைப்பென வன்னை யெனப் பிதா வெனக்கண் மணியெனத் தவப்பய னெனவுட், செப்புயி ரெனவந் தாண்டகா ளத்தி தேசிகன் றிருவடி பணிவாம். (3)

ப - ரை. எ - எவ் வேறு வகைப்பட்ட, பொருள்களும் - பொருள்களும், ஆய் - (தான்) ஆய், ஒப்பு - சமானம், உயர்வு - அதிகம், இன்றி - இன்றி, இருந்த - இருந்த, தன் - தனது, உரு - சொரூபத்திலே, இறை - சிறிது (மாத்திர மாயினு) ம், குறையாது - குறைபடாமல், அப்படி - இருந்தபடியே, இருக்க - இருக்க, நீர் - நீர், ஆலி ஆம் இன் - ஆலாங் கட்டி யாய்த் (தடித்தது) போல் (பூரண மாகிய தான் தடித்து), அருள் - கிருபா, இறை ஆய் - மூர்த்தி யாகி, எமக்கு - எம் போல்வார்க்கு, ஏம - இன்பம் பொருந்திய, வைப்பு - நிக்ஷேபம், என - போலவும், அன்னை - தாய், என - போலவும், பிதா - தந்தை, என - போலவும், கண் - கண்ணின், மணி - மணி, என - போலவும், தவ - தபோ, பயன் - பலம், என - போலவும், உள் - (உடலுக்கு) உள், உயிர் - உயிர், என - போலவும், வந்து - வந்து, ஆண்ட - ஆட் கொண் டருளிய, காளத்தி - காளத்தி (தேவ னென்னும் நாம தேயத்தை யுடைய), தேசிகன் - ஆசாரியனது, திரு - அழகிய, அடி - பாதங்களை, பணிவாம் - வணங்குவாம், எ - று.

பொ - ரை. எ - து. எவ்வேறு வகைப்பட்ட பொருள்களெல்லாம் தானாய்ச் சமானாதிக மின்றி யிருந்த தனது சொரூபத்திலே சிறிது மாத்திர மாயினும் குறைவுபடாமல் இருந்தபடியே யிருக்க, நீர் ஆலாங் கட்டி யாய்த் தடித்தது போற் பூரண மாகிய தான் தடித்துக் கிருபா மூர்த்தி யாகிய எம் போல்வார்க்கு இன்பம் பொருந்திய நிக்ஷேபம் போலவும், தாய் போலவும், தந்தை போலவும், கண்ணின் மணி போலவும், தவ்போ பலம் போலவும், உடலுக் குள் உயிர் போலவும் வந்து ஆட் கொண் டருளிய காளத்தி தேவ னென்னு நாம தேயத்தை யுடைய ஆசாரியனது அழகிய பாதங்களை வணங்குவாம், எ - று.

நிக்ஷேபத்தை நினைக்குந் தோறும் மகப் பூரிப்பு வருதல் போல், ஆசாரியனை நினைக்குந் தோறும் மகப் பூரிப்பு வருதலின் 'வைப்பு' என்றும், தாய் அமு தூட்டி உடம்பை வளர்த்தல் போல், உபதேச மொழிகளை அநுக்கிரகித்து அறிவை வளர்த்தலின் 'அன்னை' என்றும், தந்தை தவிர் காரியத்திற் செல்லுதலைத் தடுத்துச் செய் காரியத்திற் செலுத்துதல் போல், அசாஸ்திரப் பிரபஞ்சத்தின் வழி செல்லாது தடுத்துச் சாஸ்திரப் பிரபஞ்சத்தின் வழி செலுத்துதலிற் 'பிதா' என்றும், கண் மணியானது 'நன்று இது தீது இது' என்று அறிவித்தல் போற், பந்தந் துன்ப மென்றும், மோக்ஷம் இன்ப மென்றும் அறிவித்தலிற் 'கண் மணி' என்றும், தவப் பயன் எங்கே யிருந்தாலும் அங்கே வந்து உதவி யின்பத்தைக் கொடுத்தல் போல், எங்கே யிருந்தாலும் தமது பூரண சொரூபத்தை விளக்கி யின்பத்தைக் கொடுத்தலின் 'தவப் பயன்' என்றும், உடலுக்கு ளுயிர் அந்த வுடலை அபிமானித்து அதன்கண் வருந் துன்பத்தைத் துடைத்தல் போல், உயிருக் குயிரா யிருந்து அவ் வுயிருக்குத் துன்பந் தருகிற மும் மலங்களைத் துடைத்தலின் 'உடலுட் செப் புயிர்' என்றும் கூறினா ரெனக் கொள்க. (௩)

அருந்திய காலத் தற்பமாப் பிற்பே ரௌடத முடலி
னின் றுடலை, வருந்தல் * செய் பிணியெல் லாமகற்
றுதலின் வஞ்சனே னெஞ்சின்மாற் றரிதா, யிருந்தவெப்
பற்றும் பிற்றைநாள் களின்விட் டேகவன் றேகடைக்
கணித்தல், புரிந்தநங் குரவ னருளிருந் தமையெப்
பொழுதுமுண் ணினைந்துவாழ்த் திடுவாம். (4)

ப - ரை. பேர் - (ஒரு வியாதிக்குக் கொடுக்கப்பட்ட) பெரிய, ஔடதம் - மருந்தை, அருந்திய - உட்கொண்ட, காலத்து - காலத்தில், அற்ப மாய் - (அம் மருந்து முன்னர் வியாதியை) சிறி தாக (நீக்கி), பின் - பின்னர் (தனது சாரம்), உடலில் - உடலிலே, நின்று - நின்று (ஊறி), உடலை - (அந்த) உடலை, வருந்தல் - வருத்துதல், செய் - செய்கிற, பிணி - வியாதிகள், எல்லாம் - எல்லாம், அகற்றுதலின் - (ஒருங்கே) நீக்குதல் போல, வஞ்சனேன் - வஞ்சக னுகிய (எனது), நெஞ்சின் - மநத்தின்கண், மாற்ற - நீங்குதற்கு, அரி தாய் - அரி தாய், இருந்த - இருந்துள்ள, எ பற்றும் - எவ் வகைப்பட்ட பற்றுக்களும், பிற்றை - பின்பு, நாட்களின் - (சில) நாள்களிலே, விட்டு - விட்டு, ஏக - நீங்க, அன்றே - (திரு வடியை யடைந்த) அன்றே, கடைக்கணித்தல் - கிருபா நோக்கம், புரிந்த - செய்த, நம் - நமது, குரவன் - ஆசாரியனது, அருள் - கிருபை, இருந்தமை - இருந்த தன்மையை, எப்பொழுதும் - எக் காலத்தும், உள் - மநத்தினுலே, நினைந்து - நினைத்து, வாழ்த்திடுவாம் - (வாக்கினுலே) தோத்திரம் பண்ணுவாம், எ - று.

பொ - ரை. எ - து. ஒரு வியாதிக்குக் கொடுக்கப்பட்ட பெரிய மருந்தை உட்கொண்ட காலத்தில், அம் மருந்து முன்னர் வியாதியைச் சிறிதாக நீக்கிப் பின்னர்த் தனது சாரம் உடலிலே நின் றூறி,

---

* வருத்தல் தொடை நோக்கி மெலிந்தது.

அந்த வுடலை வருத்துதல் செய்கிற வியாதிகளை யெல்லாம் ஒருங்கே நீக்குதல் போல், வஞ்சக ணுகிய வெனது மநத்தின்கண் நீங்குதற்கு அரிதா யிருந் துள்ள எவ் வகைப்பட்ட பற்றுக்களும், பின்பு சில நாள்களிலே விட்டு நீங்கத் திரு வடியை அடைந்த வன்றே கிருபா நோக்கஞ் செய்த நமது ஆசாரியனது கிருபை யிருந்த தன்மையை எக் காலத்தும் மநத்திஞலே நினைத்து வாக்கிஞலே தோத்திரம் பண்ணுவாம், எ - று.

வைத்தியன் கொடுத்த மருந்தை ஒருவன் உட்கொண்ட காலத்தில், அம் மருந்து முன்பு சிறிது வியாதியைப் போக்கி, அவன் சொன்ன பத்திய பாகப்படியே நிற்க, அஃது உடலிலே நின்று ஊறிப் பின்பு மற்றை வியாதிகளை யெல்லாம் ஒருங்கே நீக்குதல் போல், ஆசாரியர் கிருபா நோக்கம் வைத்த காலத்தில் அக் கிருபா நோக்கம் முன்பு சில பற்றுக்களை நீக்கி, அவர் அருளிச் செய்த நன் மார்க்கத்தின்படியே நிற்க, அக் கிருபை மநத்தின்கண் மாருது நின்று மற்றைப் பற்றுக்களையும் போக்கிற் றென்பது கண்டு கொள்க. (ச)

## வேதாகமச் சிறப்பு.

அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க லதுவரக்
காணின்மற் றவனு, டரையின்வாழ் பவருண் ணடுங்கி
யோர்ந் ததன்வாய்ச் சாற்றிய முறைசெய்வா ரென்ருற்,
கரையில்பே ரின்பந் தரவெமக் கிறைசொல் சட்டுரை
யென்னின்வே றென்னை, யுரையுள வேதா கமமவ னெனக்
கண் டுரைத்தவா புரிகுவ தல்லால். (5)

ப - ரை. அரையன் - இராஜாவினது, வாய் - வாய், உரைகள் - மொழிகள், வரை தரும் - எழுதப் பட்ட, முடங்கலது - திரு முகமானது, வர - வர, காணின் - கண்ட போது, அவன் - அந்த இராஜாவிஞல், ஆள் - ஆளப்பட்ட, தரையில் - பூமியின்கண்,

வாழ்பவர் - வாழாநின்ஞேர், உள் - மநம், நடுங்கி - நடுக் குற்று, ஓர்ந்து - (அந்தத் திரு முக வாசகத்தை யெல்லாம்) விசாரித்து, அதன்வாய் - அதன்கண், சாற்றிய - சொல்லிய, முறை - பிரகாரமே, செய்வார் - செய்து முடிப்பார், என்ருல் - ஆஞல், கரை - மட்டு, இல் - இல்லாத, பேர் இன்பம் - பேர் ஆநந்தத்தை, தர - தருதற்பொருட்டு, எமக்கு - எமக்கு, இறை - இறைவஞல், சொல் - கூறப்பட்ட, கட்டு - உறுதி, உரை - மொழிகள், என்னின் - ஆஞல், வேறு - வேறேயும், உரை - வார்த்தைகள், என்னை - என்னை, உள - உள்ளன, வேத ஆகமம் - வேத ஆகமங்களை, அவன் - அவ் விறைவன், என - எனவே, கண்டு - கண்டு, உரைத்த - (அவற்றின்கண்ணே) சொல்லப்பட்ட, ஆறு - முறையே, புரிகுவது - செய்து முடிப்பது, அல்லால் - அல்லாமல், எ - று.

பொ - ரை. எ - து. இராசாவினது வாய் மொழிகள் எழுதப்பட்ட திரு முக மானது வரக் கண்ட போது, அந்த இராசாவிஞல் ஆளப்பட்ட பூமியின்கண் வாழாநின்ஞேர், மந நடுக் குற்று அந்தத் திரு முக வாசகத்தை யெல்லாம் விசாரித்து, அதன் கண் சொன்ன பிரகாரமே செய்து முடிப்பா ராஞல், மட்டில்லாத பே ராநந்தத்தைத் தருதற் பொருட்டு எமக்கு இறைவஞல் கூறப் பட்ட உறுதி மொழிக ளாஞல் வேறேயும் வார்த்தைகள் என்னை யுள்ளன? வேதாகமங்களை அவ் விறைவ னெனவே கண்டு அவற் றின்கண்ணே சொல்லப்பட்ட முறையே செய்து முடிப்ப தல்லாமல், எ - று.

இராசாவினது திரு முகத்திற் சொன்னபடியே செய்தோர்க்கு இன்பமும், அதற்கு மாறுபாடாகச் செய்தோர்க்குத் துன்பமும், இம்மைக்கண் வருதல் போல், இறைவனது வேதாகமங்களிலே சொன்னபடியே செய்தோர்க்கு வீட் டின்பமும், அதற்கு மாறு

பாடாகச் செய்தோர்க்குப் பிறவித் துன்பமும், மறுமைக்கண் வரு மென்பது கண்டு கொள்க. இராசாவைக் காணுத விடத்தும் அவன் வாய் மொழி வரைந்த திரு முகத்தை அவ னெனக் காண்கு தல் போல், இறைவனைக் காணுத விடத்தும் அவன் வாய் மொழிக ளாகிய வேதாகமங்களை அவ் விறைவ னெனக் காணல் வேண்டு மென்று 'வேதாகம மவ னெனக் கண்டு' என்றார். (ரு)

## முத னூல்.

கற்பழ மாகப் புரிதலிற் பெரிதென் கருத்தினைத் திருத்திவந் தாண்ட, சிற்பர னருளாற் சொற்பொரு ளறியா தேனும்வே தாகம வழியீண், டுற்பவ மாதித் துயரைமுற் றவத்தா னுணர்ந்தவர் துறவெனும் வாளா, லிற்பொருந் துதலை * முதலவா வறுத்தோ ரின்பவீ டுறல் சொலற் கியைந்தேன். (௬)

ப - ரை. கல் - கல்லை, பழம் - கனி, ஆக - ஆக, புரிதலில் - செய்தது போல், பெரிது - மிகவும், என் - எனது, கருத்தினை - மநத்தினை, திருத்தி - செப்பஞ் செய்து, வந்து - (வலிய) வந்து, ஆண்ட - ஆட் கொண் டருளிய, சித்பரன் - ஞாநாசாரியனது, அருளால் - கிருபையினலே, சொல் - சொல் (இயல்பு), பொருள் - பொருள் (இயல்புகளை), அறியாதேனும் - அறியாத யானும், வேத ஆகம - வேத ஆகமங்களிற் (கூறப்பட்ட), வழி - மார்க்கத்தின் படியே (இந் நூலின்கண்), உற்பவம் - உற்பத்தி, ஆதி - திதி லயங்களினல் வரும், துயரை - துன்பங்களை, முன் - முற் (பிறவி களிலே செய்யப்பட்ட), தவத்தால் - (நிஷ்காமிய) தவத்தினலே, ஈண்டு - இப் பிறவியிலே, உணர்ந்தவர் - அறிந்தோர்கள், துறவு -

* ஐ - சாரியை.

துறவு, எனும் - ஆகிய, வாளால் - வாளினாலே, இல் - இல் வாழ்க்கையை. பொருந்துதல் - பொருந்துதல், முதல் - முதலிய, அவா - அவாக்களை, அறுத்து - சேதித்து, ஓர் - ஒப் பற்ற, இன்ப - ஆநந்த, வீடு - மோக்ஷத்தை, உறல் - அடைதலை, சொலற்கு - சொல்லுதற்கு, இயைந்தேன் - சம்மதித்தேன், எ - று.

பொ - ரை. எ - து. கல்லைக் கனியாகச் செய்தது போல், மிகவும் எனது மநத்தினைச் செப்பஞ் செய்து, வலிய வந்து ஆட்கொண் டருளிய ஞாநாசாரியனது கிருபையினாலே, சொல் லியல்பு பொரு ளியல்புகளை அறியாத யானும், வேதாகமங்களிற் கூறப்பட்ட மார்க்கத்தின்படியே இந் நூலின்கண் உற்பத்தி திதி லயங்களினால் வருந் துன்பங்களை முற் பிறவிகளிலே செய்யப்பட்ட நிட்காமிய தவத்தினாலே இப் பிறவியிலே அறிந்தோர்கள், துற வாகிய வாளினாலே இல் வாழ்க்கையைப் பொருந்துதல் முதலிய அவாக்களைச் சேதித்து ஒப் பற்ற ஆநந்த மோக்ஷத்தை அடைதலைச் சொல்லுதற்குச் சம்மதித்தேன், எ - று.

சொற் பொரு ளிலக்கணந் தெரியா திருந்தாலும், குருவினது கிருபையினாலே எல்லாம் விளங்கு மாகலிற் 'சிற்பா னருளால்' என்றும், இந் நூலைக் கற்பித்துச் சொல்லாமல், வேதாகமத்திற் சொன்ன மார்க்கத்தின்படியே சொல்லுகையினால் 'வேதாகம வழி' என்றும், முற் சநநங்களிலே தவம் புரிந்தவர்க் கல்லது, பிறவி துன்ப மென்று தோன்றாது ஆகையால் 'உற்பவ மாதித் துயரை முற் றவத்தா னுணர்ந்தவர்' என்றும், முன் பெரியோர்கள் வீ டடைந்த மார்க்கத்தின்படியே இனிமேல் அடைவாரும் செல்ல வேண்டுதலின் அவரது நடையை இவர்களுக்கு அறிவிக்க வேண்டி முற் றவத்தா லுணர்ந்தவர் 'இன்ப வீடுறல் சொலற் கியைந்தேன்' என்றும் கூறினார். (சு)

அவை யடக்கம்.

*துணையில்பே ராசைக் கடலுளோர் கரையாந் துறவுவந் துறவுவந் ததற்கோர், புணையெனப் பெரியோர் வகுத்த நூல் களின்முற் போதமி லேனுமீ துரைத்த, னுணையமெய் வருந்த வயனெடு மாலன் றுயர்ந்துதாழ்ந் தோடியுங் காணு, விணையிலி நடித்தல் செயமருங் கலகை யினமசைந் திடுதலி னன்றே.* (7)

ப - ரை. துணை இல் - உவமை சொல்லக் கூடாத, பேர் ஆசை - பெரிய ஆசை யாகிய, கடல் - கடலின்கண், உளோர் - ஆழ்ந் துளோர்க்கு, கரை - (அதற்கு) கரை, ஆம் - ஆகிய, துறவு - துறவு, வந்து - வந்து, உற - பொருந்தும்படி (விருப்ப முற்று), அதற்கு - அ(க் கடலை நீந்து) தற்கு, ஓர் - ஒரு, புணை - தெப்பம், என - ஆக, பெரியோர் - பெரியோர்கள், வகுத்த - வகுத்துச் சொல்லிய, நூல்களில் - நூல்களின், முன் - முன்னர், போதம் - அறிவு, இலேனும் - இல்லாத யானும், ஈது - இந் நூலை, உரைத் தல் - சொல்லுதல், உள் - உள்ளம், நைய - நைய, மெய் - உடலம், வருந்த - வருந்த, அயன் - நான் முகனும், நெடு மால் - திரு மாலும், அன்று - அக் காலத்தில், உயர்ந்து - (அன்ன ரூப மாய் ஆகாயத்திலே பறந்து) உயர்ந்து ஓடியும், தாழ்ந்து - (பன்றி ரூப மாய்ப் பூமியைக் கீண்டு) தாழ்ந்து, ஓடியும் - ஓடியும், காணு - காணாத, இணை - ஒப்பு, இலி - அற்ற (சிவன்), நடித்தல் - நடனம், செய - (பண்ணுதல்) செய்ய, மருங்கு - (அவனது) பக்கங்களில் நின்று, அலகை - பேய், இனம் - கணங்கள், அசைந்திடுதலின் - கூத்தாடுதல் போலும், எ - று.

பொ - ரை. எ - து. உவமை சொல்லக் கூடாத பெரிய ஆசை யாகிய கடலின்கண் ஆழ்ந் துளோர்க்கு அதற்குக் கரை

யாகிய துறவு வந்து பொருந்தும்படி விருப்ப முற்று அக் கடலை நீந்துதற்கு ஒரு தெப்ப மாகப் பெரியோர்கள் வகுத்துச் சொல்லிய நூல்களின் முன்னர் அறிவிலாத யானும் இந் நூலைச் சொல்லுதல் உள்ளம் நைய உடலம் வருந்த நான்முகனும், திரு மாலும் அக் காலத்தில் அந்ந ரூப மாய் ஆகாசத்திலே பறந்து உயர்ந் தோடியும், பன்றி ரூபமாய்ப் பூமியைக் கீண்டு தாழ்ந் தோடியும், காணாத ஒப் பற்ற சிவன் நடனம் பண்ணுதல் செய்ய அவனது பக்கங்களில் நின்று பேய்க் கணங்கள் கூத்தாடுதல் போலும், எ - று.

ஆசை யாகிய கடற்குக் கரை துற வென்பதும், அக் கடலை நீந்தி இக் கரையில் ஏறுதற்குத் தெப்பம் பெரியோர் வாக்கிய மென்பதுங் காண்க. பேய்க் கணங்கள் கூத்தாடுதல் சிவன் அநுஞ்ஞை கொண் டாகையாலும், அவனுக்குத் திரு வுளப் பாங் காகையாலும், மாறுபாடாகாமை போல், இந் நூல் சொல்லியது பெரியோர் அநுஞ்ஞை கொண் டாகையாலும், அவர்க்குத் திரு வுளப் பாங் காகையாலும் இது மாறுபாடாகா தெனக் கொள்க. அன்று, ஏ - இரண்டும் அசை நிலைகள். (எ)

கயல்விழி மனைவி யனைமுத லியவாங் கட்டது தனை
யென தெனவு, மியல்பதா மசுத்த மாதியா ருடற்கட்
டிதனையா னெனவும்வைத் தெனுமோர், மயலதா மிருளைத்
துறவெனு மொளியான் மாற்றிநெஞ் சகத்தினை விளக்கஞ்,
செயலினிந் நூற்குப் பெயர்வயி ராக தீபமென் றுரைத்
திடப் படுமால். (8)

ப - ரை. கயல்விழி - ,, - , மனைவி - பெண்டிர், அனை - தாய், முதலிய ஆம், முதலிய, கட்டதுதனை - (போக) பந்தத்தினை, எனது - என்னது, எனவும் - எனவும், அசுத்தம் - அசுத்தம், ஆதி - துக்கம் அநித்தியங்களே, இயல்பது ஆம் - சகசமா யுள்ள,

உடல் - தேக, கட்டிதனை - பந்தத்தினை, யான் - யான், எனவும் - எனவும், வைத்து - (மநத்தின்கண்) வைத்து, எணும் - கருதும், ஓர் - ஒப் பற்ற, மயல் - மயக்கம், ஆம் - ஆகிய, இருளை - இருளை, துறவு - துறவு, எனும் - ஆகிய, ஒளியால் - ஒளியினாலே, மாற்றி - நீக்கி, நெஞ்சு - மந மாகிய, அகத்தினை - வீட்டினை, விளக்கம் - விளக்கம், செயலின் - செய்தலினால், இந் நூற்கு - இந்தச் சாத்திரத்திற்கு, பெயர் - பெயர், வயிராக - வைராக்ய, தீபம் - தீபம், என்று - என்று, உரைத்திடப்படும - சொல்லப்படும். எ - று.

பொ - ரை. எ - து. பெண்டிர் தாய் முதலிய போக பந்தத்தினை என்ன தெனவும், அசுத்த துக்காசித்தியங்களே சகச மா யுள்ள தேக பந்தத்தினை யா னெனவும், மநத்தின்கண் வைத்துக் கருதும் ஒப் பற்ற மயக்க மாகிய விருளைத் துற வாகிய ஒளியினாலே நீக்கி மந மாகிய வீட்டினை விளக்கஞ் செய்தலினால் இந்தச் சாத்திரத்துக்குப் பெயர் வைராக்ய தீபம் என்று சொல்லப்படும், எ - று.

போக தேகங்க ளாகிய இரு வகைப் பற்றையும், என்னது யான் என்று கருத வைக்கு மயக்க மாகிய விருளைத் துற வாகிய ஒளியினாலே மாற்றி, மந மாகிய வீட்டினை விளக்கஞ் செய்தலின், இந் நூற்குக் காரணப் பெய ராக வைராக்ய தீப மென்று சொல்லப் பட்ட தெனக் கொள்க. (அ)

## நூ லாசிரியர் பெயர்.

உருட்கறங் கூசன் மநமொடுங் கிடவென் னுணர்வு
நேத் திரக்கியா னெனதா, மிருட்கெடுத் தெலாமாம்
பொருட்டிகழ்த் திடுமோ ரெழில்வயி ராகதீ பத்தை, மருட்
கொடும் பாசக் குழிக்கண்யாம் வீழா வகையரு ளினன்
மறை முடிவின், றெருட்கமை வீர சைவனெஞ் சாந்த
லிங்கதே சிகன்றெருட் சுடரே. (9)

ப - ரை. மருள் - (தேர்) உருளும், கறங்கு - காற்றாடியும், ஊசல் - ஊசலும் (போல் உழல்கின்ற), மநம் - மநம், ஒடுங்கிட - ஒடுங்கும்படி, என் - எனது, உணர்வு - உணர் வாகிய, நேத்திரக்கு - கண்ணுக்கு, யான் - யான் (என்னும் அகங்காரமும்), எனது - எனது, (என்னும் மமகாரமும்), ஆம் - ஆகிய, இருள் - (மயக்க) இருளை கெடுத்து - கெடுத்து, எலாம் - சக ஜீவ பரம் மூன்றும், ஆம் - தா னாய் விளங்காநின்ற பரம சிவ் மாகிய, பொருள் - பொருளை, திகழ்த்திடும் - விளங்காநின்ற, ஓர் - ஒப் பற்ற, எழில் - ,, - , வைராக - வைராக்ய, தீபத்தை - தீபத்தை, யாம் - யாங்கள், மருள் - மருட்சியினாலே, கொடும் - கொடிய, பாச - பாச மாகிய, குழிக்கண் - குழியினுள்ளே, வீழா வகை - வீழாமல் உய்யும்ப்டிக்கு, அருளினன் - தந் தருளினான், மறை முடிவின் - வேத முடி வாகிய, தெருட்கு - (தத்துவ) ஞாநத்துக்கு, அமை - அமைந்த, வீர சைவன் - வீர சைவ (மாகேசுவர) னாகிய, எம் - எம் முடைய, சாந்த லிங்க தேசிகன் - சாந்த லிங்க தேசிக னென்னும், தெருள் - ஞாந, சுடர் - சூரியன், எ - று. 'நேத்திரக்கு' என்பது அத்துச் சாரியை குறைந்தது.

பொ - ரை. எ - து தே ருருளையும், காற் றாடியும், ஊசலும் போல் உழல்கின்ற மநது ஒடுங்கும்படி எனது உணர் வாகிய கண் ணுக்கு யா னென்னும் அகங்காரமும், என தென்னு மமகாரமும் ஆகிய மயக்க விருளைக் கெடுத்துச் சக ஜீவ பர மூன்றுந் தா னாய் விளங்காநின்ற பரம சிவ மாகிய பொருளை விளங்காநின்ற ஒப் பற்ற வைராக்ய தீபத்தை யாங்கள் மருட்சியினாலே கொடிய பாச மாகிய குழியி னுள்ளே வீழாமல் உய்யும்படிக்குத் தந் தருளினான், வேத முடி வாகிய தத்துவ ஞாநத்துக்கு அமைந்த வீர சைவ மாகேசுவர னாகிய எம் முடைய சாந்த லிங்க தேசிக னென்னு ஞாந சூரியன், எ - று.

வையிராக தீப மென்னு நூற் பெயர்க் கியைய உணர்வை நேத்திர மாகவும், அகங்கார மமகார மயக்கத்தை இருளாகவும், பாசத்தைக் குழி யாகவும், பரம சிவத்தைப் பொருளாகவும், நூ லாசிரியரை ஞாந சூரிய னாகவுஞ் சொல்ல லாயிற்று. சூரியன் தன தொளியைத் தீபத்தி னிடத்திலே வைத்து விளக்கஞ் செய்கின்ற னென்பது நூல் வழக்க மாதலால், இந்த ஞாந சூரியன் வைராக தீபத்தைத் தந்தா னென்றற்குப் பொருத்த முடைமை யறிக. 'நேத்திரத்துக்கு' எனற்பாலது 'நேத்திரக்கு' என விகார மாயிற்று. (கூ)

பாயிர முற்றிற்று.

---

## நூல்.

தோன்றிநின் றழியப் படுங்கொடும் பிறப்பிற் றுன்பமே யன்றியெட் டுணையு, மூன்றிநெஞ் சகத்தோர்ந் திடிற் பிறி திலையா னுண்டுபோற் றிரித்துயிர்க் கெல்லாந், தான் றிகழ்த் திடுமோர் வகற்றிரு ளிருளுந் தவிர்ந்துமற் றது முள படியே, யான்றவீ டுறமுற் பவந்தவம் புரிந்தோ ரகத்தினுட் டெரிதரு மன்றே. (10)

ப - ரை. தோன்றி - உற்பத்தி, நின்று - திதி, அழியப் படும் - லயங்களை (யுடைய), கொடும் - கொடிய, பிறப்பில் - பிறப்பின்கண்ணே, துன்பமே - துன்பமே, அன்றி - அல்லாமல், எள் - எள்ளின், துணையும் - அள வாயினும், நெஞ்சகத்து - மநத்தின்கண், ஊன்றி - (அறிவை) ஊன்றி, ஓர்ந்திடில் - விசாரணை பண்ணுமிடத்து, பிறிது - சுகமே, இலை - இல்லை, உண்டு - (அங்ஙனம் சுக மில்லா திருந்தும்) உண்டு, போல் - போல்,

திரித்து - மாறுபடுத்தி, உயிர்க்கு - உயிர்களுக்கு, எல்லாம் - எல்லாம், திகழ்த்திடும் - விளக்கும், ஓர்வு - விசாரணையை, அகற்று - மாற்றுகின்ற, இருள் - (அஞ்ஞான) இருள், இருளும் - (அந்த) இருளும், தவிர்ந்து - நீங்கி, அதும் - அப் பிறப்புத் துன்ப மென்பதும், உள படியே - உள்ள முறையே, ஆன்ற - மாட்சி மைப்பட்ட, வீடு - மோக்ஷத்தை, உற - அடைவதற்கு, முன் - முற், பவம் - ஜநநங்களிலே, தவம் - தவம், புரிந்தோர் - பண்ணின பெரியோர்களது, அகத்தினுள் - மநத்தின்கண்ணே, தெரிதரும் - தோன்றும், எ - று. அன்று - ஏ - ஆல் - ஆசை,

பொ - ரை. எ - து. உற்பத்தி திதி லயங்களை உடைய கொடிய பிறப்பின்கண்ணே துன்பமே யல்லாமல், எள்ளினள வாயினும் மநத்தின்கண் அறிவை ஊன்றி விசாரணை பண்ணு மிடத்துச் சுகமே இல்லை. அங்ஙனம் சுக மில்லா திருந்தும், உண்டு போல் மாறுபடுத்தி உயிர்களுக் கெல்லாம் விளக்கும் விசாரணையை மாற்றுகின்ற அஞ்ஞான விருள் அந்த விருளும் நீங்கி, அப் பிறப்புத் துன்ப மென்பதும், உள்ள முறையே மாட்சிமைப்பட்ட மோக்ஷத் தை அடைதற்கு முற் சநநங்களிலே தவம் பண்ணின பெரியோர் களது மநத்தின்கண்ணே தோன்றும், எ - று.

அஞ்ஞான விருள் நீங்கினோர்க்குப் பிறப்புத் துன்ப மாகத் தோன்றுதலின், அவ் விருளுடையோர்க்கு அத் துன்பத்தை இன்ப மாக மாறுபடுத்தி விளக்குகின்றதெனக் கொள்க. (கo)

உடலிதுற் பவத்தோ ரைம்பெருந் துயர்மாய்ந் துறு கணத் துயரினெண் மடங்கா, லிடையுள திதிக்கட் டுயர மூப் பறிவோங் கிளமையிற் பிணியுறு விடத்தும், விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான் மிகுபொரு டேடுத றுயரீண், டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு மிகுநராற் றுயரே. (11)

ப - ரை. இது - இந்த, உடல் - உடலானது. உற்பவத்து - (மாதாவினது கருப்பத்தின்கண்) உற்பவியாநின்ற காலத்தில், ஐ - ஐந்து, பெரும் - பெரிய, துயர் - துன்பங்கள், மாய்ந்துறு - (அது) லய மாகின்ற, கணம் - காலத்தில், துயரின் - (அவ் வுற்பத்தித்) துன்பத்துக்கு, எண் - எட்டு, மடங்கு - பங்கு (அதிகம்), (அவ் வற்பத்தி காலத்தும், லய காலத்தும், துன்பமானல் அவற்றிற்கு), இடை - இடையாய், உள் - உள்ள, திதிக்கண் - திதி (காலத்திலே தான் இன்ப மில்லையோ வெனின் அக்) காலத்தும், மூப்பு - (நரை திரை) மூப்புகளினுல், துயர் - துன்பம், (அம் மூப்பின்றிய பாலப் பருவத்தின்கண் இன்ப மில்லையோ வெனின், அப் பருவத்தினும், அறியாமையினுற் றுன்பம்), அறிவு - அறிவு, ஒங்கு - உதய மாகிய, இளமையில் - குமாரப் பருவத்தில் (தான் இன்ப மில்லையோ வெனின் அப் பருவத்தின்கண்ணும்), பிணி - (வாத பித்த சிலேஷ்மங்களின்) நாநா வியாதி (களினுற் றுன்பம்), உறாவிடத்தும் - (அவ்) வியாதி யின்றிய விடத்துத் (தான் இன்ப மில்லையோ வெனின்), விடல் அரும் விட்டு நீங்காது மாறி மாறி வருகின்ற, பசி - பசி, நோய் - வியாதி (களினுற் றுன்பம், அவ் வியாதிகள் வருந் தோறும் அருந்தல் பொருந்த லாகிய மருந்தினைப் புசித்துத் தணித்துக் கொண்டாற் றுன் இன்ப மில்லையோ வெனின்), தணிப்பான் - (அம் மருந்தினுல் வியாதியைத்) தணித்தற் பொருட்டு மிகு - (அதற்கு எது வாகிய) மிகுந்த, பொருள் - திரவியம, தேடுதல் - தேடுதலினுல், துயர் - துன்பம், ஈண்டு - ,, - , அடையினும் - (அத் திரவியம் வந்து) பொருந்திய காலத்து (தான் இன்ப மில்லையோ வெனின்), அதனை - அதனை, காக்குதல் - (இராச சோராக்கினிகளினுற் சேதம் வாராதபடி) பாதுகாத்தலினுல், துயர் - துன்பம், வேந்து ஆயினும் - (அதனைப் பாதுகாக்க வல்லமை யுடைய) இராசாவுக்குத் தான் (இன்ப மில்லையோ எனின்), மிகுநரால் - (அவனுக்கு) மே லாகிய மகா ராசாவினுல், துயர் - துன்ப மாம், எ - று.

பொ - ரை. எ - து. இந்த வுடலானது மாதாவினது கருப் பத்தின்கண் உற்பவியாநின்ற காலத்தில் ஐந்து பெரிய துன்பங் கள். அது லய மாகின்ற காலத்தில், அவ் வுற்பத்தித் துன்பத்துக்கு எட்டுப் பங் கதிகம். அவ் வுற்பத்தி காலத்தும், லய காலத்தும் துன்பமானல், அவற்றிற்கு இடையா யுள்ள திதி காலத்திலே தான் இன்ப மில்லையோ வெனின், அக் காலத்தும் நரை திரை மூப்பு களினுற் றுன்பம். அம் மூப் பின்றிய வாலப் பருவத்தின்கண் இன்ப மில்லையோ வெனின், அப் பருவத்திலும் அறியாமையினுற் றுன்பம். அறி வுதய மாகிய குமாரப் பருவத்திற் றூன் இன்ப மில்லையோ வெனின், அப் பருவத்தின்கண்ணும், வாத பித்த சிலேஷ்மங்களி னுள வியாதிகளினுற் றுன்பம்; அவ் வியாதி யின்றிய விடத்துத் தான் இன்ப மில்லையோ வெனின், விட்டு நீங்காது மாறி மாறி வருகிற பசி வியாதி காம வியாதிகளினுற் றுன்பம். அவ் வியாதிகள் வருந் தோறும் அருந்தல் பொருந்த லாகிய மருந்தினைப் புசித்துத் தணித்துக் கொண்டாற் றூன் இன்ப மில்லையோ வெனின், அம் மருந்தினுல் அவ் வியாதியைத் தணித்தற் பொருட்டு, அதற்கு ஏது வாகிய மிகுந்த திரவியந் தேடுதலினுற் றுன்பம். அத் திரவியம் வந்து பொருந்திய காலத்துத் தான் இன்ப மில்லையோ வெனின், அதனை இராச சோராக்கினிகளினுற் சேதம் வாராதபடி பாதுகாத்தலினுற் றுன்பம். அதனைப் பாது காக்க வல்லமை யுடைய இராசாவுக்குத் தான் இன்ப மில்லையோ வெனின், அவனுக்கு மே லாகிய மகா ராசாவினுற் றுன்பமாம், எ-று.

'உற்பவத்தில் ஐம் பெருந் துய' ரென்றது, கருப்பாசயப் பை உறுத்தலினுலும், அதிற் சலம் பூரித்தலினுலும், உதராக்கினி சுடுதலினுலும், பிரசூத வாயு முரித்துத் தள்ளுதலினுலும், யோநித் துவார நெருக்கத்தினுலும், மலை யிருத்திக் கொண்டது போலவும், கடலின்கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புக் கடத்தி

லடைத்து நெருப்பாற் சுடுதல் போலவும், மலை மேல் நின்றானைத் தலை கீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையி விட்ட கரும்பு நெருக் குண்டல் போலவும் வருந் துன்பங்களை. லய காலத்தின்கண் வருந் துன்பங்களைக் கடவுளே அறிய வல்லவ னாகையால் உவமை கூறப்படாமையின், அத துன்பத்தில் எண் மடங் கென்று ஓ ரளவை கூறினார். அவற்றிற்கு இடையா யுள்ள திதி காலத்தின்கண் வரும், வால குமார விருத்த மாகிய மூ வகை யிடத்தும், அறியாமை யினாலும், வியாதிகளினாலும், பசி நோய்களினாலும், அந் நோய் தணித்தற்கு ஏது வாகத் திரவியந் தேடுதலினாலும், அதனைப் பாது காத்தலினாலும், நரை திரை மூப்புக்களினாலும் துன்பங்கள் உள வாகையால், உற்பத்தி திதி லய மென்று கூறிய காலத் திரயங் களிலும், துன்பமே யன்றி இன்ப மில்லை யென்பது கண்டு கொள்க. கருப்பாசய முதல் யோநித் துவாா மீறாகிய வைந்தும் பஞ்ச பூத காரிய மாதலின், அவ் வைந்தினாலும் வருந் துன்பங்க ளென்றுமாம். 'அறி வோங் கிளமை' யெனவே, அறி வின்றிய வாலப் பருவம் வருவிக்கப்பட்டது. பசி வியாதி காம வியாதிகள் மற்றை வியாதி கள் போல், மருந் துண்டால் ஒருங்கே நீங்காது, குன்ம வியாதிக்கு உவர் மண் ணீர் குடித்தால் அப் போது அடங்கி நின்று மீண்டுந் தோன்றுதல் போல், அருந்தல் பொருந்த லாகிய மருந்தினைப் புசித்தால், அப் போது அடங்கி நின்று மீண்டும் தோன்றுதலால் 'விடலரும்' என்றும், பசியும், காமமும், உதர வெரிவும் குய்யத் தினவும் ஆகலின் 'நோய்' என்றும் கூறினார்.

உற்பவத் தைம் பெருந் துய ரென்றதற் குதாரணம். சிவ தருமோத்தரம், (1) "என்றென் றெண்ணி யிருக்குமுயி ரிடர்ப்பட் டழியு மெழில் வரைக்கீ, ழொன்று மொருவன் றனைப் போலக் கருப்பா சயப்பை யுறுத்துதலான், மன்ற வுததி மறிந் தாழ்வான் வருத்த மென்ன வருந்தியிடு, நின்ற கருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள நிறை யழிந்தே." எ-ம். (2) "அங்கி யதனிற்

றங்கியிடு மயோ மயத்த கும்பத்திற், றங்கு மொருவன் றபநம் போற் றபந மெய்துந் தாயுதரத், தங்கி சுடவே யழலனைய சூசி யதனு லாகத்தைப், பங்கித் திடவே படுமிடரி னிருநாற் குணிதம் பட்டழுங்கும்.'' எ-ம். (3) கருப்பா சயமே கட்டமதா மதனி னதிகங் கடுங்காலு, முரிக்க மிகவு மோகமுற முன்னை யுணர்வு மந்நிலையே, மரிக்க வாலைக் கரும்பெனவே யோநி வழியின் வலி தொலைய, நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்று முயிரு னிலை யுடனே.'' எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. 'மாய்ந் துறு கணத் துயரி னெண்மடங்கு' என்றதற்கு உதாரணம். குறுந் திரட்டு. (4) ''பாண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த, விரண மானவை கொண்டிட விவரைவிட் டியம் பிடா திவணேகு, மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனக்தக், கரணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான்.'' எ-ம். சிவ தருமோத்தரம். (5) ''தநத்தினை மனைதனைத் தாரி யந்தனை, நினைத்தினி யெவரநு பவிப்பர் நீங்குநா, ளெனக்கிவை யந்நிய மாகு மேயெனு, மநத்துயர் மலியவே மாயு மாவியே.'' எ-ம். மெய்ஞ்ஞாந விளக்கம். (6) 'வந்திடு மாணத் துன்ப மறித்துரை செய்யப் போமோ, வுந்திமே லையும் பித்து முணர்வொடு பொறிக லங்கி, நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே, யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே.'' எ-ம். திருக் கடைக் காப்பு. (7) ''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி, யலமந்த போதாவி யஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில், வலம்வந்து மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச், சிலமந்தி யலமந்து மாமேறி முகில் பார்க்குந் திருவை யாறே.'' எ-ம். 'திதிக்கட் டுயரம்' என்றதற் குதாரணம். மெய்ஞ் ஞாந விளக்கம். (8) ''நலமிலா மூப்புத் துன்ப நடைதளர்ந் துரைத ழுத்துச், சலமதே மிகவுந் தோன்றித் தண்டுகண் ணுகிச் சித்தக், கலனமே பிறந்து கண்டார் கார்ச்சித்

தங் குமிழும் வண்ண, மலைவெலாஞ் செய்பு மூப்பின் வருந்துய ரந்தோ பாராய்.'' எ-ம். (9) 'பிணியினால் வலியுங் கேடாம் பிணியினு லழகும் போகுந், துணிவெலாம் பிணியாற் குன்றுந் தொலைவில்லே தனையைச் செய்யுந், தணிவிலா துள்ளே நின்று சாலவு மொறுக்கும் பொல்லாப், பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிது முண்டோ.'' எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கக)

இளமையிற் பிணியற் றொருகுடை நிழற்கீ ழிருநில முழுவதும் புரக்கும், வளமைபெற் றுடைய மகற்குமெப் பொழுது வருங்கொல்கூற் றெனும்பயத் தானு, முளமிகப் பறைநின் றறையுமேற் புவிமீ துடையரோ மற்றைய ரின்பங், களிமிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங் கருதாரு நரரே. (12)

ப-ரை. இளமையிற் - (அறிவு உதய மாகிய) குமாரப் பருவத்தின்கண், பிணி - வியாதி, அற்று - இன்றி (த் திட காத்திரனாயத் தனது), ஒரு - ஒரு, குடை - (வெண் கொற்றக்) குடை, நிழல் கீழ் - நிழற்கண்ணே, இரு - பெருமை (பொருந்திய), நிலம் - இராச்சிய (பார) த்தை, முழுவதும் - எல்லாம், புரக்கும் - காக்கின்ற, வளமை - செல்வத்தினை, பெற்று - அடைந்ததனால் (மநுஷாநந்தத்தினை), உடைய - உடைய, மகற்கும் - மஹாராசாவுக்குத் தான் (இன்ப மில்லையோ வெனின், அவனுக்கும்), எப்பொழுது - எந்தக் கணப் போதிலே, கூற்று - எமன், வரும் - வந்து (தேக நாசம் பண்ணுவனோ), எனும் - என்னும், பயத்தானும் - பயத்தினாலும் (ஜநங்கள் செய்த பாவம் இராசாவைச் சாரும், அப் பாவ மிகுதியால் மறுமைக்கண் நிரயத் துன்பம் வருமென்று மேல் வருங் காரிய விசாரணையினால் வரும் பயத்தினாலும்), மிக - மிகவும், உளம் - உள்ளம் (திடுக்குத் திடுக் கென்று மாறாது),

நின்று - நின்று, பறை - பறை, அறையுமேல் - அறையுமாஞல், மற்றையர் - (அவ ஞெழிந்த) மற்றையர், புவி மீது - பூமியின்கண், இன்பம் - இன்பமும், உடையரோ - உளரோ (இலர்), [அற்ப செல்வத்தினை யுடையோரும் மகக் களிப்பு மிகுந் திருப்ப ராகலின், மகா செல்வத்தினை யுடைய அந்த ராசாவுக்கு, அப் பயங்களும், அவற்ருல் வருந் துன்பங்களும் இல்லை. மகா போகங்களை அநுப வித்துக் கொண்டு மகக் களிப்பு மிகுத் திருப்ப னென்று நீ சொல்வா யாஞல்,] தெளிவு - விவேகம், இலாமையின் - இன்மையால், மேல் - மேல் (வரும்), காரியம் - காரிய, கருதுரு - விசாரணை பண்ணுத, நரர் - மாநுடர்க்கு, களி மிகுத்து இருப்பர் - மகக் களிப்பு அல்லது (விவேகமும், விசாரணையு முடையோக்குத் துன்பமே யன்றி, இன்பம் இன் றென்று அறிவாயாக), எ - று.

பொ - ரை. எ - து. அறிவு உதய மாகிய குமாரப் பருவத் தின்கண் வியாதி யின்றித் திட காத்திர ஞய்த், தனது ஒரு வெண் கொற்றக் குடை நிழற்கண்ணே பெருமை பொருந்திய இராச்சிய பாரத்தை யெல்லாம் காக்கின்ற செல்வத்தினை அடைந்ததஞல், மநுஷாநந்தத்தினை உடைய மகா ராசாவுக்குத் தான் இன்ப மில்லையோ வெனின், அவனுக்கும் எந்தக் கணப் போதிலே யமன் வந்து தேக நாசம் பண்ணுவனே வென்னும் பயத்திஞலும், சநங் கள் செய்த பாவம் இராசாவை வந்து சாரும், அப் பாவ மிகுதியால் மறுமைக்கண் நிரயத் துன்பம் வரு மென்று, மேல் வருங் காரிய விசாரணையிஞல் வரும் பயத்திஞலும், மிகவும் உள்ளத் திடுக்குத் திடுக் கென்று மாருந்து நின்று பறை யறையு மாஞல், அவ ஞெழிந்த மற்றையர், பூமியின்கண் இன்பமு முளரோ? இலர். அற்பச் செல்வத்தினை யுடையோரும் மகக் களிப்பு மிகுத் திருப்ப ராகலின், மகா செல்வத்தினை யுடைய அந்த ராஜாவுக்கு, அப் பயங்களும் அவற்ருல் வருந் துன்பங்களும் இல்லை. மகா போகங்களை அநுப வித்துக் கொண்டு மகக் களிப்பு மிகுத் திருப்ப னென்று நீ சொல்வா

யானல், விவேகம் இன்மையால் மேல் வருங் காரிய விசாரணை பண்ணுத மாநுடர்க்கு மனக் களிப் பல்லது, விவேகமும், விசாரணையு முடையோர்க்குத் துன்பமே யன்றி, இன்பம் இன் றென்று அறிவாயாக, எ - று.

'கூற் றெனும் பயத்தானும்' என்ற வும்மையால், விசாரணை யினல் வரும் பயம் வருவிக்கப்பட்டது. உள்ளம் பறை யறைதல் மிகுந்த பய மெனக் கொள்க. யாவர்க்காயினும், விவேக முள்ள பொழுது தேக போகந் துன்பமாய்த் தோன் றுமென்பதும், அஃது இல்லாத போது அவை யின்பமாய்த் தோன் று மென்பதுங் கண்டு கொள்க.

'உள மிகப் பறை நின் றறையும்' என்றதற்கு உதாரணம்: குறுந் திரட்டு. (10) "பிறந்தவரி றத்தல்பிழை யாதெனவ றிந்தா, ருறந்துயரொ ழிந்தினிய வுண்ணகினை வாரோ, மறந்து விட யத்துமய லுற்றிடுதல் வான்மீ, திறந்தவரை யுச்சிவிழு வோனிடைகொ ளின்பம." எ-ம். திரு வள்ளுவ நாயனர், (11) "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத்த வலமி லர்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஉ)

இம் மாநுடப் பிறப்பின்கண் இன்ப மில்லை யானல், இப் பிறப்பிற்கு மேலாய தேவப் பிறப்பிற் றன் இன்ப மில்லையோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றர்.

பிறப்பிறப் புடைய ராயிடை யினும்பல் பிணிபயந் தணிவில்கா மாதி, யுறப்படு தலின்வா னவர்க்குமற் றென்னை யுளசுகந் தேவின்மா நுடத்திற், சிறப்பிவை யென்முற் குறுக்கியோ நிகளின் றீமையுங் கொடியர்வீழ் நிரயத், தறப்பெருஞ் துயரு முரைப்பதென் பிறப்பூ டாதலாற் றீதலா தில்லையே. (13)

ப - ரை. பிறப்பு - (இந்த மாநுடர் போல்) உற்பத்தி, இறப்பு - லயங்களை, உடையராய் - உடையோராய், இடையினும் - (அவற்றுக்கு) இடை (யாகிய திதி) க்கண்ணும், பல் - பல, பிணி - வியாதிகளையும், பயம் - (கர்த்திரு சத்துருக்களினுற்) பயங்களையும், தணிவு இல் - அடங்காத, காம ஆதி - காமக் குரோதாதிகளையும், உற - அடைய, படுதலின் - படுதலின், வானவர்க்கும் - தேவர்களுக்கும், சுகம் - இன்பம், என்னை - என்னை, உள - உள, தேவின் - (ஊர்த்த யோநிக ளாகிய) தேவ கதி, மானுடத்தில் - மாநுட கதிக்கண் (வரும்), சிறப்பு - சிறப்பு, இவை - இவைகள், என்றால் - ஆனல், குறுக்கு - குறுக்கி, யோநிகளின் - யோநிகளாகிய (மிருக) கதியினது, தீமையும் - துன்பங்களையும், கொடியர் - மகா பாவிகள், வீழ் - வீழ லுற்ற, நிரயத்து - நரக கதியினது, அற - மிகுந்த, பெரும் - பெரிய, துயரும் - துன்பங்களையும், உரைப்பது - சொல்வது, என் - என்னை, ஆதலால் - ஆகையால், பிறப்பு ஊடு - பிறப்பின்கண், தீது - துன்பமே, அலாது - அல்லது, இலை - இல்லை, எ - று.

பொ - ரை. எ - து. இந்த மாநுடர் போல, உற்பத்தி லயங்களை உடையோராய், அவற்றுக்கு இடை யாகிய திதிக்கண்ணும், பல வியாதிகளையும், கர்த்திரு சத்துருக்களினுற் பயங்களையும், அடங்காத காமக் குரோதாதிகளையும் அடையப்படுதலின், தேவர்களுக்கும் இன்ப மென்னை யுள? ஊர்த்த யோநிக ளாகிய தேவ கதி மாநுட கதிக்கண் வருஞ் சிறப்பு இவைகளானல், குறுக்கியோநிக ளாகிய மிருக கதியினது துன்பங்களையும், மகா பாவிகள் வீழ லுற்ற நரக கதியினது மிகுந்த பெரிய துன்பங்களையும், சொல்வ தென்னை? ஆகையால், பிறப்பின்கண் துன்பமே யல்லது இல்லை, எ - று.

நாற் கதியுள்ளும் அதிகமா யுள்ள தேவ கதிக்கண்ணும் இங்ஙனந் துன்பமே வருமாகலின், வீ டொன்றுமே இன்ப மென் பதுங் கண்டு கொள்க. 'குறுக் கியோநி' என்றமையால், ஊர்த்த யோநி வருவிக்கப்பட்டது. எல்லாத் துன்பங்களினு நிரயத் துன்பம் அதிக மாதலின், 'அறப் பெருந் துயர்' என்றார்.

'வானவர்க்கு மற் றென்னை யுள சுகம்' என்றதற்கு உதாரணம். பெருந் திரட்டு. (12) "தீய வசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிக வுண்டு, நோயுண் டநங்க னுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான, காய முண்டு கைதொழவேண் டுநரு முண்டு கற்பத்தே, மாயுந் தன்மை யுண்டானால் வானோர்க் கென்னை வளனுண்டே." எ-ம். (13) "குருடன் புகரா மார்த்தாண்டன் குட்ட ரோகி யாமெஞ்ஞு, புருடன் றலைநோய் புரந்தரற்குப் புயத்தில் வாதந் தக்கற்குச், சுரநோ யுண்டு கயரோகஞ் சோம னுக்கு நீரிழிவு, வருணற் கிவ்வா றமரர்க்கு நோயுண் டுண்டே மருத்துவரும்." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கங)

அரிதுபெற் றிடினும் பெற்றதின் விருப்ப மறப்பெறு தனவிரும் புயிர்க, டெரியகிற் கிலமீ தெனைமுன மடை யாச் செல்வமாய்ச் சொல்பவித் திரமா, யுரியசிற் சுகமாய் நித்தமா யொருவீ டுளதெனக் கேட்டுமற் றதனிற், பிரியமற் றினமு முனமுறும் பொல்லாப் பிறவியே பெற விரும் புதலே. (14)

ப - ரை. அரிது - (யாவர்க்குங் கிடைத்தற்கு) அரிய (பொருளைப்), பெற்றிடினும் - பெற்ற காலத்தும், பெற்ற - (தாம்) பெற்ற, அதின் - (அப்பொருளை எளிதாகக் கருதி) அதன்கண், விருப்பம் - விருப்பம், அற - அற்று, பெறுதன - பெறுதன வாகிய (பொருள்கள் எளிய வாயினும் அவற்றை அரிய வாகக் கருதி),

விரும்பும் - விரும்பாநின்ற, உயிரகள் - உயிர்கள், ஈது - இது, ஏனை - என்னையோ, தெரியகிற்கிலம் - (யாம்) அறிகிலேம், முனம் - (தாம்) முன்னர், அடையா - அடையாத, செல்வ மாய் - செல்வ மாக, சொல் - சொல்லப்பட்ட, பவித்திர மாய் - நின்மல மாய், உரிய - (தமக்கு) உரிய, சித் சுக மாய் - ஞாநாநந்த மாய், நித்த மாய் - அழியாத தாய், ஒரு - ஒப்பற்ற, வீடு - மோக்ஷம், உளது - உண்டு, என - என்று, கேட்டும் - கேட்டிருந்தும், அதனில் - அதன்கண், பிரியம் - விருப்பம், அற்று - அற்று, முனம் - முன்னர், உறும் - (தாம்) அடைந்த தாய், பொல்லா - (அசுத்த மாய் துக்க மாய் அநித்தியமா யுள்ள) பொல்லாத, பிறவியே - பிறவியையே, இனமும் - இன்னமும், பெற - அடைய, விரும்புதலே - விரும்புதல், எ - று.

பொ - ரை. எ - து. யாவர்க்குங் கிடைத்தற் கரிய பொருளைப் பெற்ற காலத்தும், தாம் பெற்ற அப் பொருளை எளிதாகக் கருதி, அதன்கண் விருப்ப மற்றுப், பெறாதன வாகிய பொருள்கள் எளிய வாயினும், அவற்றை அரிய வாகக் கருதி, விரும்பாநின்ற உயிர்கள், இது என்னையோ, யாமறிகிலேம். தாம் முன்னர் அடையாத செல்வ மாகச் சொல்லப்பட்ட நின்மல மாய்த் தமக்கு உரிய ஞாநாநந்த மாய் அழியாத தாய் ஒப் பற்ற மோக்ஷம் உண்டென்று கேட்டிருந்தும், அதன்கண் விருப்ப மற்று, முன்னர்த் தாம் அடைந்த தாய் அசுத்த மாய்த் துக்க மாய் அநித்தமா யுள்ள பொல்லாத பிறவியையே இன்னமும் அடைய விரும்புதல், எ - று.

பெற்றதைச் சிறி தாக்கிப் பெறாததின் மேல் இச்சையை விரிப்பது உயிர்களுக்கு இயற்கைக் குணமா யிருக்கவும், தாம் அடைந்த பிறப்பு, அசுத்தம், துக்கம், அநித்திய மென்பது கண்டிருந்தும், தாம் அடையாத வீடு சுத்தம் சுகம் நித்திய மென்பது கேட்டிருந்தும், அதனை நீங்கி, இதனை அடைய விரும்புதலின்றி, அதனையே உயிர்கள் விரும்புதலின், 'தெரியகிற்கில மீதெனை' என்றார். வீட் டின்ப முயிர்க்கு அநன்னிய மாகலின், 'உரிய சிற் சுகம்' என்றார்.

'முன மடையாச் செல்வ மாய்' என்றதற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம். (14) "ஒருபொரு ளெக்கா லத்து முள தாகிச் சிறப்பு டைத்தா, யிருவினை யின்றி மேலா மின்பத்தை யளிப்ப தாகும், பொருவிலா விதன்மே லன்பு பொருந்திடா தாரு முண்டே, திருவுலா வகன்ற கல்விச் சிறந்தசான் றோர்க டாமே", எ-ம். மற்றும் வருவனவற்றூற் காண்க. (கச)

துன்பவெம் பிறப்பி னிழிவையு மழியாச் சுகபர வீட்டுயர் வினையும், பின்பவை தொலைத்தெய் தருங்கரு வியதாப் பெற்றவிப் பிறப்பையு மிதனின், மின்புரை நிலையா மையையுமோர்ந் தனனோர் விவேகியு மெனிற்பினும் விடயத், தன்புறு வீடு புகமிக விரையா தரைக்கணந் தரைக்கணுற் றிடுமே. (15)

ப - ரை. துன்ப - (அநித்திய மாய்) துக்கமா யுள்ள, வெம் - வெவ்விய, பிறப்பின் - பிறப்பினது, இழிவையும் - தாழ்ச்சியினை யும், அழியா - நித்திய மாய், சுக - ஆநந்தமா யுள்ள, பர - மே லாகிய, வீட்டு - வீட்டினது, உயர்வினையும - உயர்ச்சியினையும், பின்பு - (நெடுங் காலத்தின்) பின்பு, அவை - அந்த (இழிந்த) பிறப்பினை, தொலைத்து - நீக்கி, எய்த - (உயர்ந்த வீட்டினை) அடைதற்கு, அரும் - அரிய, கருவிய தாய் - ஏது வாக, பெற்ற - பெற்ற, இ - (பெறுதற் கரிய) இந்த, பிறப்பையும் - (மாநுடப்) பிறப்பினையும், (அங்ஙனம் பெறுதற்கு அரிய பிறவியே யாயினும்), மின் - மின், புரை - போலும் (தோன்றி அழகின்ற), இதனின் - இக் காயத்தினது, நிலையாமையையும் - அறிதற் கரிய அவதியினை யும், ஓர்ந்தனன் - விசாரணை பண்ணினுன், ஓர் - ஒரு, விவேகியும் - விவேகியும், எனின் - ஆனல், பினும் - பின்னரும், விடயத்து - (பிறப்பிற்கு ஏது வாய) விஷய சுகத்தின் மேல், அன்பு - அன்பு,

உறு - வைத்து, வீடு - வீடு, புக - அடைதற்கு, விரையாது - (ஏது வாய துறவினை அடைந்து தவ நெறிக்கண்) அதி சீக்கிர மாய்ச் செல்லாது, அரைக் கணம் - அரைக் கணப் போ தாயினும், தரைக் கண் - உலக வாழ்க்கையை, உற்றிடுமே - பொருந்தி நிற்பனே, எ - று.

பொ - ரை. எ - து. அநித்திய மாய்த் துக்கமா யுள்ள வெவ்விய பிறப்பினது தாழ்ச்சியினையும், நித்திய மாய் ஆநந்தமா யுள்ள மே லாகிய வீட்டினது உயர்ச்சியினையும், நெடுங் காலத்தின் பின்பு அந்த இழிந்த பிறப்பினை நீக்கி உயர்ந்த வீட்டினை அடை தற்கு அரிய ஏது வாகப் பெற்ற பெறுதற் கரிய இந்த மாநுடப் பிறப்பினையும், அங்ஙனம் பெறுதற் கரிய பிறவி யாயினும், மின் போலுந் தோன்றி அழிகின்ற இக் காயத்தினது அறிதற் கரிய அவதியினையும், விசாரணை பண்ணினன் ஓர் விவேகியு மானற், பின்னரும் பிறப்பிற்கு ஏது வாய விஷய சுகத்தின் மேல் அன்பு வைத்து, வீடு அடைதற்கு ஏது வாய துறவினை அடைந்து, தவ நெறிக்கண் அதிசீக்கிர மாய்ச் செல்லாது, அரைக் கணப் போ தாயினும், உலக வாழ்க்கையைப் பொருந்தி நிற்பனே, எ - று.

'பின் பவை தொலைத் தெய்த' என்றதைப், பிறப்பை நீக்கி வீ டடைய வென்று பிரித்துக் கூட்டுக. (கரு)

விளைப்பிறப் பொருவன் றுயரமென் றுணரின் விடய
போ கங்கணச் சுதலுந், தனக்குட லரிய முணர் தரின்
மரணஞ் சார்குறிக் குளநடுங் குதலு, நினைத்திடி னிதன்
பேற் றருமைமா தவங்க ணீங்கிநாள் கழித்தலுந் துணிவி,
லநித்தமோர்ந் திடினோர் கணமெதிர் காலத் தவதிகூ
றிடுத லு மிலையே. (16)

ப - ரை. வினை - (இரு) வினைக்கு (ஈடாய் வரும்), பிறப்பு - பிறப்பினை, ஒருவன் - ஒருவன், துயரம் - துன்பம், என்று - என்று, உணரின் - அறிந்தானே யானால், விடய - (அத் துன்பத் துக்கு ஏது வாகிய) விஷய, போகங்கள் - போகங்களை, நச்சுதலும் - இச்சிதலும், (இலை) - இல்லை, தனக்கு - தனக்கு, உடல் - காயம், அநியம் - வேறு (என்பது), உணர்தரின் - அறிந்தால், மரணம் சார் குறிக்கு - மரணக் குறி கண்ட காலத்தில், உளம் - (காயம் நீங்கும் என்னும் பயத்தினால்) மநம், நடுங்குதலும் - நடுங்குதலும், (இலை) - இல்லை, இதன் - இம் மாநுடப் பிறவி, பேற்று - பெறு தற்கு, அருமை - அருமை (என்று), நினைத்திடின் - அறிந்தால், மா - (இப் பிறவிக்குப் பயனாய மோக்ஷத்தை அடைதற்கு ஏது வாய) மகத் தாகிய, தவங்கள் - தவங்களை (ச் செய்தல்), நீங்கி - ஒழிந்து, நாள் - (வாழ்) நாள்களை, கழித்தலும் - (வீணாகப்) போக்குதலும், இலை - இல்லை, துணிவு இல் - (எந்தக் கணம் இருக்குமோ எந்தக் கணம் போகுமோ வென்று) தெளியக் கூடாத, அநித்தம் - (தேக) அநித்தியத்துவத்தை, ஓர்ந்திடின் - அறிந்தால், ஓர் - ஒரு, கணம் - கணப் போதாயினும், காலத்து - (இன்ன) காலத்தில் (இன்னது செய்வோ மென்றும்), அவதி - அளவு, கூறிடுதலும் - சொல்லுதலும், இலை - இல்லை, எ - று.

பொ - ரை. எ - து. இருவினைக்கு ஈடாய் வரும் பிறப்பினை ஒருவன் துன்ப மென்று அறிந்தானே யானால், அத் துன்பத்துக்கு ஏது வாகிய விஷய போகங்களை இச்சித்தலும் இல்லை; தனக்குக் காயம் வே றென்பது அறிந்தால், மரணக் குறி கண்ட காலத்தில், காய நீங்கு மென்னும் பயத்தினால் மந நடுங்குதலும் இல்லை; இம் மாநுடப் பிறவி பெறுதற்கு அருமை யென்று அறிந்தால், இப் பிறவிக்குப் பயனாய மோக்ஷத்தை அடைதற்கு ஏது வாய மகத் தாகிய தவங்களைச் செய்தல் ஒழிந்து, வாழ் நாள்களை வீணாகப்

போக்குதலும் இல்லை; எந்தக் கணம் இருக்குமோ எந்தக் கணம் போகுமோ வென்று தெளியக் கூடாத தேக அநித்தியத்துவத்தை அறிந்தால், ஒரு கணப் போதாயினும் இன்ன காலத்தில் இன்னது செய்வோ மென்னு மளவு சொல்லுதலும் இல்லை, எ - று.

'இல்லை' என்னும் வினைக் குறிப்பு மொழியைக், கடை நிலைத் தீபக மாக்கி எல்லாவற்றோடுங் கூட்டிக் கொள்க.

'மரணஞ் சார் குறிக்குள நடுங்குதலு மில்லை' என்றதற்கு உதாரணம்: பெருந் திரட்டு. (15) "வில்வி ளங்கிய விண்ணவர் மிகுத்தவாழ் நாளு, மல்ல ரும்பக லென்னுமீர் வாளினு லரிந்து, கொல்லும் வெங்கொடுங் கூற்றையார் குலைவுறார் குறுகி, னல்வி ருந்தென வுவந்தெதிர் கொள்ளுவான் ஞானி" மற்றும் வருவன வற்றூற் காண்க. (கரு)

கருமமொன் றியற்றப் பிறர்கையிற் கருவி கவர்ந்து ளோன் பினுமவர் கொளுமுன், விரைவினெண் ணியசெய் யாதுமற் றதையே மிகச்சிறப் பித்துநோக குதல்போற், புரையில்வீட் டின்ப மடைகுவா னதற்குப் பொருந்திய வருந்தவம் புரியா, தொருகண மேனு நிலையிலிவ் வுடல் வைத் தொப்பனை செய்துநோக் குதலே. (17)

ப - ரை. ஒன்று - (தனக்கான) ஒரு, கருமம் - தொழிலை, இயற்ற - செய்து முடிக்க, கருவி - (அதனைச் செய்து முடித்தற் குரிய) கருவியை, பிறர் - அயலார், கையில் - கையில், கவர்ந்துளோன் - (இரவல்) வாங்கி வந்தவன், பினும் - (அக் கருவியைப்) பின்னரும், அவர் - கொடுத்தோர், கொளும் - (வாங்கிக்) கொள்ளும், முன் - முன்னர், எண்ணிய - (தான்) கருதிய (தொழிலை), விரைவின் - சீக்கிரத்தில், செய்யாது - செய்து முடியாது

(வைத்து), அதை - அதனை, மிக - (தன தாகப் பாவித்து) மிகவும், சிறப்பித்து - சிறப்பித்து, நோக்குதல் - பார்த்துக்கொண் டிருத்தல், போல் - போலும், புரை - குற்றம், இல் - அற்ற, வீட்டு - மோக்ஷ, இன்பம் - ஆநந்தத்தை, அடைகுவான் - அடையும் பொருட்டு, அதற்கு - அதற்கு, பொருந்திய - பொருந்திய, அரும் - அரிய, தவம் - தவத்தினை, புரியாது - செய்யாமல், ஒரு - ஒரு, கணமேனும் - கணப்போதாயினும், நிலை - நிலை, இல் - இல்லாத, இவ் உடல் - இக் காயத்தை, வைத்து - (தன தாகப் பாவித்து) வைத்து, ஒப்பனை - செப்பம், செய்து - செய்து, நோக்குதல் - பார்த்துக்கொண் டிருத்தல், எ - று.

பொ - ரை. எ - து. தனக்கான ஒரு தொழிலைச் செய்து முடிக்க, அதனைச் செய்து முடித்தற் குரிய கருவியை அயலார் கையில் இரவல் வாங்கி வந்தவன், அக் கருவியைப் பின்னருங் கொடுத்தோர் வாங்கிக் கொள்ளு முன்னர்த் தான் கருதிய தொழிலைச் சீக்கிரத்திற் செய்து முடியாது வைத்து, அதனைத் தன தாகப் பாவித்து, மிகவுஞ் சிறப்பித்துப் பார்த்துக் கொண் டிருத்தல் போலும், குற்ற மற்ற மோக்ஷாநந்தத்தை அடையும் பொருட்டு அதற்குப் பொருந்திய அரிய தவத்தினைச் செய்யாமல், ஒரு கணப் போ தாயினும் நிலை யில்லாத இக் காயத்தைத் தன தாகப் பாவித்து வைத்துச் செப்பஞ் செய்து பார்த்துக் கொண் டிருத்தல், எ - று.

தனக் குரிய தொழிலைச் செய்தற்குப் பிறர் கையிற் கருவி வாங்கினேன் போல், தனக் குரிய தவத்தினைச் செய்தற்குக் கருவியாக இக் காயத்தைச் சிவன் கையில் வாங்கிக் கொண்ட தென வறிக. (கஎ)

இல் வாழ்க்கையி லிருந்து தாநங்களைக் கொடுத்துப் பிறப்பினை நீக்கக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றர்:—

பவத்தனிப் பரவைக் குரவையைத் தாநப் படுவை
யைக் கொடுகடப் பரிதா, லுவப்பொடு தவப்பா தையி
னிவர்ந் தன்றி யுண்மையித் தகவிகந் துலகோ, ரவப்பொழு
தகல விருப்பதென் விருப்போ வகன்றவர்க் கருத்தலா
திகளாற், றவத்தினை மறந்தார் கொல்லெனுஞ் சொல்லைத்
தமதுளத் துணர்கலார் போலும். (18)

ப - ரை. பவ - பிறவி யாகிய, தனி - ஒப் பற்ற, குரவையை - விசாலம் பொருந்திய, பரவை - கடலினை, தாந - (இல் வாழ்க்கையி லிருந்து கொடுக்கப்பட்ட) தாந மாகிய, படுவையை கொடு - தெப்பத்தினலே, கடப்பு - கடத்தற்கு, அரிது - அரிதாம், உவப் பொடு - விருப்பத்துடனே, தவ - (துறவின் க ணின்று செய்யப் பட்ட) தவ மாகிய, பாதையின் - கப்பலின் மேல், இவர்ந்து - ஏறினல், அன்றி - அல்லது, உண்மை - (இது) சத்தியம், இ - இந்த, தகவு - தகைமையை, இகந்து - விட்டு நீங்கி, உலகோர் - (இவ்) வுலகத்தார், அவ - வீணிலே, பொழுது - பொழுது, அகல - போக, இருப்பது - இருப்பது, என் - என்ன, விருப்போ - விருப்பமோ, அகன்றவர்க்கு - துறந்தோர்க்கு, அருத்தல் ஆதி களால் - (பசி நோய் குளிர் முதலியவற்றிற்கு) உண்டி (மருந்து உறையுள்) முதலிய (உதவி அவர் தவத்திற்கு விக்கிநம் வாராதபடி பாதுகாத்தற் பொருட்டு), தவத்தினை - (தமக்கு உரிய) தவத்தினை, மறந்தார் - மறந்தார், கொல் - கொல்லோ, எனும் - (இல்லறத் தார்) என்று (திரு வள்ளுவ நாயனர் கூறிய), சொல்லை - சொல்லை, தமது - தமது, உளத்து - உள்ளத்தின்கண்ணே, உணர்கலார் - விசாரணை பண்ணுதவர், போலும் - போலும், எ - று.

பொ - ரை. எ - து. பிறவி யாகிய ஒப் பற்ற விசாலம் பொருந்திய கடலினை, இல் வாழ்க்கையி லிருந்து கொடுக்கப்பட்ட தாந மாகிய தெப்பத்தினலே கடத்தற் கரிதாம், விருப்பத்துடனே

துறவின்கணின்று செய்யப்பட்ட தவமாகிய கப்பலின் மேலேறினு லல்லது; இது சத்தியம். இந்தத் தகைமையை விட்டு நீங்கி, இவ்வுலகத்தார் வீணிலே பொழுது போக இருப்பது என்ன விருப்பமோ! துறந்தோர்க்குப் பசி, நோய், குளிர் முதலியவற்றிற்கு உண்டி மருந்து உறையுள் முதலிய வுதவி அவர் தவத்திற்கு விக்கிநம் வாராதபடி பாதுகாத்தற் பொருட்டுத் தமக்கு உரிய தவத்தினை மறந்தார் கொல்லோ இல்லறத்தா ரென்று திருவள்ளுவ நாயனுர் கூறிய சொல்லைத் தமது உள்ளத்தின்கண்ணே விசாரணை பண்ணுதவர் போலும், எ - று.

இல்லற முற்றும் வழுவாது நடக்கவே, குடும்பங் குற்றமாய்த் தோன்றும், இதனுற் புறத் துறவு வரும், இத் துறவினுல் தவத்தைப் பண்ண வரும், இத் தவத்தால் உட் டுறவு வரும், இவ் வுட்டுறவால் மெய் யுணர்வு பிறக்கும், இம் மெய் யுணர்வால் பிறப்பு நீங்கும், ஆதலின், 'தாநப்படுவையைக் கொடு கடப் பரிது' என்றுர். (கஅ)

"இல் வாழ்க்கையே அற னெனப்பட்டது" என்றும், துறவினை "அஃதும் பிறன் பழிப்ப தில்லாயி னன்று" என்றுந் திரு வள்ளுவ நாயனுர், இல் வாழ்க்கையை அதிகமாகக் கூறியிருக்க, நீர் அதனை மறுத்துத் துறவினை அதிக மென்றும், இதன்கணின்று வீட்டை அடைய வேண்டு மென்றுங் கூறிய தென்னை யென்று கேட்ட சீடனை நோக்கிக் கூறுகின்றுர்:—

ஈதலே யறமு மநித்தமா மனைத்து மிகழ்ந்துகை
விடுதலே வீடு, மாதலாற் றுநக் குரியவில் வாழ்க்கை
யதனையே யறமெனக் கூறிக், கோதிலா வீட்டி னிலக்கண
மிருத்தல் குறித்துமெய் யுணர்வையுந் துறவு, டோதினுர்
வேதந் தனைத்தமி ழுருவத் தொளித்தெமக் களித்த
வள் ளுவரே. (19)

ப - ரை. ஈதல் - (யாவர்க்குங்) கொடுக்குதலே, அறமும் - தருமமும், அநித்தம் - அநித்தியம், ஆம் - ஆகிய, அனைத்தும் - எல்லாவற்றினையும், இகழ்ந்து - (துன்ப மென்று) இகழ்ந்து, கை - கை, விடுதலே - விட்டு நீங்குதலே, வீடும் - வீடும், ஆதலால் - ஆகலின், தாநக்கு - தாநம் கொடுத்தற்கு, உரிய - உரிய, இல் - இல், வாழ்க்கை யதனையே - வாழ்க்கையையே, அறம் - அறம், என - என, கூறி - கூறி, கோது - (துறவின்கண்) குற்றம், இலா - அற்ற, வீட்டின் - மோக்ஷ, இலக்கணம் - இலக்ஷணம், இருத்தல் - இருத்தலை, குறித்து - நோக்கி, மெய் புணர்வையும் - (மெய்ப் பொருளை யறிதற்கு ஏது வாய ஞாநங் கூறிய) மெய் யுணர் வென்னும் அதிகாரத்தையும், துறவூடு - துற வதிகாரத் தோடு (சேர்த்து), ஓதினர் - கூறினர், வேதந்தனை - வேத அர்த் தங்களை, தமிழ் - தமிழ் (மொழி), உருவத்து - ரூபத்திலே, ஒளித்து - மறைத்து, எமக்கு - எமக்கு, அளித்த - அருளிச் செய்த, வள்ளுவர் - திரு வள்ளுவ நாயனர், எ - று.

பொ - ரை. எ - து. யாவர்க்குங் கொடுக்குதலே தரும மும், அநித்திய மாகிய வெல்லாவற்றினையுந் துன்ப மென் றிகழ்ந்து கைவிட்டு நீங்குதலே வீடும், ஆகலின், தாநங் கொடுத்தற் குரிய இல் வாழ்க்கையையே அற மெனக் கூறித் துறவின்கட் குற்ற மற்ற மோக்ஷ லக்ஷணம் இருத்தலை நோக்கி மெய்ப் பொருளை யறிதற்கு ஏது வாய ஞாநங் கூறிய மெய் யுணர் வென்னும் அதி காரத்தையும், துற வதிகாரத்தோடு சேர்த்துக் கூறினர்; வேதார்த் தங்களைத் தமிழ் மொழி ரூபத்திலே மறைத்து எமக் கருளிச் செய்த திரு வள்ளுவ நாயனர், எ - று.

மொழிகளுள் அருத்த மிருத்தலின், 'ஒளித்து' என்றும், சத்தத்திற்கு உயிர் அருத்த மாகலின், 'உருவத்து' என்றும் கூறினர்; 'வேதம்' என்பதும், 'தமிழ்' என்பதும் ஆகு பெயர்.

'வேதந்தனைத் தமிழுருவத் தொளித்து' என்றதற்கு உதாரணம்: திருவள்ளுவ மாலை, (16) "ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்தி தனினிது, சீரியதென் றொன்றைச் செப்பரிதா-லாரியம், வேதமு டைத்துத்த மிழ்திரு வள்ளுவனு, ரோதுகு றட்பாவு டைத்து." எ-ம். (17) "செய்யாமொ ழிக்குந்தி ருவள்ளு வர்மொழிந்த, பொய்யாமொ ழிக்கும்பொ ருளொன்றே - செய்யா, வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை, யிதற்குரியா ரல்லாதா ரில்" எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார் நீத்தவர் பெருமைநூன் முகப்பாற், சிறந்திட வமைத்தாங் கது கொடில் வாழ்கைச் சிறுமைதூற் றினரது தெரியார்க், கறந்தவா தியற்றி னவனினுங் கோடி யதிகமா மெனமந மறுது, துறந்துளோ னையும்பட் டணத்தெம தடிக டொகுத்தகட் டுரைதிகழ்த் திடுமே. (20)

ப - ரை. நிறம் தரும் - (அறிஞரால்) புகழப்படுகின்ற, தெய்வ - தெய்வ, புலமை - புலமை, வள்ளுவனார் - திருவள்ளுவ நாயனார், நீத்தவர் - துறந்தோரது, பெருமை - பெருமையை, நூல் - சாத்திர, முகப்பால் - முகத்திற்கு, சிறந்திட - அணியாக, அமைத்து - வைத்து, அது கொடு - அவரது பெருமையை (பொருளாகக்) கொண்டு, இல் வாழ்க்கை - (அதன் பின்னர்) இல் வாழ்க்கை, சிறுமை - சிறுமையை, தூற்றினர் - புகழ்ந்தது போன்று இகழ்ந்தார், அது - அந்த நுட்பம், தெரியார்க்கு - தெரியாதார்க்கு, அறம் - (முப்பத் திரண்டு) அறமும், தவாது - வழுவாது, இயற்றின் - செய்யும், அவனினும் - இல் வாழ்க்கை யுடையோனி லும், கோடி - கோடி பங்கு, அதிகமாம் - அதிகமாம், என - என, மநம் - உட் (டுறவு), அறுது - இல்லாத, துறந்துளோனையும் -

(புறத்) துறவோனையும், பட்டணத்து - பட்டணத்துப் பிள்ளை யாகிய, எமது - எமது, அடிகள் - சுவாமிகள், தொகுத்த - தொகுத்துக் (கூறிய), கட்டு - உறுதி, உரை - மொழி (தானே), திகழ்த்திடும் - விளக்கும், எ - று.

பொ - ரை. எ - து. அறிஞராற் புகழப்படுகின்ற தெய்வப் புலமைத் திரு வள்ளுவ நாயனுர் துறந்தோரது பெருமையைச் சாத்திர முகத்திற்கு அணியாக வைத்து, அவரது பெருமையைப் பொருளாகக் கொண்டு, அதன் பின்னர் இல் வாழ்க்கைச் சிறுமை யைப் புகழ்ந்தது போன்று இகழ்ந்தார். அந்த நுட்பம் தெரியா தார்க்கு, முப் பத் திரண் டறமும் வழுவாது செய்யும் இல் வாழ்க்கை யுடையோனிலும், கோடி பங்கு அதிகமா மென உட் டுறவு இல்லாத புறத் துறவோனையும் பட்டணத்துப் பிள்ளை யாகிய எமது சுவாமிகள் தொகுத்துக் கூறிய உறுதி மொழி தானே விளக்கும், எ - று.

துறந்தோர் பெருமை யெனவே, துறவாதார்க்குச் சிறுமை யென்பதும், அவ் வதிகாரத்தினுலுங் காண்க; கட்டுரையாற் சிறுமை பெருமை அறியப்படுதலிற், 'கட்டுரை திகழ்த்தும்' என்றார். (உ0)

ஆனல், நீர் கூறிய துற விலக்கணம் என்னை யென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

பிறப்பெனு முவரிச் சுழியதா மெழிலார் பெண்டிரா தியவுயிர்ச் சார்வுஞ், சிறப்புறு புவியா தியபொருட் சார்வுந் தீரநீக் குதறுற வவற்றா, டுறப்படு மெவைநீப் பினுமறி வுடையோ ரொருதம தனைபிதா வினையுந், துறப்பரேற் றுறப்போர்க் கருநர கெனநீ சொற்றசொற் சத்திய மாமால். (21)

ப - ரை. பிறப்பு - பிறவி, எனும் - ஆகிய, உவரி - கடலுக்கு, சுழியது - சுழி, ஆம் - ஆகிய, எழில் - அழகு, ஆர் - பொருந்திய, பெண்டிர் - பெண்டீர், ஆதிய - முதலிய, உயிர் - உயிர், சாரவும் - சார்வினையும், சிறப்பு - சிறப்பினை, உறு - உடைய, புவி - காணி, ஆதிய - முதலிய, பொருள் - பொருட், சார்வும் - சார்வினையும், தீர - ஒருங்கே, நீக்குதல் - (விட்டு) நீக்குதல், துறவு - துறவ, அவற்றாடு - (ஆனால், நீர் கூறிய இரு வகைச் சார்வான) அவற்றுள், உறப்படும் - பொருந்தி யிருக்கிற, எவை - எவற்றினை, நீப்பினும் - துறந்தாலும், அறி வுடையோர் - அறிவினை யுடையோர், ஒரு - ஒப் பற்ற, தமது - தமது, அனை - மாதாவினையும், பிதாவினையும் - பிதாவினையும் (துறப்பரோ), துறப்பரேல் - துறந்தால் (என்னையோ வெனின்?) துறப்போர்க்கு - துறந்தோர்க்கு, அரும் - அரிய, நரகு - நரகம், என் - என்று (நீ சொன்னாய்), நீ - நீ, சொற்ற - சொன்ன, சொல் - சொல், சத்தியம் ஆம் - உண்மையே யாம், எ - று.

பொ - ரை. எ - து. பிறவி யாகிய கடலுக்குச் சுழி யாகிய அழகு பொருந்திய பெண்டீர் முதலிய உயிர்ச் சார்வினையும், சிறப்பினை யுடைய காணி முதலிய பொருட் சார்வினையும் ஒருங்கே விட்டு நீங்குதல் துறவு. ஆனால், நீர் கூறிய இரு வகைச் சார்வான அவற்றுட் பொருந்தி யிருக்கிற எவற்றினைத் துறந்தாலும், அறிவினை யுடையோர் ஒப் பற்ற தமது மாதாவினையும், பிதாவினையும் துறப்பரோ? துறந்தால் என்னையோ? எனின், துறந்தோர்க்கு அரிய நரக மென்று நீ சொன்னாய், நீ சொன்ன சொல் உண்மையே யாம், எ - று.

மாதா பிதாக்களை நீ இன்னா ரென்று அறியா யென்று கூறி, மேல் மாதா பிதாக்க ளாவார் இன்னா ரென்று கூறுகின்றார். 'பெண்டீ ராதிய' எனவே, மாதா பிதா புத்திரர் சகோதரர் முதலிய

பந்துக்களையும், 'புவி யாதிய' எனவே, தநம், தாநியம், வஸ்திரம், ஆபரணம், மாடு, ஆடு, அடிமை முதலியவற்றையும் வருவித்துக் கொள்க. (உக)

விடையதூ ரிறையே தாதைமற் றவன்பான் மின்னெம தன்னையன் னவரைக், கடையரே மறந்து துறந்துதா னன்றோ கடும்பவ விடும்பையுற் றனமிவ், வடைவுணர்ந் திலைபோன் றுடலிதற் கேது வாயவர் தாய்பிதா வென நெஞ், சுடைவுறா நின்றாய் பவந்தொறிவ் வணமுற் றுளவுயிர்க் களவியா துரையே. (22)

ப - ரை. விடையது - இடபத்தில், ஊர் - ஏறி நடத்துகின்ற, இறையே - கடவுளே, தாதை - (எமது) பிதா, அவன்பால் - அவனது (பாகம் பிரியா திருந்த), மின் - மின் போல்வாளே, எமது - எமது, அன்னை - மாதா, அன்னவரை - அந்தப் பிதாவை யும் மாதாவையும், கடையர் - கடைய ராகிய (யாம்), மறந்து - மறந்து, துறந்து - துறந்து, அன்றோ - அல்லவோ, கடும் - (அளவில் காலம்) கடிய, பவ - பிறவி, இடும்பை - துன்பத்தை, உற்றனம் - அடைந்தனம், இ அடைவு - இந்த முறைமையை, உணர்ந்திலை - அறியாய், போன்று - போன்று, உடல் - உடம்பு, ஏது வாயவர் - (தோன்றற்கு) ஏதுவாய் வருகின்ற (பேர்களை), தாய் - மாதா, பிதா - பிதாக்கள், என - என்று, நெஞ்சு - மநம், உடைவுறா - கலங்குறா, நின்றாய் - நின்றாய், பவம் - சநநந், தொறும் - தோறும், இ வண்ணம் - இந்த முறையே, உற்று உள - (மாதா பிதாக்க) ளென்று வந்த, உயிர்க்கு - சீவர்களுக்கு, அளவு - மட்டு, யாது - யாது, உரை - (நீ) சொல்வாயாக, எ - று.

பொ - ரை. எ - து. இடபத்தி லேறி நடத்துகின்ற கடவுளே எமது பிதா, அவனது பாகம் பிரியா திருந்த மின் போல் வாளே எமது மாதா, அந்தப் பிதாவையும், மாதாவையும், கடைய

ராகிய யாம் மறந்து துறந் தல்லவோ, அளவில் காலங் கடிய பிறவித் துன்பத்தை அடைந்தனம். இந்த முறைமையை அறியாய் போன்று. உடம்பு தோன்றற்கு ஏது வாய் வருகின்ற பேர்களை மாதா பிதாக்க ளென்று மநங் கலங்குகுறுநின்றாய். சநநந் தோறும் இந்த முறையே மாதா பிதாக்க ளென்று வந்த சீவர்களுக்கு மட்டு யாது? நீ சொல்வாயாக, எ - று.

உயிர்க்கு மாதாவும், பிதாவும், சத்தியும், சிவனு மென்பதும், உயிரும் நித்தியம், அவரும் நித்திய மென்பதும், அவரை மறந்து நீங்கினோர்க்குப் பிறவித் துன்பம் வரு மென்பதும், சோணித சுக்கிலங்களினல் தேகம் உண்டாகையால், இவ் வுடம்பிற்கே மாதா பிதாக்கள் இவ ரென்பதும், இவ் வுடம்பும் அநித்தியம், இதற்கு ஏதுவாய் வந்தோரும் அநித்திய மென்பதும், இவர் சநநந் தோறும் வேறு வேறாய் மாறி வருதலின், இவரைத் துறந்து தவம் புரிவோர்க்கு நிரயத் துன்ப மில்லை யென்பதுங் கண்டு கொள்க.

'உடலிதற் கேதுவாயவர் தாய் பிதா' வென்றதற்கு உதா ரணம்: (18) "அத்தனொ டன்னைக் கன்புசெய் கின்றா ளவில் பிறப்புற் றவையவை தோறு, மெத்தனை தாயுந் தந்தையு முற்றா ரித்தனை யன்றோ விவர்களு மிங்கே", எ-ம், மற்றும் வருவன வற்றாற் காண்க. (உஉ)

உயிர்க்குத் தாய் தந்தை வேறே யிருத்தலின், உடற்குத் தாய் தந்தைகளைத் துறந்தாலும், தன்னை நம்பி யிருந்த மனைவி புத்திரரைத் துறக்கலாமோ வென்ற சீடனை நோக்கிக் கூறு கின்றார்.

தனதகத் தகலா திருந்துபே ரின்பந் தருதலான்
மனைவியுந் தன்பா, லினிதுதித் தொருதன் வினையொழித்
தசையா திருத்திவீட் டமுதருத் துதலா, லுனலருஞ்
சுதனு மொருவனுக் கவனூ டுதயமா யெழுந்தமெய்
யுணர்வே, பினையிஃ தன்றி மனைசுத ரெனயாம் பேணிநாட்
கழிப்பதும் பிழையே. (23)

ப - ரை. தனது - தனது (மநமாகிய), அகத்து - வீட்டின் கண், அகலாது - (இறையளவாயினும் விட்டு) நீங்காமல், இருந்து - இருந்து, பேரின்பம் - பேரின்பத்தை, தருதலால் - தருதலினால், மனைவியும் - பெண்டிரும், தன்பால் - தனதிடத்தில், இனிது - இனிதாய், உதித்து - தோன்றி, ஒரு - ஒப்பற்ற, தன் - தனது, வினை - தொழில்களை, ஒழித்து - மாற்றி, அசையாது - (முத்தியாகிய வீட்டின்கண்) அசைவற, இருத்தி - வைத்து, வீட்டு - (அம்) முத்தி (யின்பமாகிய), அமுது - அமுதினை, அருத்துதலால் - புசிப்பித்தலின், உனல் - நினைத்தற்கு, அரும் - அரிய, சுதனும் - புத்திரனும், ஒருவனுக்கு - ஒரு புருடனுக்கு, அவனூடு - அவனுள்ளே, உதயமாய் - உதயமாய், எழுந்த - தோன்றிய, மெய்யுணர்வே - மெய்ஞ்ஞானமே, பினை - பின்னர், இஃது - இந்த மெய்ஞ்ஞானத்தை, அன்றி - அன்றி, மனை - பெண்டிர், சுதர் - புத்திரர், என - என்று, பேணி - அபிமானித்துக்கொண்டு, நாள் - (வீணிலே வாழ்) நாள்களை, கழிப்பதும் - போக்குதலும், பிழை - குற்றமாம், எ - று.

பொ - ரை. எ - து. தனது மநமாகிய வீட்டின்கண் இறையளவாயினும் விட்டு நீங்காமலிருந்து, பேரின்பத்தைத் தருதலினாற் பெண்டிரும், தனதிடத்தில் இனிதாய்த் தோன்றி, ஒப்பற்ற தனது தொழில்களை மாற்றி, முத்தியாகிய வீட்டின்கண் அசைவற

வைத்து, அம் முத்தி யின்ப மாகிய அமுதினைப் புசிப்பித்தலின் நினைத்தற் கரிய புத்திரனும், ஒரு புருடனுக்கு அவனுள்ளே உதய மாய்த் தோன்றிய மெய்ஞ் ஞானமே. பின்னர் இந்த மெய்ஞ் ஞானத்தை அன்றிப், பெண்டிர் புத்திர ரென்று அபிமானித்துக் கொண்டு வீணிலே வாழ் நாள்களைப் போக்குதலும் குற்ற மாம், எ - று.

மனை சுதரால் வரும் இன்பம் அநித்தியமும், அற்பமு மாகலா னும், மெய் யுணர்வால் வரும் இன்பம் நித்தியமும், பூரணமு மாக லானும், இதற்கு அஃது ஒப் பன்றாயினும், ஒரு புடை ஒப் பாகக் கூறினா ரென் றறிக. (உ௩)

ஆனால், இந்த இளமைப் பருவத்திலே இல் வாழ்கையோ டிருந்து, இம்மை யின்பத்தை அநுபவித்து, முதிர்ந்த பருவத்தில் துறந்து, தவத்தைப் பண்ணி வீட் டின்பத்தை மறுமைக்கண் அடையக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

வேண்டினுண் டாகத் துறக்கவென் றமையால் விருத் தனுய்க் கருத்தழிந் துருவங், காண்டல்செய் விழிபஞ் சடைந்துட னடுக்குங் காலம்வந் தடைவதன் முன்னர், மாண்டகற் பதனுற் சாலியைப் போலு மனைவியா தியசமா தியினுற், நீண்டுமா நந்தம் பலவடைந் திடுதற் கெண்ணி நீத் திடுவர்புண் ணியரே. (24)

ப - ரை. வேண்டின் - முத்தி (யின்பம்) வேண்டில், உண்டாக - (காலம்) உண்டாக, துறக்க - துறக்க (வேண்டும்), என்றமையால் - என்று திரு வள்ளுவ நாயனர் அருளிச் செய்தமை யால், விருத்தன் - வார்த்திகன், ஆய் - ஆகி, கருத்து - மநம், அழிந்து - தடுமாறி, உருவம் - உருவங்களை, காண்டல் - காணுதல்,

செய் - செய்யாநின்ற, விழி - கண்கள், பஞ்சு - பஞ்சு, அடைந்து - அடைந்து, உடல் - உடல், நடுக்கும் - நடுக்குறும், காலம் - (அக்) காலம், வந்து - வந்து, அடைவதன் - பொருந்தும், முன்னர் - முன்னரே, மாண்ட - மாட்சிமைப்பட்ட, கற்பதனால் - கற்பினால், சாலியை - அருந்ததியை, போலும் - போன்ற, மனைவி - பெண்டிர், ஆதிய - முத லாகிய (சார்வுகளை), சமாதியின் - சமாதி நிஷ்டையை, உற்று - பொருந்தி, ஈண்டும் - இக் காயத்தின்கண், பல - பல, ஆநந்தம் - இன்பங்களை, அடைந்திடுதற்கு - அடைதற்கு, எண்ணி - கருதி, நீத்திடுவர் - துறப்பார், புண்ணியர் - புண்ணியர், எ - று.

பொ - ரை. எ - து. முத்தி யின்பம் வேண்டிற், கால முண்டாகத் துறக்க வேண்டு மென்று திரு வள்ளுவ நாயனார் அருளிச் செய்தமையால், வார்த்திக னாகி, மநந் தடுமாறி உருவங் களைக் காணுதல் செய்யாநின்ற கண்கள் பஞ் சடைந்து, உடல் நடுக்குறும் அக் காலம் வந்து பொருந்து முன்னரே, மாட்சிமைப் பட்ட கற்பினால் அருந்ததியைப் போன்ற பெண்டிர் முத லாகிய சார்வுகளைச் சமாதி நிஷ்டையைப் பொருந்தி இக் காயத்தின்கட் பல வின்பங்களை அடைதற்குக் கருதித் துறப்பார் புண்ணியர், எ - று.

முதுமைக் காலத்தில் உள்ளம் தடுமாறுதலின், ஆசாரியன் உபதேசித்த மொழிகளை விசாரணை பண்ணக்கூடாது, விழி பஞ் சடைதலின், ஞாந சாத்திரங்களைப் பார்க்கக் கூடாது, உடல் நடுக்குறுதலின், அசை வற நிஷ்டையில் இருக்கக்கூடாது, ஆகை யால், 'நடுக்குங் காலம் வந் தடைவதன் முன்னர்' என்றார். நிஷ்டை கூடி அவத்தைகள் நீங்குந் தோறும் இன்பம் வருதலின், 'ஈண்டு மாநந்தம் பல வடைந் திடுதற்கு' என்றார். உடல் பொரு ளாவி மூன்றனையும் ஆசாரியன் கையில் சத்தியமாகக் கொடுத்தலிற், புண்ணியர்' என்றார். இம் மூன்றனையும் கொடுத்த லாவது,

உடல் தா னென்று அபிமானித்த லின்மையும், விட்ட பொருள் களின் மேற் பற்றுத லின்மையும், சிவ மன்றி ஒன்றைச் சுட்டுத லின்மையும் எனக் கொள்க.

'விருத்தனுய்க் கருத் தழிந்து' என்றதற்கு உதாரணம்: திவ்யப் பிரபந்தம், (19) "முதுகு பற்றிக் கைத்த லத்தான் முன்னொருகோ லூன்றி, விதிர்வி திர்த்துக் கண்சு ழன்று மேற்கிளைகொண் டிருமி, யிதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவரே சாமுன், மதுவுண் வண்டு பாடுஞ் சோலை வதிரிவணங் குதுமே" எ-ம். (20) "பண்டு காம ரான வாறும் பாவை யர்வா யமுத, முண்ட வாறும் வாழ்ந்த வாறு மொக்கவுரைத் திருமித், தண்டு காலா வூன்றி மெள்ளத் தள்ளிநட வாமுன், வண்டு பாடுஞ் சோலை சூழ்ந்த வதிரிவணங் குதுமே" எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (உச)

நீர் துறக்க வேண்டு மென்று கூறிய மனைவியை முதிர்ந்த வயதில் துறப்ப தன்றி, இளமை வயதில் துறந்தால் பாவ மென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

இளமையின் மனையைத் துறத்தறீ தெனிற்ற னிறத் தலிற் றுறத்த லீடலவா, லளவிறீ தஃதாங் குயிர்ச்செய லன்றே லாபற்சந் நியாசந்தீ தனுமெய், விளிதலாற் பழுதின் றேற்பினு மிருப்பார் விடுதறீ தடுபிணி குறித்தே, துளையுநோ யிலரு மிறப்பதென் பிறப்போர்ந் தொழித் திடிற் பழித்திடா துலகே. (25)

ப - ரை. இளமையின் - இளமை (வயதினை யுடைய), மனையை - மனைவியை, துறத்தல் - துறக்குதல், தீது - பாவம், எனில் - என்பையானுல், தான் - தான், இறத்தலில் - (அவளை அவ் இளமைக்கண் விட்டு) இறந்து போகின்ற (பாவத் தோடு), துறத் தல் - துறந்துபோகின்ற (பாவம்), ஈடு - சமர்நம், அல - அன்று

(ஆகையால், அங்ஙனம் விட்டு இறந்து போதல்), அளவு - அளவு, இல் - இலாத, தீது - பாவம், அஃது - இறந்து போதல், உயிர் - (சிவச் செயலே யன்றி) சீவ, செயல் - செயல், அன்றேல் - அன்று (ஆகையால் பாவம் இன் றென்பையாஞல்), ஆபத் சந்நி யாசம் - ஆபற் சந்நியாசம் (சீவச் செய லாகலின் அதற்கு), தீது - பாவம் (உண்டாக வேண்டும்), அது - அச் சந்நியாசம் (பண்ணிக் கொண்ட வுடனே), மெய் - தேகம், விளிதலால் - நாச மாகலின், பழுது - (அது) பாவம், இன்றேல் - இன்று என்பையாகில், பினும் - (அச் சந்நியாசம் பண்ணிக் கொண்ட) பின்பும், இருப் பார் - (தேக நாச மின்றி) இருப்பார், விடுதல் - விட்டு (த் துறந்து) இருத்தல், தீது - பாவம், அடு - (அத் தேக) நாசம் பண்ணுகின்ற, பிணி - வியாதியை, குறித்தேல் - குறித்து (துறந்தமையால் பாவம் இன் றென்பை யாகில்), உளையும் - (உடலை) வருத்துதல் செய்யும், நோய் - நோய், இலரும் - இல்லாதாரும், இறப்பது - இறந்து போவது, என் - என்னை (ஆகையால்), பிறப்பு - பிறப்பினது, ஓர்ந்து - (அநித்தியத்துவத்தை) விசாரித்து, ஒழித்திடில் - துறந் தால், உலகு - உயர்ந்தோர், பழித்திடாது - பழியார், எ - று.

பொ - ரை. எ - து. இளமை வயதினை உடைய மனைவி யைத் துறக்குதல் பாவ மென்பையாஞல், தான் அவளை அவ் விளமைக்கண் விட்டு இறந்து போகின்ற பாவத்தோடு, துறந்து போகின்ற பாவம் சமான மன்று. ஆகையால், அங்ஙனம் விட்டு இறந்து போதல் அள விலாத பாவம். இறந்து போதல் சிவச் செயலே யன்றிச் சீவச் செய லன்றாகையால், பாவம் இன் றென்பையாஞல், ஆபற் சந்நியாசம் சீவச் செய லாகலின், அதற்குப் பாவம் உண்டாக வேண்டும். அச் சந்நியாசம் பண்ணிக் கொண்ட வுடனே தேக நாச மாகலின், அது பாவம் இன் றென்பையாகில், அச் சந்நியாசம் பண்ணிக் கொண்ட பின்பும் தேக நாச மின்றி

யிருப்பார், விட்டுத் துறந் திருத்தல் பாவம். அத் தேக நாசம் பண்ணுகின்ற வியாதியைக் குறித்துத் துறந்தமையால், பாவம் இன் றென்பையாகில், உடலை வருத்துதல் செய்யும் நோ யில்லா தாரும் இறந்து போவ தென்னை? ஆகையால், பிறப்பினது அநித்தி யத்துவத்தை விசாரித்துத் துறந்தால் உயர்ந்தோர் பழியார், எ - று.

விட் டிறந்தோன் மனைவிக்கு மங்கல காலத்துப் பந்தி பாவாடைக்கு வரக்கூடாமையினாலும், நல்ல வஸ்திராபரணங் கந்த புட்ப முதலியவை தரிக்கக் கூடாமையினாலும், மங்கலத்தின்கண் அவளைக் கண்ட போது, மாங்கலியப் பெண்கள் இகழ்தலினாலும், துன்பம் வருதலின், விட்டுத் துறந்தோன் மனைவிக்கு, அம் மங்கலத் திற் சிறப்புச் செய்கையாலும், நற் புடைவை முதலியவை தரித்துக் கொள்கையாலும், அவள் புருஷனைப் புகழுந் தோறும் அவளையும் புகழ்தலினாலும் இன்பம் வருதலின், 'இறத்தலிற் றுறத்த லீடவ' என்றார். அநித்திய விவேகந் தோன்றித் துறந்தோனை இம்மைக் கண் உயர்ந்தோர் பழியாமையின், அவனுக்கு மறுமைக்கண் பிறவித் துன்பம் இன் றென்பதும், உயர்ந்தோர் பழியா ரெனவே, இழிந் தோர் பழிப்பா ராயினும் அதனால் அவனுக்கு ஒரு குற்றம் இன் றென்பதும், காண்க. 'உலகம்' என்றது உயர்ந்தோரை. (உரு)

புதல்வரைக் குடும்பம் தாங்கும் பருவம் வந்த காலத்தில், அதற்குத் துணையாக வைத்துத் துறத்தல் நன்று; அவர்க்கு அதனைத் தாங்கும் பருவம் வருதற்கு இடையே கந வியாதி வந்த காலத்தில், ஆபற் சந்நியாசம் பண்ணிக் கொள்ளுதல் நன்று; அங்ஙனம் துறத்த லன்றிச் சும்மா விட்டுத் துறத்தல் தீ தென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

இக்கணத் திருந்த தினிவருங் கணத்தா டிருக்குமோ மரிக்குமோ வுடலென், றக்கண மனையா திகட்கரன் றுணையா மன்றென வெணித்துற வறஞ்சார், மிக்கவ னுபற் சந்நியா சியுஞ்சார் வினுக்குரஞ் சேர்த்திவிட் டவனுந், துக்கமே வலிற்பின் பவரிவன் போலுந் துறவரன் றென் பதுந் துணிவே. (26)

ப - ரை. இ - இந்த, கணத்து - கணப்பொழுது, இருந்த - இருந்த, உடல் - உடல், இனி - இனி (மேல்), வரும் - வரும், கணத்துடு - கணப்பொழுதிலே, இருக்குமோ - இருக்குமோ, மரிக்குமோ - நாச மாமோ, என்று - என்று, அ - (அநித்திய விவேகம் தோன்றிய) அந்த, கணம் - கணப் போதிலே (தானே), மனை - பெண்டிர், ஆதிகட்கு - ஆதிய (சார்வினுக்கு), அரன் - சிவனே, துணை - துணை, யாம் - நாம், அன்று - (துணை) அன்று, என - என்று, எணி - கருதி, துறவு அறம் - துற வறத்தை, சார் - அடைந்த, மிக்கவன் - உயர்ந்தோனே, ஆபத் சந்நியாசியும் - ஆபற் சந்நியாசம் பண்ணிக் கொண்டவனும், சார்வினுக்கு - (மனைவி யாதிய) சார்வினுக்கு, உரம் - வலிய (துணை), சேர்த்தி விட்டவனும் - சேர்த்தினேனும் (ஆவன் இவ னல்லாமல், வியாதி யைக் குறித்து அநித்தியம் தோன்றி, ஆபத் சந்நியாசம் பண்ணிக் கொண்டவனும், மனைவி யாதிய சார்வினுக்குப் புதல்வ ராதி சீவர் களைத் துணையாகச் சேர்த்தினேனும்), பின்பு - பின்பு, துக்கம் - துன்பத்தை, மேவலில் - அடைதலினால், அவர் - அவர்களை, இவன் - இவன், போலும் - போலும், துறவர் - துறவர், என்பதும் - என்று சொல்வது, துணிவு - தெளிவு, அன்று - அன்று, எ - று.

பொ - ரை. எ - து. இந்தக் கணப்பொழுது இருந்த வுடல், இனி மேல் வரும் கணப் பொழுதிலே இருக்குமோ நாச மாமோ வென்று அநித்திய விவேகம் தோன்றிய அந்தக் கணப் போதிலே

தானே, பெண்டி ராதிய சார்வினுக்குச் சிவனே துணே, நாம் துணே அன் றென்று கருதித் துறவறத்தை அடைந்த உயர்ந்தோனே, ஆபற் சந்நியாசம் பண்ணிக்கொண்டவனும், மனைவி யாதிய சார்வி னுக்கு வலிய துணே சேர்த்தினேனும் ஆவன். இவ னல்லாமல், வியாதியைக் குறித்து அநித்தியம் தோன்றி ஆபற் சந்நியாசம் பண்ணிக் கொண்டவனும், மனைவி யாதிய சார்வினுக்குப் புதல்வ ராதி சீவர்களைத் துணையாகச் சேர்த்தினேனும், பின்பு துன்பத் தை அடைதலினால், அவர்களை இவன் போலும் துறவ றென்று சொல்லுவது தெளி வன்று, எ - று.

இவ் வநித்திய விவேகம் கணப் போ தாயினு மாறாது உடைய ஞகையாலும், சார்வினுக்கு அழி விலாத சிவனே துணையாகச் சேர்த்தின ஞகையாலும் இவனே, 'ஆபற் சந்நியாசி' என்றும், 'சார்வினுக்கு உரஞ் சேர்த்தி விட்டவன்' என்றும், வியாதியைக் குறித்து ஆபற் சந்நியாசம் பண்ணிக்கொண்டவன், தேக நாச மின்றி இருந்த காலத்து, மனைவி முதலியோரை விடுத்தேனே யென்று பின்பு துன்பம் அடைதலினாலும், சார்வினுக்குச் சீவரைத் துணையாகச் சேர்த்தினேன் அச் சீவர்கட்கு இடையூறு வந்த காலத்தில், அங்ஙனம் வரலாமோ வென்று பின்பு துன்பம் அடை தலினாலும் அவர்களை, 'இவன் போலும் துறவ ரன் றென்பது துணிவே' என்றுங் கூறினர். அநித்திய விவேகந் தோன்றித் துறக்கின்ற துறவே சிறப் பென்பதும், சீவர்களுக்குச் சிவனே துணே யன்றிச் சீவர்கள் துணே யன் றென்பதுங் கண்டு கொள்க. (உசு)

வேதம் எழுபத் தைந்து வயதுக்கு மேற் சந்நியாசம் பண்ணிக் கோள்ள வேண்டு மென்று கூற, நீர் அதனை மறுத்து, இளமை வயதிலே துறக்கலா மென்று கூறியது என்னை யென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றர்,

பிறந்தவப் பொழுதே யினியொரு தலையாப் பிறப்பறுத் திடுவமென் றெணியே, யுறைந்தனை வயிற்றிற் பினையதுற் பவத்தூ டுறுபெருந் துயரினு லுயிர்கள், மறந்துறு முறையுஞ் சுகரகன் றமையு மதித்துநெஞ் சழிவினம் போல்வார்க், கறைந்திடு மலது பிறப்புணர்ந் தகல்வார்க் கவதியு மறையுமோ மறையே. (27)

ப - ரை. பிறந்த - (கருப்பத்தின் நீங்கிப் பூமியின்கட்) பிறந்த, அப் பொழுதே - அந்த (க் கண) ப் போதிலே (முன் னெடுங் காலம் இத் துன்பத்தை மறந்து மறந்து மோசம் போனேம். அங்ஙனம் மோசம் போகாதபடி), இனி - இனி, ஒரு - ஒரு, தலை ஆ - நியமம் ஆக (துறந்து ஞானாசாரியனை அடைந்து வேதாகமங்களைத் தேர்ந்து தவத்தினைச் செய்து), பிறப்பு - பிறப்பினை, அறுத்திடுவம் - மாற்றிக் கொள்ளுவோம், என்று - என்று, அனை - மாதாவினது, வயிற்றில் - கருப்பத்தின்கண், எணி - நினைத்து (க் கொண்டு), உறைந்து - இருந்து, பினை - பின்னர், அஃது - அந்த விவேகத்தை, உற்பவத்தூடு - உற்பவிக்குங் காலத்து, உறு - வரும், பெரும் - (மிகுந்த) பெரிய, துயரினுல் - துன்பங்களினுல், உயிர்கள் - சீவர்கள், மறந்து - மறந்து, உறு - இருக்கின்ற, முறையும் - முறைமையினையும், சுகர் - (பிண்ட ஞானம் அண்டத்தின்கண்ணும் மறவாது வந்து) சுக ரானவர், அகன்றமையும் - (பிதா முதலிய சார்பினைத்) துறந்து (தவத்தினைப் பண்ணி) பிறப்பை மாற்றிய முறைமையினையும், மதித்தும் - (சுருதியும் குருவும் கூறக் கேட்டு) அறிந் திருந்தும், நெஞ்சு - மநத்தின்கண், அழிவு - விசாரம், இல் - இல்லாத, நம் போல்வார்க்கு - எம் போலிகளுக்கு, அறைந்திடும் - (இன்ன வயதிலே துறக்க வேண்டுமென்று மட்டுக்) கூறும், அலது - அல்லது, பிறப்பு - பிறப்பினது (அநித்தியத்துவத்தை), உணர்ந்து - விசாரித்து, அகல்வார்க்கு - துறப்போர்க்கு, அவதியும் - மட்டும், அறையுமோ - கூறுமோ, மறை - வேதம், எ - று.

பொ - ரை. எ - து. கருப்பத்தின் நீங்கிப் பூமியின்கட் பிறந்த அந்தக் கணப் போதிலே, முன் னெடுங் காலம் இத் துன்பத்தை மறந்து மறந்து மோசம் போனேம்; அங்ஙனம் மோசம் போகாதபடி இனி யொரு நியம மாகத் துறந்து, ஞாநாசாரி யனை அடைந்து, வேதாகமங்களைத் தேர்ந்து, தவத்தினைச் செய்து, பிறப்பினை மாற்றிக் கொள்வோ மென்று, மாதாவினது கருப்பத் தின்கண் நினைத்துக் கொண் டிருந்து, பின்னர் அந்த விவேகத்தை உற்பவிக்குங் காலத்து வரும் மிகுந்த பெரிய துன்பங்களினல், சீவர்கள் மறந் திருக்கின்ற முறைமையினையும், பிண்ட ஞாநம் அண்டத்தின்கண்ணும் மறவாது வந்து சுக ரானவர், பிதா முதலிய சார்பினைத் துறந்து, தவத்தினைப் பண்ணிப் பிறப்பை மாற்றிய முறைமையினையும், சுருதியும், குருவும் கூறக் கேட்டு அறிந் திருந்தும், மநத்தின்கண் விசார மில்லாத எம் போலிகளுக்கு. இன்ன வயதிலே துறக்க வேண்டு மென்று மட்டுக் கூறு மல்லது, பிறப்பினது அநித்தியத்துவத்தை விசாரித்துத் துறப்போர்க்கு மட்டும் கூறுமோ வேதம், எ - று.

'உற்பவத்தா றெு பெருந் துயர்' என்றது, பிரசூத வாயு முரித்துத் தள்ளுதலினுலும், யோகித்துவார நெருக்கத்தினுலும் வருந் துன்பங்களை.

'பிறந்தவப் பொழுதே யினி யொருதலையா' என்றதற்கு உதாரணம்: சிவ தருமோத்தரம், (21) "இறந்தே முனமே யினிப் பிறப்போ மென்று மிந்த முறையினியாம், பிறந்த பொழுதே பிறவாத பெருமை யுடைய பிஞ்ஞகனை, யறிந்தே யவலப் பிறப் பிறப்பை யறுத்து விடுவோ மவனருளாற், செறிந்தே குரவன் றிருவடியைத் திகழ்ந்த வேதா கமந்தெருண்டே." எ-ம். கூர்ம புராணம். (22) "ஈங்கிவைபி றழ்ந்துவரு மியாவையவை யென் னிற், கோங்கமுலை மாதரொடு கூடுவதன் முன்ன, மோங்கியசந்

நாசியென வுற்றிடலு மாகுந், திங்கெறிமெய்ஞ் ஞானநெறி சிந்தை நிலை பெற்றால்." எ-ம். (23) "இல்லறமு யன்றுகடன் மூன்று மினி தீர்தா, லல்லலற மேவுமெதி யாகியமர் கிற்பார், முல்லை நகை மாதர்கடி முற்றியதி நத்தி, னெல்லையெதி யாகியுணர் வுற்றிடலு மாமால்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (உஎ)

கருப்பமா ருயிரத் துயர்பெயர்த் திடுதல் காரண பூரண ஞானம், விருப்பமா யடையக் கடவமென் றிருக்கும் வியாசர்சே யடைந்தது மதுவே, திருப்பியீண் டதனைத் துறவின்மீ தேற்றிச் செப்பலென் னெனிற்றுற வினைவிட், டிருப்பதோர் ஞான மெவன்கொனீத் தவரென் றிசைப்ப தென் பெயர்மெய்ஞ்ஞா நிகட்கே. (28)

ப-ரை. கருப்பம் - (மாதாவினது) கருப்பத்தின்கண், ஆர் - உறைந்துள்ள, உயிர் - உயிர்கள், அ - அந்த, துயர் - துன்பத்தை, பெயர்த்திடுதல் - (இனி மேல் அடையாதபடி) நீக்கிக் கொள்ளுவதற்கு, காரண - ஏது வாகிய, பூரண - பரிபூரண, ஞானம் - ஞானத்தை, விருப்ப மாய் - சந்தோஷ மாகி, அடையக் கடவம் - அடையக் கடவோம், என்று - என்று, இருக்கும் - இருக்கும், வியாசர் - வியாச, சேய் - புத்திர ராகிய சுகர் (பிண்டத்தின்கண் நினைத்துக் கொண் டிருந்து அண்டத்தின்கண் வந்து), அடைந்ததும் - அடைந்ததும், அதுவே - அந்த ஞானமே, அதனை - (நீர்) அந்த ஞானத்தை, திருப்பி - திருப்பி, ஈண்டு - இங்கே, துறவின் - துறவின், மீது - மேல், எற்றி - வைத்து, செப்பல் - சொல்வது, என் - என்னை, எனில் - என்று கேட்பாயானால், துறவினை - துறவினை, விட்டு - விட, இருப்பது - (வேறாய்) இருப்பது, ஓர் - ஒரு, ஞானம் - ஞானம், எவன் - யாது, மெய்ஞ் ஞானிகட்கு - மெய்ஞ் ஞானிகளுக்கு, நீத்தவர் - துறந்தோர், என்று - என்று, பெயர் - பெயர், இசைப்பது - சொல்வது, என் - என்னை, (நீ சொல்வாயாக), எ - று.

பொ - ரை. எ - து. மாதாவினது கருப்பத்தின்கண் உறைந்துள்ள உயிர்கள் அந்தத் துன்பத்தை இனிமேல் அடையாதபடி நீக்கிக் கொள்ளுதற்கு ஏதுவாகிய பரிபூரண ஞானத்தைச் சந்தோஷமாகி அடையக் கடவோமென்றிருக்கும்; வியாச புத்திராகிய சுகர் பிண்டத்தின்கண் நினைத்துக் கொண்டிருந்து அண்டத்தின்கண் வந்து அடைந்ததும் அந்த ஞானமே; நீர் அந்த ஞானத்தைத் திருப்பி இங்கே துறவின் மேல் வைத்துச் சொல்வதென்னையென்று கேட்பாயானால், துறவினை விட வேறாயிருப்பதொரு ஞானம் யாது? மெய்ஞ் ஞானிகளுக்குத் துறந்தோரென்று பெயர் சொல்வது என்னை? நீ சொல்வாயாக, எ - று.

உட் பற்றுப் புறப் பற்றெல்லாம் துறந்த விடத்தின் ஞானமாகவின், 'துறவினை விட்டிருப்பதோர் ஞானமெவன் கொல்' என்றார். (உஅ)

ஞானியஞ் ஞானங் கெடுத்தலாற் றுறவோ னெனப்படு
நவிற்றினஞ் ஞானந், தானுடலினைநா னெனுமக விருளென்
றனையிஃ தெமக்குமொத் ததுவா, லூனமின் மறைதேர்ந்
தொருசிவ நானென் றுளத்துணிச் சயித்தவக் கணமே,
யானென றவிர்ந்தவ் விருளுமாய்ந் திடுமென் றிசைத்தனை
யிதுபழு தன்றே. (29)

ப - ரை. ஞானி - ஞானியானவன், அஞ்ஞானம் - அஞ்ஞான, கெடுத்தலால் - நாசம் பண்ணுதலால், துறவோன் - (அவன்) துறவோன், எனப்படும் - என்று சொல்லப்படுவன், நவிற்றின் - சொல்லுமிடத்தில், அஞ்ஞானம் - அஞ்ஞானத்தின் இலக்கணந் தான் எங்ஙன மெனின், உடலினை - (தானல்லாத) உடம்பை, நான் - தான், எனும் - எனக் கருதப் பண்ணும், அக - உள், இருள் - இருள், என்றனை - என்றாய், இஃது - இஃது, எமக்கும் - எமக்கும், ஒத்தது - சம்மத மாயது, ஊனம் - குற்றம், இல் - அற்ற,

மறை - சுருதி, தேர்ந்து - விசாரணை பண்ணி, ஒரு - (சர்வமும் மித்தை) ஒப் பற்ற, சிவம் - சிவ (மொன்று) மே (சத்தியம்), நான் - (அந்தச் சிவம்) நான், என்று - என்று, உளத்துள் - உள்ளத்தின் கண், நிச்சயித்த - நிச்சயம் பண்ணின, அ - அந்த, கணமே - கணப் போதிலே, யான் - (உடம்பினை) யான், எனல் - என்று கருதும் அகங்காரமும், தவிர்ந்து - நீங்கி, அ இருளும் - அவ் (வகங் காரம் கருதற்கு ஏது வாய) அஞ்ஞான விருளும், மாய்ந்திடும் - நாச மாம், என்று - என்று, இசைத்தனை - கூறினை, இது - இங்ஙனம் கூறியது, பழுது - குற்றம், எ - று. அன்று ஏ - அசை நிலை.

பொ - ரை. எ - து. ஞானியானவன் அஞ்ஞான நாசம் பண்ணுதலால் அவன் துறவோ னென்று சொல்லப்படுவன். சொல்லுமிடத்தில் அஞ்ஞானத்தின் இலக்கணந் தான் எங்ஙன மெனின், தா னல்லாத உடம்பைத் தா னெனக் கருதப்பண்ணும் உள் ளிரு ளென்றாய். இஃது எமக்குஞ் சம்மத மாயது. குற்ற மற்ற சுருதி விசாரணை பண்ணிச் சர்வமும் மித்தை, ஒப் பற்ற சிவ மொன்றுமே சத்தியம், அந்தச் சிவம் நா னென்று, உள்ளத்தின் கண் நிச்சயம் பண்ணின அந்தக் கணப் போதிலே, உடம்பினை யா னென்று கருதும் அகங்காரமும் நீங்கி, அவ் வகங்காரம் கருதற்கு ஏது வாய அஞ்ஞான விருளும் நாசமா மென்று கூறினை. இங்ஙனம் கூறியது குற்றம், எ - று.

அஞ்ஞான விருள் தா னல்லாத உடலைத் தா னெனக் கருதச் செய்தல் சுபாவ மாகையால், 'எமக்கும் ஒத்தது' என்றார். நிச்சய ஞானத்தால் அவ் விருள் போகா தாகலின், 'இது பழுது' என்றார். (உக)

திரிவித வுலகத் தரிதொரு ஞானி தேர்விடத் தென்று மோ ரொன்றை, யுரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ வென்றுமிவ் வுலகுரைப் பதனு, லரிசொல்கீ தையிலும் பிரமசா தகரி னூர்க்குள வருத்தமென் பதனுற், பெரியதோர் வருத்த மெனைமறை துணிந்தப் பிரமநா னெனவிருத் தலினே. (30)

ப - ரை. திரி - (சொர்க்க மத்திய பாதாள மென்று) மூன்று, வித - விதமா யுள்ள, உலகத்து - உலகத்தின்கண்ணும், தேர் விடத்து - விசாரிக்கு மிடத்தில், ஒரு - ஒரு, ஞானி - ஞானி (கிடைத்தல்), அரிது - அரிது, என்றும் - என்றும், ஓர் ஒன்றை - ஒரோர் (அரிய வித்தையினைப் பார்த்து), உரை செயில் - சொல்லு மிடத்து, பிரம வித்தை - பிரம வித்தை, ஒத்து - போல், அரிதோ - (ஈ) தரிதோ, என்றும் - என்றும், இவ் வுலகு - இவ் வுலகத்தார், உரைப்பதனுல் - (வழக்கமாகச்) சொல்வதனுலும், அரி - அரி, சொல் - கூறிய, கீதையிலும் - (பகவற்) கீதையின் கண்ணும், பிரம சாதகரின் - பிரம சாதகரினும், ஆர்க்கு - யாவருக்கு, உள - உள்ளன, வருத்தம் - வருத்தங்கள், என் பதனுல் - என்பதனுலும், பெரியது ஓர் - (அவ் வித்தை போல் அரிதும்) பெரிய தோர், வருத்தம் - வருத்தமும், எனை - என்னை (உள), மறை - வேதத்தை, துணிந்து - (ஆராய்ந்து இரண் டென் பது இன்று பிரமம் ஒன்றே யென்று) நிச்சயம் பண்ணி, அப் பிரமம் - அந்தப் பிரமம், நான் - நான், என - என்று, இருத் தலின் - இருத்தலினுல், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. சொர்க்க மத்திய பாதாள மென்று மூன்று விதமா யுள்ள உலகத்தின்கண்ணும், விசாரிக்கு மிடத்தில் ஒரு ஞானி கிடைத்தல் அரிதென்றும், ஒரோர் அரிய வித்தை யினைப் பார்த்துச் சொல்லுமிடத்துப் பிரம வித்தை போல் ஈ தரி

தோ வென்றும், இவ் வுலகத்தார் வழக்கமாகச் சொல்வதனுலும், அரி கூறிய பகவற் கீதையின்கண்ணும், பிரம சாதகரினும் யாவருக்கு உள்ளன வருத்தங்க ளென்பதனுலும், அவ் வித்தை போல் அரிதும் பெரிய தோர் வருத்தமும் என்னே யுள? வேதத்தை ஆராய்ந்து இரண் டென்பது இன்று, பிரமம் ஒன்றே யென்று நிச்சயம் பண்ணி அந்தப் பிரமம் நா னென்று இருத்தலினல், எ - று.

எவ் வகைப்பட்ட அரிய வித்தைகளும் மாயா காரியங்களுள் அடக்கம், பிரம வித்தை யொன்றுமே மாயா காரிய காரணங்களை யெல்லாம் கடந்த வித்தை யாகலின், இதனது பெருமையினையும், இதனை அடைந்த ஞானியினது பெருமையினையும் வேதாகமங்கள் கூறுத லன்றி, யுலகத்தாரும் வழக்கமா வெடுத்துக் கூறுதலின், 'உல குரைப்பதனுல்' என்ருர். முன்னர் வேதாகம நிச்சயார்த்தம் பண்ணிக் கொண்டு, பின்னர்ச் சமாதி நிட்டை கூடிப் பெரிய வருத்தத்துடனே மாயா காரிய காரணங்களை யெல்லாம் நீத்து, அரி தாகிய பிரம வித்தையை அடைந்தவனே மூ வுலகத்தும் அரியன், அவனே பரஞானி யென்பதும், வேத நிச்சயார்த்தம் பண்ணிக் கொண்டு பிரம நா னென்று இருத்தற்குப் பெரிய வருத்தம் இன்மையானும், அங்ஙனம் இருத்தல் யாவர்க்கும் எளிதிற் கூடு மாகலினும், இந் நிச்சயம் மாயா காரிய மாகிய மநத்தைக் கொண்டாகையாலும், இது பிரம வித்தை அன் றென்பதும், இந் நிச்சய முடையார் அபர ஞானிக ளென்பதும் கண்டு கொள்க.

'திரி வித வுலகத் தரி தொரு ஞானி' என்றதற்கு உதாரணம்: பரமார்த்த தரிசநம். (பகவற் கீதை) (24) "காரண மிறந்தொன் றிற்குங் காட்சியிற் படாத தொன்றைச், சேர்பவர் வருத்தம் வேறு செப்பிட லாவ தன்ருே, லோர்வரி திதுதான் வாழு முயிர்களா லாவ தொன்ருே, வாரவர் பெருமை தன்னை யளவறுப் பவர்க ளேயா." எ - ம். மற்றும் வருவனவற்ருற் காண்க. (கூ0)

வருத்தமொன் றின்றிச் சாரலாம் பிரம மென்றயன் வகுத்தகீ தையினு, டுரைத்ததெற் றினுக்கா யெனிற்பர ஞாந முணர்பவர்க் குன்னுத லுரைத்த, னிரைத்திடு தொழில்க ளொன்றும்வேண் டாது நீத்துவா ளாவிருத் தலினு, லருத்தமற் றதனுக் கோர்ந்துநூ றெளித லாகநீ துணிந்தனை போலும். (31)

ப - ரை. ஒன்று - ஒரு, வருத்தம் - வருத்தமும், இன்றி - இன்றி, பிரம்ம - பிரமத்தை, சாரலாம் - அடையலாம், என்று - என்று, அயன் - பிரமன், வகுத்த - வகுத்துக் (கூறிய), கீதையினூடு - (பிரம) கீதையின்கட், உரைத்தது - சொல்லியது, எற்றினுக்கு ஆய் - என்னத்துக்கு ஆக, எனில் - என்று கேட்பாயானுல், பரஞாநம் - பரஞாநத்தை, உணர்பவர்க்கு - அறிவோர்க்கு, உன்னுதல் - (மநத்தால்) நினைத்தலும், உரைத்தல் - (வாக்கால்) சொல்லுதலும், நிரைத்திடு - முறை வழுவாது, தொழிகள் - (காயத்தால் செய்யும்) தொழில் களுமாகிய (இவற்றுள்), ஒன்றும் - ஒன்ருயினும், வேண் டாது - விரும்பாது, நீத்து - விட்டு, வாளா - சும்மா, இருத்தலின் - இருத்தலினுல், அருத்தம் - (அங்ஙனம்) அருத்தம் (இருக்க அதனை அறியாது), நீ - நீ, அதனுக்கு - இச் செய்யுளுக்கு (அருத்தம்), நூல் - வேதத்தை, ஓர்ந்து - ஆராய்ந்து, தெளிதல் ஆக - நிச்சயம் பண்ணிக் கொள்ளுத லாக, துணிந்தனை - (இங்ஙனம்) அறிந்தாய், போலும் - போலும், எ - று. ஆல் - மற்று அசை.

பொ - ரை. எ - து. ஒரு வருத்தமும் இன்றிப் பிரமத்தை அடையலா மென்று பிரமன் வகுத்துக் கூறிய பிரம கீதையின்கட் சொல்லியது என்னத்துக் காக வென்று கேட்பாயானுல், பரஞாநத் தை அறிவோர்க்கு மநத்தால் நினைத்தலும், வாக்காற் சொல்லுத லும், முறை வழுவாது காயத்தாற் செய்யுந் தொழில்களு மாகிய,

இவற்றுள் ஒன்றுயினும் விரும்பாது விட்டுச் சும்மா விருத்தலினுல். அங்ஙனம் அருத்த மிருக்க, அதனை அறியாது நீ இச் செய்யுளுக்கு அருத்தம் வேதத்தை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக் கொள்ளுத லாக இங்ஙனம் அறிந்தாய் போலும், எ - று.

மநத்தால் நினைத்தல் = கிரியா யோகம். வாக்காற் சொல்லு தல் = வேதாகமங்களை யோதி நிச்சயம் பண்ணப்பட்ட அபர ஞாநம். காயத்தால் செய்தல் = சரியை கிரியைகள். இச் சரியை கிரியை யோகங்களையும், அபர ஞாநத்தினையுங் கடந்தது பரஞாந மாகலின், அப் பரஞாந முணர்வோர்க்கு, அம் முக்கரணங்களும் அசை வின்றி யிருக்க வேண்டு மாகலின், 'ஒன்றும் வேண்டாது வாளா விருத்தலினுல்' என்றுர். வாக்கு மநம் மாயா காரியம், இவற்றுல் நிச்சயம் பண்ணின ஞாநம் ஞாந மன்றுகலின், இப் பாட்டிற்கு அருத்தம் ஈ தன் றென்று கூற வேண்டி, 'நீ துணிந் தனை போலும்' என்றுர். முக் கரணங்களும் அசைந்த விடத்து வருத்த மென்பதும் அவை அசையாது நின்ற விடத்து வருத்தம் இன் றென்பதும், கண்டு கொள்க.

'வருத்த மொன் றின்றிச் சாரலாம்' என்றதற்கு உதாரணம்: சொரூபாநந்த சித்தியார். (பிரஹ்ம கீதை) (25) "ஆதலா லறியு மறிவெலாங் கைவிட் டறிவினுக் கறிவதாய் நின்ற, பேதமில் பிரம மொன்றுமே காண்பான் பேறுபே றினின்பமாம் பிறத்தல், சாதலற் றிருக்கு மதனையோர் வருத்த மின்றியே சாரலா யிருக்க, வாதரித் தறியா ரற்பமே விரும்பி யுழந்ததுக் கத்திலே யமைவார்." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (நக)

சிறியவர் மணற்சோ றுண்டுதேக் கிடல்போற் றேர்ந் துநா றெளிந்தமாத் திரத்தி, னறிதரிற் சிவமும் விடயமா மெனநீத் தகத்திரு ளுறுதுவைத் தந்தோ, வுறுமகம் பிரம மெனவுரைத் திறுமாந் துறைதலோ ஞாநமஞ் ஞாநந், துறவினை யுறுது மாயுமே வாயாற் சுடரெனி னிருடுமிந் திடுமே. (32)

ப - ரை. சிறியவர் - (சிற்றில் இழைக்கின்ற) சிறு பெண்கள், மணல் - மண லாகிய, சோறு - சோற்றினை, உண்டு - (வயிறு நிறைய வுண்டது போல்) உண்டு, தேக்கிடல் - ஏப்பம் இடுகின்றது, போல் - போல், நூல் - வேதத்தினை, தேர்ந்து - ஆராய்ந்து, தெளிந்த - நிச்சயம் பண்ணிக் கொண்ட, மாத்திரத்தின் - மாத்திரத்திலே (அறிவினால் அறியப்படுவன வெல்லாம் விடய மாகலிற்), சிவமும் - சிவத்தினை, அரி தரில் - அறியத் தொடங்கில், விடயம் ஆம் - (இதுவும்) விடய மாம், என - என்று, நீத்து - (இதனை அறியும் அறிவை) விட்டு, அகத்து - உள், இருள் - இரு ளாகிய (அவித்தையை), அருது - நீங்காது, வைத்து - வைத்துக் கொண்டு, அந்தோ - அந்தோ, உறும் - (அவ் விடத்துப்) பொருந்தாநின்ற, அகம் - நான், பிரமம் - பிரமம், என - என்று, உரைத்து - சொல்லி, இறுமாந்து - இறுமாந்து கொண்டு, உறைதலோ - இருக்குதலோ, ஞாநம் - ஞாநம், அஞ்ஞாநம் - அஞ்ஞாநமானது, துறவினை - துறவினை, உறுது - அடைந்தா லன்றி, மாயுமே - நாச மாமோ, வாயால் - (இருள் வீட்டி னிடத்து இருந்து கொண்டு) வாயினால், சுடர் - விளக்கு, எனில் - என்றால், இருள் - (அவ்) இருள், துமிந்திடுமே - நாச மாமோ (நீ சொல்வாயாக), எ - று.

பொ - ரை. எ - து. சிற்றி லிழைக்கின்ற சிறு பெண்கள் மண லாகிய சோற்றினை, வயிறு நிறைய வுண்டது போ லுண்டு எப்ப மிடுகின்றது போல், வேதத்தினை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக் கொண்ட மாத்திரத்திலே, அறிவினால் அறியப்படுவன வெல்லாம் விடய மாகலிற், சிவத்தினை அறியத் தொடங்கில் இதுவும் விடயமா மென்று, இதனை அறியும் அறிவை விட்டு, உள் ளிரு ளாகிய அவித்தையை நீங்காது வைத்துக் கொண்டு, அந்தோ அவ் விடத்துப் பொருந்தாநின்ற நான் பிரம மென்று சொல்லி இறுமாந்து கொண்டிருக்குதலோ ஞாநம்? அஞ்ஞாநமானது

துறவினை அடைந்தா லன்றி நாச மாமோ? இருள் வீட்டி னிடத்து இருந்து கொண்டு வாயினல் விளக் கென்றால் அவ் விருள் நாச மாமோ நீ சொல்வாயாக, எ - று.

சிறியவர் சோறல்லாத மணலைச் சோருகப் பாவித்துத், தாம் உண்ணு திருந்தும் உண்டது போல் பாவித்துப், பிறர் காண ஏப்ப மிடுகின்றது போல், இவரும் அபர ஞானத்தைப் பரஞானமாகப் பாவித்துப், பிரமாநந்தம் லபியா திருந்தும் லபித்தது போல், பாவித்துப் பிறர்க்குச் சொல்கின்ரு ரெனக் கொள்க. மாயா காரியங்க ளாகிய எல்லாவற்றையும் துறந்து அஞ்ஞானத்தைக் கெடுக்க வேண்டுதலின், 'துறவினை யுரு து மாயுமே' என்ருர். (௩௨)

ஞானத்தால் அஞ்ஞானத்தைக் கெடுப்ப தன்றித், துறவினல் அஞ்ஞானத்தைக் கெடுக்கலாமோ வென்ற சீடனை நோக்கித், துறவு தானே ஞான மென்று மேற் கூறுகின்றார்.

ஞாநியே யெவரும் வணங்குதற் குரியோ னவிலுமா
சௌசமில் பெரியோன், மானிலத் தவன்ரு னுடல்விடிற்
குகைப்பால் வைக்கவென் மறைப்படி புரித, ருனும்வே
தாந்தப் பொருடுணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந்
தணர்க்கின், ருனதாற் றுறவு பெற்றநற் றவரே யமலவீ
டடையுஞா நிகளே. (33)

ப - ரை. ஞாநியே - (துறவி யாகிய) ஞாநியே, எவரும் - யாவராலும், வணங்குதற்கு - வணங்குதற்கு, உரியோன் - உரி யோன், (நவிலும் - சொல்லுமிடத்து,) ஆசௌசம் - (அவனே) அசுத்தம், இல் - இல்லாத, பெரியோன் - பெரியோன், அவன் - அவன், மா - ,, - , நிலத்து - பூமியின்கண், உடல் - காயத்தை, விடில் - விட்டு நீங்கிய காலத்தில், குகைப்பால் - (அதனைக்) குகைக்கண், வைக்க - வைக்க (வேண்டும்), என் - என்று,

மறைப்படி - வேதஞ் சொன்னபடியே, புரிதல் தானும் - செய்கு தலும், வேத அந்த - வேத முடிவிலே, பொருள் - (விளங்காநின்ற மெய்ப்) பொருளை, துணிந்திடினும் - உணர்ந்த பரஞானிக ளாயி னும், இல் - இல், வாழும் - வாழ்க்கையினை யுடைய, அந்தணர்க்கு - அந்தணருக்கு, இன்று - இல்லை, ஆனதால் - ஆனபடியினலே, துறவு - துறவினை, பெற்ற - அடைந்த, நல் - நல்ல, தவரே - தவத்தினை யுடையோரே, அமல - நின்மல மாகிய, வீடு - வீட்டினை, அடையும் - அடையும், ஞானிகள் - ஞானிகள், எ - று.

பொ - ரை. எ - து. துறவி யாகிய ஞானியே யாவராலும் வணங்குதற்கு உரியோன், அவனே அசுத்த மில்லாத பெரியோன். அவன் பூமியின்கண் காயத்தை விட்டு நீங்கிய காலத்தில், அதனைக் குகைக்கண் வைக்க வேண்டு மென்று வேதஞ் சொன்னபடியே செய்குதலும், வேத முடிவிலே விளங்காநின்ற மெய்ப் பொருளை உணர்ந்த பரஞானிக ளாயினும், இல் வாழ்க்கையினை யுடைய அந்தணருக்கு இல்லை யானபடியினலே, துறவினை அடைந்த நல்ல தவத்தினை உடையோரே நின்மல மாகிய வீட்டினை அடையும் ஞானிகள், எ - று.

துறவினேன் ஞானி யல்ல னயினும், இல் வாழ்க்கை யுடையோன் ஞானி யாயினும், இவன் அவனை வணங்க வேண்டுதலின், 'எவரும் வணங்குதற் குரியோன்' என்றும், அவன் இறந்த காலத்தில், அவனது காயத்தைக் குகைக்கண் வைத்து, அதனது தலையில், தேங்காய் உடைத்துப் புசித்துப் பின்பு மூழ்காமல் வீடு புகுதலின், 'ஆசௌசமில் பெரியோன்' என்றும், கூறினர். இல் வாழ்க்கையில் ஞானம் வருதல் ஏக தேச மாகையாலும், துறவின்கண் ஞானம் வருதல் வெகு வாகையாலும், துறவினை ஞான மென்றார்.

'ஞாநியே யெவரும் வணங்குதற் குரியோன்' என்றதற்கு உதாரணம்; சமாதி. (26) "ஒழுக்கமே புரிந்தோ ளுத லதனைவிட் டொழிந்தோ ளுத, விழுக்கஞ்செய் மூர்க்க ளுதல் பண்டித ளுத வெண்ணில், பழிப்பரு ஞாநந் தன்னின் முயல்பவன் பணியத் தக்கோன், றெழுத்தகு ஞாநி யென்று சொல்லவேண் டுவது முண்டோ." எ-ம், 'பெரியோன்' என்றதற் குதாரணம், குறுந் திரட்டு, சமாதி. (27) "பலன்கள் வேண்டிய பரிசெலாம் பலித் திடும் பரமதத் துவஞாநி, நலங் கொ ளுமமா மந்திரஞ் செபித்திட நயந்தவ னீராடுஞ், சலங்கொ டீர்த்தமா மவன்றிரு மேனியே சகலதெய் வமுஞ்செவ்வாய், மலர்ந்த வாசக மறுபிறப் பெனவரு மயற்பிணி மருந்தாகும்." எ-ம், 'குகைப்பால் வைக்க' என்றதற் குதாரணம். மெய்ஞ் ஞாந விளக்கம். (28) "பிறிவி லாதபி ரமபீ சன்னுட, லிறுதி யாவனற் றீண்டிடி லெங்கணு, மறுகி விற்கிடை கோடிய நலதாய்ச், செறுவு செய்யுமத் தேசமென் றோதினர்." எ-ம். (29) "முன்னமே பாகமா மூரல் செய்யு நாட், பின்னது வேவவேண் டிடுமோ பேசிடா, யன்னதே யிவ்வுட லறிவா லட்டது, பின்னினிச் சுடுவது பிழையே யாகுமால்." எ-ம். வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (௩௩)

ஞாநந் திலக்கணம் யா தேன்று கேட்ட சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

தேர்ந்திடி னபரம் பரமெனு விரண்டாய்த் திகழ்தரு ஞாநமாங் கவற்றா, டோர்ந்திடு மறையா தியகலை யபர முயிர்பா னுடுவிர வயிக்கங், கூர்ந்துண ருணர்வே பர மதைத் தெளியக் கூறன்மாத் திரங்கலை ஞாநஞ், சார்ந்துணர் வரிதப் பரனையோர்க் தன்றிச் சாற்றினவ் வயிக்கமாந் தலமே. (34)

ப - ரை. தேர்ந்திடின் - விசாரிக்கு மிடத்தில், ஞாநம் - ஞாநந் (தான்), அபரம் - அபர ஞாநம், (என) - என்றும், பரம் - பர ஞாநம், என - என்றும், இரண்டாய் - இரண்டு பிரகாரமாய், திகழ்தரும் - விளங்காநிற்கும், [அந்த அபர ஞாந, பர ஞாநங்களின் இலக்கணம் யா தெனின்], அவற்றாடு - அவ் விரண்டினுள்ளும், ஓர்ந்திடும் - ஆராயப்பட்ட, மறை - வேத ஆகம, ஆதிய - முதலிய, கலை - கலைகளை (ஓதி யுணர்ந்து பொருள் நிச்சயம் பண்ணுதல்). அபரம் - அபர ஞாநம், உயிர் - உயி ரானது, பரனொடு - பரனுடனே, விரவு - கலந்து, அயிக்கம் - ஐக்கங் (கூடுதலை), கூர்ந்து - நுண்ணிய தாக, உணர் - அறியும், உணர்வே - அறிவே, பரம் - பர ஞாநம், [ஆனால், அபர ஞாநத்திற் பயனில்லையோ வென்னின்], அதை - பர ஞாநத்தை, தெளிய - தெளிவுபட, கூறல் - சொல்லுதல், மாத்திரம் - மாத்திரமே யாம், [ஆனால், அவ் வைக்கியத்தை அறியும் நெறி யா தென்னின்], சார்ந்து - பொருந்தி, உணர்வு - அறிதற்கு, அரிது - அரிது, அப் பரனை - மேற் கூறிய பரனை, ஓர்ந்து - அறிந்தால், அன்றி - அன்றி, சாற்றின் - சொல்லுமிடத்தில், அ - அந்த, அயிக்கம் - ஐக்கியம், ஆம் - ஆகிய, தலம் - தலம், எ - று. ஆங்கு - எ - அசை நிலை.

பொ - ரை. எ - து. விசாரிக்கு மிடத்தில் ஞாநந் தான், அபர ஞாந மென்றும், பர ஞாந மென்றும் இரண்டு பிரகாரமாய் விளங்காநிற்கும். அந்த அபர ஞாந பர ஞாநங்களின் இலக்கணம் யா தென்னின், அவ் விரண்டி னுள்ளும் ஆராயப்பட்ட வேதாகம முதலிய கலைகளை யோதி யுணர்ந்து பொரு ணிச்சயம் பண்ணுதல் அபர ஞாநம். உயிரானது பரனுடனே கலந்து ஐக்கங் கூடுதலை நுண்ணியதாக அறியு மறிவே பர ஞாநம். ஆனால், அபர ஞாநத்திற் பய னில்லையோ வென்னின், பர ஞாநத்தைத் தெளிவுபடச் சொல்லுதன் மாத்திரமே யாம். ஆனால், அவ் வைக்கியத்தை

அறியும் நெறி யாதென்னின், பொருந்தி அறிதற் கரிது மேற் கூறிய பரனை அறிந்தா லன்றிச் சொல்லு மிடத்தில் அந்த ஐக்கிய மாகிய தலம், எ - று.

'ஆங்கு' என்பது அசை நிலை. (௩௪)

ஆனால், அந்தப் பரனை அறியு நெறி தான் எங்ஙன மென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

அடுத்தவிச் சீவன் றன்மையோர்ந் தன்றி யறியொ
ணைப் பரனையஞ் ஞானங், கெடுத்தலாற் சீவன் றனையு
மோர்ந் தொருவர் கிட்டொணா நநவினிற் சுழுத்தி,
யுடைத்துமற் றெவனுக் கவனவஞ் ஞான முடைக்குமுட்
கரணவா தனைக, டுடைத்திடி னபாவ மெனப்படு நநவிற்
சுழுத்தியு மெளிவந்து தோன்றும். (35)

ப - ரை. அடுத்த - (இந்த வுடம்பின்கண்ணே) பொருந்தி யிருக்கின்ற, இச் சீவன் - இச் சீவனது, தன்மை - இயல்பை, ஓர்ந்து - அறிந்தால், அன்றி - அன்றி, பரனை - (அப்) பரனை, அறிய ஒணா - அறியக்கூடாது, [ஆனால், இச் சீவனை அறியு முறைமை எங்ஙன மென்னின்], அஞ்ஞானம் - அஞ்ஞானத்தை, கெடுத்து - கெடுத்தால், அலால் - அன்றி, சீவன் தனையும் - சீவனையும், ஓர்ந்து - அறிந்து, ஒருவர் - ஒருவரும், கிட்ட ஒணா - கிட்டக் கூடாது, [ஆனால் இந்த அஞ்ஞானத்தைக் கெடுக்கு முறைமை எங்ஙன மென்னின்], நநவினில் - நநவில், சுழுத்தி - சுழுத்தி, எவனுக்கு - எவனுக்கு, உடைத்து - உடையது, அவன் - அவன், அஞ்ஞானம் - அவ் வஞ்ஞானத்தை, உடைக்கும் - கெடுப்பன், [ஆனால், அந் நநவிற் சுழுத்தி வரு நெறி எங்ஙன மென்னின்], உள் கரண - அந்த (க்) கரண, வாதனைகள் - வாதனைகளை,

அடைத்திடின் - ஒழித்தால், அபாவம் - அபாவம், எனப்படும் - என்று சொல்லப்படும், நனவில் - நனவில், சுழுத்தியும் - சுழுத்தியும், எளி - எளிதில், வந்து - வந்து, தோன்றும் - உதய மாம், எ - று. மற்று அசை நிலை.

பொ - ரை. எ - து. இந்த வுடம்பின்கண்ணே பொருந்தியிருக்கின்ற இச் சீவனது இயல்பை அறிந்தா லன்றி, அப் பரனை அறியக் கூடாது. ஆனால், அச் சீவனை அறியு முறைமை எங்ஙனமென்னின், அஞ்ஞானத்தைக் கெடுத்தா லன்றிச் சீவனையும் அறிந்தொருவரும் கிட்டக்கூடாது. ஆனால், இந்த அஞ்ஞானத்தைக் கெடுக்கு முறைமை எங்ஙன மென்னின், நனவிற் சுழுத்தி எவனுக்கு உடையது, அவன் அவ் வஞ்ஞானத்தைக் கெடுப்பன். ஆனால், அந் நனவிற் சுழுத்தி வரு நெறி எங்ஙன மென்னின், அந்தக்கரண வாதனைகளை ஒழித்தால் அபாவ மென்று சொல்லப்படும் நனவிற் சுழுத்தியும் எளிதில் வந்து உதய மாம், எ - று. (௩௫)

ஆனால், அந்தக்கரண வாதனை யொழிக்கு நெறி எங்ஙன மென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

யோகசா தனையால் வாதனை கரணக் கொழியுமவ்
வியோகமு மிருமைத், தாகுமே கிரியை ஞானமென் பேதத்
தாதநா தியதொழில் யோக, மேகமாம் பொருடோர்ந் ததுவிது வெனுஞ்சுட் டிறத்தன்மற் றையதிரு வகைக்கும,
போகவேண் டிடுமைம் புலன்களு மிறந்தப் புலனவா
வொழித்தலாற் போமே. (36)

ப - ரை. யோக - யோக, சாதனையால் - சாதனையினால், கரணக்கு - (அந்தக்) கரணங்களுக்கு, வாதனை - வாதனை, ஒழியும் - ஒழியும் [ஆனால், அவ் வியோகத்தின் இலக்கணம் யா தென்னின்],

அவ் இயோகமும் - அந்த யோகமும், கிரியை - கிரியை, ஞாநம் - ஞாநம், என் - என்னும், பேதத்து - (இரண்டு) பேதத்தால் (கிரியா யோக மென்றும், ஞாந யோக மென்றும்), இருமைத்து ஆகும் - இரண்டு (பிரகாரமா) யிருக்கும், [அந்தக் கிரியா யோக ஞாந யோக விலக்கணங்க ளியாவை யெனின்], தொழில் - கிரியா, யோகம் - யோகம், ஆதந ஆதிய - இயமம் நியமம் ஆதநம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியாநம் சமாதி என (எண் வகையாய் இருக்கும்), மற்றையது - ஞாந யோகம், ஏகம் - ஏக மாய், ஆம் - உள்ள, பொருள் - (மெய்ப்) பொருளை, தேர்ந்து - (வேதாகமங்களை ஆராய்ந்து) நிச்சயம் பண்ணிக் கொண்டு (பின்னர் ஞாந நிட்டை கூடி), அது - அது, எனும் - என்றும், இது - இது, எனும் - என்றும், சுட்டு - (சுட்டி அறியும்) சுட்டு (அறிவு எல்லாம்), இறத்தல் - இறந்து (காணம் அசை வற) நிற்றல், [ஆனால், இவ் வியோகத்தை அடையு மாறு எங்ஙன மென்னின்], இரு வகைக்கும் - (அந்த) இரு வகை யோகத்தினை அடைதற்கும், ஐ - ஐம், புலன்களும் - புலன்களும், போக - (இறந்து) போக, வேண்டிடும் - வேண்டும், [ஆனால், இவ் வைம் புலன்களும் இறந்து போம்படி செய்தற்கு உபாயம் எங்ஙன மென்னின்], அவா - (ஐந்து) அவாவினையும், ஒழித்தலால் - ஒழித்தலினால், அப் புலன் - அப் புலன்கள் (ஐந்தும்), இறந்து - இறந்து, போம் - போம், எ - று. 'காணக்கு' என்பதில் அத்துச் சாரியை குறைந்தது. ஏ - ஏ - அசை நிலையின.

பொ - ரை. எ - து. யோக சாதனையினால் அந்தக்காணங்களுக்கு வாதனை யொழியும். ஆனால், அவ் வியோகத்தின் இலக்கணம் யா தென்னின், அந்த யோகமும் கிரியை ஞாந மென்னும் இரண்டு பேதத்தால், கிரியா யோக மென்றும், ஞாந யோக மென்றும் இரண்டு பிரகாரமா யிருக்கும். அந்தக் கிரியா யோக ஞாந யோக விலக்கணங்க ளியாவை யெனின், கிரியா யோகம் - இயமம் நியமம் ஆதநம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியாநம்

சமாதி என எண் வகை யாய் இருக்கும். ஞாந யோகம் - ஏகமாயுள்ள மெய்ப் பொருளை வேதாகமங்களை ஆராய்ந்து நிச்சயம் பண்ணிக் கொண்டு, பின்னர் ஞாந நிட்டை கூடி அது வென்றும் இது வென்றும் சுட்டி அறியும் சுட் டறி வெல்லாம் இறந்து கரணம் அசை வற நிற்றல். ஆனால், இவ் வியோகத்தை அடையு மாறு எங்ஙன மென்னின், அந்த இரு வகை யோகத்தினை அடைதற்கும் ஐம் புலன்களும் இறந்து போக வேண்டும். ஆனால், இவ் வைம் புலன்களும் இறந்து போம்படி செய்தற்கு உபாயம் எங்ஙன மென்னின், ஐந் தவாவினையும் ஒழித்தலினால் அப் புலன்க ளைந்தும் இறந்து போம், எ - று.

'ஆதநாதிய' எனவே, இயமாதி வருவிக்கப்பட்டது. புலன்கள் ஐந் தாகையால், அவற்றின்கட் செல்லும் அவாவும் ஐந் தாயிற்று.

'யோக சாதனையால் வாதனை கரணக் கொழியும்' என்றதற்கு உதாரணம்: குறுந் திரட்டு (30) "அண்டமெண் டிக்கெங் கண்ணு மடங்கச்சூ நியம தாகக், கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டா, லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வாநந் தத்தைக், கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில்வந் திக்கு மன்றே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (௩௬)

அந்த வவாவினை அறுக்கு மாறு எங்ஙன மென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

ஐம்புல னடல்வேண் டும்விடல் வேண்டு மொருங்கு
வேண் டியவனைத் தையுமென், றும்பரும் பரவு மொ
ருதமிழ் வேத முரைத்தலா ேனாிரு வகையா, நம்புறச்
சார்பை வெறுத்தவா வறுத்தைம் புலனொழித் தொழுங்
கிை டருமச், செம்பொருள் காண்ப தறிவறி யாமை
சிதைத்தல்வீ டெனத்திகழ் தருமால், (37)

ப - ரை. ஐ - (வீ டடையக் கருதினேன்) ஐம், புலன் - புலன்களையும், அடல் - அடல், வேண்டும் - வேண்டும் (என்றும் அவ் வைந்தினையும் அடுதற்கு அவற்றால் அநுபவிக்க), வேண்டிய - விரும்பி வைத்த பொருள்கள், அனைத்தையும் - அனைத்தினையும், ஒருங்கு - ஒருங்கே, விடல் - விடல், வேண்டும் - வேண்டும், என்று - என்றும், உம்பரும் - தேவர்களும், பரவும் - தோத்திரம் பண்ணுகின்ற, ஒரு - ஒப் பற்ற, தமிழ் - தமிழ், வேதம் - வேத மாகிய (திரு வள்ளுவப் பயன்), உரைத்தலான் - கூறுதலின், இரு வகை ஆம் - (உயிர்ச் சார்பு பொருட் சார்பு என்று) இரு வகை யாய் உள்ள, நம் - நமது, புறச் சார்வை - புறச் சார்பினை, வெறுத்து - (முன்னர்) வெறுத்து (த் துறந்து), அவா - (பின்பு அதன்கண் வைத்த) அவாவினை, அறுத்து - அறுத்து, ஐ - (பின்பு) பஞ்ச, புலன் - இந்திரியங்களையும், ஒழித்து - (விடயங்களைக் காணுந் தோறும் எழுந்து செல்ல வொட்டாது) உள் ளடக்கி, ஒழுங்கின் - இந்த முறையே (ஒவ் வொன்றாக நீத்துச் சென்று), நாட - (யாவாராலும்) அறிதற்கு, அரும் - அரிய, அ - அந்த, செம் - செவ் விய, பொருள் - (மெய்ப்) பொருளை, காண்பது - அறிவது, அறிவு - ஞானம் (எனவும்), அறியாமை - (அந்த ஞானத்தால்) அஞ்ஞானத்தை, சிதைத்தல் - கெடுப்பது, வீடு - வீடு, என - எனவும், திகழ்தரும் - விளங்காநிற்கும், [ஆகலின், ஞானமும் வீடும் இவைக ளென்று அறிவாயாக], எ - று. ஆல் அசை.

பொ - ரை. எ - து. வீ டடையக் கருதினேன் ஐம் புலன் களையும் அடல் வேண்டு மென்றும், அவ் வைந்தினையும் அடுதற்கு அவற்றால் அநுபவிக்க விரும்பி வைத்த பொருள்கள் அனைத்தினை யும் ஒருங்கே விடல் வேண்டு மென்றும், தேவர்களும் தோத்திரம் பண்ணுகின்ற ஒப் பற்ற தமிழ் வேத மாகிய திரு வள்ளுவப் பயன் கூறுதலின், உயிர்ச் சார்பு பொருட் சார்பு என் றிரு வகையா யுள்ள நமது புறச் சார்பினை முன்னர் வெறுத்துத் துறந்து, பின்பு அதன்

கண் வைத்த அவாவினை அறுத்துப், பின்பு பஞ்சேந்திரியங்களையும் விடயங்களைக் காணுந் தோறும் எழுந்து செல்ல வொட்டாது உள் ளடக்கி, இந்த முறையே ஒவ் வொன்றாக நீத்துச் சென்று, யாவராலும் அறிதற் கரிய அந்தச் செவ்விய மெய்ப் பொருளை அறிவது ஞான மெனவும், அந்த ஞானத்தால் அஞ்ஞானத்தைக் கெடுப்பது வீ டெனவும் விளங்காநிற்கு மாகலின், ஞானமும், வீடும் இவைக ளென்று அறிவாயாக, எ - று.

முன் பிரு வகைச் சார் பாகிய புறப் பற்றினை ஒழித்து, அதற்கு மேல் அதன்கண் வைத்த அவாவினை அறுத்து, அதற்கு மேல் காணப்பட்ட விடயங்களில் எழாமல் இந்திரிய நிக்கிரகம் பண்ணி, அதற்கு மேல் முன்னர் ஏறி யிருந்த காண வாதனையை ஒழித்து, அதற்கு மேல் நனவிற் சுழுத்தியைப் பெற்று, அதற்கு மேல் அஞ்ஞான நிவிருத்தி பண்ணி, அதற்கு மேல் சீவ தரிசநம் பண்ணி, அதற்கு மேல் பரை தரிசநம் பண்ணி, அதற்கு மேல் சிவ தரிசநம் பண்ணி, அதற்கு மேல் ஐக்கியம் கூட வேண்டுதலின், 'ஒழுங்கி னுடருமச் செம் பொருள் காண்ப தறிவு' என்றார்.

'விடல் வேண்டு மொருங்கு வேண்டிய வனைத்தையும்' என்ற தற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம். (31) "துக்கசுக மாசை வெறுப் பென்று கூட்டுந் துவந்துவங்க ளிரண்டவைபோற் சொல் லப் பட்ட, மிக்கதெய்வ மடவார்க டன்மா தன்ம மெய்ப்பலன்கள் வேறுவே றுளவா மன்றே, தொக்கவுள மதுவாக்கும் பிறப்பை யாக்குந் தொடர்பெனவே துணிந்தந்தத் தொடர்பை யாக்குந், தக்கபொருட் சார்புயிர்ச்சார் படைய நீக்குந் தவத்தார்பாற் சிவ வந்து சாருங் காணே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க, (௩௪)

அரம்பையுள் ளுறுதண் டெடுத்தலி னொருவ னநுபவ
மாஞ்சிவ முணர்த, னிரம்புமெய் யுணர்வத் தண்டின்மீ
தொன்றி நின்றநா ரனைத்துநீக் குதல்போல், விரும்பிரு
வகைப்பற் றையுந்துறந் திருளை வீட்டில்வீ டிவற்றையே
யன்றி, வரும்பர வுரனும் வீடும்வே றறியேம் வார்த்தை
மாத் திரத்தியாம் பெறவே. (38)

ப - ரை. அரம்பை - வாழையினது (மட்டைகட்) கெல்லாம், உள் - உள்ளே, உறு - (சேஷமாய்) இருக்கின்ற, தண்டு - தண்டினை, எடுத்தலின் - எடுத்தல் போல், ஒருவன் - ஒருவன், அநுபவமாம் - அநுபவ மாய், (மாயா காரிய காரணங்கட் கெல்லாம் சேஷ மாய் உள்ளீ டாய் விளங்காநின்ற), சிவம் - சிவத்தினை, உணர்தல் - அறிதலே, நிரம்பு - (எங்கும்) பரிபூரண மாகிய, மெய் உணர்வு - பர ஞானம், அ - அந்த, தண்டின் - (வாழைத்) தண்டின், மீது - மேலே, ஒன்றி - பொருந்தி, நின்ற - நின்ற, நார் - மட்டைகள், அனைத்தும் - அனைத்தினையும், நீக்குதல் - (ஒவ் வொன்றாக) நீக்குதல், போல் - போல, விரும்பு - (தம்மால்) விரும்பப்பட்ட, இரு வகை - (உட் பற்றுப் புறப் பற்றாகிய) இரு வகை, பற்றையும் - பற்றினையும், துறந்து - துறந்து, இருளை - (அஞ்ஞான) இருளை, வீட்டல் - கெடுத்தலே, வீடு - மோக்ஷம், இவற்றை - இந்தப் பர ஞானத்தையும் மோக்ஷத்தையும், அன்றி - அன்றி, வார்த்தை - வார்த்தை, மாத்திரத்து - மாத்திரத்தால், பெற - பெற, வரும் - வரும், பர - பர, உரனும் - ஞானத்தினையும், வீடும் - மோக்ஷத்தினையும், வேறு - வேறே, யாம் - நாம், அறியேம் - அறிகிலேம், எ - று. ஏ - ஏ - அசை.

பொ - ரை. எ - து. வாழையினது மட்டைகட் கெல்லாம் உள்ளே சேஷமா யிருக்கின்ற தண்டினை எடுத்தல் போல், ஒருவன் அநுபவ மாய் மாயா காரிய காரணங்கட் கெல்லாம் சேஷ மாய்

உள்ளீடாய் விளங்காநின்ற சிவத்தினை அறிதலே எங்கும் பரிபூரண மாகிய பர ஞானம்; அந்த வாழைத் தண்டின் மேலே பொருந்தின்ற மட்டைகள் அனைத்தினையும் ஒவ்வொன்றாக நீக்குதல் போலத் தம்மால் விரும்பப்பட்ட உட் பற்றுப் புறப் பற்றாகிய இரு வகைப் பற்றினையும் துறந்து அஞ்ஞான விருளைக் கெடுத்தலே மோக்ஷம். இந்தப் பர ஞானத்தையும், மோக்ஷத்தையும் அன்றி, வார்த்தை மாத்திரத்தால் பெற வரும் பர ஞானத்தினையும், மோக்ஷத்தினையும் வேறே நாம் அறிகிலேம், எ - று.

'வார்த்தை மாத்திரத்தால் பெற வரும் ஞானம் மோக்ஷம்' என்றது, சர்வத்தையும் பிரமமென்று அறியா திருந்ததே அஞ்ஞான மென்றும், சர்வத்தையும் பிரம மென்று அறிந்ததே ஞான மென்றும், இங்ஙன மறிந்த போதே அஞ்ஞானங் கெடு மென்றும் கூறிக் கொண் டிருத்தலை. (௩அ)

இருவகைச் சார்பா மொருபுறப் பற்று மிடையதாங்
கடையுடற் பற்றும், விரிகா ணங்க ளாகுமுட் பற்று
மெனத்திரி விதம்விளங் கிடுமித், திரிவிதத் தினையுங்
காத்திரங் கரணஞ் சேர்த்தியொன் றாக்கொடுட் பற்றும்,
வருபுறப் பற்று மெனவிரண் டாக மதிப்பரவ் வணர்ந்துற
வையுமே. (39)

ப - ரை. இரு வகை - (உயிர்ச் சார்பு பொருட் சார்பு என்னும்) இரு வகை, சார்பு - சார்பு, ஆம் - ஆகிய, ஒரு - ஒரு, புறப் பற்றும் - புறப் பற்று (எனவும்), இடையது - இடைப் பற்று, ஆம் - ஆகிய, கடை - கடை யாகிய, உடல் பற்றும் - உடற் பற்று (எனவும்), விரி - விரிந்த, கரணங்கள் - கரணங்கள், ஆகும் - ஆகிய, உள் பற்றும் - உட் பற்று, என - எனவும், திரி விதம் - (இங்ஙனம் பற்றுக்கள்) மூன்று விதமாய், விளங்கிடும் - விளங்கா

நிற்கும், இ திரி விதத்தினையும் - இம் மூ வகைப் பற்றினையும், காத்திரம் - காயத்து (உடனே), காணம் - காணத்தை, சேர்த்தி - சேர்த்து, ஒன்று - ஒன்றாக, கொடு - கொண்டு, உள் பற்றும் - உட் பற்று (எனவும்), வரு - - ,, - , புறப் பற்றும் - (இங்ஙனம்) புறப் பற்று, என - எனவும், அ - அந்த, வணம் - முறைமையே, துறவையும் - துறவினையும், இரண்டு ஆக - (உட் டுறவு எனவும், புறத் துறவு எனவும்) இரண்டாக, மதிப்பர் - கருதிச் சொல்வர் பெரியோர், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. உயிர்ச் சார்பு பொருட் சார்பு என்னும் இரு வகைச் சார் பாகிய ஒரு புறப் பற் றெனவும், இடைப் பற் றாகிய கடை யாகிய உடற் பற் றெனவும், விரிந்த காணங்களாகிய உட் பற் றெனவும், இங்ஙனம் பற்றுக்கள் மூன்று விதமாய் விளங்காநிற்கும். இம் மூவகைப் பற்றினையும் காயத்துடனே காணத்தைச் சேர்த்து ஒன்றாகக் கொண்டு உட் பற் றெனவும், இங்ஙனம் புறப் பற் றெனவும், அந்த முறைமையே துறவினையும் உட் டுற வெனவும், புறத் துற வெனவும் இரண் டாகக் கருதிச் சொல்வர் பெரியோர், எ - று.

காயத்தோடு காணம் ஒற்றுமையாகலின், 'காத்திரங் காணஞ் சேர்த்தி' என்றார். 'இரண்டாக மதிப்பர்' என்றதை இருதலையுங் கூட்டுக.

பற்றுக்கள் 'திரிவிதமாய் விளங்கும்' என்றதற்கு உதாரணம்: சமயாசாரம். (32) "புத்திரர் மனையா ளாதிப் புறச்சுற்றப் பற்று நீக்கி, யித்திரண் மலவு டம்பா மிடைச்சுற்றப் பற்றும் விட்டே, யொத்துயிர் விடாத பாசக் காணவுட் சுற்று மோய்த்துத், தத்துவ மாயி ருத்த றவத்தவர் சரிதை யையா." எ - ம். மற்றும் வருவன வற்றாற்காண்க, (ரு௩)

இருவகைப் பற்றி லொருவனே ஞானி யெனப்படிற்
புறப்பற்ற தேனு, மொரு வுதலிலரு மெவணமப் பெயருக்
குரியர்வே றொன்றுமில் கொடியுந், தருமிலை மலர்கா
யெனினகப் பற்றி றவர்புறப் பற்றையுந் தணவார்,
மருவினு மஃதோ ரொருவர்வே றன்றீர் மலர்க்கொடி
வாடுறு வகையே. (40)

ப - ரை. இரு வகை - (உட் பற்றுப் புறப் பற்றாகிய) இரு வகை, பற்று - பற்றுக்களும், இல் - இல்லாத, ஒருவன் - ஒரு புருஷனே, ஞானி - ஞானி, எனப்படில் - என்று சொல்லப்படுமானால், புறப் பற்ற தேனும் - புறப் பற் றாயினும், ஒருவுதல் - நீங்குதல், இலரும் - இல்லாதாரும், ஏ - எந்த, வணம் - முறைமையால், அ - அந்த, பெயருக்கு - (ஞானி என்னும்) பெயருக்கு, உரியர் - உரிய ராவார், [ஆனால், புறப்பற் றிருக்க அகப்பற்றை யொழித்தோர் ஞானிகள் அலரோ வென்னின்], ஒன்று - ஒரு, வேர் - வே ராயினும், இல் - இல்லாத, கொடியும் - கொடியும், இலை - இலை, மலர் - மலர், காய் - காய்களை, தரும் எனில் - தரு மானால், அகப் பற்று - அகப் பற்று, இல் - இல்லாத, தவர் - தவத்தோர், புறப் பற்றையும் - புறப் பற்றினையும், தணவார் - விட்டு நீங்கார், [ஆனால், புறப் பற் றிருக்க அகப் பற் றொழித்தோர் இல்லையோ வென்னில்], அஃது - புறப் பற் றிருக்க அகப் பற் றொழிதலை, ஓர் ஒருவர் - ஓ ரொருவர், மருவினும் - அடைந்த ராயினும், வேர் - வேரினை, அன்று - அன்று, ஈர் - அறுக்கப்பட்ட, மலர்க் கொடி - மலர்க் கொடி, வாடுறு - (சிறிது போது) வாடாதிருக்கும், வகை - முறைமை போல் (அகப் பற் றொழுத்தோர்க்கும் புறப் பற்றுச் சில நாள் இருக்கும்), எ - று. ஏ - ஏ - அசை,

பொ - ரை. எ - து. உட் பற்றுப் புறப் பற் ருகிய இரு வகைப் பற்றுக்களும் இல்லாத ஒரு புருஷனை ஞானி யென்று சொல்லப்படுமானுல், புறப் பற்ருயினும் நீங்குதல் இல்லாதாரும் எந்த முறைமையால் அந்த ஞானி யென்னும் பெயருக்கு உரிய ராவார். ஆனுல், புறப் பற் றிருக்க அகப் பற்றை யொழித்தோர் ஞானிகள் அலரோ வென்னின், ஒரு வே ராயினும் இல்லாத கொடியும் இலை மலர் காய்களைத் தருமானுல், அகப் பற் றில்லாத தவத்தோர் புறப் பற்றினையும் விட்டு நீங்கார். ஆனுல், புறப் பற் றிருக்க அகப் பற் ருெழித்தோர் இல்லையோ வென்னில், புறப் பற் றிருக்க, அகப் பற் ருெழிதலை ஒ ரொருவர் அடைந்தா ராயினும், வேரினை அன்று அறுக்கப்பட்ட மலர்க் கொடி சிறிது போது வாடா திருக்கு முறைமை போல், அகப் பற் ருெழித்தோர்க்கும் புறப் பற்றுச் சில நாள் இருக்கும், எ - று.

வே ரொன்று மில் கொடி இலை மலர் காய்களைக் கொடாதது போல், காரண மாகிய அகப் பற் ருெழிந்தால், அதனது காரிய மாகிய புறப் பற்று இரா தென்று குறிப்பாற் கூறி, 'வே ரொன்று மில் கொடியுந் தருமிலை மலர்கா யெனி னகப்பற்றி றவர் புறப் பற்றையுந் தணவார்' என்று அவரைப் பரிகாசம் பண்ணிஞர். வே ரன்றீர் மலர்க்கொடி அறுத்த தருணத்திற் பச் சென்று சிறிது போது வாடாதது போல்தோன்றிப், பின்பு உலர்ந்து போகின்றது போல், அகப் பற் ருெழித்த தருணத்திற் புறப் பற்றுச் சில நாள் இருத்தல் போலத் தோன்றி நீங்கு மென்ப தறிக. அகப் பற் ருெழித்தோர்க்குப் புறப் பற்றின் மேல் பிரவிருத்தி இல்லாமை யால், அவர்க்கு அஃதின் ரெனக் கொள்க. (சo)

வேரறக் கொடிவா டுதலினுட் பற்றை விடுக்கின்மற் றையபற்று நேரே, சோருத லியல்பா மதனையே முன்னர்த் தொலைக்கவேண் டுவதெனிற் கடுமுட், சாருமோர் கொடியின் கிளையனைத் தையுமுன் றறித்தொழித் தலதத னிடையா, ரோர்தனி வேர்கொள் ளரிதரி தகப்பற் றொழித்தலும் புறப்பற்ற துறவே. (41)

ப - ரை. வேர் - (காரண மாகிய) வேர், அற - அற, கொடி - (அதன் காரிய மாகிய) கொடி, வாடுதலின் - உலர்ந்து போதல் போல், உள் - காரண மாகிய அக, பற்றை - பற்றினை, விடுக்கின் - (முன்பு) ஒழித்தால், மற்றைய பற்றும் - அதனது காரிய மாகிய (புறப்) பற்றும், நேரே - உடனே, சோருதல் - நீங்குதல், இயல்பாம் - சுபாவ மாகலின், அதனையே - அந்த உட் பற்றினையே, முன்னர் - முன்பு, தொலைக்க - ஒழிக்க, வேண்டுவது - வேண்டும், எனில் - என்பையானால், கடும் - கடிய, முள் - முட்கள், சாரும் - பொருந்திய, ஓர் - ஒரு, கொடியின் - கொடியினது, கிளை - கிளைகள், அனைத்தையும் - அனைத்தையும், முன் - முன்னர், தறித்து - வெட்டி, ஒழித்து - நீக்கினால், அலது - அன்றி, அதன் - அதன், இடை - நடுவே, ஆர் - பொருந்திய, ஓர் - ஒப் பற்ற, தனி - முதல், வேர் - வேரினை, கொள் - (பிடுங்கிக்) கொள்ளுதல், அரிது - அரிது (அது போல் முன்பு புறப் பற்றை ஒழித்து அகப் பற்றை ஒழிப்ப தன்றி), புறப் பற்று - புறப் பற்று, உற - இருக்க, அகப் பற்று - அகப் பற்றினை (முன்பு), ஒழித்தலும் - ஒழித்தலும், அரிது - அரிது, எ - று.

பொ - ரை. எ - து. காரண மாகிய வே ரற அதன் காரிய மாகிய கொடி உலர்ந்து போதல் போல், காரண மாகிய அகப் பற்றினை முன் பொழித்தால், அதனது காரிய மாகிய புறப் பற்றும் உடனே நீங்குதல் சுபாவ மாகலின், அந்த உட் பற்றினையே

முன்பு ஒழிக்க வேண்டு மென்பையானல், கடிய முட்கள் பொருந்திய ஒரு கொடியினது கிளைக ளளைத்தையும் முன்னர் வெட்டி நீக்கிஞலன்றி, அத னடுவே பொருந்திய ஒப் பற்ற முதல் வேரினைப் பிடுங்கிக் கொள்ளுதல் அரிது; அது போல், முன்பு புறப் பற்றை ஒழித்து அகப் பற்றை ஒழிப்ப தன்றிப் புறப் பற்றிருக்க அகப் பற்றினை முன்பு ஒழித்தலும் அரிது, எ - று. (சக)

ஆனல், நீர் முட் கோடியைத் திருட்டாந்தம் கூறியது என்னை? அஃது இல்லாத கோடியினது வேரினை முன்பு பிடுங்கிக் கோள்ளுதல் போல், புறப் பற் றிருக்க அகப் பற்றை ஒழிக்கக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

முள்ளில்சில் கொடிவேர் கொளலின்முற் சநகன் முதல
வோ ரொருவர்மற் ரொருத, முள்ளமா சணுகா வியல்பிஞ
னகப்பற் ரொழிப்பினு முனமெனை யுறழுங், கள்ளநெஞ்
சினர்பற் பலரும்வீ டடையுங் கதியதன் மையிற்றுற
வளந்த, தெள்ளியோர் புறப்பற் ரொழித்தலே முதற்கட்
செப்பின ரெவர்க்குமொப் புறவே. (42)

ப - ரை. முள் - முள், இல் - இல்லாத, சில் - சில, கொடி - கொடியினது, வேர் - வேரினை, முன் - முன்னர், கொளலின் - (கொடி தறித் தொழியாது பிடுங்கிக்) கொள்ளுதல் (போல்), சநகன் - சநக ராஜா, முதல் - முதலிய, ஓர் ஒருவர் - ஓ ரொருவர், ஒரு - ஒப் பற்ற, தம் - தமது, உள்ளம் - உள்ளத்தின்கண், மாசு - (காமம் வெகுளி மயக்க மென்னு முக்) குற்றங்களும், அணுகா - பொருந்தாத, இயல்பினுல் - இயல்பினல், அகப் பற்று - (புறப் பற் றிருக்க) அகப் பற்றினை, முனம் - முன்னர், ஒழிப்பினும் - ஒழித்தா ராயினும், எனை - என்னை, உறழும் - போல, கள்ள - (முக்) குற்றங்களையு முடைய, நெஞ்சினர் - மநத்தினர்,

பல் பலரும் - பலரும், வீடு - வீட்டினை, அடையும் - அடையும், கதி - மார்க்கம், அது அன்மையின் - அஃதன்றாகலின், துறவு - துறவினது (இலக்கணங்களை யெல்லாம்), அளந்த - (அறிந்து) அளவிட்ட, தெள்ளியோர் - தெளிந்த அறிவினை யுடைய திரு வள்ளுவ நாயனார் (புறப் பற் றொழித்தே அகப் பற் றொழிக்க வேண்டு மென்று), புறப் பற்று - புறப் பற்று, ஒழித்தலே - ஒழித்தலை, முதற்கண் - (அகப் பற்று ஒழித்தற்கு) முதற்கண், செப்பினர் - கூறினார், எவர்க்கும் - யாவர்க்கும், ஒப்பு - சம்மதம், உற - ஆக, எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. முள் ளில்லாத சில கொடியினது வேரினை, முன்னர்க் கொடி தறித் தொழியாது பிடுங்கிக் கொள்ளுதல் போல், சநக ராஜா முதலிய ஒ ரொருவர், ஒப் பற்ற தமது உள்ளத்தின்கட் காமம் வெகுளி மயக்க மென்னு முக் குற்றங் களும் பொருந்தாத இயல்பினால், புறப் பற் றிருக்க அகப் பற்றினை முன்னர் ஒழித்தா ராயினும், என்னைப் போலும் முக் குற்றங்களையு முடைய மநத்தினர் பலரும் வீட்டினை அடையு மார்க்கம் அஃதன் றாகலின், துறவினது இலக்கணங்களை யெல்லாம் அறிந்து அளவிட்ட தெளிந்த அறிவினை யுடைய திரு வள்ளுவ நாயனார், புறப் பற் றொழித்தே அகப் பற் றொழிக்க வேண்டு மென்று, புறப் பற் றொழித்தலை அகப் பற் றொழித்தற்கு முதற்கட் கூறினார், யாவருக்கும் சம்மத மாக, எ - று.

'உள்ள மாசனுகா' என்றதனால், நின்மல சித்த ரென்றும், 'கள்ள நெஞ்சினர்' என்ற தன்மையால், மலிந சித்த ரென்றும் அறிந்து கொள்க. நின்மல சித்தர்கள் ஏகதேசிகளாய் எவ் வகைப் பட்ட பற்றுக்க ளிருந்தாலும், அவற்றின்கண் அவா வின்றித் தெய்வ கதியாய் வீ டடைதலினாலும், மலிந சித்தர்கள் அநேக ராகலாலும், விட்ட பற்றுக்களின் மேலும் ஓ ரோர் காலை அவாவு

தலினும், அவர் வீ டடையு மார்க்கம் யாவர்க்கும் மார்க்க மன் றென்றார். அறம் பொரு ளின்பம் வீ டென்னும் நான்கினையும் தெளிந்தவ ராகலின், 'தெள்ளியோர்' என்றார். புறப் பற் றிருக்க அகப் பற் றொழிந்தோர்க்கும் சம்மத மாகலின், 'எவர்க்கு மொப் புற' என்றார். மற்று என்ப தசை நிலை.

'உள்ள மாசனுகா வியல்பினன்' என்றதற்கும், 'கள்ளநெஞ் சினர்' என்றதற்கும் உதாரணம்: வாசிட்டம். (33) "வெம்புதல் போய்த் தண்ணென்ற வுன்மநதுக் கிவ்வுலக வியாபா ரங்கள், செம்புகர்வே ழத்தினுக்கான் குளப்படிபோற் றோன்றுமா றீந நெஞ்சுக், கம்புவியுற் றொழில்சிறிதே யாயினுநீந் திரிடவரிதா மாவின் பாதப், பைம்புனலுங் கிழக்கொதுருக் கெல்லைகளை காணாத பரவை யன்றோ." என வருும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (சஉ)

விடத்தகு மகப்பற் றினைமுனம் புறப்பற் றொழிப்ப தெற் றினுக்கென விளம்பல், படிற்றொழுக் கினர்சம் மதமும்வா னவரும் பயிலில்வாழ்க் கையும்விடுக் குதலென், றெடுத்துமைக் கறிவா சாரமோ தியசொற் கிழுக்குமா குதலின்மா சியல்பாத், துடைத்தசிந் தையர்க்கு நிந்தையி லொழுக்காச் சொல்வர்முன் புறல்புறத் துறவே. (43)

ப - ரை. முனம் - முன்னர், அகப் பற்றினை - அகப் பற்றினை, விட - ஒழிக்க, தகும் - தகும், புறப் பற்று - புறப் பற்றினை, ஒழிப்பது - ஒழிப்பது, எற்றினுக்கு - யாதுக்கு, என - என்று, விளம்பல் - சொல்லுதல், படிற்று - கூடா, ஒழுக்கினர் - ஒழுக்கத்தார்க்கு, சம்மதமும் - சம்மதமும், வானவரும் - வானவ ராயினும், பயில் - (தாம் முன்) பழகிய, இல் - இல், வாழ்க்கையும் - வாழ்க்கையையும், விடுக்குதல் - விடுத்தல் செய்ய வேண்டும்,

என்று - என்று, எடுத்து - எடுத்து, உமைக்கு - (மகா தேவர்) மகா தேவிக்கு, அறிவு - ஞான, ஆசாரம் - ஆசாரம், ஓதிய - கூறிய, சொற்கு - சொல்லுக்கு, இழுக்கும் - குற்றமும், ஆகுதலின் - ஆதலின், மாசு - (மூக்) குற்றங்களை (யும்), இயல்பு - சுபாவம், ஆ - ஆக, துடைத்த - நீத்த, சிந்தையர்க்கு - (நின்மல) சித்தர்க்கு, முன்பு - முன்னர், புறத் துறவு - புறத் துறவு, உறல் - அடைதலை, நிந்தை - இகழ்ச்சி, இல் - இல்லாத, ஒழுக்கு - நெறி, ஆ - ஆக, சொல்வர் - சொல்வர் (பெரியோர்), எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. முன்ன ரகப் பற்றினை ஒழிக்கத் தகும், 'புறப் பற்றினை ஒழிப்பது யாதுக் கென்று சொல்லுதல், கூடா வொழுக்கத்தார்க்குச் சம்மதமும், வாசவ ராயினும் தா முன் பழகிய இல் வாழ்க்கையையும் விடுத்தல் செய்ய வேண்டு மென்று எடுத்து மகா தேவர் மகா தேவிக்கு ஞானாசாரங் கூறிய சொல் லுக்குக் குற்றமு மாதலின், மூக் குற்றங்களையுஞ் சுபாவ மாக நீத்த நின்மல சித்தர்க்கு, முன்னர்ப் புறத் துற வடைதலை இகழ்ச்சி யில்லாத நெறியாகச் சொல்வர் பெரியோர், எ - று.

ஒழுக்க முடையார்க்குச் சம்மத மாகலாலும், ஈசுர வாக்கியத் திற்கு மாறுபா டின்மையாலும், நின்மல சித்தர்க்கு மொழுக்காக லானும், முன்னர்ப் புறப் பற் றொழித்தலே நன் னெறி யென்பது காண்க.

'புறப் பற் றொழிப்ப தெற்றினுக்கு' என்றதற் குதாரணம்: தேவிகாலோத்தரம். (34) "சமயா சார சங்கற்ப விகற்பமு, மமையா தாங்குல வாசார மானது, மிமையா தாரும் விடாதவில் வாழ்க்கையு, மமையார் தோளாய் விடுதலா சாரமே." எ - ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (சாங)

ஒன்றிய பாச விருடீரந் திடுதற் குபாயமைம் புலனொ
டுக் கிடுத, லொன்றல திலையென் றதுசெய்வோ னவை
வேண் டனைத்துமுன் விடாதுவைத் துறுத, லென்று
மெவ் விடத்து மெனைமுத லுயிர்க ளெவற்றையுங் கொலை
செயேன் வெருட்டே, னென்றுசொல் விரதி யொருவனு
டொறுங்கை யிடையினோர் படைகொளு மியல்பே. (44)

ப - ரை. ஒன்றிய - (உயிரோடு) பொருந்திய, பாச - அஞ்ஞான, இருள் - இருளை, தூரந்திடுதற்கு - போக்குதற்கு, உபாயம் - உபாயம், ஐ - பஞ்ச, புலன் - இந்திரியங்களை, ஒடுக்கிடுதல் - நிக்கிரகம் பண்ணுதல், ஒன்று - ஒன்றுமே. அலது - அன்றி, இலை - (வேறே உபாயம்) இல்லை, என்று - என்று, அது - அவ்வைந்தினையும், செய்வோன் - (நிக்கிரகம்) பண்ணுவோன், அவை - அந்த (ப் பஞ்சேந்திரியங்களால்), வேண்டு - விரும்பப்பட்ட, அனைத்தும் - (பொருள்கள்) அனைத்தினையும், முன் - முன், விடாது - விட்டு நீங்காது, வைத்து (க் கொண்டு), உறுதல் - இருத்தல், என்றும் - எக் காலத்தும், எவ் விடத்தும் - எவ் விடத்தும், எனை - என்னை, முதல் - முத லாகிய, உயிர்கள் - உயிர்கள், எவற்றையும் - எவற்றினையும், கொலை - கொல்லுதல், செயேன் - செய்யேன், வெருட்டேன் - பயப்படச் செய்யேன், என்று - என்று சொல் - சொல்லாநின்ற, விரதி - (கொல்லா) விரதி, ஒருவன் - ஒருவன், நாள் தொறும் - எக் காலமும், கையிடையின் - கையின்கண் (இடை விடாது), ஓர் - ஒப் பற்ற, படை - வாளாயுதம், கொளும் - (பிடித்துக்) கொள்ளும், இயல்பு - முறைமை (யாம்), எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. உயிரோடு பொருந்திய அஞ்ஞான விருளைப் போக்குதற்கு உபாயம் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம் பண்ணுத லொன்றுமே அன்றி, வேறே உபாய மில்லை யென்று,

அவ் வைந்தினையு நிக்கிரகம் பண்ணுவோன், அந்தப் பஞ்சேந்திரி யங்களால் விரும்பப்பட்ட பொருள்க ளனைத்தினையும், முன் விட்டு நீங்காது வைத்துக் கொண் டிருத்தல், எக் காலத்தும், எவ் விடத்தும்' என்னை முத லாகிய வுயிர்கள் எவற்றினையும் கொல்லுதல் செய்யேன், பயப்படச் செய்யே னென்று சொல்லாநின்ற கொல்லா விரதி' யொருவன், எக் காலமும் கையின்கண் இடை விடாது ஒப் பற்ற வாளாயுதம் பிடித்துக் கொள்ளு முறைமை யாம், எ - று.

உயிர்களைக் கொலை செய்யேன் வெருட்டே னென்று சொல்லாநின்ற கொல்லா விரதி, அவை செய்வதற்கு ஏது வாகிய வாளினை விடாது கையிற் கொள்ளுதலின், அவன் அவை செய்வா னென்றும், அவன் கொல்லா விரதி யல்ல னென்றும், அறிகுதல் போல், பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம் பண்ணத் தொடங்கினேன், அவற்றால் அநுபவித்தற்கு ஏது வாகிய விடயங்களைக் கைவிடாது வைத்துக் கொண் டிருத்தலின், இவன் அவைகளை விரும்புவா னென்றும், இந்திரிய நிக்கிரகி யல்ல னென்றும், அறிந்து கொள்க. (சச)

விடயங்களை அநுபவியாது வைத்துக் கொண்டு ஞாந சாதகம் பண்ணக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

சாதக தசைக்கண் விடயமே தடையாஞ் சாத்திய மானபின் புசித்தற், காதல்வைத் திடினப் பிரமவா நந்தத் ததிகமோ விடயவா நந்தங், கோதில்வீட் டின்பம் பெறுகலா விடினுங் கூடுதற் கெளிற்கரி பிழைக்கிற், றீதிலோர் சிங்க மதனையே யன்றித் தேடுமோ தேரையூன் றினவே, (45)

ப - ரை. சாதக - (ஞாந) சாதக, தசைக்கண் - தசையின் கண், விடயமே - விடயங்களே, தடை - (அதற்கு) தடை, ஆம் - ஆகும் [ஆகலின், அவற்றினை வைத்துக் கொண்டு சாதகம் பண்ணக் கூடாது, ஆனால், அவ் விடயங்களைச் சாதக தசைக்கண் அநுபவி யாது], சாத்தியமான - சாத்தியமான, பின் - பின் பேனும், புசித்தற்கு ஆதல் - அநுபவித்தற்கு, வைத்திடின் - வைத்துக் கொள்வையானால், (அச் சாத்திய தசைக்கண்ணே உதயமான) அ - அந்த, பிரம ஆநந்தத்து - பிரமாநந்தத்தினும், விடய ஆநந் தம் - (இந்த) விடயாநந்தம், அதிகமோ - அதிகமாக வேண்டும் (ஆதலின், இந்த விடயாநந்தமே போதும், அந்தப் பிரமாநந்தத்தை அடைய ஞாந சாதகம் பண்ண வேண்டுவதே யில்லை, ஆனால் சாதகம் பண்ணிக் கொண்டு வருமிடத்துச் சாத்தியம் கைகூடி), கோது - குற்றம், இல் - அற்ற, வீட்டு - வீட்டு, இன்பம் - இன்பம், பெறுக அலா விடினும் - வந்து லபியாத காலத்தாயினும், கூடுதற்கு - பொருந் (தி அநுபவித்) தற்கு (அவைகளை வைத்துக் கொள்வேன்), எனில் - என்பையானால், கரி - யானையினை (இரை யாகத் தேடிச் சென்ற), தீது - குற்றம், இல் - இல்லாத, ஓர் - ஒப் பற்ற, சிங்கம் - சிங்கம், பிழைக்கில் - (அந்த யானை) தப்பிப் போயிற் றென்றால், அதனையே - அதனையே, அன்றி - (தேடுதல்) அன்றி, தேரை - (அற்பமாய் உள்ள) தேரையினது, ஊன் - மாமிசத்தை, தின - தின்ன, தேடுமோ - தேடுமோ, எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. ஞாந சாதக தசையின்கண் விடயங் களே அதற்குத் தடையாகு மாகலின், அவற்றினை வைத்துக் கொண்டு சாதகம் பண்ணக் கூடாது. ஆனால், அவ் விடயங்களைச் சாதக தசைக்கண் அநுபவியாது சாத்தியமான பின் பேனும் அநுபவித்தற்கு வைத்துக் கொள்வையானால், அச் சாத்திய தசைக் கண்ணே உதயமான அந்தப் பிரமாநந்தத்தினும் இந்த விடயா

நந்தம் அதிகமாக வேண்டு மாதலின், இந்த விடயாநந்தமே போதும், அந்தப் பிரமாநந்தத்தை அடைய ஞாந சாதகம் பண்ண வேண்டுவதே யில்லை. ஆனால், சாதகம் பண்ணிக் கொண்டு வருமிடத்துச் சாத்தியம் கைகூடிக் குற்ற மற்ற வீட் டின்பம் வந்து லபியாத காலத் தாயினும், பொருந்தி அநுபவித்தற்கு அவைகளை வைத்துக் கொள்வே னென்பையானால், யானையினை இரை யாகத் தேடிச் சென்ற குற்ற மில்லாத ஒப் பற்ற சிங்கம், அந்த யானை தப்பிப் போயிற் றென்றால், அதனையே தேடுத லன்றி அற்பமா யுள்ள தேரையினது மாமிசத்தைத் தின்னத் தேடுமோ, எ - று.

மேலான யானையை இரையாகத் தேடிச் சென்ற சிங்கம் அந்த யானை கிடையாது போயிற் றாயினும், அதனையே தேடுத லன்றிக் கீழான தேரை யூனைத் தின்னத் தேடாதது போல், மேலான பே ரின்பத்தை அநுபவிக்கத் தொடங்கினேன், அவ் வின்பம் தனக்கு லபியாது போயிற் றாயினும், அதனையே விரும்புத லன்றிக் கீழான விடய சுகத்தை விரும்பா னென்பதுங் கண்டு கொள்க.

'பிரம வாநந்தத் ததிகமோ விடய வாநந்தம்' என்றதற்கு உதாரணம்: தத்துவ ரத்திநாகரம். (35) "வாக்கொடு மநமு மிறந்ததி மதுர வாரியா யொழிவற நிறைந்து, போக்கொடு வரவ தின்றிய வமுதைப் பூரண மாகவுண் டவர்தாம், வீக்கிய கான னீரொனும் விடய மேவுற முயல்வரோ முயலி, ஞேக்குறு மந்த ஞாநியு நாயு மொத்திடும் வாசியொன் றிலதே." எ - ம், குறுந் திரட்டு. (36) தூமங் காட்டுஞ் சுடுதழ லுண்டென் பதுதுய்ப்பார்க், காமங் காட்டு மயிநியு வர்ப்பப் படியேநல், லேமங் காட்டு ஞாநிக ளென்றா லிவர்நெஞ்சிற், காமங் காட்டும் பெற்றிலர் கற்றார் கலையன்றே." எ - ம், 'சிங்க மதனையே யன்றித் தேடுமோ தேரை

யூன் றின' என்றதற்கு உதாரணம்: குறுந் திரட்டு. (37) "பாய்ந்துமா வேழ மொற்றிப் பறக்குமத் தறுகண் யாளி, தேய்ந் தழி வுறினுந் தேரை யிரையெனச் செல்லா தாற்போ, லாய்ந்துநன் முத்தியின்ப மருந்திட வுற்ற நீரார், சாந்துயர் வரினு மொன்றித் தளர்ந்தெழா தாகி விட்டார்." எ-ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (சரு)

படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன் பகை ஞரைச் சயங்கொளா விடினும், விடையெனப் பொருதாங் கிறத்தலே யன்றி வெந்கிட வுன்னிடா னதுபோற், கடை யென விடய மிகழ்ந்துபே ரின்பங் கருதினேன் 'பெறு கலா விடினு, மிடையரு ததைநா டுவதலான் மறந்து மெண்ணுமோ மண்ணின்வாழ்க் கையையே. (46)

ப-ரை. படை - ஆயுதம், எடுத்து - எடுத்து (க் கொண்டு), அமர்க்கண் - யுத்த களத்திலே, சாரும் - செல்லாநின்ற, ஓர் - ஒப் பற்ற, வீரன் - வீர ஞனவன், பகைஞரை - சத்துருக்களை, சயம் - செயம், கொளா விடினும் - கொள்ளாத விடத்தும், விடை - இடபம், என - போல், பொருது - (அச் சத்துருக்களோடு) யுத்தம் பண்ணி, ஆங்கு - அந்த (இரண) களத்திலே, இறத்தலே - இறந்து போதலே, அன்றி - அன்றி, வெந் - (பயந்து) முதுகு, இட - கொடுக்க, உன்னிடான் - நினையான், அது போல் - அது போல், கடை - இழிவு, என - என்று (அறிந்து), விடயம் - (அற்பமா யுள்ள) விடயாநந்தத்தை, இகழ்ந்து - இகழ்ந்து (கைவிட்டு), பேர் இன்பம் - பேராநந்தத்தை, கருதினேன் - (அடையக்) கருதி (ஞாந சாதகந் தொடங்கி) னேன், பெறுக அலாவிடினும் - (சாத்தி யம் கைகூடி அவ் வின்பத்தைப்) பெறாது இருந்தான் ஆயினும், இடை அறாது - (க்ஷண மாயினும்) இடைவிடாது, அதை - அந்த

இன்பத்தை (எப் பொழுது அடைவே னென்று), நாடுவதே - கருது வதே, அலால் - அன்றி, மறந்தும் - மறந் தாயினும், மண்ணின் வாழ்க்கையை - (தான் முன்பு இகழ்ந்து கைவிட்ட) இல் வாழ்க் கையை, எண்ணுமோ - (மீண்டும்) நினைப்பானோ, எ-று. ஏ-அசை.

பொ - ரை. எ - து. ஆயுத மெடுத்துக் கொண்டு யுத்த களத்திலே செல்லாநின்ற ஒப் பற்ற வீர னானவன், சத்துருக்களைச் செயங் கொள்ளாத விடத்தும், இடபம் போல் அச் சத்துருக்க ளோடு யுத்தம் பண்ணி அந்த ரண களத்திலே இறந்து போதலே யன்றிப், பயந்து முதுகு கொடுக்க நினையான், அது போல் இழி வென்று அறிந்து அற்பமா யுள்ள விடயாநந்தத்தை இகழ்ந்து கைவிட்டுப் பே ராநந்தத்தை அடையக் கருதி ஞாந சாதகந் தொடங்கினோன், சாத்தியம் கைகூடி அவ் வின்பத்தைப் பெறு திருந்தா னாயினும், க்ஷண மாயினும் இடைவிடாது அந்த இன் பத்தை எப் பொழுது அடைவே னென்று கருதுவதே யன்றி, மறந் தாயினும் தான் முன்பு இகழ்ந்து கைவிட்ட இல் வாழ்க்கை யை மீண்டும் நினைப்பானோ, எ - று.

சுத்த வீரன் சத்துருக்களைச் சயங் கொள்ளாத விடத்தும் அவர்களோடு யுத்தம் பண்ணி இறந்து போதலே யன்றி, முதுகு கொடுத்தற்கு நினையான், அது போல் சுத்த விரத்தன் ஞாந சாதகம் பண்ணுமிடத்தும் அஞ்ஞாந நாசம் பண்ணிப் பே ரின் பத்தை அடையா திருந்தா னாயினும், அந்தச் சுத்த வாதனையோடு நின்று இறந்து போதலே யன்றி, விடயங்களை இச்சித்து இல் வாழ்க்கையில் திரும்பா னென்பதும், யுத்த களத்திலே வெந்நிடா திறந்தோனுக்கு மறுமைக்கண் வீர சொர்க்க வின்பம் வருவது போல், சுத்த வாதனையோடு இறந்தோனுக்கும் மறுமைச் சநநத் திலே வீட் டின்பம் வரு மென்பதும் காண்க. (சசு)

இந்திர சாலத் தொருநகர் காண்போ ரெனத்தநு
முதற்பிர பஞ்ச, நந்தினுங் கெடினும் பூரியா வாடா
நன்மநச் சநக ஞதியரு, மந்திரி முதலோர் மீதுபூ பாரம்
வைத்தொரே காந்தத்துள் வதியாத், தந்தொழி லொருக்
கிச் சமாதியுற் றன்றோ தவிர்ந்தனர் காணவா தனையே (47)

ப - ரை. இந்திர - இந்திர, சாலத்து - சால வித்தை யிலே, (தேர் திரு விழா முதலிய மங்கலமும், அக்கிநிபட்டு வேவுதல் முதலிய அமங்கலமு மாய் விளங்காநின்ற), ஒரு - ஒரு, நகர் - பட்டணத்தினைப், காண்போர் - (பொய் யென்று அறிந்து விநோத மாகக்) காண்போர், என - போல், தநு - தேகம், முதல் - ஆதி, பிரபஞ்சம் - பிரபஞ்சம் (எல்லாம் மாயா காரிய மாகிய பொய் யென்று அறிந்து அவைகள்), நந்தினும் - (ஆக்கமாய்) விளங்கு மிடத்தும், கெடினும் - (அவற்றிற்கு) நாசம் வந்த விடத்தும், பூரியா வாடா - பூரிப்பு வாட்டம் இல்லாத, நன் - நின்மல, மந - சித்தத்தினை யுடைய, சநகன் - சநக ராசா, ஆதியரும் - முதலோர் களும், மந்திரி - மந்திரி, முதலோர் மீது - முத லாகிய பேர்க ளிடத்து, பூ - இராச்சிய, பாரம் - பாரத்தை (எல்லாம்), வைத்து - ஒப்பித்து, ஒரு - ஓர், ஏகாந்தத்துள் - ஏகாந்தத் (தாநத்) தில், வதியா - இருந்து (கொண்டு), தம் - தமது, தொழில் - (இராச ரீகத்) தொழில்களை (யெல்லாம்), ஒருக்கி - ஒழித்து, சமாதி - (ஞாந) சமாதி, உற்று - அடைந்து, அன்றோ - அல்லவோ, கரண - (அந்தக்) கரண, வாதனை - வாதனையை, தவிர்ந்தனர் - ஒழித் தார்கள், எ - று.

பொ - ரை. எ - து. இந்திர சால வித்தையிலே தேர் திரு விழா முதலிய மங்கலமும், அக்கிநிபட்டு வேவுதல் முதலிய அமங்கலமு மாய் விளங்காநின்ற ஒரு பட்டணத்தினைப் பொய்

யென்று அறிந்து விநோத மாகக் காண்போர் போல், தேகாதிப் பிரபஞ்ச மெல்லாம் மாயா காரிய மாகிய பொய் யென்று அறிந்து, அவைகள் ஆக்க மாய் விளங்கு மிடத்தும், அவற்றிற்கு நாசம் வந்த விடத்தும் பூரிப்பு வாட்ட மில்லாத நின்மல சித்தத்தினை யுடைய சநக ராசா முதலோர்களும், மந்திரி முத லாகிய பேர்களிடத்து இராச்சிய பாரத்தை யெல்லாம் ஒப்பித்து ஏகாந்தத் தானத்தில் இருந்துக் கொண்டு, தமது இராசரீகத் தொழில்களை யெல்லாம் ஒழித்து, ஞாந சமாதி அடைந் தல்லவோ அந்தக்கரண வாதனையை ஒழித்தார்கள், எ - று.

'சநக ஞதியரும்' என்ற சிறப் பும்மையால், பிரபஞ்சத்தை மெய்யாக்க் கருதி அதன்கண் வரும் சுக துக்கங்களினுல் பூரிப்பு வாட்டங்களை யுடைய மலிந சித்தர்க்கு, அப் பிரபஞ்சத்தோடும் கூடி யிருந்து கரண வாதனையை ஒழித்தல் கூடா தென்ப தாயிற்று.

'இந்திர சாலத் தொரு நகர் காண்போ ரென' என்றதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம், (38) "வெங்காதற் பெரும்பாம்பு நெளிபுற்றுங் குடும்பரம் வெறும்பொய் யென்றே, யிங்காசை யறநீக்கி யெல்லையிலாப் பரமபதத் திருந்து வாழ்வாய், சிங்கார கந்தர்ப்ப நகரிருந்தென் சிதைவுற்றென் நீதோ நன்றே, பங்கான மனைமக்கள் வாழ்ந்தாலென் கெட்டாலென் பாச மாயை." எ - ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சஎ)

சொற்றிடின் மயக்க மற்றுதித் துளவச் சுகருமொண் டாதையைத் துறவா, வுற்றிருஞ் சமாதி யுற்றகப் பற்று மொருவிவீ டடைந்தனர் சநகர், முற்றவ முநிவர் நால் வரு மொருநான் முகப்பிதா விடத்தவன் வளத்தோர், பற்றுமற் றகப்பற் றையுமுயர் சமாதி பணியொழித் தெணியவீ டடைந்தார். (48)

ப - ரை. சொற்றிடின் - சொல்லு மிடத்து, மயக்கம் - (பிண்ட ஞானத்தை மறைக்கும்) மயக்க இருள், அற்று - இன்றி, உதித்து - உதயம், உள - ஆகிய, அ - அந்த, சுகரும் - சுகரும், ஒண் - ஒள்ளிய, தாதையை - பிதாவினை, துறவா - துறந்து, இரும் - பெருமை, உற்று - பொருந்திய, சமாதி - (ஞான) சமாதியை, உற்று - அடைந்து, அகப் பற்றும் - (மற்றை) அகப் பற்றினையும், ஒருவி - நீங்கி, வீடு - வீட்டினை, அடைந்தனர் - அடைந்தார், சநகர் - சநகர், முன் - முதலிய, தவ முனிவர் - தவ முனிவர், நால்வரும் - நால்வரும், ஒரு - ஒப் பற்ற, நால் - நான்கு, முக - முகங்களை யுடைய, பிதா விடத்தும் - (தமது) பிதா விடத்தும், அவன் - அவனது, வளத்து - செல்வத்தினிடத்தும், ஓர் - ஒரு, பற்றும் - பற் றுயினும், அற்று - இன்றி, (த் துறந்து), உயர் - உயர்ந்த, சமாதி - (ஞான) சமாதி, ட்ணி - கூடி, அகப் பற்றையும் - அகப் பற்றினையும், ஒழித்து - ஒழித்து, எணிய - (தாம்) கருதிய, வீடு - வீட்டினையும், அடைந்தார் - அடைந்தார்கள். எ - று.

பொ - ரை. எ - து. சொல்லு மிடத்துப் பிண்ட ஞானத்தை மறைக்கு மயக்க விரு ளின்றி உதய மாகிய அந்தச் சுகரும், ஒள்ளிய பிதாவினைத் துறந்து, பெருமை பொருந்திய ஞான சமாதியை அடைந்து, மற்றை அகப் பற்றினையும் நீங்கி வீட்டினை அடைந்தார். சநகர் முதலிய தவ முனிவர் நால்வரும் ஒப் பற்ற நான்கு முகங்களை யுடைய தமது பிதாவிடத்தும், அவனது செல்வத்தினிடத்தும், ஒரு பற் றுயினு மின்றித் துறந்து உயர்ந்த ஞான சமாதி கூடி, அகப் பற்றினையும் ஒழித்துத் தாம் கருதிய வீட்டினையும் அடைந்தார்கள், எ - று.

சுகரும், சநகர் முதலிய நால்வரும் வேதாகம கலைகளையும், ஞானத்தினையும், அறிவிக்கும் வல்லமை யுடைய உத்தம பிதாக்களை

யும், அவாது செல்வத்தினையும் விட்டுத் துறந்து, ஏகாந்த ஸ்தானத்தி லிருந்து அகப் பற்றை யொழித்தார் என்றதனால், அகப் பற் றொழிப்பார்க்குச் சங்க மாகா தென்பது அறிந்து கொள்க. (சஅ)

தத்துவ முணர வேண்டினேன் மனைமுற் சகலமும் விடுத்துமெய்ஞ் ஞாந, முத்திரை திகழச் சமாதியுற் றல்லான் முடியுமோ வெனவுமை முதலா, வைத்ததற் குழாத்தை யொருவிநீள் கல்லான் மரத்தினீ ழலிற்சமா தியையுற், றத்தனே யுணர்த்தி னனெனிற் பினும்வே றறைதனம் மிகுமட னன்றே. (49)

ப - ரை. தத்துவம் - (பர) தத்துவத்தை, உணர - அறிய, வேண்டினேன் - விரும்பினேன், மனை - மனைவி, முன் - முதலிய, சகலமும் - சகல (பற்றுக்களையும்), விடுத்து - விட்டு (த் துறந்து), மெய்ஞ் ஞாந முத்திரை - மெய்ஞ் ஞாந முத்திரை, திகழ - விளங்க, சமாதி - (ஞாந) சமாதியை, உற்று - அடைந்தால், அல்லால் - அன்றி, முடியுமோ - (அதனை அறியக்) கூடுமோ, என - என்று, உமை - மகா தேவி, முதலா வைத்த - முதலாய் உள்ள, தன் - தனது, குழாத்தை - கூட்டங்களை (யெல்லாம்), ஒருவி - நீங்கி, நீள் - உயர்ந்த, கல் - கல், ஆல் - ஆல, மரத்தின் - மரத்தின், நீழலில் - நிழற்கண் (எழுந்தருளி), சமாதியை - (ஞாந) சமாதியை, உற்று - அடைந்து, அத்தனே - மகா தேவனே, உணர்த்தினன் - அறிவித்தான், எனில் - என்றால், பினும் - பின்னரும், வேறு - வேறே, அறைதல் - (சநக ராசா முதலிய பேர்களைத் திருட்டாந்தமாக எடுத்துக்) கூறுதல், நம் - நமது, மிகு - மிகுந்த, மடன் - அறியாமை, அன்றே - அல்லவோ, எ - று.

பொ - ரை. எ - து. பரதத்துவத்தை அறிய விரும்பி னேன், மனைவி முதலிய சகல பற்றுக்களையும் விட்டுத் துறந்து, மெய்ஞ் ஞாந முத்திரை விளங்க ஞாந சமாதியை அடைந்தா லன்றி,

அதனை அறியக் கூடுமோ வென்று மகா தேவி முதலா யுள்ள தனது கூட்டங்களை யெல்லாம் நீங்கி, உயர்ந்த கல்லால மரத்தி னிழற்கண் எழுந் தருளி ஞான சமாதியை அடைந்து, மகா தேவனே அறிவித்தா னென்றால், பின்னரும் வேறே சநக ராசா முதலிய பேர்களைத் திருட்டாந்த மாக எடுத்துக் கூறுதல் நமது மிகுந்த அறியாமை யல்லவோ, எ - று.

மெய்ஞ் ஞான முத்திரை - மனோ மௌநம். மகா தேவரினும் அறிவிப்பா ரின்மையின், 'பினும் வே றறைத னம்மிகு மடம்' என்றார்.

'மனை முதற் சகலமும் விடுத்து' என்றதற்கு உதாரணம்: திரு மந்திரம். (39) "விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து, புரந்தகல் லானிழற் புண்ணியன் சொன்ன, பரந்தன்னை யோராப்ப ழமொழி யாள, ருரந்தன்மை யாகவொ ருங்குகின்றாரே." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (சகூ)

எடுத்துள குடும்பச் சுமையொடீண் டொருவ
னெங்ஙன ஞானவா சானை, யடுத்தவ னேவ றொடுத்தருள்
சுரக்கு மளவுநின் றுளமகிழ்ந் தன்னோன், கொடுத்தநாள்
வாங்கிக் கொளும்பர மார்த்தங் கூடினுங் காலமா திகளாற்,
றடுத்துரை தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தஃ
துணரவும் படுமே. (50)

ப - ரை. ஈண்டு - இவ் விடத்து, ஒருவன் - ஒருவன், எடுத்து - (தான்) சுமந்து, உள - உள்ள, குடும்ப சுமையொடு - குடும்ப பாரத்துடனே, எங்ஙனம் - எப்படி, ஞான - ஞாந, ஆசானை - ஆசாரியனை, அடுத்து - அடைந்து, அருள் - (அவனுக்குப் பூரண) கிருபை, சுரக்கும் - வரும், அளவும் - அளவும், அவன் - அவனது, ஏவல் -

ஏவற் பணிவிடை, தொடுத்து - தொடங்கி (ச் செய்து), நின்று - நின்று, அன்னோன் - அந்த ஞானாசாரியன், உளம் - (திரு) வுளம், மகிழ்ந்து - மகிழ்ந்து, பரமார்த்தம் - ஞானோபதேசத்தை, கொடுத்த - அநுக்கிரகம் பண்ணின, நாள் - காலத்து (த் தான்), வாங்கிக் கொளும் - பெறுவான், காலம் ஆதிகளால் - கால தேச வர்த்தமானங்களினால், கூடினும் - (அந்த ஞானாசாரியனை அடைந்து அநுக்கிரகம் பெறக்) கூடு மாயினும், உரை - (வாக்காற் சொல்லும்) வசநங்களையும், தொழிற் - (காயத்தாற் செய்யும்) தொழில்களையும், தடுத்து - பண்ணாது, விடுத்து - விடுத்தால், அலால் - அன்றி, சமாதி - (ஞான) சமாதி, சார்ந்து - கூடி, அஃது - அந்த ஞானத்தை, உணரவும் - அறியவும், படுமே - கூடுமோ, எ - று.

பொ - ரை. எ - து. இவ் விடத்து ஒருவன் தான் சுமந்துள்ள குடும்ப பாரத்துடனே எப்படி ஞானாசாரியனை அடைந்து, அவனுக்குப் பூரண கிருபை வரு மளவும், அவனது ஏவற் பணி விடை தொடங்கிச் செய்து நின்று, அந்த ஞானாசாரியன் திரு வுள மகிழ்ந்து ஞானோபதேசத்தை அநுக்கிரகம் பண்ணின காலத்துத் தான் பெறுவான்? கால தேச வர்த்தமானங்களினால், அந்த ஞானா சாரியனை அடைந்து அநுக்கிரகம் பெறக் கூடு மாயினும், வாக்காற் சொல்லும் வசநங்களையும், காயத்தாற் செய்யுந் தொழில்களையும், பண்ணாது விடுத்தா லன்றி, ஞான சமாதி கூடி அந்த ஞானத்தை அறியவுங் கூடுமோ, எ - று.

ஞானாசாரியரைத் தேடிச் செல்வோன் குடும்பத்தோடுஞ் செல்லக் கூடாமையின், 'குடும்பச் சுமையொடு எங்ஙன ஞான வாசானை யடுத்து' என்றார். சீடன் பக்குவாபக்குவங்களை அறிய வேண்டி, ஒரு வருட முதல் பன் னிரு வருட மளவும் பரீக்ஷை பார்க்குதலின், 'அருள் சுரக்கு மளவும்' என்றும், குடும்பிக்கு அவ் வளவு நிற்கக் கூடாமையின், 'ஏவ லெடுத்து நின்று' என்றும்

கூறினர். கால தேச வர்த்தமான மென்றது, அற்ப காலம், இராச கலகங்களினது சரித்திரம். அவற்றால், அவ னிருக்குமிடத்தில் இவன் சென்ருனாயினும், இவ னிருக்குமிடத்தில் அவர் வந்தா ராயினும், தெய்வ கதி யாகக் கூடுதலிற், 'கூடினும்' என்றார். குடும்பிக்கு வாக்குக் காயங்க ளடங்காமையின், மனோ லயம் பண்ணக் கூடாது, மனோ லயம் இன்மையால், அஞ்ஞானம் நிவிருத்தி ஆகாது; அஞ்ஞான நிவிருத்தி இன்மையால், ஞானோதய மாகாது. ஆகலின், 'தடுத்துரை தொழிலை விடுத்தலாற் சமாதி சார்ந்தலஃ துணாவும் படுமே' என்றார். இதனாற் குடும்பிக்கு ஞானாசாரியரை அடைந்து அநுக்கிரகம் பெற்ற காலத்தும் சமாதி கூடிப் பாஞான முணாக் கூடா தென்பதுங் கண்டு கொள்க. (௫௦)

தனித்திருந் தொருதம் மனத்தையைம் பொறிவாய்த்
தடுத்தகப் படுத்திஃ தெத்தை, நினைத்தெழா நின்ற
தென்றுநோக் குநரே நீக்குவர் வாக்கொடு தொழிலைப்,
பிணைத்தடை யாம்போக் குவரில்வாழ்க் கையையும் பேச்சை
நா டொறும்பழ குநரீ, தனைத்தினென் றேனும் விடார்
பிறர் காண்ப தன்மையா னகப்பற்றே விடுப்பார். (51)

ப - ரை. தனித்து - ஏகாந்த ஸ்தானத்தை, இருந்து - (பொருந்தி) யிருந்து, ஒரு - ஒப் பற்ற, தம் - தமது, மனத்தை - மனத்தினை, ஐ - பஞ்ச, பொறி - பொறி, வாய் - வழியே, தடுத்து - (சகமுகமாய்ச்) செல்லாது (உள்) வாங்கி, அகப்படுத்து - அக (முக) ப்படுத்தி, இஃது - இந்த மனம், எத்தை - என்னத்தை, நினைத்து - நினைத்து (க் கொண்டு), எழாநின்றது - எழுகின்றது, என்று - என்று, நோக்குநரே - (அறிவினாற்) பார்க்குமவரே, வாக்குஒடு - (வாக்குக் காயங்களினது தொழில்களை நினைத்துக் கொண்டு எழுகின்ற தென்று அறிந்து அவ்) வாக்காற் சொல்லுங்

(தொழில்களையும்), தொழிலை - (காயத்தாற் செய்யுந்) தொழில்களையும், நீக்குவர் - (விட்டு) நீக்குவார், தடை - (அவ் வாக்குக் காயங்கள் நிவிருத்தியாகலின் இல் வாழ்க்கையைப் பாதுகாத்தற்கு) தடை, ஆம் - ஆகலின், பினை - பின்னர், இல் வாழ்க்கையையும் - (அந்த) இல் வாழ்க்கையையும், போக்குவர் - (விட்டு) நீக்குவார், பேச்சை - (வாசக ஞாந மாகிய) வார்த்தைகளோடு, நாள் தொறும் - எக் காலமும், பழகுநர் - பழக்க முடையார், ஈது - (விட வேண்டு மென்று கூறிய) ஈது, அனைத்தின் - அனைத்தின் (உள்ளும்), ஒன்றேனும் - ஒன்றாயினும், விடார் - விடார், பிறர் காண்ப தன்மையான் - பிறர் காண்ப தன்மையால், அகப் பற்றே - அகப் பற் றொன்றையுமே, விடுப்பார் - ஒழிப்பார், எ - று.

பொ - ரை. எ - து. ஏகாந்த ஸ்தாநத்தைப் பொருந்தியிருந்து ஒப் பற்ற தமது மநத்தினைப் பஞ்சப் பொறி வழியே சகமுக மாய்ச் செல்லாது, உள் வாங்கி அக முகப் படுத்தி, இந்த மநம் என்னத்தை நினைத்துக் கொண்டு எழுகின்ற தென்று அறிவினாற் பார்க்குமவரே, வாக்குக் காயங்களினது தொழில்களை நினைத்துக் கொண்டு எழுகின்ற தென்று அறிந்து, அவ் வாக்காற் சொல்லுந் தொழில்களையும், காயத்தாற் செய்யுந் தொழில்களையும் விட்டு நீக்குவார். அவ் வாக்குக் காயங்கள் நிவிருத்தி யாகலின், இல் வாழ்க்கையைப் பாதுகாத்தற்குத் தடை வரு மாகலிற், பின்னர் அந்த இல் வாழ்க்கையையும் விட்டு நீக்குவார். வாசக ஞாந மாகிய வார்த்தைகளோடு எக் காலமும் பழக்க முடையார், விட வேண்டு மென்று கூறிய ஈ தனைத்தி னுள்ளும் ஒன் றாயினும் விடார். பிறர் காண்ப தன்மையால் அகப் பற் றொன்றையுமே யொழிப்பார், எ - று.

வாக்குக் காயங்கள் நிவிருத்தியான விடத்துப் புறப் பற்றைப் பாதுகாத்தற்குத் தடை வருதலாலும், அவை பிரவிருத்தியான விடத்து அகப் பற்றை ஒழித்தற்குத் தடை வருதலானும், 'தடை

யாம்' என்றூர். புறப் பற்றே டிருந்து அகப் பற்றை ஒழிக்கத் தொடங்குதல், அவ் விரு வகைக்கும் பழு தென்பதும், அகப் பற்றை ஒழிக்கத் தொடங்கிஞேன், புறப் பற்றை முன்னர் விட வேண்டு மென்பதும், 'பிறர் காண்ப தன்மையான் அகப் பற்றே விடுப்பார்' என்றமையால், தமக் கென அவர்க்கு அகப் பற்றுப் போய தின் றென்பதும் காண்க. (ருக)

தந்தைதாய் முதலாம் பந்தநீங் கிலர்க டாமுயு நெறிய தின் றெனுஞ்சம், பந்தனு ருரையும் வேண்டிய தெய்தப் படாதுசுற் றமும்விடா விடினெ, னெந்தைவாக் கரைய ருரையுமா தியவாக் கியம்பிர மாணமா மெனக்கொள், புந்தியார் புறப்பற் றுறவகப் பற்றைப் போக்கவாய்ப் போக்குத விலரே. (52)

ப - ரை. தந்தை - தந்தை, தாய் - தாய், முதலாம் - முதலிய, பந்தம் - பந்தங்களை, நீங்கிலர்கள் - நீங்காதார்க்கு, உயும் - உயந்து போ, நெறியது - நெறி, இன்று - இன்று, எனும் - என்று (கூறிய), சம்பந்தனுர் - திரு ஞாந சம்பந்த மூர்த்தி நாயனுர், உரையும் - வாக்கியத்தையும், தாம் - தாம், வேண்டியது - வேண் டியது, எய்த - எய்த, படாது - ஒண்ணது, சுற்றமும் - (மாதர் முதலிய) சுற்றமும், விடாவிடின் - விடாவிடின், என் - என்று, (கூறிய), எந்தை - எந்தை யாகிய, வாக்கு - (திரு) நாவுக்கு, அரையர் - அரையர், உரையும் - வாக்கியத்தையும், ஆதிய - (இவை) முதலிய, வாக்கியம் - (ஆப்த) வாக்கியங்களையும், பிரமாணம் - பிரமாணம், ஆம் என - ஆகக், கொள் - கொள்ளுகின்ற, புந்தியார் - நன் மதி யுடையோர், புறப் பற்று - புறப் பற்று, உற - இருக்க, அகப் பற்றை - அகப் பற்றை, போக்க - ஒழிப்போம் (என்று), வாய் - வாய், போக்குதல் இலர் - போக்கார், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. 'தந்தை தாய் முதலிய பந்தங்களை நீங்காதார்க்கு உய்ந்து போ நெறி இன்' றென்று கூறிய திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வாக்கியத்தையும், 'தாம் வேண்டியது எய் தொணுது மாதர் முதலிய சுற்றமும் விடாவிடி' னென்று கூறிய எந்தை யாகிய திரு நாவுக் கரையர் வாக்கியத்தையும், இவை முதலிய ஆப்த வாக்கியங்களையும் பிரமாண மாகக் கொள்ளுகின்ற நன் மதி யுடையோர், புறப் பற் றிருக்க அகப் பற்றை ஒழிப்போ மென்று வாய்ப் போக்கார், எ - று.

அவற்றிற்கு எதிர் மறையான ஆப்த வாக்கியங்களைப் பிரமாண மாக் கொள்ளாதார், அங்ஙனம் கூறுவ ரென்பது காண்க. 'வாய்ப் போக்குதல்' செய்யா திருந்தும் செய்தே னென்று சொல்லும் விருதாச் சொல் லென் றறிக.

இதற் குதாரணம்:— திருக் கடைக் காப்பு. (40) "தந்தை தாய் புத்திரர் தன்னுடன் றோன்றினர் தார மென்னும், பந்த நீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினையே, வெந்தநீ றாடியா ராதியார் சோதியார் வேதகீத, ரெந்தையா ரூர்தொழு துய்யலா மையல் கொண் டஞ்ச னெஞ்சே." எ - ம், தேவாரம். (41) "பழகி னல்வரும் பண்டுள சுற்றமும், விழவி டாவிடின் வேண்டிய தெய் தொணு, திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய, வழக னருள ரஞ்சுவ தென்னுக்கே." எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. (௫௨)

இரு வகைச் சார் புள்ளும், உயிர்ச் சார்பை விடுத்துப் பொருட் சார்போ டிருந்து, அகப் பற்றை ஒழிக்கக் கூடாதோ வென்ற சீடனை நோக்கிக் கூறுகின்றார்.

விடுக்குநர் புறப்பற் றதி னுயிர்ச் சார்பை விடுத்துமற்
றையபொருட் சார்பைப், பிடித்துத லொழுங்கன் றெனி
னுறை யிடமும் பேணுறா தொழித்தறீ தெனவே, படிக்
கணீ யுரைக்கக் கேட்டன முனைப்போற் பற்றிநோக்
காமையி னன்றோ, விடுக்கவெனன் றனைத்தும் விடுத்தன
ருலக மேத்துபத் திரகிரி முதலோர். (53)

ப - ரை. விடுக்குநர் - (அகப்பற்றை) ஒழிப்போர்க்கு, புறப் பற்றதின் - (இரு வகைச் சார் பாகிய) புறப் பற்றினுள், உயிர்ச் சார்பை - உயிர்ச் சார்பை, விடுத்து - விடுத்து, மற்றைய - மற்றை, பொருள் சார்பை - பொருட் சார்பை, பிடிக்குதல் - பிடிக்குதலும், ஒழுங்கு - மார்க்கம், அன்று - அன்று, எனின் - என்றால், உறை - (நீர் சொன்னவை யெல்லாம் விடுப்பினும்) இருத்தற்கு, இடமும் - (ஓர்) இடமாயினும், பேணுறாது - பிடியாது, ஒழித்தல் - விடுக்குதல், தீது - குற்றம், எனவே - எனவே, படிக்கண் - பூமி யின்கண், நீ - நீ (ஒருவனே), உரைக்க - சொல்ல, கேட்டனம் - கேட்டு (அறிந்தனம்), உனை - உன்னை, போல் - போல, பற்றி - கூர்ந்து, நோக்காமையின் - விசாரியாமையால், அன்றோ - அன்றோ, அனைத்தும் - பற்றுக்கள் யாவும், இடுக்கண் - துக்கம், என்று - என்று (அறிந்து எல்லாப் பற்றுக்களையும்), உலகம் - உயர்ந்தோர், ஏத்து - தோத்திரம் பண்ணுகின்ற, பத்திர கிரி - பத்திர கிரி (ராசா), முதலோர் - முதலாயினோர், விடுத்தனர் - விடுத்தார்கள், எ - று.

பொ - ரை. எ - து. அகப் பற்றை ஒழிப்போர்க்கு இரு வகைச் சார் பாகிய புறப் பற்றினுள், உயிர்ச் சார்பை விடுத்து, மற்றைப் பொருட் சார்பைப் பிடிக்குதலும், மார்க்க மன் றென்றால், நீர் சொன்னவை யெல்லாம் விடுப்பினும், இருத்தற்கு ஓ ரிட

மாயினும் பிடியாது விடுக்குதல் குற்ற மெனவே, பூமியின்கண் நீ ஒருவனே சொல்லக் கேட்டு அறிந்தனம், உன்னைப் போலக் கூர்ந்து விசாரியாமையா லன்றோ, பற்றுக்க ளியாவும் துக்க மென்று அறிந்து, எல்லாப் பற்றுக்களையும், உயர்ந்தோர் தோத்திரம் பண்ணுகின்ற பத்திர கிரி ராசா முதலாயினோர் விடுத்தார்கள், எ - று.

'உனைப் போற் பற்றி நோக்காமையி னன்றோ' என்றமையால், குறிப்பால் நீ அறியாமையினாலே கூறுகின்றாய் யென்பது காண்க. 'பத்திர கிரி முதலாயினோர்' எனவே, பட்டணத்துப் பிள்ளை முதலாயினோரையும் வருவித்துக் காண்க. (ருந)

பொருட் சார்பால் வரும் குற்றம், மேல் வருஞ் செய்யுளுட் கூறுகின்றார்.

துறந்தவன் பொருட்சார் புறவறி விலர்க்குத் துயஞா
நாதிசாத் திரங்க, ளறைந்திதம் பேசிப் பொருள்கவர்ந்
ததனு னச்சமு மிச்சையா திகளுஞ், செறிந்துற வகத்துண்
டினியவூ ணிருக்குஞ் செய்தியா னெய்சொரி தழல்போ,
லிறந்திடா மநவா தனைபினைத் தனதோ ரெணத்தையெவ்
வணத்தினுன் முடிப்பான். (54)

ப - ரை. பொருள் - பொருள், சார்பு - சார்பு, உற - இருக்க, துறந்தவன் - (உயிர்ச் சார்பைத்) துறந்தவன், அறிவிலர்க்கு - அறிவில்லாத பேர்களுக்கு, ஞாந - ஞாந, சாத்திரங்கள் - சாத்திர, ஆதி - முதலாயவற்றை, அறைந்து - சொல்லி, இதம் - (அவர்க்கு) இதமான, பேசி - (வார்த்தைகளைப்) பேசி, பொருள் - பொருளை, கவர்ந்து - வாங்கி (ப் புதைத்து), அதனுன் - அதனுல், அச்சமும் - பயம், இச்சை - ஆசை, ஆதிகளும் - முதலியனவும்,

அகத்து - மநத்தின்கண், செறிந்து உற - பொருந்த, இனிய - இனிமை யாகிய, ஊண் - ஊண்களை, உண்டு - புசித்து, இருக்கும் - இருக்கும், செய்தியால் - முறைமையால், நெய் - நெய்ப்பினை, சொரி - சொரிந்த, தழல் - அக்கினி, போல் - போல், மந - மநத்தினது, வாதனை - வாதனைகள், இறந்திடா - இறந்து போகா (ஆகலின்), பினை - பின்னர், தனது - தான், எணத்தை - (அகப் பற்றினை ஒழிக்க வேண்டு மென்று எண்ணிய) எண்ணத்தினை, எவ் வணத்தினுல் - எந்த முறைமையால், முடிப்பான் - முடித்துக் கொள்வான், எ - று.

பொ - ரை. எ - து. பொருட் சார்பு இருக்க, உயிர்ச் சார்பைத் துறந்தவன், அறி வில்லாத பேர்களுக்கு ஞாந சாத்திர முதலாயவற்றைச் சொல்லி, அவர்க்கு இதமான வார்த்தைகளைப் பேசிப் பொருளை வாங்கிப் புதைத்து, அதனுல் பய மாசை முதலியனவும், மநத்தின்கட் பொருந்த, இனிமை யாகிய வூண்களைப் புசித்திருக்கு முறைமையால், நெய்யினைச் சொரிந்த அக்கினி போல், மநத்தினது வாதனைகள் இறந்து போகா வாகலிற், பின்னர்த் தான் அகப் பற்றினை ஒழிக்க வேண்டு மென்று எண்ணிய எண்ணத்தினை, எந்த முறைமையால் முடித்துக் கொள் வான், எ - று.

அறிவில்லார்க்கு ஞாந சாத்திர முதலிய கூறுதலினுலும், பொருள் கவர்தலினுலும், அதனுற் பய மாசை குரோத முதலிய வருதலாலும், சௌக்கிய போசநங்களைப் புசித்தலாலும், மநத்தின் கண் வாதனை நெய் சொரி தழல் போல், மேன் மேல் ஏறுதலிற், பொருட் சார்பு இருக்கத் துறந்தோனுக்கும் அகப் பற் றொழித்தல் கூடா தென்பது இதனுற் காண்க. (ருச)

போருட் சார்பினுள் எல்லாவற்றையும் விட்டு, ஓரிடம் பற்றி யிருந்து தவம் பண்ண லாகாதோ வென்ற சீடனை நோக்கி, அவ் விடத்தால் வருந் குற்றம் கூறுகின்றூர்.

பொருளறத் துறந்து பயிக்கமேற் றருந்திப் பொருந் தினு மோரிடம் பிடித்துள், வெருளறப் பனியா தியினுடற் பழக வேண்டுமின் றாகுத றானு, மிருளறத் தீப மேற்றன் முன் றொழில்க ளென்றும்வேண் டிடுதலா னிடரு மருளறச் சிதலை முதலுயிர்க் குறுக ணாற்றலு மதன் பொருட் டாமால். (55)

ப - ரை. பொருள் - பொருட் (சார்பினையும்), அற - விட்டு, துறந்து - துறந்து, பயிக்கம் - பிச்சை, ஏற்று - ஏற்று, அருந்தி - உண்டு, ஓர் இடம் - ஓர் இடத்தை, பிடித்து - பற்றிக் கொண்டு, பொருந்தினும் - இருந்தான் ஆயினும், உள் - மனோ, வெருள் - பயம், அற - நீங்கவும், பனி - பனி, ஆதியின் - முதலிய வற்றுள், உடல் - தேகம், பழக - பழகவும், வேண்டும் - வேண்டும், இன்று - (பழக்கம்) இன்மை, ஆகுதல் தானும் - ஆகுத றானும், இருள் - இருள், அற - நீங்க, தீபம் - தீபம், ஏற்றல் - ஏற்றுகை, முன் - முதலிய, தொழில்கள் - தொழில்கள், என்றும் - எக் காலத்தும், வேண்டிடுதலான் - வேண்டுதலால், இடரும் - துன்ப மும்; அற - (சீவ காருண்யம்) இன்றி, சிதலை - செல்லு, முதல் - முதலிய, உயிர்க்கு - உயிர்களுக்கு, உறுகண் - துன்பம், ஆற்றலும் - செய்குதலும், அதன் பொருட்டு - அவ் விடம் பிடித்தற் பொருட்டு, ஆம் -(ஆக) வரும், எ - று. ஆல் - அசை.

பொ - ரை. எ - து. பொருட் சார்பினையும் விட்டுத் துறந்து, பிச்சை யேற் றுண்டு, ஓ ரிடத்தைப் பற்றிக் கொண் டிருந்தா னாயினும், மனோ பய நீங்கவும், பனி முதலியவற்றுள் தேகம் பழகவும் வேண்டும், பழக்கம் இன்மையாகுத றானும், இருள் நீங்கத் தீப மேற்றுகை முதலிய தொழில்கள் எக் காலத்தும் வேண்டுதலால் துன்பமுஞ், சீவ காருண்ணியம் இன்றிச் செல்லு முதலிய உயிர் களுக்குத் துன்பம் செய்குதலும், அவ் விடம் பிடித்தற் பொருட்டாக வரும், எ - று.

ஒரோர் காலத்து அவ் விடத்தினை நீங்கி, இருள் காடு முதலிய இடத்துச் செல்லுங்கால், மநோ பயம் தோன்றலிற் பூரண பாவனை மறக்கும்; பனி மழை வெய்யில் காற்று முதலியவற்றாற், காயத் திற்கு வருத்தந் தோன்றலிற், சமபாவனை மறக்கும்; விளக்கிடல் அலகிடல் மெழுகல் முதலிய தொழில்கள் எக் காலமும் வேண்டு தலின், இராகத் துவேஷம் பிறக்கும்; அதனால், மநோ லயம் பண்ணக் கூடாது. செல்லு கொசுகு மூடு எறும்பு தேள் முதலிய உயிர்களுக்குச் சீவ காருண்ணியத்தை விடுத்துத் துன்பஞ் செய் தலின், மநத்தின்கண் அழுக் கேறும்; இவை யெல்லாந் துறவறத் திற்குப் பங்க மாகலின், தனக் கென வோரிடம் பிடித்தலும் ஆகாது என்றார். அவ் விடம் ஆகா தெனவே, பொதுச் சாவடி, புறந் திண்ணை, பாழ்ங் கோயில், மலை முழை, மர நிழல் முதலிய இடத்தில் இருக்க வேண்டு மென்ப தாயிற்று. (௫௫)

பிறிதுநோய் தன்னோய் போன்றுபோற் றானேற்
பெரிதுநூ லரிதினோர்ந் துணர்ந்த, வறிவினா னுண்டோ
வாவதென் றமையா னறைதரு சராசர மெவைக்குஞ்,
சிறிதுமோர் துயர மறவியுற் றேனுஞ் செய்யுமே மெய்
யுணர் வடைவான், மறுவறு துறவைப் பொன்செய்வா
ணிகர்போல் வருந்திசா டொறும்வளர்ப் பவனே. (56)

ப - ரை. பிறிது - பிறிது (ஓர் உயிர்க்கு வந்த), நோய் - துன்பத்தினை, தன் - தனக்கு (வந்த), நோய் - துன்பத்தை, போன்று - போன்று, போற்றானேல் - போற்றிக்கொள்ளானாகில், பெரிது - பெரிது (ஆகிய), நூல் - சாத்திரங்களை, அரிதின் - அரி தினால், ஓர்ந்து - கற்று, உணர்ந்த - அறிந்த, அறிவினான் - அறி வினால், ஆவது - (ஒரு பயன்) ஆவது, உண்டோ - உண்டோ, என்றமையான் - என்று (திரு வள்ளுவ நாயனார்) கூறினமையால்,

அறைதரு - சொல்லப்பட்ட, சர அசரம் - சராசரமாய் (உள்ள), எவைக்கும் - எல்லா வுயிர்கட்கும், சிறிதும் - சிறிதாயினும், ஒரு - ஒரு, துயரம் - துன்பத்தினை, மறவியுற்றேனும் - மறந்தாயினும், செய்புமே - செய்வனே, மெய் உணர்வு - மெய்ஞ் ஞானத்தை, அடைவான் - பெறும் பொருட்டு, மறு - குற்றம், அறு - அற்ற, துறவை - துற வறத்தினை, பொன் - பொன் (தேடுதல்), செய் - செய்யாநின்ற, வாணிகர் - வாணிகர், போல் - போல், வருந்தி - (திரி காணங்களினாலும்) வருந்தி, நாள் தொறும் - திநம் தோறும், வளர்ப்பவன் - வளர்ப்பவன், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. 'பிறி தோ ருயிர்க்கு வந்த துன்பத் தினைத் தனக்கு வந்த துன்பத்தைப் போன்று, போற்றிக் கொள் ளாளுகில், பெரிய தாகிய சாத்திரங்களை அரிதினால் கற் றறிந்த அறிவினால் ஒரு பயனாவ துண்டோ' வென்று திரு வள்ளுவ நாயனார் கூறினமையால், சொல்லப்பட்ட சராசரமா யுள்ள எல்லா வுயிர் கட்கும், சிறி தாயினும் ஒரு துன்பத்தினை மறந்தாயினும் செய்வனே, மெய்ஞ் ஞானத்தைப் பெறும் பொருட்டுக் குற்ற மற்ற துற வறத் தினைப் பொன் தேடுதல் செய்யாநின்ற வாணிகர் போல், திரி காணங்களினாலும் வருந்தித் திநந் தோறும் வளர்ப்பவன், எ - று.

கல்வி யறிவிற்குப் பயன் சீவ காருண்ணிய மாகலின், 'அறி வினா னுண்டோ வாவது' என்றார். பொன் செய் வாணிகர், கொள்ளுதல், விற்றல், உரைத்தல் முதலியவற்றாற் பொருளை வளர்த்தல் போல், நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் ஓடல் முதலிய விடத்தும், உயிர்க் கொலை புரியாது, துற வறத்தினை வளர்க்க வேண்டு மென்பது காண்க.

'பெரிது நூ லரிதி னோர்ந் துணர்ந்த வறிவினா னுண்டோ வாவது' என்றதற்கு உதாரணம்: ஞாநாசாரம், (42) "மருளுறு மெவையு நூறி மயக்கறத் தெளிந்து ளோர்க்கு, மருளறத் துறக்க

லாகா வயலொரு பொருளு மில்லாத், தெருளினை யறித லானுஞ் சிவமெவ ருளமு மன்னு, மருளினை யறித லானு மவர்செய லருள றந்தான்.'' எ - ம், அருட் பிரகாசம், (43) ''உயிர்நித்த மென் றறிந் தாலுநல் லோர்பல் லுயிர்களுற்ற, துயருக்கி ரங்கல்பு துமை கொல் லோவருட் டோன்றன்முன்னுட், செயிருற்ற தேவர் குறை கேட்டி ரங்கித்தி ருவுளத்தூ, டயர்வுற்று குத்தகண் ணீரக்க மாமணி யாய்த்தெனிலே.'' எ - ம், வரும். மற்றும் வருவன வற்றுற் காண்க. (ருசு)

தனக்கினி யவனும் வகைசரா சரங்க ணினைகவென் றுமைக்குரைத் ததுவும், வினைக்கடல் கடந்த பரதற்முற் சிவிகை சுமந்துசென் றதுவுமோர் மேலோர், பினைக்கொல் பாம் பாதி யுறுதலஞ் செலுங்காற் பேணலிற் றமைநடந் திடும்போ, தினக்கறை யானு தியமரி யாதங் குரமுரி யாதியங் கிடுவார். (57)

ப - ரை. தனக்கு - (ஒருவன்) தனக்கு (த் தான்), இனியவன் - இனியவன், ஆம் - ஆய், வகை - (தன்னைப் பாதுகாக்கும்) முறைமை (போல்), சர அசரங்கள் - சராசரங்களா யுள்ள (உயிர்களை), நினைக - கருதுக, என்று - என, உமைக்கு - மகா தேவிக்கு, உரைத்ததுவும் - (மகா தேவர் அறிவாசாரங்) கூறிய அதனையும், வினை - சரியை கிரியை யோகங்களுக்கு ஏதுவாகச் செய்யுந்) தொழி லாகிய, கடல் - கடலை, கடந்த - கடந்து நின்ற, பாதர் - பரதர், முன் - முன்னர், சிவிகை - சிவிகை, சுமந்து - சுமந்து (கொண்டும்), சென்றதுவும் - (உயிர்க் கொலை வாராது நடந்து) சென்ற அதனையும், ஓர் - விசாரித்து அறிந்த, மேலோர் - மேலாயினோர், பினை - பின்னர், கொல் - கொல்லுகின்ற, பாம்பு - பாம்பு, ஆதி - முதலிய (துட்டப் பிராணிகள்), உறு - உறையும்,

தலம் - இடத்தில், செலும்கால் - போம்பொழுது, தமை - தம்மை, பேணலின் - போற்றிக்கொள்ளுதல் போல், நடந்திடும் - நடக்கும், போது - பொழுது, இன - கூட்டமாயுள்ள, கறையான் - செல்லு, ஆதிய - முதலிய (சரவுயிர்கள்), மரியாது - இறவாமலும், அங்குரம் - முளை முதலிய (அசர வுயிர்கள்), முரியாது - நாசமாகாமலும், இயங்கிடுவார் - நடப்பார், எ - று.

பொ - ரை. எ - து. ஒருவன் தனக்குத் தான் இனியவனாய்த் தன்னைப் பாதுகாக்கு முறைமை போல், சராசரங்களாயுள்ள உயிர்களைக் கருதுக வென, மகா தேவிக்கு மகா தேவர் அறிவாசாரங் கூறிய வதனையும், சரியை கிரியை யோகங்களுக்கு ஏதுவாகச் செய்யுந் தொழி லாகிய கடலைக் கடந்து நின்ற பாதர் முன்னர்ச் சிவிகை சுமந்து கொண்டும் உயிர்க் கொலை வாராது நடந்து சென்ற வதனையும், விசாரித்து அறிந்த மேலாயினோர், பின்னர்க் கொல்லுகின்ற பாம்பு முதலிய துட்டப் பிராணிகள் உறையு மிடத்தில் போம்பொழுது தம்மைப் போற்றிக் கொள்ளுதல் போல், நடக்கும் பொழுது கூட்டமாயுள்ள செல்லு முதலிய சர வுயிர்கள் இறவாமலும், முளை முதலிய அசர வுயிர்கள் நாசமாகாமலும் நடப்பார், எ - று.

ஈசுர வாக்கியத்தையும், அவர் வாக்கியத்தின்படி நடந்துகொண்ட பெரியோர்கள் சரித்திரத்தையும், அறிந்த மேலோர்களுக்கு அந்த நடை வரு மென்ப தறிக.

'தனக்கினி யவனும் வகை சராசரங்க ணினைக' என்றதற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம், (44) "தனக்கினிய னும் வகையே சராசரங்க ளனைத்தினையு, நினைத்திகழ்வார் புகழ்வார்பாலொத்திருக்கு நீர்மையினை, மநத்துடைய னவவ னுமுரைத்த வாசார, மனைத்துடைய னுகவறி வெறிகமழு மைம்பாலாய்." எ-ம்,

(45) "நடுங்காம லெவ்வுயிரு நறுக்காது துரும்பனைத்தும், பிடுங் காது முதலெவையும் பிரசமலர் கொய்யாது, விடுங்காலா லூழ்த்து திர்ந்த விரைமலர்க ளவையேந்தி, யடுங்காலன் றனையட்ட வம் புயங்க ளருச்சிப்பான்." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றுந் காண்க. (கூஎ)

தம்மிடத் தேனுந் தமக்கினி யவர்பா லேனுமோ ரிடர் வந்து சாரி, னம்மவூழ் முறையென் றறிந்துமேழ் கடலோ ரணுவென வுருகுமென் போல்வா, ரிம்முறை துயர்வே றுயிருறி னிரக்க மின்றிய தன்றியுந் தம்மால், வெம்மைய கொலையொன் றடையினு மதனா ழென்பதென் மிகமுக மலர்ந்தே. (58)

ப - ரை. தம்மிடத் தேனும் - தம்மிடத்தாயினும், தமக்கு - தமக்கு, இனியவர்பாலேனும் - இனியரா யுள்ள சுற்றத்தார் முதலி யோரிடத்தாயினும், ஓர் - ஓர், இடர் - துன்பம், வந்து - வந்து, சாரின் - பொருந்திற்றாயின், அம்ம - அதனை, ஊழ் - ஊழ், முறை - வினை (ப் பயன்), என்று - என்று, அறிந்தும் - அறிந்து (இருந்து)ம், ஏழ் - சத்த, கடல் - சாகரமும், ஓர் - ஓர், அணு - அணு, என - என்று (சொல்ல), உருகும் - (நெஞ்ச மெலாம் நெக்கு நெக்கு) உருகும், என் போல்வார் - எம் போலிகள், இ - இந்த, முறை - முறையே, வேறு - வேறு, உயிர் - (ஒரு) உயிர், துயர் - துன்பத்தினை, உறின் - அடையின், இரக்கம் - இரக்கம், இன்றியது - இன்றி யிருப்பது, அன்றியும் - அல்லாமலும், தம்மால் - தம்மால், வெம்மைய - (ஓ ருயிர்) வெவ்விதாகிய, கொலை - கொலை, ஒன்று - ஒன்று, அடையினும் - அடைந்த விடத்து, அதன் - அதன், ஊழ் - ஊழ் (வினை), என்பது - என்று சொல்வது, என் - என்னை, மிக - மிகவும், முகம் - முகம், மலர்ந்து - மலர்ந்து, எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. தம்மிடத்தாயினும், தமக் கினியரா யுள்ள சுற்றத்தார் முதலியோரிடத் தாயினும், ஓர் துன்பம் வந்து பொருந்திற் றாயின், அதனை ஊழ் வினைப் பய னென்று அறிந் திருந்தும், சத்த சாகரமும் ஒ ரணு வென்று சொல்ல, நெஞ்ச மெல்லாம் நெக்கு நெக் குருகும் எம் போலிகள் இந்த முறையே வே றொரு உயிர் துன்பத்தினை அடையின், இரக்க மின்றி யிருப்ப தல்லாமலும், தம்மால் ஒ ருயிர் வெவ்வி தாகிய கொலை யொன்று அடைந்த விடத்து, அதனாழ் வினை யென்று சொல்வது என்னை மிகவு முக மலர்ந்து, எ - று.

துற வற முடையார்க்கு ஒ ருயிரால், ஒ ருயிர்க்குத் துன்பம் வந்த தாயினும், அதற்குத் தம்மை அறியாமல் தம்மால் ஓர் துன்பம் வந்த தாயினும், இரங்க வேண்டுமே யன்றி, இரக்க மின்றி யிருத்தல் பழு தென்பது காண்க. (ருஅ)

இம்மையி னிகழ்ச்சி மறுமையிற் சிறுமை யெய்து மென் றுயிர்க்கொலை புரியாச், செம்மைபைங் கநக மாதி கைப் பற்றுத் துறவினைச் சிலரடைந் திடினுந், தம்மை யொத் துயிர்க ளனைத்தையுங் காணுந் தயவுயர் தபநிய முதல, மும்மையு மோட்டிற் காட்டிலன் னையிற்காண் டுறவொரோர் தவர்க்கலான் முடியா. (59)

ப - ரை. இம்மையின் - இம்மைக்கண், இகழ்ச்சி - (ஜீவர் களால்) பழிப்பும், மறுமையில் - மறுமைக்கண், சிறுமை - பிறவித் துன்பமும், எய்தும் - வரும், என்று - என்று (கருதி), உயிர் - உயிர்களை, கொலை - கொலை, புரியா - செய்யாத, செம்மை - செம்மையினையும், பை - ,, - , கனகம் - பொன், ஆதி - மண் பெண் என்னும் மூ வகையையும், கை பற்று - பற்றுத, துறவினை - துறவினையும், சிலர் - (இந்த முறையே) சிலர், அடைந்திடினும் -

அடைந்தா ராயினும், தம்மை - தம்மை, ஒத்து - போல், உயிர்கள் - உயிர்கள், அனைத்தையும் - எல்லாவற்றினையும், காணும் - காணும், தயவு - தயவும், உயர் - உயர்ந்த, தபனியம் - பொன், முதல - ஆதி, மும்மையும் - மூ வகையினையும், ஓட்டில் - ஓட்டினைப் போலவும், காட்டில் - காட்டினைப் போலவும், அன்னையில் - அன்னையைப் போலவும், காண் - காணும், துறவு - துறவும், ஒரு ஓர் - ஒ ரோர், தவர்க்கு - தவருக்கு, அலால் - அல்லது, முடியா - கூடாது, எ-று.

பொ - ரை. எ - து. இம்மைக்கட் சீவர்களாற் பழிப்பும், மறுமைக்கட் பிறவித் துன்பமும் வரு மென்று கருதி, உயிர்களைக் கொலை செய்யாத செம்மையினையும், பொன் மண் பெண் ணென்னு மூ வகையையும் பற்றாத துறவினையும், இந்த முறையே சிலர் அடைந்தா ராயினும், தம்மைப் போல் உயிர்க ளெல்லாவற்றினையும் காணும் தயவும், உயர்ந்த பொன் னாதி மூ வகையினையும், ஓட்டினைப் போலவும், காட்டினைப் போலவும், அன்னையைப் போலவும், காணுந் துறவும், ஒ ரோர் தவருக் கல்லது கூடாது, எ - று.

இம்மை மறுமைகளைக் குறித்துக் கொலை செய்யாது, பொன் னாதி மூ வகையையும், ஓ டாதிக ளாகக் காண்போர், துறவு சாதக ரென்றும், அவ் விரு வகையையும் குறியாது, சுபாவ மாகத் தம்மைப் போ லுயிர்களைக் கண்டு, பொன் னாதிகளை, ஓ டாதிக ளாகக் காண் போர், துறவு சாத்திய ரென்றும் அறிக; அச் சாத்தியர் அரிய ராகலின், 'ஒ ரோர் தவர்க்கலான் முடியா' என்றார். (ருக)

அறை தலிற் கொல்லா நலத்தது நோன்மை யெனவரு டுறவுசா ரகத்தா, டுறமஃ துறவே சினமழுக் காறங் குறாமையாற் கொடுஞ்சொல்கூ றாமை, புறமுரை யாமை மருவிய விரண்டாற் பொருவின்மெய் யுறுதியோர்ந் துரைத்த, னிறைபெருந் தவத்தோர் வாக்கினிந் நான்கு நிகழுமென் றியம்புவர் நெடியோர். (60)

ப - ரை. கொல்லா - (உயிர்களைக்) கொல்லாத, நலத்தது - நலத்தினை யுடையது, நோன்மை - தவம், என - என்று, அறைதலில் - (திரு வள்ளுவ நாயனார்) கூறுதலின், துறவு - (ஒன்றினும் பற் றற்ற) துறவு, சார் - பொருந்திய, அகத்து ஊடு - உள்ளத்தின் கண், அருள் - (சீவ) காருண்ணியம், உறும் - (நிலை பெற்று) இருக்கும், அஃது - அது, உறவே - (நிலைபெற்று) இருக்கவே, அங்கு - அவ் வுள்ளத்தின்கண், சினம் - (உயிர்களிடத்து) கோபமும், அழுக்காறு - பொறாமையும், உறாமையால் - பொருந்தாமையால், கொடுஞ் சொல் கூறாமை - (கோபம் இன்மையால்) கொடுஞ் சொற் கூறாமையும், புறம் - (பொறாமை இன்மையால்) புறம், உரையாமை - கூறாமையும் (உள வாகும்), மருவிய - பொருந்தா நின்ற, இரண்டால் - (இவை) யிரண்டினாலும், பொருவு - (கொடுஞ் சொற் கூறாமையால்) ஒப்பு, இல் - அற்ற, மெய் - மெய்ம்மை (கூறலும்), உறுதி - (புறங் கூறாமையால் உயிர்களுக்கு) உறுதி (மொழிகளை), ஓர்ந்து - ஆராய்ந்து, உரைத்தல் - கூறுதலும் (உள வாகும். ஆகலின்), இ - இவை, நான்கும் - நான்கும், நிறை - நிறைந்த, பெரும் - பெரிய, தவத்தோர் - தவத்தினை யுடையார், வாக்கில் - வாக்கின்கண், நிகழும் - விளங்காநிற்கும், என்று - என்று, இயம்புவர் - சொல்லுவர், நெடியோர் - பெரியோர், எ-று.

பொ - ரை. எ - து. 'உயிர்களைக் கொல்லாத நலத்தினை யுடையது தவ' மென்று திரு வள்ளுவ நாயனார் கூறுதலின், ஒன்றினும் பற் றற்ற துறவு பொருந்திய உள்ளத்தின்கட் சீவ காருண்ணிய நிலை பெற் றிருக்கும்; அது நிலை பெற் றிருக்கவே, அவ் வுள்ளத்தின்கண் உயிர்களிடத்துக் கோபமும், பொறாமையும் பொருந்தாமையாற், கோப மின்மையாற் கொடுஞ் சொற் கூறாமையும், பொறாமை யின்மையாற் புறங் கூறாமையும் உள வாகும். பொருந்தாநின்ற இவை யிரண்டினாலும், கொடுஞ் சொற் கூறாமையால் ஒப் பற்ற மெய்ம்மை கூறலும், புறங் கூறாமையால், உயிர்

களுக்கு உறுதி மொழிகளை ஆராய்ந்து கூறுதலும் உள வாகு மாகலின், இவை நான்கும் நிறைந்த பெரிய தவத்தினை யுடையார் வாக்கின்கண் விளங்காநிற்கு மென்று சொல்லுவர் பெரியோர், எ - று.

உள்ளத் துற வில்லாதார்க்கு அரு ளின்மையாற் கோபமும், பொறாமையும் உடையா ராகலிற், கொடுஞ் சொற் கூறுதலும், புறங் கூறுதலும், பொய்ம்மை கூறுதலும், பய னில் சொற் கூறு தலும் ஆகிய இந் நான்கும் இவரது வாக்கின்கண் விளங்கு மென்பது காண்க. இதனால் உள்ளத் துறவுடையோரே மநம் வாக்குக் காயங்களினாலும் நன்மை யுடையோ ரென்ப தறிக. புறங் கூறல்—பிறரைக் காணாத விடத்து இகழ்ந்து கூறுதல். உறுதி மொழி—வீட்டினை அடைதற்கு ஏது வான மொழி. (௬௦)

கான்றசோ றதனிற் கண்டுபொய்ப் போக மனைத்தை
யுங் கைவிடுத் திடினுந், தோன்றுல கினைமெய் யெனக்
கொடு மீக்கூற் றுறவிருப் படையினத் துறவோன், சான்ற
தா யுளதன் னுளமிலை யெனவுந் தற்பரா நந்தமுற் றவனைப்,
போன்றிரு விழிமேற் செருகியீண் டுரைக்கும் பொய்யை
யெவ் விதத்தினாற் போக்கும். (61)

ப - ரை. கான்ற - கக்கின, சோறதனில் - சோறு போல், பொய் - (மாயா காரிய மாகிய) பொய், போகம் - போகங்கள், அனைத்தையும் - அனைத்தினையும், கண்டு - கண்டு, கை விடுத் திடினும் - துறந்தா ராயினும், தோன்று - (கானற் சலம் போற்) பொய்யாய்த் தோன்றுகின்ற, உலகினை - பிரபஞ்சத்தினை, மெய் - மெய் (ஆக), என - கருதி, கொடு - கொண்டு, மீக்கூற்று - கீர்த்தியை, உற - அடைய, விருப்பு - விருப்பம், அடையின் - உற்றாாயின், அ - அந்த, துறவோன் - துறவியானவன், சான்ற

தாய் - (தனக் குள்ளே) சாக்ஷியாய், உள - (இருந்து) உள்ள, தன் - தனது, உளம் - உள்ளமானது, இலெ - (தற்பராநந்தம் பெற்றது இல்லை) இல்லை, எனவும் - என்று (தனக்குக்) கூறவும், தற்பர ஆநந்தம் - (தான் பிறருக்கு அந்தத்) தற் பராநந்தத்தை, உற்றவன் - பெற்றவன், போன்று - போலும், இரு - இரண்டு, விழி - கண்களையும், மேல் - மேலே, செருகி - செருகி, ஈண்டு - இவ்விடத்து, உரைக்கும் - (கட் குறிப்பால்) கூறும், பொய்யை - (பொய்யால் வரும்) பாவத்தினை, எ - எந்த, விதத்தினால் - முறைமையால், போக்கும் - போக்குவான், எ - று.

பொ - ரை. எ - று. கக்கின சோறு போல் மாயா காரிய மாகிய பொய்ப் போகங்க ளனைத்தினையும் கண்டு துறந்தா னாயினும், கானற் சலம் போற் பொய்யாய்த் தோன்றுகின்ற பிரபஞ்சத்தினை மெய் யாகக் கருதிக் கொண்டு, கீர்த்தியை அடைய விருப்ப முற்றா னாயின், அந்தத் துறவியானவன் தனக் குள்ளே சாக்ஷியா யிருந் துள்ள தன துள்ளமானது, தற் பராநந்தம் பெற்றது இல்லை இல்லை யென்று தனக்குக் கூறவும், தான் பிறருக்கு அந்தத் தற் பராநந்தத்தைப் பெற்றவன் போலும், இரண்டு கண்களையு மேலே செருகி இவ்விடத்துக் கட் குறிப்பாற் கூறும் பொய்யால் வரும் பாவத்தினை, எந்த முறைமையாற் போக்குவான். எ - று.

ஐயன் காளி சந்நிதி முன் பொய் யுரைத்த பாவம் தீர்க்கக் கூடாமல், இம்மைக்கண்ணே துன்பம் வரு மாகலின், தேவர்க் கெல்லா மேலாய சிவ சந்நிதியில் அசத்தியங் கூறிய பாவம், தீரா தென்பது அறிவிக்க, 'எவ்விதத்தினாற் போகும்' என்றார்.

'சான்றதாயுள தன்னுள மிலை யெனவும்' என்றதற்கு உதா ரணம்: பெருந் திரட்டு. (46) "தன்னெஞ்சந் தனக்குச் சான்றது வாகத் தத்துவ நன்குண ராதே, வன்னெஞ்ச னாகிக் கூடமே புரி வோன் வஞ்சகக் கூற்றினுங் கொடியோன், பன்னுங்கா லவன்றன்

றெரிசநம் பரிசம் பழுதுற விரயவே துவுமாம், புன்னெஞ்சா லவனும் போய்நா கெய்திப் பூமியுள் ளளவுமே ருனல்.'' எ - ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுக)

இத்திற னருள்கைப் பிடித்தெலாம் விடுத்தோ னேவல னொருவனோ டுறினுஞ், சித்தசஞ் சலமுண் டவனோரோர் காலை செயுஞ்செயல் பிழைக்கினுட் சீற்றம், வைத்திடப் படுத லாற்றன துடற்பால் வந்தொரு பிணியுறிற் றுணி வோ, டத்தனே யுளனென் றிருத்தலி னிருத்த லரித னோன் றனையுறி னதனல். (62)

ப - ரை. இ - இந்த, திறன் - முறைமையே, அருள் - (சீவ) காருணியம் (ஒன்றுமே), கை - கை, பிடித்து - பிடித்து, எலாம் - (பற்றுக்களா யுள்ளன) எல்லாவற்றினையும், விடுத்தோன் - துறந் தவன், ஏவலன் - ஏவலாளன் (ஆகிய), ஒருவனோடு - ஒருவனுடனே, உறினும் - (கூடி) இருந்தான் ஆயினும், அவன் - அவன், ஒரு ஓர் - ஓர் ஓர், காலை - காலத்து, செயும் - செய்யும், செயல் - (ஏவற்) பணி விடைகளுள், பிழைக்கின் - (ஒவ் வொன்று) தப்பச் செய் தா னயின், உள் - உள்ளத்தில், சீற்றம் - கோபம், வைத்திடப் படுதலால் - வைக்கப்படுதலாலும், தனது - தனது, உடற்பால் - தேகத்தின்கண்ணே, ஒரு - ஒரு, பிணி - வியாதி, வந்து - வந்து, உறில் - அடைந்தால், அத்தனே - (அவ் வியாதியைப் போக்கு தற்குச்) சிவனே, உளன் - உளன், என்று - என்று, துணி வோடு - (தான்) துணிவோடு, இருத்தலின் - இருத்தல் போல், அனோன்றனே - அவனுக்கு, உறின் - (ஓர் வியாதி வந்து) அடை யின், இருத்தல் - (அங்ஙனம்) இருத்தல், அரிது - கூடாது, அதனல் - அதனலும், சித்த சஞ்சலம் - சித்த சஞ்சலம், உண்டு - தோன்றும், எ - று.

பொ - ரை. எ - து. இந்த முறைமையே சீவ காருணிய மொன்றுமே கைப் பிடித்துப் பற்றுக்களா யுள்ளன வெல்லா வற்றினையும் துறந்தவன், ஏவ லாள ஞகிய வொருவனுடனே கூடி யிருந்தா ஞயினும், அவன் ஒ ரோர் காலத்துச் செய்யும் ஏவற் பணி விடைகளுள் ஒவ் வொன்று தப்பச் செய்தா ஞயின், உள்ளத்திற் கோபம் வைக்கப்படுதலாலும், தனது தேகத்தின்கண்ணே ஒரு வியாதி வந் தடைந்தால், அவ் வியாதியைப் போக்குதற்குச் சிவனே உள னென்று தான் துணிவோடிருத்தல் போல், அவனுக்கு ஓர் வியாதி வந்து அடையின், அங்ஙனம் இருத்தல் கூடாது, அதனு லும் சித்த சஞ்சலம் தோன்றும், எ - று.

சீவ காருணியத்தினுலும், பிறர் பழிப்ப ரென்பதனுலும், அவனுக்குச் சிவனே உள னென்று இருத்தல் கூடாமையால், விவகாரப்படியே வைத்தியனைத் தேடுதல், மருந்து தேடுதல் முதலியவற்ருல், மனோ விசாரந் தோன்றுதலிற், 'சித்த சஞ்சல முண்டு' என்ருர், சித்த சஞ்சலம், மனோ லயம் பண்ணுதற்குத் தடையாகலின், அச் சஞ்சலம் பிறத்தற்கு ஏது வாகிய ஏவ லாளனும் ஆகா தென்பது அறிக. (சுஉ)

யாதியா தொருவ னீங்கியா னேதை லதனினு லதனினு
விலனென், ருேதலா லனைத்துந் துயர்தரு மெனநீத் துயர்
பரம் பொருளினைக் காட்டுந், தீதிலோர் குரவ னெங்குள
னெனவே தேடுமா லலைகடல் சூழும், பூதல மிசை
யோர் துறவினே னறவு பொலிமலர் தேடும்வண் டினைப்
போல். (63)

ப - ரை. யாது - யா தொன்றினை, யாது - யா தொன் றினை, ஒருவன் - ஒருவன், நீங்கியான் - நீங்கியான், அதனினல் - (அவன்) அதனல், அதனினுல் - அதனல், நோதல் - (வரும்)

துன்பங்கள், இலன் - இலன், என்று - என்று, ஓதலால் - (திரு வள்ளுவ நாயனார்) கூறுதலின், அனைத்தும் - (பற்றுக்களா யுள்ளன) எவையும், துயர் - துன்பங்களை, தரும் - தரும், என - என்று, நீத்து - (அறிந்து) துறந்து, உயர் - (எப் பொருள் களுக்கும்) மேலாய், பரம் - உயர்ந்த, பொருளினை - (மெய்ப்) பொருளினை, காட்டும் - அறிவிக்கும், தீது - குற்றம், இல் - இல்லாத, ஓர் - ஒப் பற்ற, குரவன் - ஞானாசாரியன், எங்கு - எவ் விடத்தில், உளன் - இருக்கின்றான், என - என்று, நறவு - தேன், பொலி - செறிந்த, மலர் - மலரினை, தேடும் - தேடும், வண்டினை - வண்டினை, போல் - போல், அலை - அலை, கடல் - கடல், சூழும் - சூழ்ந்த, பூதல மிசை - பூமியின்கண்ணே, ஓர் - ஒரு, துறவினோன் - துறவியானவன், தேடும் - தேடுவான், எ - று.

பொ - ரை. எ - து. 'யா தொன்றினை யா தொன்றினை ஒருவன் நீங்கியான் அவன் அதனால் அதனால் வருந் துன்பங்கள் இல' னென்று திரு வள்ளுவ நாயனார் கூறுதலின், பற்றுக்களா யுள்ளன எவையும் துன்பங்களைத் தரு மென்று அறிந்து துறந்து, எப் பொருள்களுக்கும் மேலா யுயர்ந்த மெய்ப் பொருளினை அறி விக்குங் குற்ற மில்லாத ஒப் பற்ற ஞானாசாரியன், எவ் விடத்தில் இருக்கின்றா னென்று தேன் சிறந்த மலரினைத் தேடும் வண்டினைப் போல், அலை கடல் சூழ்ந்த பூமியின்கண்ணே ஒரு துறவியானவன் தேடுவான், எ - று.

தே னிரம்பிய மலரைத் தேடும் வண்டினைப் போலச், சீவ காருணியம் ஈசுர பத்தி பாச வைராக்கியம் பிரம ஞானம் என்னும் நான்கும் நிறைந்த ஞானாசாரியனைத் தேடுகின்றா னென்ப தறிக. ஆல் - அசை.

'நறவுபொலி மலர்தேடு வண்டினைப் போல்' என்றதற்கு உதாரணம்: அறிவானந்த சித்தியார் (47) "அளிமலர் விட்டுவிட் டாய்ந்து மதுவுண் டகிப்பிக், களிவந்தி ருந்தக ருத்திங்கு றநின் க வலையென்னும், விளிவினை விட்டுவிட் டாய்ந்துவி யன்குரு மேவி நின்று, தெளிவந்து னைக்கண்டி டுமௌ வுங்குருத் தேடிடுமே." என வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (சுஙு)

சமரமுற் றிடாது புறந்திரி யொருவன் றனதெதி ரடைதரு படைக்கைக், குமரரை நோக்கி மிகுபராக் கிரமங் கூறினுந் தேறல ரதுபோ, லமர்தரத் துறவு சமாதியோ திடினு மவற்றினுக் கயனடை யினரேற், றமரெனத் துணிவுற் றவரொடும் பழகார் தத்துவ நிலைதலைப் படுவோர். (64)

ப - ரை. சமரம் - யுத்த களத்தை, உற்றிடாது - சாராது, புறம் - (அதற்குப்) புறம் பாய், திரி - திரிகின்ற, ஒருவன் - ஒருவன், தனது - (களத்தினைச் சார்ந்து) தனக்கு, எதிர் - எதிரே, படை - ஆயுத, கை - பாணிக ளாய், அடைதரு - வந்து நின்ற, குமரரை - வீரரை, நோக்கி - பார்த்து, மிகு - மிகுந்த, பராக்கிரமம் - பராக்கிரமங்களை, கூறினும் - சொன்ன ுயினும், தேறு - (அக் களத்திற் சென்று யுத்தம் பண்ணுது புறத்து நின்று கூறுதலால் அவனை வீர னென்று) தெளிவு, அலர் - உறார், அது - அது, போல் - போல், அமர் தர - (மநத்திற்குச் சம்மத மாய்ப்) பொருந்தும்படி, துறவு - துறவு, சமாதி - சமாதிகளை, ஓதிடினும் - கூறின ாயினும், அவற்றினுக்கு - அவற்றிற்கு, (உரிய நடக்கை யின்றி), அயல் - புற, நடையினரேல் - நடக்கைய ராயின், தமர் - (அவரை வீட்டினை அடைவித்தற்கு ஏது வாகிய) தமர், என - என்று, துணிவு உற்று - தெளிந்து, அவரொடும் -

அவர்களுடனே (கூடி), பழகார் - பழகார், தத்துவ - (பர) தத்துவ, நிலை - நிலைமையை, தலைப்படுவோர் - அடையும் நன் னெறிக்கண் விரைந்து செல்வோர், எ - று.

பொ - ரை. எ - து. யுத்த களத்தைச் சாராது அதற்குப் புறம்பாய்த் திரிகின்ற ஒருவன், களத்தினைச் சார்ந்து தனக் கெதிரே ஆயுத பாணிகளாய் வந்து நின்ற வீரரைப் பார்த்து, மிகுந்த பராமக்கிரமங்களைச் சொன்னானாயினும், அக் களத்திற் சென்று யுத்தம் பண்ணாது புறத்து நின்று கூறுதலால், அவனை வீர னென்று தெளிவுறார், அது போல, மநத்திற்குச் சம்மதமாய்ப் பொருந்தும்படி துறவு சமாதிகளைக் கூறினாராயினும், அவற்றிற்கு உரிய நடக்கை யின்றிப் புற நடக்கையராயின், அவரை வீட்டினை அடைவித்தற்கு ஏது வாகிய தமரென்று தெளிந்து, அவர்களுடனே கூடிப் பழகார், பரத்துவ நிலைமையை அடையும் நன் னெறிக்கண் விரைந்து செல்வோர், எ - று.

புறந் திரி யொருவன் சமர்க் களத்துஞ் செல்லாது, அதனைச் சார்வாரோடுங் கூடாது, இடையே நின்று பராக்கிரமங் கூறுதலின், அவனை வீர னல்ல னென்றும், பேடி யென்றும் அறிகின்றது போல், அய னடையினர் துறவு சமாதிகட்கு உரிய நன் னெறியும் செல்லாது அந் நெறி செல்வாரோடுங் கூடாது, இடையே நின்று அவற்றிற்கு உரிய நெறி மாத்திரங் கூறுதலின், அவரைத் துறவு சமாதி யுடையரல ரென்றும், கூடா வொழுக்க முடையவ ரென் றும் அறிந்து கொள்க.

'அமர்தாத் துறவு சமாதி யோதிடினு மவற்றினுக் கயனடை யினரேல்' என்றதற்கு உதாரணம்: அநுபவ சித்தி. (48) "மறைக ளாகம முதற்கலை முழுதையு மயலற மிகவோதிக், குறைவி லா வகைப் பொருடனை மதுரமாக் கூறவல் லவரேனு, நிறைவ தாகிய

பொருளினுக் குத்தகு நிலையவ ரலராகி, லறைவ தாகிய வவர் மொழி யாத்தவாக் கியமென வறையேமே" எ-ம், (49) "இறைக ணன்பினை யுரைசெய்து தாமிறைக் கன்பகத் திலரேனுந், துறவு நன்றென வுரைசெய்து துறவினி னிலைமைய திலரேனுங், கறைக ளொன்றுள செயல்களின் மூளுறுங் கருத்தறி கிலரேனு, மறையி னன்குறு மவர்மொழி யாத்தவாக் கியமென வறையாதே" எ-ம், (50) "தெய்வ வாணிநற் செந்தமி ழியலிசை தெரிந்துபா டைகளும்பொய், மெய்ய தாகவே பொருள்களும் விளங்கிட விளம் பவல் லவரேனு, மையி லாவகை மொழிவமெதான் றவர்செயன் மருவலொன் றெனிலத்தை, யைய மூவரின் முதல்வரே மொழி யினு மாத்தவாக் கியமென்னார்." எ-ம், மற்றும் வருவன வற்றூற் காண்க. (கூச)

நீரிடத் தன்றி யந்தரத் திடையே நிகழுமோர் மரை கொள விரும்பார், பாரிடத் தெவரும் விநோதிகள் சாலம் பண்ணலென் றெண்ணிமற் றதுபோற், சீருடைத் துறவு சமாதிபெற் றுலகிற் றிகழினு முயிர்க்கெலாந் தயவுஞ், சாருட் குருபத் தியுமிலார் தமையுந் தமரெனப் பழகவுந் தகுமே. (65)

ப - ரை. பார் இடத்து - பாரின்கண் (உள்ளோர்), எவரும் - யாவரும், நீர் இடத்து - நீரின்கண் (எழுகின்ற தாமரைப் பூவைக் கொய்து கொள்ள விரும்புதலே), அன்றி - அன்றி, அந்தரத்து இடை - ஆகாயத்தின்கண், நிகழும் - விளங்காநின்ற, மரை - தாமரைப் பூவை, கொள - (கொய்து) கொள்ள, விரும்பார் - விரும் பார்கள், விநோதிகள் - விநோத வித்தையினை யுடையார், சாலம் - (இந்திர) ஜாலம், பண்ணல் - பண்ணுதல், என்று - என்று, எண்ணி - அறிந்து, அது - அது, போல் - போல, சீர் - சிறப்பினை, உடை - உடைய, துறவு - துறவு, சமாதி - சமாதிகளை, பெற்று - ற

அடைந்து, உலகில் - உலகத்தின்கண், திகழினும் - விளங்கா நின்ருராயினும், எலாம் - எல்லா, உயிர்க்கும் - உயிர்களிடத்தும், தயவும் - காருணியமும், சார் - (தாம்) அடைந்த, அருள் - கிருபா மூர்த்தி யாகிய, குரு - ஞானாசாரியரிடத்து, பத்தியும் - பத்தியும், இலார்தமையும் - இல்லாதாரையும், தமர் - தமர், என - என்று (கருதி), பழகவும் - (அவருடன் கூடிப்) பழகவும், தகுமே - தகுமோ, எ - று.

பொ - ரை. எ - து. பாரின்க ணுள்ளோர் யாவரும் நீரின்க ணெழுகின்ற தாமரைப் பூவைக் கொய்து கொள்ள விரும்புதலே யன்றி, ஆகாயத்தின்கண் விளங்காநின்ற தாமரைப் பூவைக் கொய்து கொள்ள விரும்பார்கள், வினோதவித்தையினை யுடையார் இந்திர சாலம் பண்ணுத லென்று அறிந்து; அது போலச், சிறப்பினை யுடைய துறவு சமாதிகளை அடைந்து, உலகத்தின்கண் விளங்காநின்ரு ராயினும், எல்லா வுயிர்களிடத்தும் காருணியமும், தாம் அடைந்த கிருபா மூர்த்தி யாகிய ஞானாசாரியரிடத்துப் பத்தியும், இல்லாதாரையும் தம ரென்று கருதி அவருடன் கூடிப் பழகவுந் தகுமோ, எ - று.

தாமரைப் பூத் தோன்றுதற்கு இடம் நீரே யன்றி, அந்தரம் இடமாகாமையால், இதன்கண் தோன்றிய பூ பூப் போலத் தோன்றுவதே யன்றிப் பூ வன் றென்றும், வினோதிகள் சாலம் பண்ணுத லென்றும், அறிந்து, விரும்பாது உலகர் விடுத்தல் போல், துறவு சமாதிகளுக்கு ஏது வாகிய சீவ காருண்ணியம், ஈசுர பத்திக ளில்லாத துறவு சமாதிகள், அவை போலத் தோன்றுவன வன்றித், துறவு சமாதிக ளல்ல வென்றும், அவர் அவை போலக் காட்டுகிருரென்றும் அறிந்து, அவரோடும் பழகாது நீங்க வேண்டு மென்பது கண்டு கொள்க. (சுரு)

இதுநெறி யெனவோ ரூர்க்கு மற்றொருவ னேகினு
மாத்தன்வாய்க் குறிக, ளதுதனிற் காணு விடத்துல
கருமோ ரடிபெயர்த் திடுகல ரதுபோ, லெதிரறு சமாதி
யாதிபெற் றுடையோ ரென்னினு முன்னவ னுரைத்த,
சதுர்மறை யாக மாந்தநிந் தகரேற் றமரென லவரையுந்
தருமே. (66)

ப - ரை. ஒருவன் - ஒருவன், ஓர் - ஓர், ஊர்க்கு - ஊர்க்கு, நெறி - வழி, இது - ஈது. என - என்று, ஏகினும் - (அழைத்துச்) சென்றா னாயினும், ஆத்தன் - (தமக்கு) ஆப்தனா யுள்ளவன், வாய் - வாயாற் (கூறிய), குறிகள் - அடையாளங்கள், அதுதனில் - அந் நெறியிலே, காணு விடத்து - காணாத விடத்து, உலகரும் - (அதனை மாறுநெறி யென்று கருதி) உலகத்தாரும், ஓர் - ஓர், அடி - அடி, (ஆயினும்), பெயர்த்து - பெயர்த்து, இடுகலர் - வைத்திடார் கள், அது - அது, போல் - போல, எதிர் - ஒப்பு. அறு - இல்லாத, சமாதி - சமாதி, ஆதி - துறவு குரு பக்தி சீவ காருணியம் ஆகிய நான்கினையும், பெற்று உடையோர் - அடைந்தார்கள், என்னினும் - ஆயினும், முன்னவன் - கடவுள், உரைத்த - கூறிய, சதுர் - நான்கு, மறை - வேதமும், ஆகம - (இருபத் தெட்டுத் திவ்விய) ஆகமமும், அந்த - (ஆகிய இவற்றின்) முடிவாய் உள்ள வாக்கியங்களை, நிந்தகரேல் - இகழ்ந்து கூறினா ராயின், அவரையும் - அவரையும், தமர் - தமர், எனல் - என்று, (சொல்லலும்), தருமே - தருமோ (தகாது), எ - று.

பொ - ரை. எ - து. ஒருவன் ஓ ரூர்க்கு வழி ஈதென்று அழைத்துச் சென்றா னாயினும், தமக்கு ஆப்தனா யுள்ளவன் வாயாற் கூறிய அடையாளங்கள், அந் நெறியிலே காணாத விடத்து, அதனை மாறு நெறி யென்று கருதி உலகத்தாரும் ஓ ரடியாயினும் பெயர்த்து வைத்திடார்கள். அது போல ஒப் பில்லாத சமாதி துறவு

குரு பத்தி சிவ காருணியம் ஆகிய நான்கினையும் அடைந்தார்களாயினும், கடவுள் கூறிய நான்கு வேதமும், இருபத்தெட்டுத் திவ்வியாகமமு மாகிய இவற்றின் முடிவா யுள்ள வாக்கியங்களை, இகழ்ந்து கூறினு ராயின், அவரையும் தம ரென்று சொல்லலும் தகுமோ தகாது, எ - று.

ஒருவன் ஓரூர்க்கு வழி ஈதென்று அழைத்துச் சென்றானாயினும், தமக்கு ஆப்தன் கூறிய அடையாளங்கள், அந்நெறியிலே காணுத விடத்து, அதனை மாறு நெறியென்று ஓரடி யாயினும் பெயர்த்திடாத உலகர் போல், சமாதி யாதி யுடையோர் வீடடையும் நெறி கூறுங்கால், கடவுள் கூறிய வேதாகம முடிவு வாக்கியத்தின்படி கூருது, அதனை மறுத்துக் கூறினு ராயின், இந் நெறி மாறு நெறி யென்று கருதி, இவரோடு பழக லாகா தென்பது கண்டு கொள்க. 'சதுர் மறையாகமாந்தம்' எனவே, ஞானங் கூறிய வாக்கிய மென்பதும், ஞானங் கூறுதற் பொருட்டுச் சரியை கிரியை யோகங்களை மறுத்துக் கூறினும், ஞானங் கூறிய வாக்கியங்களை மறுத்துக் கூறுதல் நெறி யன் றென்பதுங் காண்க. நிந்தகர் = புறச் சமயத்தோர்கள். (கூகூ)

ஈங்கறை முறையிற் றேர்ந்துபா ரிதன்மீ தெங்கணுந்
தேடியோ ரிடத்தி, ஞேங்கருண் முதல நான்குமோர்
வடிவா யுளதென மறையினீற் றுரைக, டாங்குநா வொடுஞ்
செங் குவளைமார் பொடும்பொற் சரணொடுஞ் சரணென
வடைந்தோர், தீங்கொழித் தருள்வான் றிகழுமோர்
குரவற் கண்டுளங் குளிர்ந்தனன் றெளிஞன். (67)

ப - ரை. ஈங்கு - இவ்விடத்து, அறை - கூறிய, முறையில் - முறையே, தேர்ந்து - (ஞானாசாரியனது இலக்கண மெல்லாம் உடையோன் எங்ஙன னென்று) ஆராய்ந்து, பாரிதன் மீது -

பூமியின்கண்ணே, எங்கணும் - எவ்விடத்தும், தேடி - தேடி, ஓர் - ஓர், இடத்தின் - இடத்தின்கண், ஓங்கு - உயர்ந்த, அருள் - சீவகாருணியம் (ஈசுர பத்தி பாச வைராக்கியம் பிரம ஞானம் என்னு), நான்கும் - நான்கும், ஓர் - ஒரு, வடிவு - வடிவம், ஆய் உளது - கொண்டது, என - போல், மறையின் - வேதத்தினது, ஈற்று - முடிவு (ஆய் உள்ள), உரைகள் - (மகா வாக்கியமே முதலிய) வாக்கியங்களை, தாங்கும் - தரிக்கின்ற, நாவொடும் - நாவுடனும், செம் குவளை - செங் கழுநீர் மாலை (விளங்காநின்ற), மார்பொடும் - மார்பகத்துடனும், பொன் - பொன் (போன்ற), சரணொடும் - திரு வடிகளுடனும், சரண் என - (அத் திருவடி களில்) அடைக்கலமாய், அடைந்தோர் - (வந்து) அடைந்த பக்கு வரது, தீங்கு - (அஞ்ஞான மாகிய) பொல்லாங்கை, ஒழித்தருள் வான் - நீக்கும் பொருட்டு, திகழும் - விளங்காநின்ற, குரவன் - ஞானாசாரியனை, கண்டு - கண்டு (தெரிசித்து), உளம் - இதயம் (எல்லாம்), குளிர்ந்தனன் - குளிர்ந்தனன், தெளிஞன் - (அந்த) அறி வுடையோன், எ - று.

பொ - ரை. எ - து. இவ் விடத்துக் கூறிய முறையே ஞானாசாரியனது இலக்கண மெல்லாம் உடையோன் எங் குள னென்று ஆராய்ந்து, பூமியின்கண்ணே எவ் விடத்தும் தேடி, ஓரிடத்தின்கண் உயர்ந்த சீவ காருணியம் ஈசுர பத்தி பாச வைராக்கியம் பிரம ஞானம் என்னு நான்கும் ஒரு வடிவங் கொண் டது போல், வேதத்தினது முடிவா யுள்ள மகா வாக்கியமே முதலிய வாக்கியங்களைத் தரிக்கின்ற நாவுடனும், செங் கழுநீர் மாலை விளங்காநின்ற மார்பகத்துடனும், பொன் போன்ற திரு வடிகளுடனும், அத் திருவடிகளில் அடைக்கலமாய் வந்து அடைந்த பக்குவரது, அஞ்ஞான மாகிய பொல்லாங்கை நீக்கும் பொருட்டு விளங்காநின்ற, ஞானாசாரியனைக் கண்டு தெரிசித்து இதய மெல்லாம் குளிர்ந்தனன் அந்த வறி வுடையோன், எ - று.

'ஓங்கருண் முதல நான்குமோர் வடிவாய்' என்றதனுலும், 'மறையி னீற்றுரைக டாங்கு நாவொடும்' என்றதனுலும், ஆசாரி யனது இலக்கண மெல்லா முடைய னென்பது காண்க.

'சரணென வடைந்தோர் தீங்கொழித் தருள்வான்' என்ற தற்கு உதாரணம்: தத்துவ ராயர் நான் மணி மாலை—அகவல். (51) "ஒளித்தகு—மறிவும ரக்கல னமைத்துத் துறவி, ணமைக் கூம்பு நாட்டி யேம, வருளாங் கயிற்றிற் பிறழ்வறக் கட்டிப், பத்தி யென்னும் பாய்பூ ரித்து, முத்தி யூரிற் றம்மை யுய்த்தருள், சொரூப னென்னு மொருமீ காம, னருந்தவர்க் கரசின் பாதந், திருந்தவைக் கிலர்தஞ் சென்னியின் மிசையே." எ - ம், மற்றும் வருவனவற்ருற் காண்க. (சுள)

காரிய மாக லாற்சகம் படைக்குங் காரணன் குலாலனி னுளனென், ரோரியல் பெனவேழ் கடனுமொன் ருக்கி யொப்பிடுங் கருணைய னேனும், பேரியை பிறப்புத் தனை யடைந் தவர்க்குப் பினையுரு வகைகெடப் பார்க்குங், கூரிய விழியோ ணுதலி னறவுங் கொடியனு மாகுமக் குரிசில். (68)

ப - ரை. சகம் - பிரபஞ்சம், காரியம் - (மாயா) காரியம், ஆகலின் - ஆகலின் (அதற்குக் காரணமா யுள்ள மாயை சடமாக லின், இதனை), படைக்கும் - காரியப்படுத்தும், காரணன் - (நிமித்த) காரணன் (ஆகிய கடவுள்), குலாலனில் - (கட கலச முதலா யுள்ள பாண்டங்கள் மண்ணினது காரியம் அவைக்குக் காரண மாகிய மண் சட மாகலின், இதனைக் காரியப்படுத்தும் நிமித்த காரண னுகிய) குலாலன் போல், உளன் - இருக்கின்ருன், என்று - என்ற, ஓர் - (மேலாகிய கடவுளுக்குக் கீ ழாகிய குலாலனை உவமை கூறுகின்ற) ஒரு, இயல்பு - முறைமை, என - போல்,

ஏழ் - (உவமை கூறப்படாதாயினும்) சத்த, கடலும் - சாகரங்களை யும், ஒன்று - ஒன்றாகக், ஆக்கி - கூட்டி, ஒப்பிடும் - உவமை கூறுகின்ற, கருணையனேனும் - கிருபா சமுத்திரமா யிருந்தா னாயி னும், தனை - தன்னை, அடைந்தவர்க்கு - (வந்து) அடைந்த பக்கு வர்க்கு (பேரும் பொருந்திய பிறப்பும் இவையே யன்றி), பினை - பின்னர், பேர் - (அந்தப்) பேரும், இயை - (பொருந்திய), பிறப்பு - பிறப்பும், உறா வகை - வாராதபடி, கெட - நாசமாக, பார்க்கும் - பார்க்கின்ற, கூரிய - நுண்ணிய, விழியோன் - விழிகளை யுடை யோன், ஆதலின் - ஆகலின். அறவும் - மிகவும், கொடியனும் - கொடிய தன்மையினை யுடையவனும், ஆகும் - ஆவன், அ - அந்த, குரிசில் - ஆசாரியன், எ - று.

பொ - ரை. எ - து. 'பிரபஞ்சம் மாயா காரிய மாகலின், அதற்குக் காரணமா யுள்ள மாயை சட மாகலின், இதனைக் காரியப் படுத்தும் நிமித்த காரண னாகிய கடவுள், கட கலச முதலா யுள்ள பாண்டங்கள், மண்ணினது காரியம், அவைக்குக் காரண மாகிய மண் சட மாகலின், இதனைக் காரியப்படுத்தும் நிமித்த காரண னாகிய குலாலன் போல், இருக்கின்றா னென்று, மே லாகிய கடவு ளுக்குக் கீ ழாகிய குலாலனை உவமை கூறுகின்ற ஒரு முறைமை போல், உவமை கூறப்படா தாயினும், சத்த சாகரங்களையும் ஒன்றாகக் கூட்டி உவமை கூறுகின்ற கிருபா சமுத்திரமா யிருந்தா னாயினும், தன்னை வந்து அடைந்த பக்குவர்க்குப், பேரும், பொருந் திய பிறப்பும், இவையே யன்றிப். பின்னர் அந்தப் பேரும், பிறப்பும் வாராதபடி நாச மாகப் பார்க்கின்ற நுண்ணிய விழிகளை யுடை யோ னாகலின், மிகவுங் கொடிய தன்மையினை உடையவனு மாவன் அந்த ஆசாரியன், எ - று.

கிருபா சமுத்திரத்திற்கு உவமை யின்மையால், கடவுளுக்குக் குலாலனை யுவமை கூறுதல் போல், 'ஏழ் கடலும் ஒன்றாக்கி ஒப்பிடுங் கருணையனேனும்' என்றார். 'கூரிய விழியோன்' என்றதனாலும்

'பேரியை பிறப்புத் தனை யடைந்தவர்க்குப் பினை யுருவகை கெடப் பார்க்கும்' என்றதனுலும், மாயா காரிய காரண மெல்லாங் கடந்த நோக்க மென்பதும், அந் நோக்கம் பெற்ரோர்க்கும் அவைகள் நீங்கு மென்பதுங் காண்க. 'அறவுங் கொடியனு மாகும்' என்றது தூஷண பூஷண மாகத் துதித்த தென்க. இதனுட் சீவ காருணிய முடைய னென்ப தறிக. (கூஅ)

செப்பிருங் கைலைக் குருமுறை மையிற்றன் சிரமிசைச் சரணம்வைத் துளவோர், மெய்ப்பர னருளை நினைதொறு முளந்தீ மெழுகுகல் லெனவுரு கிடினு, மைப்பவந் துடைத் தன் பினர்க்குவீ டளிக்கும் வல்லப முடையமற் ருெருதா, ஞெப்புமிக் கிலியா கலினிறை பத்தி யுளனுமன் ருகுமவ் வும்பன். (69)

ப - ரை. செப்பு - (யாவரும்) புகழாநின்ற, இரும் - பெருமை (பொருந்திய), கைலை - கைலாச, குரு - குரு, முறைமையில் - பரம்பரையின் (வந்து), தன் - தனது, சிர - சிரசின், மிசை - மீதே, சரணம் - திரு வடிகளை, வைத்து உள - சூட்டிய, ஓர் - ஒப் பற்ற, மெய் - ஞாந, பரன் - ஆசாரியனது, அருளை - கிருபை யை, நினை - நினைக்குந், தொறும் - தோறும், தீ - அக்கிநியிற் (பட்ட), மெழுகு - மெழுகும், கல் - கல், என - என்று, (சொல்ல), உளம் - (அதனினும் அதிக மாக) உள்ளம் (எல்லாம்), உருகிடினும் - உருகாநின்ருே ழியினும், அன்பினர்க்கு - (தன்னை அடைந்த) பக்குவர்க்கு, மை - களங்க மாய் (உள்ள), பவம் - பிறவித் துன்பத் தை, துடைத்து - மாற்றி, வீடு - வீட்டினை, அளிக்கும் - கொடுக் கும், வல்லபம் - சாமர்த்தியத்தினை, உடைய - உடைய, ஒரு தான் - ஒரு தான், ஒப்பு - சமாந, மிக்கு - அதிகம், இலி - இன்மையன், ஆகலின் - ஆதலின், இறை - ஈசுர, பத்தி - பத்தி,

உளனும் - உடையனும், அன்று - அன்று, ஆகும் - ஆகுவன், அ - அந்த, உம்பன் - ஞானாசாரியன், எ - று. மற்று - அசை.

பொ - ரை. எ - து. யாவரும் புகழாநின்ற பெருமை பொருந்திய கைலாச குரு பரம்பரையின் வந்து, தனது சிரசின் மீதே திரு வடிகளைச் சூட்டிய, ஒப் பற்ற ஞானாசாரியனது கிருபையை நினைக்குந் தோறும், அக்கினியிற் பட்ட மெழுகும் கல் லென்று சொல்ல, அதனினும் அதிக மாக, உள்ள மெல்லாம் உருகாநின்றோ ரெயினும், தன்னை அடைந்த பக்கு வர்க்குக் களங்கமா யுள்ள பிறவித் துன்பத்தை மாற்றி, வீட்டினைக் கொடுக்கும் சாமர்த்தியத்தினை உடைய ஒரு தான், சமானாதிக மின்மைய னாதலின், ஈசுர பத்தி யுடையனு மன்றாகுவன் அந்த ஞானாசாரியன், எ - று.

இதன்கண் ஈசுர பத்தி யுடைய னென்பது காண்க. (சுகூ)

கருடனை நினைவோர் பார்வையாற் பிறர்பாற் கடு வொழித் தலிற்றனை நினைவோ, ரொருவரை நோக்கி னவர்கணும் பாச மொழித்தல்செய் துறவொடேய்ந் துறினு, மருண்மகட் புணர்ந்து ஞானசந் ததிபெற் றவ ரொடு மகிழ்ந்திருத் தலினக், குருபரன் றன்னைப் பின்னை நே ரில்லாக் குடும்பியென் றுரைக்கவும் படுமால். (70)

ப - ரை. கருடனை - கருடனை, நினைவோர் - தியானம் பண்ணுவோர், பார்வையால் - பார்வையால், பிறர்பால் - பிறர்மேல் (ஏறிய), கடு - விட, ஒழித்திடுதலின் - நீக்குதல் போல், தனை - தன்னை, நினைவோர் - தியானம் பண்ணுவோர், ஒருவரை - (பிறர்) ஒருவரை, நோக்கின் - நோக்கின், அவர்கணும் - அவரிடத்தும், பாசம் - பாசங்களை, ஒழித்தல் - நீக்குதல், செய் - செய்யும்,

துறவொடு - துறவுடனே, ஏய்ந்து - கூடி, உறினும் - இருந்தான் ஆயினும், அருள் - சீவ காருணிய மாகிய, மகள் - பெண்ணினை, புணர்ந்து - கூடி, ஞாந - ஞாந (மாகிய), சந்ததி - புத்திரனை, பெற்று - பெற்று, அவரொடும் - அவரோடும், மகிழ்ந்திருத்தலின் - (எக் காலமும்) மகிழ்ந்திருத்தலின், அ - அந்த, குருபரன் தன்னை - ஞாநாசாரியனை, பின்னை - பின்னர், நேர் - ஒப்பு, இல்லா - அற்ற, குடும்பி - குடும்பி, என்று - என்றும், உரைக்கவும் படும் - சொல்லப் படும், எ - று. ஆல் - அசை.

பொ - ரை. எ - து. கருடனைத் தியாநம் பண்ணுவோர் பார்வையாற் பிறர் மேலேறிய விட நீக்குதல் போல், தன்னைத் தியாநம் பண்ணுவோர் பிற ரொருவரை நோக்கின், அவரிடத்தும் பாசங்களை நீக்குதல் செய்யுந் துறவுடனே கூடி யிருந்தா னாயினும், சீவ காருணிய மாகிய பெண்ணினைக் கூடி ஞாந மாகிய புத்திரனைப் பெற்று, அவரோடும் எக் காலமும் மகிழ்ந்திருத்தலின், அந்த ஞாநா சாரியனைப் பின்னர் ஒப் பற்ற குடும்பி யென்றும் சொல்லப்படும், எ - று.

இதனுட் பாச வைராக்கிய முடைய னென்பது காண்க. (எo)

குலவுசெங் கதிரோ னிருளினை யுணராக் கொள்கை
போற் றொன்றொரு காலுஞ், சொலுமறி யாமை யறிகிலா
ஞாநத் தோன்றலே யெனினுமத் தூயோ, னிலகுமா நந்த
வுருவினை யணுக்கட் கீந்ததற் கிணையொரு துணையின்,
மலவுட லவர்பாற் கவர்தலி னிஃதோர் மடமைபெற்
றுடையனு மாமால். (71)

ப - ரை. குலவு - (யாவராலும்) கொண்டாடப்படுகின்ற, செம் - செய்ய, கதிரோன் - கதிரை யுடைய சூரியன், இருளினை - இருளை, உணரா - அறியாத, கொள்கை - முறைமை, போல் -

போல், தான் - (பிரமாதிகளாலும் புகழப்படுகின்ற) தான், சொலும் - (அவ் விருளுக்கு ஒப் பென்று) சொல்லப்படுகிற, அறியாமை - அஞ்ஞானத்தை, ஒரு காலும் - ஒரு காலும், அறிகிலா - அறியாத, ஞான - ஞானத்தினை (யுடைய), தோன்றலே - புருஷன், எனினும் - ஆயினும், அ - அந்த, தூயோன் - நின்மல (ஞகிய ஞானாசாரிய)ன், இலகும் - (தனது) விளங்காநின்ற, ஆநந்த - ஆநந்த, உருவினை - சொரூபத்தினை, அணுக்கட்கு - சீவர்களுக்கு, ஈந்து - கொடுத்து, அதற்கு - அதற்கு, இணை - ஈடாக, ஒரு - ஓர், துணை - (இழிவால் தனக்கு) ஒப்பு, இல் - இல்லாத, மல - மல, உடல் - உடலை, அவர்பால் - அவர் கையில், கவர்தலின் - வாங்கிக் கொள்ளுதலின், இஃது - இஃது, ஓர் - ஓர், மடமை - அறியாமையை, பெற்று - அடைந்து, உடையனும் - உடையனும், ஆம் - ஆகும், எ - று. ஆல் - அசை.

பொ - ரை. எ - து. யாவராலும் கொண்டாடப்படுகின்ற செய்ய கதிரை யுடைய சூரியன் இருளை அறியாத முறைமை போல், பிரமாதிகளாலும் புகழப்படுகின்ற தான், அவ் விருளுக்கு ஒப் பென்று சொல்லப்படுகிற அஞ்ஞானத்தை ஒரு காலும் அறியாத ஞானத்தினை யுடைய புருஷ ஞயினும், அந்த நின்மல ஞகிய ஞானா சாரியன், தனது விளங்காநின்ற ஆநந்த சொரூபத்தினைச் சீவர் களுக்குக் கொடுத்து, அதற்கு ஈடாக இழிவால் தனக்கு ஒ ரொப் பில்லாத மல வுடலை அவர் கையில் வாங்கிக் கொள்ளுதலின், இஃ தோ ரறியாமையை அடைந் துடையனு மாகும், எ - று.

சூரியன் தனது பிரகாசத்திஞல் தனக்கு இரு ளின்றிப் பிறர்க்கு இருளைப் போக்குதல் போல், ஞானாசாரியன் தனது ஞானத் திஞல் தனக்கு அஞ்ஞான மின்றிப் பிறர்க்கு அஞ்ஞானத்தைப் போக்குவ னென்பது காண்க.

இதனுற் பிரம ஞான முடைய னென்ப தறிக. (எக)

வதுவைநாண் மறையோர் வழங்கியாத் திரையின்
மற்றருந் ததியைநோக் குதலி, னிதுவுமொன் றெனத்தம்
முடல்பொரு ளாவி யீயுமெம் போலிக டமக்குங், குதிரை
கொண் டிடவன் றடைந்துட லாதி கொடுத்தவன் போற்
கொடுப் பவர்க்கும், பொதுமையுற் றிவணோர் மானுடன்
றாய்த் திகழுமப் பூரண புராணன். (72)

ப - ரை. வதுவை - கல்யாண, நாள் - காலத்தில், மறையோர் - மறையோர், வழங்கு - (தஞ் சாதி யாசார) வழக்கமாய்ச் செல்கின்ற, யாத்திரையின் - யாத்திரை போலவும், அருந்ததியை - (அக் காலத்தில் கல்யாணப் பெண்) அருந்ததியை, நோக்குதலின் - பார்க்குதல் போலவும், இதுவும் - இதுவும், ஒன்று - ஓர், என - (உலக ஆசார வழக்கம்) என, தம் - தமது, உடல் - உடல், பொருள் - பொருள், ஆவி - ஆவி (மூன்றினையும்), ஈயும் - கொடுக்கும், எம் - என், போலிகள் தமக்கும் - போல்வார்க்கும், குதிரை - (பாண்டியனுக்கு) குதிரை, கொண்டிட - கொள்ளும் பொருட்டு, அன்று - அந்நாளில் (சென்று), அடைந்து - (திருப் பெருந் துறையில் ஞானாசாரியரை) அடைந்து, உடல் ஆதி - உடல் ஆதி (மூன்றினையும்), கொடுத்தவன் - (உண்மையாகக்) கொடுத்த மாணிக்க வாசக சுவாமிகள், போல் - போல், கொடுப்ப வர்க்கும் - (உடல் ஆதிகளை உண்மையாகக்) கொடுப்போர்க்கும், பொதுமை - பொதுமை, உற்று - உற்று, இவண் - இவ் விடத்து, ஓர் - ஒரு, மானுடன் - மனிதன், ஆய் - ஆகியும், திகழும் - (மானை இடக் கரத்து ஏந்திய சிவ னாகியும்) விளங்கா நிற்பன், அ - அந்த, பூரண - பரிபூரண னாகிய, புராணன் - பழையோன். எ - று. மற்று - அசை.

பொ - ரை. எ - து. கல்யாண காலத்தில் மறையோர் தஞ் சாதி யாசார வழக்க மாய்ச் செல்கின்ற யாத்திரை போலவும்,

அக் காலத்தில் கல்யாணப் பெண் அருந்ததியைப் பார்க்குதல் போலவும், இதுவும் ஒருலகாசார வழக்கமெனத் தமது உடல் பொருளாவி மூன்றினையும், கொடுக்கும் என் போல்வார்க்கும், பாண்டியனுக்குக் குதிரை கொள்ளும் பொருட்டு அந் நாளிற் சென்று திருப் பெருந் துறையில் ஞானாசாரியரை அடைந்து உடலாதி மூன்றினையும், உண்மை யாகக் கொடுத்த மாணிக்க வாசக சுவாமிகள் போல், உட லாதிகளை உண்மை யாகக் கொடுப்போர்க்கும், பொதுமை யுற்று இவ் விடத்து ஒரு மனித னாகியும், மானை இடக் கரத் தேந்திய சிவ னாகியும் விளங்காநிற்பன் அந்தப் பரிபூரண னாகிய பழையோன், எ - று.

வதுவை நாள் யாத்திரை செல்லு மறையோரும், அக் காலத்தில் அருந்ததியை நோக்குங் கல்யாணப் பெண்ணும், யாத்திரை போவது போலவும், அருந்ததியை நோக்குதல் போலவும், காட்டின மாத்திரமே யன்றி, யாத்திரை போனதும், அருந்ததியைக் கண்டதும் அவர் மநத்திற்கு இல்லை; அது போல், உலகாசார வழக்க மாக உட லாதிகளைக் கொடுப்போரும் கொடுத்தது போல் காட்டின மாத்திரமே யன்றிக் கொடுத்தது இவர் மநத்திற்கு இல்லை யென்ப தறிக. (எஉ)

பாரினட் டாங்கா திகளொடக் குரவற் பலதரம் வலம்வந்து பணிந்து, சீரிய துதிசெய் தநுதிந மவற்றூற் றிருவுளத் தடைக்கவும் பட்டுத், தூரமோ டணிமை யறவிறை கருணை சுரக்குநா ளளவுநின் றேவ, லாரிவன் றனக்கொப் பெனச் செய்தொண் சரண்பெற் றறியவேண் டுவமுழு தறிந்தான். (73)

ப - ரை. பாரின் - பூமியின்கண், அட்ட - அட்ட, அங்க - அங்கம், ஆதிகளொடு - முதலிய (அங்கங்க) ளுடனே, அ - அந்த,

குரவர் - ஞானாசாரியனை, பல தரம் - பல காலும், வலம் - வலமாக, வந்து - வந்து, பணிந்து - வணங்கி, அநுதிநம் - எக் காலமும், சீரிய — ,, , துதி - தோத்திரம், செய்து - பண்ணி, அவற்றால் - அவ் வணக்கத் தோத்திரங்களினால், திரு - (இவன் பக்குவனு மென்று அறிந்து ஆசாரியனது) திரு, உளத்து - உளத்தில், அடைக்கவும் பட்டு - அடைக்கவும் அன் புடைய னாகி, தூரம் - (அவ் வாசாரியன் கோபித்தா னென்று தூரத்திலும் செல்லாமற் சந்தோஷித்தா னென்று சமீபத்திலும் சாராமல்) சேய்மை, அணிமை - அணிமைகளுக்கு, அற - நடு வாய், இறை - (அவ் அருள்) இறைவன், கருணை - கிருபை, சுரக்கும் - வைக்கும், நாள் - நாள், அளவும் - அளவும், நின்று - நின்று, ஏவல் - ஏவற் பணிவிடைகளினால், இவன் தனக்கு - இவனுக்கு, ஒப்பு - ஒப்பார், ஆர் - யாவர், என - என்று (சொல்ல), செய்து - (பணிவிடை களைச்) செய்து, ஒண் - ஒள்ளிய, சரண் - திரு வடி (தீக்ஷை), பெற்று - பெற்று, அறிய - (வீ டடைதற்கு) அறிய, வேண்டுவ - வேண்டும், முழுது - (உபதேச மொழிகள்) எல்லாவற்றினையும், அறிந்தான் - அறிந்தான், எ - று.

பொ - ரை. எ - து. பூமியின்கண் அட்டாங்க முதலிய அங்கங்களுடனே அந்த ஞானாசாரியனைப் பல காலும் வல மாக வந்து வணங்கி, எக் காலமும் தோத்திரம் பண்ணி, அவ் வணக்கத் தோத்திரங்களினால், இவன் பக்குவனு மென்று அறிந்து, ஆசாரி யனது திரு வுளத்தில் அடைக்கவும் அன் புடைய னாகி, அவ் வாசாரி யன் கோபித்தா னென்று தூரத்திலும் செல்லாமற், சந்தோஷித்தா னென்று சமீபத்திலும் சாராமற், சேய்மை அணிமைகளுக்கு நடு வாய், அவ் வரு ளிறைவன் கிருபை வைக்கு நா ளள வும் நின்று ஏவற் பணிவிடைகளினால், இவனுக்கு ஒப்பார் யாவ ரென்று சொல்லப் பணிவிடைகளைச் செய்து, ஒள்ளிய திரு வடி தீக்ஷை பெற்று, வீ டடைதற்கு அறிய வேண்டும் உபதேச மொழிக ளெல்லாவற்றினையும் அறிந்தான், எ - று.

'அட்டாங்காதி' எனவே பஞ்சாங்க சிட்டாங்க சிராங்கமுங் கொள்க.

'தூரமோ டணிமை யற' என்றதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனுர். (52) "அகலா தணுகாது தீக்காய்வார் போல்க, விகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்." எ - ம், 'அட்டாங்காதிகளொ டக் குரவற் பல தரம் வலம் வந்து' என்றதற்கு உதாரணம்: சிவ தரு மோத்தரம். (53) "வலஞ்செய்து தண்டதனை மானவிதி முறை தழுவத், தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னங், துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி, ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிலங்குறவே." எ - ம், மற்றும் வருவன வற்ருற் காண்க. (எ௩)

சற்குரு வருளா லையமுந் திரிவுந் தானற மறைமுடி வுணர்ந்த, பிற்குரு பரன்ருண் முற்சரண் புகுந்த பெரியவ ரினமரீஇ யிருந்தொண், சொற்களி னரிய பொருள்கடேர்ந் தவணந் தொலைதரொரு சிறிதுநாட் பின்னர்க், கற்குத லாதி யனைத்துநீத் தென்று ஞாநசா தகத்திஞள் கழிப் பான். (74)

ப - ரை. சற்குரு - சற்குரு, அருளால் - கடாக்ஷத்திஞலே, ஐயமும் - ஐயமும், திரிவும் - திரிவும், அற - நீங்கி, மறை - வேதத் தின், முடிவு - முடிவு (ஆகிய மகா வாக்கியத்திஞல் அறிகின்ற மெய்ப் பொருளை நிச்சயித்து), உணர்ந்த - அறிந்த, பின் - பின், குரு பரன் - (அந்த) ஞாநாசாரியனது, தாள் - திரு வடிகளை, முன் - (தனக்கு) முன்னர், சரண் - அடைக் கலம் ஆக, புகுந்த - புகுந்த, பெரியவர் - பெரியோர், இனம் - கூட்டத்தினை, மரீஇ - அடைந்து, இருந்து - இருந்து, ஒண் - ஒள்ளிய, சொற்களின் - (சாத்திரத்தின்) மொழிகளினது, அரிய - அரிய, பொருள்கள் -

பொருள்களை, தேர்ந்து - (அவரால் ஆராய்ந்து) அறிந்து, அ - அம், வணம் - முறையே, சிறிது - சிறிது, நாள் - காலம், தொலைத்து - கழித்த பின்னர், கற்குதல் - சிரவண (மநநங்கள்), ஆதி - முதலிய, அனைத்தும் - அனைத்தினையும், நீத்து - விட்டு (நீங்கி), என்றும் - எக் காலத்தும் (ஏகாந்த ஸ்தாநத்தி லிருந்து நிஷ்டை கூடி), ஞாந - ஞாந, சாதகத்தின் - சாதகத்தினாலே, நாள் - நாள்களை, கழிப்பான் - போக்காநிற்பன், எ - று. தான் - அசை.

பொ - ரை. எ - து. சற் குரு கடாக்ஷத்தினாலே ஐயமுந், திரிவு நீங்கி, வேதத்தின் முடி வாகிய மகா வாக்கியத்தினால், அறி கின்ற மெய்ப் பொருளை நிச்சயித்து அறிந்த பின், அந்த ஞாநாசாரி யனது திரு வடிகளைத் தனக்கு முன்னர் அடைக் கலமாகப் புகுந்த பெரியோர் கூட்டத்தினை அடைந் திருந்து, ஒள்ளிய சாத்திரத்தின் மொழிகளினது அரிய பொருள்களை அவரால் ஆராய்ந்து அறிந்து, அம் முறையே சிறிது காலம் கழித்த பின்னர்ச் சிரவண மநநங்கள் முதலிய அனைத்தினையும் விட்டு நீங்கி, எக் காலத்தும் ஏகாந்த ஸ்தாநத்தி லிருந்து நிஷ்டை கூடி ஞாந சாதகத்தினாலே நாள்களைப் போக்காநிற்பான், எ - று.

ஐயந் திரி வென்றவற்றுள், ஒன்றோ இரண்டோ வென்பது ஐயம். முன்னர் ஒன் றென்று துணிந்து, இரண் டென்பதும், முன்னர் இரண் டென்று துணிந்து, ஒன் றென்பதும், திரி வென் றறிக.

'ஒண் சொற்களி னரிய பொருள்க டேர்ந்து' என்றதற்கு உதா ரணம்: பெருந் திரட்டு. (54) "ஒப்பி லமல ஞானதி வைத்த வுரையை யோத லோதுவித்தல், செப்பும் பொருளைத் திரிவுமறத் தெளிகை பிறரைத் தெளிவிக்கை, தப்பா ததனை மநத்தகத்தே தரிக்கை யெனவுந் தானைந்தாம், வைப்பா யருந்தா மருந்தாகிச் சிறந்த ஞாந மகவினையே." எ - ம், மற்றும் வருவனவற்றாற் காண்க.

(எச)

அரும்பொறி யின்மை பழியன்றி யார்க்கு மறிவறிந்
தாள்வினை யின்மை, பெரும்பழி யெனலா னொருவன்வீட்
டின்பம் பெருமைகொ டிகழ்கலர் பெரியோர், விரும்பஃ
தடையும் வகையருட் குருவான் விளங்கியு முளங்கையிற்
கனிபோல், வரும்படி நாளு முயன்றுறா வென்போன்
மதியிலார் தமையிகழ் வதலால். (75)

ப - ரை. யார்க்கும் - யாவர்க்கும், அரும் - அரி தாகிய, பொறி - செல்வம், இன்மை - இல்லாமை, பழி - பழிப்பு அன்று - அன்று, அறிவு - (அச் செல்வத்தினை அடையும்) உபாயம், அறிந்து - அறிந் திருந்தும், (அவ் வுபாய நெறிக்கண்), ஆள்வினை - முயற்சி, இன்மை - இன்மையே, பெரும் - பெரிய, பழி - பழிப்பு, எனலான் - என்று திரு வள்ளுவ நாயனார் கூறுதலின், ஒருவன் - ஒருவன், வீட்டு இன்பம் - (ஞான நிஷ்டை இடையறாது கூடுமிடத்தும் அவ்) வீட்டு இன்பத்தினை, பெருமை கொடு - அடையா திருத்தலைக் குறித்து, இகழ்கலர் - இகழார், பெரியோர் - பெரியோர், விரும்பு - விரும்பா நின்ற, அஃது - அந்த ஆநந்தத்தை, அடையும் - அடையும், வகை - நெறி, அருள் குருவான் - ஞானாசாரியனால், விளங்கியும் - அறிந் திருந்தும், உளம் - உள்ளம், கையில் - கை, கனி - (நெல்லிப்) பழம், போல் - போல், வரும்படி - (அது) வரும்படிக்கு நாளும் - எந் நாளும், முயன்றுறா - (ஞான சாதகத்தின்கண்) முயற்சிப்படாத, என் - என், போல் - போலும், மதி - புத்தி, இலார் தமை - இல்லாரை, இகழ்வது - இகழ்வதே, அலால் - அன்றி, எ - று.

பொ - ரை. எ - து. யாவர்க்கும் அரி தாகிய செல்வம் இல்லாமை பழிப் பன்று; அச் செல்வத்தினை அடையும் உபாயம் அறிந் திருந்தும் அவ் வுபாய நெறிக்கண் முயற்சி யின்மையே பெரிய பழிப் பென்று திரு வள்ளுவ நாயனார் கூறுதலின், ஒருவன் ஞான நிஷ்டை இடையறாது கூடு மிடத்தும், அவ் வீட் டின்பத்தினை

அடையா திருத்தலைக் குறித்து இகழார் பெரியோர். விரும்பாநின்ற அந்த ஆநந்தத்தை அடையு நெறி ஞாநாசாரியனால் அறிந் திருந்தும், உள்ளங் கை நெல்லிப் பழம் போல, அது வரும்படிக்கு எந் நாளும் ஞாந சாதகத்தின்கண் முயற்சிப்படாத என் போலும் புத்தி யில்லாரை இகழ்வதே அன்றி, எ - று.

எக் காலமு மாறாது ஞாந சாதகத்தின்கண் முயலல் வேண்டு மென்பது இதனுட் காண்க. (எசு)

பகர்தரு தொழில்க ளனைத்துமோர் சிறிது பண்ண வேண் டுவபணி விடுத்துப், புகலுரை யடக்கித் தனியிடத் திருந்து போற்றிசெய் தருட்குரு பதம்பின், மிகமுயன் றிதய வருத்தமெய் தாமன் மெலிந்துகை விடுதல்செய் யாம, லகமுக மாக்கி மநத்தைநா டொறுமோ ரைம்புல னொழித்தசை வறுப்பான். (76)

ப - ரை. பகர்தரு - சொல்லாநின்ற, தொழில்கள் - (நித்திய) கருமங்கள், அனைத்தும் - அனைத்தினுள்ளும், பண்ண - (இன்றி யமையாது) செய்ய, வேண்டுவ - வேண்டுங் கன்மங்களில், ஓர் - ஒ ரோர், சிறிது - சிறிது, பணி - (சீக்கிரத்திலே) செய்து, விடுத்து - விடுத்து, புகல் - புகல்கின்ற, உரை - வாக்கினை, அடக்கி - மௌந மாக்கி, தனி - ஏகாந்த, இடத்து - ஸ்தாநத்தில், இருந்து - இருந்து கொண்டு, அருள் - கிருபா, குரு - ஆசாரியரது, பதம் - திரு வடிகளை, போற்றி - தோத்திரம், செய்து - பண்ணி, பின் - பின்னர், மிக - (அவர் கூறிய உபாயத்தின்படியே மநோ லயம் பண்ணத் தொடங்கும் போது அந்த உபாய நெறிக்கண்) மிகவும், முயன்று - முயற்சிப்பட்டு, இதய - மந, வருத்தம் - வருத்தமும், எய்தாமல் - அடையாமல், மெலிந்து - (எவ் விதத்தால் அடக்கினும் இது அடங்குவ தில்லை யென்று உள்ளம்) வருந்தி, கைவிடுதல் -

(அவ் வுபாய நெறியை விட்டு) நீங்குதல், செய்யாமல் - செய்யாமல், மநத்தை - (பையப் பைய அம்) மநத்தினை, அகமுகம் - (சகமுகமாய்ச் செல்ல வொட்டாமல்) அகமுகம், ஆக்கி - ஆக்கி, நாள் தோறும் - எக் காலமும், ஓர் - ஒப் பற்ற, ஐ - பஞ்ச, புலன் - இந்திரியங்களையும், ஒழித்து - நிக்கிரகம் பண்ணி, அசைவு - (மநத்தினது) சங்கற்பத்தை, அறுப்பான் - நாசம் பண்ணுவான், எ - று.

பொ - ரை. எ - து. சொல்லாநின்ற நித்திய கருமங்கள் அனைத்தினுள்ளும், இன்றி யமையாது செய்ய வேண்டுங் கன்மங்களில், ஒ ரோர் சிறிது சீக்கிரத்திலே செய்து விடுத்துப் புகல்கின்ற வாக்கினை மௌந மாக்கி, ஏகாந்த ஸ்தாநத்தி லிருந்து கொண்டு கிருபாசாரியரது திரு வடிகளைத் தோத்திரம் பண்ணிப் பின்னர் அவர் கூறிய உபாயத்தின்படியே மநோ லயம் பண்ணத் தொடங்கும் போது, அந்த உபாய நெறிக்கண் மிகவும் முயற்சிப்பட்டு மந வருத்தமும் அடையாமல், எவ் விதத்தால் அடக்கினும் இது அடங்குவ தில்லை யென்று உள்ளம் வருந்தி, அவ் வுபாய நெறியை விட்டு நீங்குதல் செய்யாமல், பையப் பைய அம் மநத்தினைச் சகமுகமாய்ச் செல்ல வொட்டாமல் அக முக மாக்கி, எக் காலமும் ஒப் பற்ற பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணி மநத்தினது சங்கற்பத்தை நாசம் பண்ணுவான், எ - று.

"தனித் திருந் தொரு தம் மநத்தை யைம் பொறிவாய்த் தடுத்து" என்ற செய்யுளுள், வாக்குக் காயங்களை அடக்கினல் அன்றி, மந மடக்கக் கூடா தென்ற முறையே, இச் செய்யுட் கண்ணும் மந மடக்குதற்கு, அவை அடக்க வேண்டு மென்று கூறிய வாறு காண்க.

'மிகமுயன் றிதய வருத்த மெய்தாமல்' என்றதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம். (55) "மிகமுயன்று வருந்தாமற் சமமா கின்ற

வேண்டுகொளாற் றன்முயல்வால் விநோதந் தன்ளுற், பகர்மநமரஞ் சிறுமகவை நிறுத்தல் வேண்டும் பலபிறப்பிற் பரிசயங்க ளகலப் பண்ணி, யகல்சுபவா தனையுதித்தான் முயற்சி பேறு மையுறினுஞ் சுபமுயலவை யதுநீ தல்ல, திகழ்மநம்போய்த் தற்பதத்தைத் தெளியு மட்டுந் தேசிகனுல் சொல்வழியிற் செல்லு வாயே.'' எ - ம், திரு மந்திரம். (56) ''உடலாங் குகையி லுணர்வாகும் பீடத், தடலார் சமாதி யிதயத்த தாக, நடமா டியகுகை நாடிய யோகி, மிடையாகா வண்ணமே சாதிக்கு மெல்லவே.'' எ - ம். மற்றும் வருவனவற்ருற் காண்க. (எசு)

கீழ்ப் போன செய்யுள்களுட் கூறிய முறையே, புறப் பற்றுக்களா யுள்ளன வெல்லாம் துறந்து, அநாசாரியரை விட்டு நீங்கி, ஆசாரியரை வந்து அடைந்து, திரு வடி தீக்ஷை பெற்று, அவரது உபதேச மொழிகளைக் கேட்டு, அவரது திரு வடியை அடைந்த பெரியோரை அடைந்து, நிஷ்டை கூடி ஞாந சாதகம் பண்ணுவோனுக்கு மேல் வருஞ் செய்யுள்களுள் ஞாநாசாரம் கூறுகின்றர்.

உச்சியம் போதின் மீதரும் பசிக்கவ் வூர்வல மாயிலந்
தோறும், பிச்சைகை யிடையிற் காடிகூ ழேனும் பெற்றது
பற்றியுள் வெறுப்போ, டிச்சையற் றருந்திப் பொருந்தவே
காந்தத் திடையினுந் தாகம்வந் தடையி, னச்சிநீ ருரிற்
புகுந்துறு தேரி யாதியி னருந்துத னன்றே (77)

ப - ரை. உச்சி - உச்சி, அம் போதின் - காலத்திலே, மீது - மிகுந்த, அரும் - அரிய, பசிக்கு - பசிக்கு, அ - அந்த, ஊர் - ஊரினை, வலம் - வலம், ஆய் - ஆக (ச் சென்று), இலம் - வீடு, தோறும் - தோறும், பிச்சை - பிச்சை (யாகக்), கை இடையில் - கையின்கண்ணே, காடி - காடி (ஆயினும்), கூழேனும் - கூழா

யினும், பெற்றது - கொடுத்ததை, பற்றி - வாங்கி, உள் - உள்ளத்தின்கண், வெறுப்பு - (அவற்றில்) வெறுப்பும், இச்சை - விருப்பும், அற்று - இன்றி, அருந்தி - புசித்து, ஏகாந்தத்திடை - (மீண்டும் போய்த் தனது) ஏகாந்த ஸ்தாநத்தில், பொருந்த - இருக்க வேண்டும், இனும் - பின்னரும், தாகம் - (தண்ணீர்த்) தாகம், வந்து அடையின் - வந்தது ஆயின், நீர் - நீரினை, நச்சி - விரும்பி, ஊரில் - ஊர்க்கட், புகுந்துரூது - புகாது, ஏரி - ஏரி, ஆதியின் - முதலியவற்றுள், அருந்துதல் - (நீர்) அருந்துதல், நன்று - நன்மையாம், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. உச்சிக் காலத்திலே, மிகுந்த அரிய பசிக்கு, அந்த வூரினை வலமாகச் சென்று, வீடு தோறும் பிச்சையாகக் கையின்கண்ணே காடியாயினுங், கூழாயினும் கொடுத்ததை வாங்கி, உள்ளத்தின்கண் அவற்றில் வெறுப்பும், விருப்பு மின்றிப் புசித்து, மீண்டும் போய்த் தனது ஏகாந்த ஸ்தாநத்தில் இருக்க வேண்டும்; பின்னரும் தண் ணீர்த் தாகம் வந்த தாயின், நீரினை விரும்பி ஊர்க்கட் புகாது ஏரி முதலியவற்றுள் நீர் அருந்துதல் நன்மை யாம், எ - று.

பிச்சைக்கே யன்றி, நீரைக் குறித்து ஊர்க்குப் போக வேண்டாமையின், ஏரி யாதியி னருந்துத னன் றென்றார். ஏரி யாதியெனவே நதி மடு வாவி சுனை முதலியவுங் கொள்க.

'இலந் தோறும் பிச்சைகை யிடையில்' என்றதற்கு உதாரணம்: திரு மந்திரம். (57) "பரந்துல கேழும் படைத்தபி ரானை, யிரந்துணி யென்பர்க ளெற்றுக்கி ரக்கு, நிரந்தர மாகநி னையும டியா, ரிரந்துண்டு தன்னடி யெட்டச்செய் தானே." எ - ம், (58) "பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர், சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர், மறப்பில ராகிய மாதவஞ் செய்வர்,

பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே." எ-ம், (59) "அச்சினு ணின்ற பொருடன்னை யுள்ளுவோ, ருச்சியம் போதாக வுள்ளமாக் கோயிற்குப், பிச்சைபி டித்துண்டு பேதம றநினைந், திச்சைவிட் டேகாந்த மேறியி ருப்பரே." எ-ம். வரும், மற்றும் வருவன வற்றாற் காண்க. (எஎ)

ஞானசா தகன்மற் றுதயமா தியினூ ணயக்கொணு மயக்கமா தலினு, மீநமார் விந்து மிகுமெனு வகன்றோ ரிகழ்ந்துகை விடுத்தவா தலினுந், தானிரந் தொருபோழ் தருந்திடு முணவுஞ் சமமலாற் றாழினு மிகினு, மூனதா ருடற்கணோயுறு மற்றைக் குறக்கமு மிகுந்திடு மன்றே.(78)

ப-ரை. ஞான - ஞான, சாதகன் - சாதகம் பண்ணுகின்றவன், உதயம் - (உச்சிக் காலத் தொழிந்து மற்றை) உதய (கால) ம், ஆதியின் - முதலிய (காலங்களின்), ஊண் - அன்னாதிகளை, நயக்க - புசிக்கல், ஒணு - ஆகாது, மயக்கம் - (தேக) மயக்கம், ஆதலினும் - வருதலினாலும், ஈநம் - இழிவினை, ஆர் - உடைய, விந்து - சுக்கில, மிகும் - வரத்தனையாம், எனு - என்று, அகன்றோர் - துறந்தோரால், இகழ்ந்து - இகழ்ந்து, கை விடுத்த - விடப்பட்டன, ஆதலினும் - ஆகலானும், தான் - தான், இரந்து - பிச்சையேற்று, ஒரு - ஒரு, போழ்து - போது, அருந்திடும் - புசிக்கின்ற, உணவும் - புசிப்பும், சமம் அலால் - (எந் நாளும் ஒரு) சமமாகப் புசியாமல், தாழினும் - குறைந்த தாயினும், மிகினும் - மிகுந்த தாயினும், ஊனது - ஊன், ஆர் - பொருந்திய, உடற்கண் - உடம்பின்கண், நோய் - வியாதி, உறும் - (வந்து) அடையும், அற்றைக்கு - அன்றைக்கு, உறக்கமும் - நித்திரையும், மிகுந்திடும் - மிகுந்து வரும், எ - று. மற்று அன்று - ஏ - அசை நிலை.

பொ-ரை. எ-து. ஞான சாதகம் பண்ணுகின்றவன் உச்சிக் காலத் தொழிந்து, மற்றை யுதய கால முதலிய காலங்களின்

அந்நாதிகளைப் புசிக்க லாகாது, தேக மயக்கம் வருதலினாலும், இழி வினை யுடைய சுக்கில வர்த்தனையா மென்று துறந்தோரால் இகழ்ந்து விடப்பட்டன வாகலாலும், தான் பிச்சை யேற்று ஒரு போது புசிக்கின்ற புசிப்பும், எந் நாளும் ஒரு சம மாகப் புசியாமல், குறைந்த தாயினும், மிகுந்த தாயினும், ஊன் பொருந்திய உடம்பின் கண் வியாதி வந்து அடையும், அன்றைக்கு நித்திரையும் மிகுந்து வரும், எ - று.

மயக்கம் வருதலினால், தேகம் ஆசநத்தின்கட் செவ்வே யிராது. விந்து மிகுதலினால், மநத்தின்கட் காம மிகுந்து, அம் மநம் அசைவற நில்லாது. வியாதி வருதலினால், சமாதி கூடத் தொடங்கவே கூடாது. உறக்க மிகுதலினால், கேவலம் வந்து அடையு மாகலின், இதனுட் கூறிய முறையே செய்ய வேண்டு மென்ப தறிக 'உதய மாதிய' வென்றதனால், சாயங் காலம், இராக் காலம், விடியற் காலை முதலியவுங் கொள்க. (எஅ)

மிகுத்திடு முனமிற் படுதழ லவிப்பான் விடுபவன்
கலங்கனீர் தெளிநீர், பகுத்திடா னதுபோற் காடிசோ
றேனும் பசித்தவன் புசித்திட றகுமா, னகத்தவர் மனை
தோ றுழன்றெனக் கடிசி னல்கிடென் றொருவன்வேட்
டுணலா, னகத்துறு பசியும் போக்கிமற் றதுகொ டதிக
மென் பயனடை வானோ. (79)

ப - ரை. இல் - வீட்டின்கட், படு - பட்ட, தழல் - அக்கினி, மிகுத்திடும் - மிகுந்து பற்றி எரியும், முனம் - முன்னர், அவிப்பான் விடுபவன் - அவிப்பவன், கலங்கல் - (அதனை அவித்தலைப் பார்க்குதலே யன்றி) கலங்கல், நீர் - நீர் (என்றும்), தெளி - தெளிந்த, நீர் - நீர் (என்றும்), பகுத்திடான் - (நீரினைப்) பகுத்துப் பாரான், அது - அது, போல் - போல், காடி - (உதராக்கினி மிகுவதற்கு முன்னர் இதனை அவித்தற்கு நீ ரென்று கருதி நாச் சுவை

விரும்பி நன்று தீதென்று பகுக்காது) காடிச் (சோருயினும்), சோறேனும் - (நல்ல) சோருயினும், பசி - பசியை (உடைய), தவன் - தவத்தோன், புசித்திடல் - புசிக்குதல், தகும் - முறைமை யாம், தவர் - தவத்தோர், நக - சிரிக்க, மனை - வீடு, தோறும் - தோறும், உழன்று - திரிந்து, எனக்கு - எனக்கு, அடிசில் - சோறு, நல்கிடு - கொடுமின், என்று - என்று (கேட்டு), ஒருவன் - ஒருவன், வேட்டு - (நாச் சுவை) விரும்பி (வாங்கி), உணலால் - உண்டலினுல், அகத்து - (அவ்) வயிற்றில், உறு - உறு, பசியும் - பசியை, போக்கி - போக்குதலும், மற்று - அன்றி, அது கொடு - (அங்ஙனம்) உண்டது கொண்டு, அதிகம் - அதிகமாக (வேறே), என் - யாது, பயன் - பயனை, அடைவானே - பெறுவானே, எ - று. ஆல் - அசை.

பொ - ரை. எ - து. வீட்டின்கட்பட்ட அக்கினி மிகுந்து பற்றி எரியு முன்னர் அவிப்பவன், அதனை அவித்தலைப் பார்க்கு தலே யன்றிக் கலங்க நீ ரென்றும், தெளிந்த நீ ரென்றும், நீரினைப் பகுத்துப் பாரான். அது போல், உதராக்கினி மிகுவதற்கு முன்னர், இதனை அவித்தற்கு நீ ரென்று கருதி, நாச் சுவை விரும்பி நன்று தீதென்று பகுக்காது, காடிச் சோருயினும், நல்ல சோரு யினும், பசியை யுடைய தவத்தோன், புசிக்குதல் முறைமை யாம். தவத்தோர் சிரிக்க, வீடு தோறுந் திரிந்து, எனக்குச் சோறு கொடுமி னென்று கேட்டு ஒருவன் நாச் சுவை விரும்பி வாங்கி உண்டலினுல், அவ் வயிற்றில் உறு பசியைப் போக்குதலும் அன்றி, அங்ஙனம் உண்டது கொண்டு அதிக மாக வேறே யாது பயனைப் பெறு வானே, எ - று.

பிச்சை வாங்கி உண்டலினுலும், வேட் டுண்டலினுலும், பசி போதலே யன்றி, வேறு பயன் இன்மையால், 'அதிக மென் பய னடைவானே' வென்ருர். தவத்தோர்க்கு நாச் சுவை வேட்டு

ஒருவரைப் பின் சென்று, வாங்கி யுண லாகா தென்பது கண்டு கொள்க.

'காடி சோறேனும் பசித்தவன் புசித்திட றகும்' என்றதற்கும், 'நகத் தவர் மனைதோ றுழன்று' என்றதற்கும், உதாரணம்: கூர்ம புராணம். (60) "இவ்வகை யைய மேற்றுநன் குண்போன் காடிசோ றெவற்றினை யேனுஞ் செவ்விதி னளித்த தருந்திடல் வேண்டு மனைதொறுஞ் சென்றுசென் றுற்று, வெவ்வழல் போல வெகுண்டுமற் றொன்றை விழ்ழந்துநீ யளித்தியென் றருந்த, லவ்விய மவித்த மநத்தினோர்க் காகா வென்றுநான் மறையறைந் திடுமால்." எ - ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (எக)

எரிந்தெழு பசிநோய் தணிக்கவோர் மருந்தென் றேற்றுண தொருவனுச் சுவைவேட், டருந்திடு மளவும் வருந்தியப் பிண்ட மளித்தவர் தம்மைநோ வதுவென், னிருந்துள கிரக வாழ்க்கையும் பினைவந் தெய்திய துறவுமல் லதுவீண், டிரிந்துடல் வளர்த்தி யெனத்தனை விடுத்த தெய்வத்தை நோவது மறந்தே. (80)

ப - ரை. எரிந்து - (வயிற்றின்கண்) எரிந்து, எழு - எழுகின்ற, பசி - பசி, நோய் - வியாதியை, தணிக்க - மாற்றுதற்கு, ஓர் - (ஈது) ஓர், மருந்து - மருந்து, என்று - என்று, ஏற்று - (ஏதாயினும் வந்த பிச்சையை) வாங்கி, உணது - உண்ணுது, ஒருவன் - ஒருவன், நா - நா, சுவை - சுவையை, வேட்டு - விரும்பி (க் காடி கூழ் முதலிய பிச்சை வந்த விடத்து அதனை), அருந்திடும் - புசிக்கும், அளவும் - அளவும், வருந்தி - (உள்ளம்) வருந்தி, அ - அந்த, பிண்டம் - பிச்சை, அளித்தவர் தம்மை - கொடுத்தோரை, நோவது - நோவது, என் - என்னையோ, இருந்து - (தான் முன்) இருந்து, உள - உள்ள, கிரக - இல், வாழ்க்கையும் - வாழ்க்கையும்.

பினே - (அல்லாது அதனை விட்டு) பின்னர், வந்து - வந்து, எய்திய - அடைந்த, துறவும் - துறவும், அல்லது - அல்லாது, வீண் - (பதிதனாய்) வீணே, திரிந்து - திரிந்து, உடல் - உடம்பை, வளர்த்தி - வளர்ப்பாய், என - என்று, தனை - தன்னை, விடுத்த - விட்ட, தெய்வத்தை - ஊழ்வினையை, நோவது - நோதல், மறந்து - மறந்து, எ - று.

பொ - ரை. எ - து. வயிற்றின்கண் எரிந்து எழுகின்ற பசி வியாதியை மாற்றுதற்கு ஈதோர் மருந்தென்று ஏதாயினும் வந்த பிச்சையை வாங்கி உண்ணாது, ஒருவன் நாச் சுவையை விரும்பிக் காடி கூழ் முதலிய பிச்சை வந்த விடத்து, அதனைப் புசிக்கு மளவும் உள்ளம் வருந்தி, அந்தப் பிச்சை கொடுத்தோரை நோவது என்னையோ? தான் முன் னிருந் துள்ள இல் வாழ்க்கையு மல்லாது, அதனை விட்டுப் பின்னர் வந்து அடைந்த துறவு மல்லாது, பதிதனாய் வீணே திரிந்து உடம்பை வளர்ப்பா யென்று தன்னை விட்ட ஊழ் வினையை நோதல் மறந்து, எ - று.

ஒருவரைப் பின் சென்று வேட் டுண்ணாது பிச்சை யேற் றுண்ணினும், காடி கூழ் முதலிய பிச்சைகளை அருந்தும் போது, உள்ளத்தில் வெறுப்பு வைத்து அருந்தலும், தவத்தினர்க்குக் குற்ற மென்பது காண்க. (அ०)

எய்தவ னுறமற் றேனையென் ஞேவ தெனவுல
குரைத்தலி ஞெருதாஞ், செய்துள வினைக்குத் தக்கபே
றிறைவன் சேர்க்குத றனைமறந் தென்ஞே, வுய்தவ
மறியாக் கைதவ ரைய முதவிடார் தமையுத வினரை,
வைதல்வாழ்த் திடுதல் செய்துமற் றெருசாண் வயிறுநா
டொறும்வளர்ப் பதுவே. (81)

ப - ரை. எய்தவன் - எய்தவன், உற - இருக்க, ஏவை - அம்பை, நோவது - நோவது, என் - என்னை, என - என்று, உலகு - உலகத்தார், உரைத்தலின் - (வழக்கமாக எடுத்துச்) சொல்லுதலின், ஒரு - ஒப்பற்ற, தாம் - தாம், செய்து - செய்து, உள - உள்ள, வினைக்கு - நல்வினை தீவினைகளுக்கு, தக்க - தக்க, பேறு - சுக துக்கங்களை இறைவன் - கடவுள், சேர்க்குதல் தனை - கூட்டுகிற முறைமையினை, மறந்து - மறந்து, என்னோ - என்னையோ, உய் - (வீட்டினை அடைந்து) பிழைக்கும், தவம் - தவத்தினை (ப் பண்ண), அறியா - அறியாத, கைதவர் - வஞ்சகர், ஐயம் - பிச்சை, உதவிடார் தமை - கொடாதவரையும், உதவினரை - (அது) கொடுத்தவரையும், வைதல் - வைதல் (செய்தும்), வாழ்த்திடுதல் - வாழ்த்துதல், செய்து - செய்தும், ஒரு - (தமது) ஒரு, சாண் - சாண், வயிறு - வயிறு, நாள் தொறும் - நாடோறும், வளர்ப்பது - வளர்ப்பது, எ - று. மற்று அசை.

பொ - ரை. எ - து. எய்தவன் இருக்க அம்பை நோவது என்னை? யென்று உலகத்தார் வழக்க மாக எடுத்துச் சொல்லுதலின், ஒப்பற்ற தாம் செய் துள்ள நல் வினை தீ வினைகளுக்குத் தக்க சுக துக்கங்களைக் கடவுள் கூட்டுகிற முறைமையினை மறந்து, என்னையோ? வீட்டினை அடைந்து பிழைக்குந் தவத்தினைப் பண்ண அறியாத வஞ்சகர், பிச்சை கொடாதவரையும், அது கொடுத்தவரையும், வைதல் செய்தும், வாழ்த்துதல் செய்தும், தமது ஒரு சாண் வயிறு நாடோறும் வளர்ப்பது, எ - று.

சிவச் செயலை மறந்து, சீவச் செயலை நாடினராகலின், 'உய்தவ மறியாக் கைதவ' ரென்றும், அங்ஙனம் நாடிப் பிச்சையுதவிடாரையும், உதவினோரையும், வைதலும், வாழ்த்துதலும், தவத்தோர்க்கு இழிவாகலின், 'சாண் வயிறு நாடோறும் வளர்ப்பதுவே' என்றும் கூறினர். (௪௧).

தன்னரு குறுசேய் சிரத்தொரங் குலியாற் ருன்
புடைத் தொருவன்மீ தொருவன், சொன்னமாத் திரத்தி
னவனையச் சேயுந் துணிவுகொ டெழுந்தறை குதல்போன்,
முன்னவன் விளையாட் டாயவைந் தொழிற்கு முன்னிலை
யாயசீ வரைப்பார்த், தின்னல்செய் சாப மிட்டுமா தவரு
மென்கொலோ தவமிழப் பதுவே. (82)

ப - ரை. ஒருவன் - ஒருவன், தன் - தனது, அருகு - அருகே, உறு - இருக்கின்ற, சேய் - சிறு பிள்ளையினது, சிரத்து - சிரத்தில், தான் - தான், ஓர் - ஒரு, அங்குலியால் - விரலால், புடைத்து - தெறித்து, ஒருவன் - (பிறன்) ஒருவனை (க் காட்டி), மீது - (அவன்) மீதே, சொன்ன மாத்திரத்தின் - சொன்ன மாத்திரத்தில், துணிவு - (அதனை அறியாமையினால்) மெய் (என்று), கொடு - (கருதிக்) கொண்டு, அவனை - அவனை, அ - அந்த, சேயும் - சிறு பிள்ளையும், எழுந்து - எழுந்து இருந்து, அறைகுதல் - அறைகுதல், போல் - போல், முன்னவன் - கடவுளது, விளையாட்டு - திரு விளையாட்டு, ஆய - ஆகிய, ஐ - பஞ்ச, தொழிற்கு - கிருத்தியத்தில், முன்னிலை - (சீவர்கள்) முன்னிலை, ஆய - ஆக (த் தான் செய்த திவினைகளுக்கு ஈடாகத் துன்பஞ் செய்தலை மறந்து), சீவரை - (சீவர்கள் தஞ் செயலாகச் செய்தா ரென்று கருதி) அவரை, பார்த்து - நோக்கி, இன்னல் - துன்பம், செய் - செய்யாநின்ற, சாபம் - சாபம், இட்டு - இட்டு, மாதவரும் - மாதவத்தினை யுடைய முனிவோரும், என் கொலோ - என்ன அறியாமையோ, தவம் - (தாம் அருமை யாகச் செய்த) தவங்களை, இழப்பது - இழந்து போவது, எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. ஒருவன் தனது அருகே யிருக்கின்ற சிறு பிள்ளையினது சிரத்தில், தான் ஒரு விரலால் தெறித்துப் பிற னொருவனைக் காட்டி, அவன் மீதே சொன்ன மாத்திரத்தில், அதனை

அறியாமையினால் மெய் யென்று கருதிக் கொண்டு, அவனை அந்தச் சிறு பிள்ளையும், எழுந் திருந்து அறைகுதல் போல், கடவுளது திரு விளையாட் டாகிய பஞ்ச கிருத்தியத்தில், சிலர்கண் முன்னிலை யாகத் தாஞ் செய்த தீ வினைகளுக்கு ஈடாகத் துன்பஞ் செய்தலை மறந்து, சிவர்கள் தஞ் செயலாகச் செய்தா ரென்று கருதி, அவரை நோக்கித் துன்பஞ் செய்யாநின்ற சாப மிட்டு, மாதவத்தினை யுடைய முநிவோரும் என்ன அறியாமையோ? தாம் அருமை யாகச் செய்த தவங்களை இழந்து போவது, எ - று.

மாதவரு மென்ற சிறப் பும்மையால், சிவச் செயலை நோக்காது, சிவச் செயலை நோக்குதல் யாவர்க்கும் அரி தென்பதும், சிவச் செயலை நோக்குவார்க்கு இம்மையில் தவ மிழவாமையின், மறுமை யிற் பிறவித் துன்பம் இன் றென்பதும் காண்க.

'சாபமிட்டு மாதவரு மென்கொலோ தவ மிழப்பது' என்ற தற்கு உதாரணம்: அஞ்ஞ வதைப் பரணி. (61) "கோப மிக்க போ தேவ ராறுவார்—குறுகு வோர்தமைக் கொடிய நோய்புகுஞ், சாப மிட்டுமா தவர்க ளாயினர் – தலைமை மிக்கதந் தவமி ழப்பரே." எ - ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (அஉ)

பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்னைப் பிறர் வழக் கினிற்கொடு போகக், கண்ணைவிட் டகலா தவள் வரல் போலுங் கண்டுகொண் டேகியாங் கஃதெவ், வண்ணமா யினுஞ்சிக் கிரத்தினின் முடித்தவ் வநிதைபான் மறிதரன் மானப், பண்ணிய சமாதி விடுத்தறி ஞருந்தம் பசிதணித் ததையுறும் பரிசே. (83)

ப - ரை. பெண்ணை - (அழகினால் மிகுந்துள்ள ஒரு) பெண்ணை, விட்டு - (கணப்போ தாயினும்) விட்டு, அகலா - நீங்காத, ஒரு - ஒரு, விடன் தன்னை - காமியை, பிறர் -

(அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டிய) பிறர், வழக்கினில - (வந்து) வழக்கினிடை, கொடு - (அழைத்துக்) கொண்டு, போக - செல்ல, கண்ணை - (அவள் தனது) கண்ணை, விட்டு - விட்டு, அகலாது - நீங்காது, அவள் - அந்தப் பெண், வரல் - வருதல், போலும் - போலும், கண்டு - பார்த்து, கொண்டு - கொண்டு, ஏகி - சென்று, ஆங்கு - அவ்விடத்து, அஃது - அந்த வழக்கினை, எவ் வண்ணம் - எப்படி, ஆயினும் - ஆயினும், சீக்கிரத்தினின் - சீக்கிரத்தில், முடித்து - தீர்த்து (க் கொண்டு), அ - அந்த, வனிதையில் - பெண்ணினிடத்தில், மறிதரல் - மீண்டும் (வந்து கூடி யிருத்தல்), மான - போல், அறிஞரும் - அறிஞரும், பண்ணிய - (கணமாயினும் இடை விடாது தாம்) பண்ணிய, சமாதி - (ஞான) சமாதியை, விடுத்து - (விட்டு) நீங்கி (க் காடி கூழேதாயினும் சீக்கிரத்தில் வாங்கிப் புசித்து), தம் - தமது, பசி - பசியை, தணித்து - மாற்றிக் கொண்டு (மீண்டும் வந்து), அதை - அந்த ஞான சமாதியை, உறும் - கூடும், பரிசு - முறைமை, எ - று. ஏ - அசை நிலை.

பொ - ரை. எ - து. அழகினால் மிகுந் துள்ள ஒரு பெண்ணைக் கணப்போ தாயினும் விட்டு நீங்காத ஒரு காமியை, அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டிய பிறர் வந்து, வழக்கினிடை அழைத்துக் கொண்டு செல்ல, அவன் தனது கண்ணை விட்டு நீங்காது, அந்தப் பெண் வருதல் போலும் பார்த்துக் கொண்டு சென்று, அவ் விடத்து அந்த வழக்கினை எப்படி யாயினும் சீக்கிரத் தில் தீர்த்துக் கொண்டு, அந்தப் பெண்ணினிடத்தில் மீண்டும் வந்து கூடி யிருத்தல் போல், அறிஞரும் கண மாயினும் இடை விடாது தாம் பண்ணிய ஞான சமாதியை விட்டு நீங்கிக், காடி கூழேதாயினும் சீக்கிரத்தில் வாங்கிப் புசித்துத் தமது பசியை மாற்றிக் கொண்டு, மீண்டும் வந்து அந்த ஞான சமாதியைக் கூடு முறைமை, எ - று.

அறிஞர் மிகவும் விரும்பி ஒரு கண மாயினும் விட்டு நீங்காது ஞாந சமாதியைக் கூடியிருத்தலின், 'பெண்ணை விட்டகலா வொருவிடன்' என்றும், பசியினுற் பிச்சையைக் குறித்துப் பிராரத்த வசத்தனுய்ச் செல்லுகின்ற போது மநத்தின்கண் அந் நிஷ்டை நீங்காது செல்லுதலின், 'கண்ணை விட் டகலா தவள் வரல் போலுங் கண்டு கொண் டேகி' என்றும், நாச் சுவை விரும்பாது காடி கூழேதாயினும் வந்ததைச் சீக்கிரத்தில் வாங்கி உண்டு பசியை மாற்றி மீண்டும் வந்து சமாதியைக் கூடி யிருத்தலின், 'ஆங்கஃ தெவ் வண்ண மாயினுஞ் சீக்கிரத்தினின் முடித் தவ் வநிதைபான் மறிதரன் மான' என்றும், உவமை கூறினர். (அங)

நடந்துறங் கொருவன் றனைமல ரமளி நண்ணுமா புரியின்மற் றவனுங், கிடந்துறங் குவதைக் குறித்துமுன் னுறக்கம் விழித்தவா கிளக்குதல் போலுந், தொடர்ந் தொரு கணமு மிடைவிடா ஞாந நிட்டரைத் தூயதஞ் சமாதி, யடைந்தனர் விடுத்தா ரென்பரே காந்த மவர்க்கநு கூலமா தலினே. (84)

ப - ரை. நடந்து - நடந்து (செல் போது), உறங்கு - நித்திரை பண்ணும், ஒருவன் தனை - ஒருவனை, மலர் - புட்ப, அமளி - சயநத்திலே, நண்ணுமா (று) - இருக்கும்படி, புரியில் - செய்யில், மற்றவனும் - மற்றவனும், கிடந்து - (பின்பு) படுத்துக் கொண்டு, உறங்குவதை - நித்திரை பண்ணுவதை, குறித்து - பார்த்து, முன் - முன்பு, உறக்கம் - (நடந்த போது பண்ணிய) நித்திரையை, விழித்த ஆ (று) - விழித்துச் சென்ற வாறுக, கிளக்குதல் - சொல்லுதல், போலும் - போலும், தொடர்ந்து - (மநத்தால்) தொடர்ந்து (பற்றி), ஒரு - ஒரு, கணமும் - கணமாயினும், இடைவிடா - இடைவிடாத, ஞாந - ஞாந, நிட்டரை -

நிஷ்டாபரரை, தூய - நின்மல மாகிய, தம் - தமது, சமாதி - சமாதியை, அடைந்தனர் - அடைந்தனர் (என்றும்), விடுத்தார் - விடுத்தனர் (என்றும்), என்பர் - சொல்லுவர், ஏகாந்தம் - ஏகாந்தம், அவர்க்கு - அவர்களுக்கு, அநுகூலம் - அநுகூலம், ஆதலின் - ஆகலின், எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. நடந்து செல் போது நித்திரை பண்ணும் ஒருவனைப் புட்ப சயநத்திலே இருக்கும்படி செய்யில், மற்றவனும் பின்பு படுத்துக் கொண்டு நித்திரை பண்ணுவதைப் பார்த்து, முன்பு நடந்த போது பண்ணிய நித்திரையை விழித்துச் சென்ற வாறாகச் சொல்லுதல் போலும், மநத்தால் தொடர்ந்து பற்றி ஒரு கண மாயினும் இடைவிடாத ஞாந நிஷ்டாபரரை, நின்மல மாகிய தமது சமாதியை அடைந்தன ரென்றும், விடுத்தன ரென்றும், சொல்லுவர் ஏகாந்தம் அவர்களுக்கு அநுகூல மாகலின், எ - று.

நடந் துறங்குவோனுக்கு மல ரமளி அவ் வுறக்கத்தில் அநுகூல மாவது போல், நிற்றல் நடத்தல் ஓடல் முதலிய காலத்தும் இடைவிடாத ஞாந நிஷ்டருக்கு, இருந்து நிஷ்டை கூடல் அநுகூல மென்பதும், நடந் துறங்குவோனுக்கு இடையிலே ஓ ரோர் நினைவு தோன்றுதல் போல், நிற்றல் நடத்தல் முதலிய காலத்தும் ஞாந நிஷ்டை விடாதோர்க்கு இடை யிடையே ஓ ரசைவு மநத்தின்கண் தோன் றுமென்பதும் காண்க.

'தொடர்ந்தொரு கணமு மிடைவிடா ஞாந நிட்டர்' என்றதற்கு உதாரணம்: திரு மந்திரம். (62) "நிற்றலி ருத்தல்கிடத்தன டையோடல், பெற்றவக் காலுந்தி ருவருள்பே ராமற், சற்றியன் ஞாநந்தந் தானந்தந் தங்கவே, யுற்றபி றப்பற்றொ ளிர்ஞாந நிட்டையே." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றூற் காண்க.

(அசு)

நித்திரை தடைமீ றிடிற்கைகால் போர்த்து நிசி
யிடைப் பூவணை துயில்வா, ரொத்துரு விடையிற் கிடை
யுமப் பயிக்க வூணுமெங் ஙனமித மென்னி, லித்தரை
யோர்நித் திரைமிகிற் பாயு மெரிகொடும் பசிமிகிற் கறியுஞ்,
சித்தமே வேண்டா வென்றசொல் லன்றோ தெரியுமோ
வவர்க்கவை மிகலான். (85)

ப - ரை. நித்திரை - (ஞாந சமாதியி லிருக்கு மிடத்து) நித்திரை (வந்து அடுக்கும் போது அதனை விவேகத்தால் தடுக்கு மிடத்து நில்லாது), தடை - தடை, மீறிடில் - மீறி வருமாயின், நிசியிடை - இராக் காலத்திலே, கை - கையும், கால் - காலும் (ஆகிய போர்வையை), போர்த்து - போர்த்து(க் கொண்டு), பூ - பூமி (ஆகிய), அணை - (பஞ்சு) அணையில், துயில்வார் - நித்திரை பண்ணுவார்கள், ஒத்துரு - ஒவ்வாத, இடையில் - பூமிக்கண்ணே, கிடையும் - சயநமும், அ - அந்த, பயிக்க - பிச்சை, ஊணும் - ஊணும், எங்ஙனம் - (அவருக்கு) எப்படி, இதம் - இத மாய், என்னில் - (இருக்கும்) என்னில், இத் தரையோர் - இவ் வுலகத்தார், நித்திரை - நித்திரை, மிகில் - மிகுந்தால், பாயும் - பாயும் (வேண்டா வென்றும்), எரி - எரியாநின்ற, கொடும் - கொடிய, பசி - பசி, மிகில் - மிகுந்தால், கறியும் - கறியும், வேண்டா - வேண்டா, என்ற - என்றும், சொல் - (சொன்ன) சொல், சித்தமே - உண்மையே, அன்றோ - அல்லவோ, அவர்க்கு - அவர்களுக்கு, அவை - அந்த நித்திரையும் பசியும், மிகலான் - மிகுதலால், தெரியுமோ - (இதம் அன்று என்று) தெரியுமோ (தெரியாது), எ - று.

பொ - ரை. எ - து. ஞாந சமாதியி லிருக்கு மிடத்து, நித்திரை வந்து அடுக்கும் போது, அதனை விவேகத்தால் தடுக்கு மிடத்து நில்லாது, தடை மீறி வரு மாயின், இராக் காலத்திலே

கையும், காலும், ஆகிய போர்வையைப் போர்த்துக் கொண்டு பூமி யாகிய பஞ்சணையில் நித்திரை பண்ணுவார்கள். ஒவ்வாத பூமிக் கண்ணே சயநமும், அந்தப் பிச்சை யூணும், அவருக்கு எப்படி இதமா யிருக்கு மென்னில், இவ் வுலகத்தார் நித்திரை மிகுந்தாற் பாயும் வேண்டா வென்றும், எரியாநின்ற கொடிய பசி மிகுந்தால் கறியும் வேண்டா வென்றும், சொன்ன சொல் உண்மையே யல்லவோ? அவர்களுக்கு அந்த நித்திரையும், பசியு மிகுதலால், இத மன் றென்று தெரியுமோ தெரியாது, எ - று.

மிகுந்த நித்திரை வந்த விடத்து நித்திரை பண்ண வேண்டு மென்பதும், மிகுந்த பசி வந்த விடத்துப் புசிக்க வேண்டு மென்பதும், பகற் காலம் நித்திரை பண்ண லாகா தென்பதும் காண்க.

இதற் குதாரணம்:— மெய்ஞ் ஞாந விளக்கம். (63) "உறங் கிடிற் பிணமே யென்ன வுணர்வுமாய் தலிறைற் றுன்பம், பிறங்குமக் கநவாற் றோன்றும் பீருவான் மிகவுந் துன்ப, மறங்கண்மற் றோர்ச்சி முன்னு மனைத்துமாய்ந் திருளே மூடு, முறங்கலிற் கொடிய துன்ப மோர்ந்திடி னில்லை யன்றே." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அ௫)

தென்பர வையினுட் கழிவட பரவை சேர்நுகத் துளையினிற் செலல்போ, லொன்பதிற் றொன்ப தோடுமூ விலக்க முளவியோ நியும்பிழைத் தேறிப், பின்பிறப் பிது பெற் றதனினும் பாதி பிறப்புறு நாளதாக் குநரி, னின்பமீ தெனமிக் குறங்கலர் பிறவிக் கறவெரீஇ யுளந்துளங் கிடுவோர். (86)

ப - ரை. தென் - (யுகாந்த காலம் வந்து ஏழ் கடலும் ஒன்ருகித்) தென், பரவையின் - கடல், உள் - உள், கழி - (கிடக்கின்ற) கழி, வட - வட, பரவை - கடல் (உள்), சேர் - கிடக்கின்ற, நுகத் துளேயினில் - நுகத் துளேயின் (வழியே தெய்வ கதியாகச்), செலல் - செல்வது. போல் - போல், ஒன்பதிற்று ஒன்பதோடு மூ இலக்கம் - எண் பத்து நான்கு நூ ருயிரம், உள - (பேத மாய்) உள்ள, யோநியும் - கருப்பங்க டோறும் (அள விறந்த காலம் பிறந்து பிறந்து சுழன்று அவை யெல்லாம்), பிழைத்து - தப்பி, ஏறி - கடந்து, பின் - பின்பு, இது - இந்த, பிறப்பு - மாநுடப் பிறவியை, பெற்று - (அரி தாகப்) பெற்று, அதனினும் - இப் பிறப்பு அடைந்த நாள்க ளுள்ளும், பாதி - பாதி (நாள்), பிறப்பு - பிறப்பு, உரு - அடையாத, நாளது - நா ளாக, ஆக்கு நரின் - (நித்திரை பண்ணிப்) போக்குவார் போல், ஈது - இந்த நித்திரையை, இன்பம் - இன்பம், என - என்று (கருதி), மிக்கு - மிகுந்த, உறங்கலர் - நித்திரை பண்ணுர்கள், பிறவிக்கு - பிறவித் துன்பத்திற்கு, அற - மிகவும், வெரீஇ - பயந்து, உளம் - உள்ள, துளங்கிடுவோர் - நடுக்குறுவோர், எ - று.

பொ - ரை. எ - து. யுகாந்த காலம் வந்து ஏழ் கடலும் ஒன் ருகித் தென் கடலுட் கிடக்கின்ற கழி வட கடலுட் கிடக்கின்ற நுகத் துளேயின் வழியே தெய்வ கதியாகச் செல்வது போல், எண் பத்து நான்கு நூ ருயிரம் பேதமா யுள்ள கருப்பங்க டோறும் அள விறந்த காலம் பிறந்து பிறந்து சுழன்று, அவை யெல்லாம் தப்பிக் கடந்து, பின்பு இந்த மாநுடப் பிறவியை அரி தாகப் பெற்று, இப் பிறப்பு அடைந்த நாள்க ளுள்ளும் பாதி நாள் பிறப் படையாத நா ளாக நித்திரை பண்ணிப் போக்குவார் போல், இந்த நித்திரையை இன்ப மென்று கருதி மிகுந்த நித்திரை பண்ணுர்கள், பிறவித் துன்பத்திற்கு மிகவும் பயந்து உள்ள நடுக்குறுவோர், எ - று.

பெறுதற் கரிய மாநுடப் பிறவி பெற்றும், ஞாந சமாதி கூடுதல் மிகவுந் துர்லப மாகலின், இப் பிறப்பு அடைந்த நாள்களைச் சமாதி கூடிக் கழித்தலே யன்றி, வீ ணுள்க ளாகக் கழிக்க லாகா தென்பது காண்க. (அசு)

அறவுநித் திரையைத் துறந்திடி னுடற்க ணடை
தரும் பிணிகண்மற் றதனுற், குறைதலு மிகலு மின்றி
யோர் சமமாக் கொண்டுகண் டுயின்றுபின் விழிக்கி,
லுறுசுகா தநத்தி லெழுதசித் திரமொத் துறைகுவ
ரிறைதலை கழுத்தூன், செறியுடல் வாங்கா தோங்கநே
ரவர்பாற் சேருமோ காமநோய் சிறிதும். (87)

ப - ரை. அறவு - மிகவும், நித்திரையை - நித்திரையை, துறந்திடின் - துறந்தால், உடற்கண் - தேகத்தின்கண், பிணிகள் - வியாதிகள், அடைதரும் - வந்து பொருந்தும், அதனுல் - அதனுல், குறைதலும் - குறைதலும் (இன்றி), மிகலும் - மிகுதலும், இன்றி - இன்றி, ஓர் - ஒரு, சமம் - சமம், ஆ - ஆக, கொண்டு - கொண்டு, கண் துயின்று - நித்திரை பண்ணி, பின் - பின்னர், விழிக்கில் - விழிக்கு மிடத்து, உறு - பொருந்திய, சுகாதநத்தில் - சுகாதநத்திலே, இறை - இறை யளவாயினும், தலை - தலையும், கழுத்து - கழுத்தும், ஊன் - ஊன், செறி - செறிந்த, உடல் - உடலும், வாங்காது - வளையாது, நேர் - நேரே, ஓங்க - ஓங்க, எழுது - எழுதிய, சித்திரம் - சித்திரம், ஒத்து - போல், உறைகுவர் - இருப்பார், அவர்பால் - அவரிடத்து, சேருமோ - வந்து அடையுமோ, காம - காம, நோய் - வியாதி, சிறிதும் - சிறி தாயினும், எ - று. மற்று - அசை.

பொ - ரை. எ - து. மிகவும் நித்திரையைத் துறந்தால் தேகத்தின்கண் வியாதிகள் வந்து பொருந்தும், அதனுற் குறைதலு மின்றி, மிகுதலு மின்றி, ஒரு சம மாகக் கொண்டு நித்திரை

பண்ணிப், பின்னர் விழிக்கு மிடத்துப் பொருந்திய சுகாதநத்திலே, இறை யள வாயினும் தலையும், கழுத்தும், ஊன் செறிந்த வுடலும், வளையாது, நேரே ஒங்க எழுதிய சித்திரம் போல் இருப்பார், அவரிடத்து வந் தடையுமோ காம வியாதி சிறி தாயினும், எ - று.

'சுகாதநம்' என்றது தமக்குக் கைவந்த பத்மாதந முதலிய ஆதநங்களை. இதனுட் கூறிய இலக்கணத்தோடும் ஆதநங் கட்டிச் சமாதியில் இருப்போர்க்குக் காமம் வந் தடையா தென்பது காண்க.

'குறைதலு மிகலு மின்றியோர் சமமாகக் கொண்டுகண் டுயின்று' என்றதற்கு உதாரணம்: பரமார்த்த தரிசநம். (பகவற் கீதை) (64) "எண்டிகழு மியோகத்தை யிப்பரிசே யெப்பொழு துங், கொண்டு பயில் வார்கடைக்கா லென்னையே கூடுவரா, லுண்டியினின் மிகுவாரூண் டுறப்பார்மிக் குறங்கிடுவார், கண் டுயிலை யறத்துறப்பா ரவர்க்கிதுகை வாராதால்." எ - ம், தத்துவ ராயர் அமிர்த சாரம். (65) "செவ்வே யுடலுஞ் சிரமுங் கழுத்து முற, வெவ்வா தநத்தி லிருந்தவர்க்குங் - கைவந்தால், வாத முதனோய் நலியா மதியுடையோ, ராதந மென்ப தது." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (அஎ)

உறக்கமும் பசியு மிகுந்திடிற் காம முற்றிடா தற்ற போழ் துள்ள, மிறக்குமொண் சமாதி யடைதலி னடையா விடையிலு மடுபவத் துயரை, மறக்கலா மையினு லச்சமும் வீட்டை மதித்தலா விச்சையு முடலை, வெறுக்குநிக் கிரகத் தாற்களிப் பறலு மேவலான் மேவிடா ததுவே.(88)

ப - ரை. உறக்கமும் - நித்திரை (மிகுந்த காலத்தும்), பசியும் - பசி, மிகுந்திடில் - மிகுந்த காலத்தும், காமம் - காமம்,

உற்றிடாது - (வந்து) பொருந்ாது, அற்ற - (அந்த நித்திரை பசி) இல்லாத, போழ்து - காலத்தும், ஒண் - ஒள்ளிய, சமாதி - (ஞாந) சமாதி அடைதலின் - கூடுதலின், உள்ளம் - உள்ளம், இறக்கும் - இறந்து போமாகலின், அடையா - (அஃது) அடையாது. [அந் நித்திரை பசி சமாதிகளுக்கு இடை யிடையே காமந் தோன்றுதோ வென்னின்,] இடையிலும் - (அவ்) இடையிலும், அடு - வருத்தா நின்ற, பவ - பிறவி, துயரை - துன்பத்தை, மறக்கலாமையினால் - மறவாமையால், அச்சமும் - பயமும், வீட்டை - வீட் டின்பத்தை (என்றைக்கு அடைவோமோ வென்று அதனை), மதித்தலால் - கருதுதலால், இச்சையும் - ஆசையும், உடலை - (அந்ந பாநாதிகளை ஒறுத்தல் முதலியவற்றால்) உடலை, வெறுக்கு - வெறுக்கு, நிக்கிர கத்தால் - நிக்கிரகத்தால், களிப்பு - (மநச்) செருக்கு, அறலும் - இன்றி யிருத்தலும், மேவலால் - பொருந்துதலால், அது - காம நோய், மேவிடாது - பொருந்தாது, எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. நித்திரை மிகுந்த காலத்தும், பசி மிகுந்த காலத்தும், காமம் வந்து பொருந்தாது. அந்த நித்திரை பசி இல்லாத காலத்தும், ஒள்ளிய ஞாந சமாதி கூடுதலின், உள்ள மிறந்து போமாகலின், அஃது அடையாது. அந்த நித்திரை பசி சமாதிகளுக்கு இடை யிடையே காமந் தோன்றுதோ வென்னின், அவ் விடையிலும் வருத்தாநின்ற பிறவித் துன்பத்தை மறவாமை யால் பயமும், வீட் டின்பத்தை என்றைக்கு அடைவோமோ வென்று அதனைக் கருதுதலால் ஆசையும், அந்ந பாநாதிகளை ஒறுத்தல் முதலியவற்றால் உடலை வெறுக்கு நிக்கிரகத்தால், மநச் செருக் கின்றி யிருத்தலும் பொருந்துதலாற், காம நோய் பொருந் தாது, எ - று.

நித்திரை மிகுந்த விடத்தும், சமாதி கூடு மிடத்தும், மநம் இறத்தலினாலும், பசி மிகுந்த விடத்தும், உடலை நிக்கிரகிக்கு

மிடத்தும், மகக் களிப்பு அறுதலினாலும், பிறவித் துன்பத்தை நினைக்கு மிடத்தும், வீட் டின்பத்தை நினைக்கு மிடத்தும், பயமும், ஆசையும் தோன்றலாலும், காம மேவுதற்கு இட மின்மையால், 'மேவிடா ததுவே' என்றார். இவை இரண்டு பாட்டாலும் காமம் அடையா திருத்தற்கு உபாயங் கூறினர்.

'அநுபவத் துயரை மறக்கலாமையினான்' என்றதற்கு உதாரணம்: காசி காண்டம். (66) "கருவிடை யழுந்துந் துன்பமு நிலத்தின் கண்ணுறிற் கொடியவெந் நோயான், மருவுவெந் துயரு நரைதிரை யெய்தி வருந்திடுந் துன்பமுங் கூற்றா, லுருவினை யொருவுந் துன்பமு மீட்டுங் கருக்குழி யொன்றுறு துயரும், வெருவர வெண்ணி யின்பவீ டதனை மேவநன் குணர்தலே வேண்டும்." எ-ம், சிவ தருமோத்தரம். (67) "பொற்கடத் தின் மலம்பொருந்திற் புல்லியரும் பொருணசையா, லக்கடத்தைப் பற்றியிடா ரங்கையினா லவனிதனின், மக்கடம துடலினைத்தா மலபாண்ட மெனவறிந்து, மெக்கணக்கா லிகழாதே யருவருப்பற் றிருக்கின்றார்." எ-ம், வரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (அஅ)

எங்குள புனன்மற் றிதுகழீஇ யிடுதற் கென்றுகா லிடைப்படு மசுத்தக், கங்குடல் குலையு மொருமகன் மலம்புக் காடவு நாடுமே யதுபோற், பொங்குபுன் மல வூன் பொதியிதென் றொழிப்ப லெனவரு வருத்துடல் பொறுக்குந், துங்கமா தவற்கு மெங்ஙன மடவார்த் தோயவு நேயமுட் டோன்றும். (89)

ப-ரை. எங்கு - எவ் விடத்து, உள - உள்ளது, புனல் - நீர், இது - இதனை, கழீஇ யிடுதற்கு - கழுவுதற்கு, என்று - என்று, காலிடை - காலினிடத்து, படும் - பட்ட, அசுத்தக்கு - அசுத்தத் திற்கு, அங்கு - (அவ் வசுத்தம்பட்ட) அவ் விடத்திலே தானே,

உடல் - (மநம் பொருது) உடல், குலேயும் - நடுக்குறும், ஒரு. - ஒரு, மகன் - (சுத்த) புருஷ ஞனவன், மலம் - மலங்களே, நிறைந் துள்ள தடாகம், புக்கு - புகுந்து, ஆடவும் - மூழ்கவும், நாடுமே - நினைப்பனே, அது போல் - அவன் போல், பொங்கு - (உள்ளே) நிறைந்த, புல் - புல்லிய, மல - மலங்கள் (புறத்திலே நவத் துவாரங்களிலும் கசிந்து ஒழுகாநின்ற), ஊன் - மாமிச, பொதி - சுமை (ஆகிய), இது - இதனே, என்று - என்றைக்கு, ஒழிப்பல் - நீக்குவேன், என - என்று, அருவருத்து - (உள்ளத்தில்) அருவருப்புடனே, உடல் - உடலே, பொறுக்கும் - தாங்காநின்ற, துங்க - உயர்ச்சி பொருந்திய, மாதவற்கும் - மாதவத்தினே யுடையவனுக்கும், எங்ஙனம் - எப்படி, மடவார் - மடவாரை, தோயவும் - கூடவும், நேயம் - அன்பு, உள் - மநத்தின்கண், தோன்றும் - தோன்றும், எ - று. மற்று - அசை.

பொ - ரை. எ - து. எவ்விடத்தில் உள்ளது நீர் இதனேக் கழுவுதற் கென்று, காலி னிடத்துப் பட்ட அசுத்தத்திற்கு, அவ் வசுத்தம்பட்ட அவ் விடத்திலே தானே, மநம் பொருது உடல் நடுக்குறும் ஒரு சுத்த புருஷ ஞனவன், மலங்களே நிறைந் துள்ள தடாகம் புகுந்து மூழ்கவும் நினைப்பனே, அவன் போல், உள்ளே நிறைந்த புல்லிய மலங்கள், புறத்திலே நவத் துவாரங்களிலும் கசிந் தொழுகாநின்ற மாமிசச் சுமை யாகிய இதனே, என்றைக்கு நீக்குவே னென்று உள்ளத்தில் அரு வருப் புடனே, உடலேத் தாங்காநின்ற உயர்ச்சி பொருந்திய மாதவத்தினே யுடையவனுக்கும், எப்படி மடவாரைக் கூடவும் அன்பு மநத்தின்கண் தோன்றும், எ - று.

காலிற் படும் அசுத்தத்திற்கு உடல் குலேந்து நீர் தேடும் ஒரு மகன், மல தடாகத்தில் மூழ்க நினேயாமை போல், உடலே மலப் பொதி யென்று அறிந்து, இதனே என்றைக்கு நீக்கிக் கொள்வே

னென்று, மநத்தில் அரு வருப் புற்று, இதனை நீக்குதற்கு ஏது வாகிய வீட்டினைக் கருது மாதவன், அசுத்தமீ தசுத்த மாய் வரு மாதர் கூட்டுறவினை நினையா னென்பது காண்க. (அசு)

அருந்தவம் புரிவோ ரெதிருரு வசிதா ளுதிய மாதர் வந் துள்ளம், வருந்திநின் றியாது புரியினு நோக்கார் மற்றிவ ணுற்றமா தரையும், பொருந்துமோர் வெளின்மீ தேறவிட் டுளநாய் போனனி நோக்குமென் போல்வா, ரிருந்துள விடத்தாங் கவர்வரின் விழியோ டென்படு மோபதைத் திதயம். (90)

ப - ரை. அரும் - அரிய, தவம் - தவத்தினை, புரிவோர் - பண்ணுகின்ற பெரியோர், எதிர் - முன்னர், உருவசி - ஊர்வசி, ஆதிய - முதலிய, மாதர் - (அரம்பை) மாதர், வந்து - வந்து (எங்கள் உபசாரப் பணி விடைகளைக் கைக்கொண் டருளித் தேவரீர் எங்கள் மீது காருணியம் வைக்க வேண்டு மென்று கூறி), உள்ளம் - உள்ளம், வருந்தி - வருந்தி, நின்று - நின்று, யாது - யாது, புரியினும் - செய்தா ராயினும், நோக்கார் - (அவ் வுபசாரப் பணி விடைகளைக் குறித் தாயினும் அவரைப்) பாரார், மற்று - அவர் நீங்கலாகிய, இவண் - இந் நிலத்து, உற்ற - உள்ள, மாதரையும் - மாதரையும், பொருந்தும் - பொருந்தாநின்ற, ஓர் - ஓர், வெளில் - அணிலை, மீது - (மரத்தின்) மீதே, ஏற - ஏற, விட்டு - விட்டு, உள - உள்ள, நாய் - நாய் (அதனைப் பார்த்தலி னாலே தனக்குப் பயன் இன்றாயிருந்தும் பார்த்தல்), போல் - போல், நனி - (அவரைப் பார்த்தலினாலே தமக்குப் பய னின்றா யிருந்தும்) மிகவும், நோக்கும் - பாராநின்ற, என் - என், போல் வார் - போல்வார், இருந்துள - இருந்த, இடத்து - இடத்தில், அவர் - அந்த அரம்பை மாதர், வரின் - வந்தா ராயின், விழியோடு -

கண்ணுடனே, இதயம் - மாமும், பதைத்து - (பதை) பதைத்து, என் - என்ன, படுமோ - (பாடு) படுமோ (யாம் அறியேம்), எ - று. தான் - ஆங்கு - அசை.

பொ - ரை. எ - து. அரிய தவத்தினைப் பண்ணுகின்ற பெரியோர் முன்னர் ஊர்வசி முதலிய அரம்பை மாதர் வந்து எங்களுபசாரப் பணிவிடைகளைக் கைக்கொண் டருளித் தேவரீர் எங்கண் மீது காருணியம் வைக்க வேண்டுமென்று கூறி, உள்ளம் வருந்தி நின்று யாது செய்தா ராயினும், அவ் வுபசாரப் பணிவிடைகளைக் குறித் தாயினும் அவரைப் பாரார்; அவர் நீங்கலாகிய இந் நிலத் துள்ள மாதரையும், பொருந்தாநின்ற ஓ ரணிலை மரத்தின் மீதே ஏற விட் டுள்ள நாய், அதனைப் பார்த்தலினாலே தனக்குப் பயன் இன்றா யிருந்தும் பார்த்தல் போல, அவரைப் பார்த்தலினாலே தனக்குப் பய னின்றா யிருந்தும், மிகவும் பாரா நின்ற என் போல்வார், இருந்த விடத்தில் அந்த அரம்பை மாதர் வந்தா ராயின், கண்ணுடனே மநமும் பதை பதைத்து என்ன பாடு படுமோ யாம் அறியேம், எ - று.

'வெளின்மீ தேற விட்டுள நாய்போ னனி நோக்கும்' என்றார், 'அணி லேற விட்ட நாய் போலேன் பார்க்கின்றாய்' என்பது ஒருலக வழக்கச் சொல் லாகலின். விழி பதைத்தல் - காம விருப்பினாலே பிறழ்ந்து நோக்குதல். (௯௦)

பெற்றதாய் முதலோர்ப் புரையமா தவரையெண்
பெருந்துற வடைந்துளோன் றவமுஞ், சிற்றொரு மினைத்
தன் மனையென விநோதத் திறத்துரைப் பினுமுனங்
கிரகத், துற்றநா டனது மகடனை யவண முறைத்திடா
மையிற்பழு தென்னுற், பொற்றொடி யவர்தோ டழுவவும்
விழைதல் புரியினென் னுங்கொலவ் வறமே. (91)

ப - ரை. பெற்ற - (தன்னைப்) பெற்ற, தாய் - தாய் முதலோர் - முதலானோரை, புரைய - போல, மாதரை - மாதர்களை (எல்லாம்), எண் - கருதாநின்ற, பெரும் - பெரிய, துறவு - துறவினை, அடைந்துளோன் - அடைந்தவன், தவழும் - தவழ்கின்ற. சிற்று - சிறிய, ஒரு - ஒரு, மினை - பெண்ணினை, தன் - தனது, மனை - மனைவி, என - என்று, விநோத - விநோத, திறத்து - முறைமையால், உரைப்பினும் - சொல்லினும், முனம் - முன்னம், கிரகத்து - இல் வாழ்க்கையில், உற்ற - இருந்த, நாள் - காலத்து, தனது - தனது, மகள் தனை - மகளை, அவணம் - அங்ஙனம், உரைத்திடாமையில் - சொல்லாமையினுல், பழுது - (அங்ஙனம் சொல்வதும்) குற்றமாம், என்றால் - என்றால், பொன் - பொன்னால் (ஆகிய), தொடியவர் - தொடியினை யுடையாரது, தோள் - தோளினை, தழுவவும் - அணையவும், விழைதல் - (மனத்தின்கண்) விரும்புதல், புரியின் - செய்யின், அவ் அறம் - அத் துறவறத்தினை, என் ஆம் - எதனோடு சேர்த்தல் ஆகும், எ - று. 'மகள் தனை' என்பதில் தன் - ஏ - சொல் - அசை.

பொ - ரை. எ - து. தன்னைப் பெற்ற தாய் முதலானோரைப் போல, மாதர்களை யெல்லாம் கருதாநின்ற பெரிய துறவினை அடைந்தவன், தவழ்கின்ற சிறிய வொரு பெண்ணினைத் தனது மனைவி யென்று விநோத முறைமையாற் சொல்லினும், முன்னம் இல் வாழ்க்கையி லிருந்த காலத்துத் தனது மகளை அங்ஙனம் சொல்லாமையினுல், அங்ஙனம் சொல்லுவதும் குற்றமா மென்றால், பொன்னா லாகிய தொடியினை யுடையாரது தோளினை அணையவும், மனத்தின்கண் விரும்புதல் செய்யின், அத் துறவறத்தினை எதனோடு சேர்த்த லாகும், எ - று.

துறவறத்திற்கு மகளிரை விழைதல் மிகவு மாகாமையால், அத் துறவறம் போய தாய் வைத்தும், அதனைப் பிரமசரியம்,

இல் வாழ்க்கை, வாநப் பிரத்த மென்னும் இவைகளோடும் சேர்த்த லாகாமையால், 'என்னுங்கொ லவ் வறமே' என்றூர். (கூக)

சிறந்தகற் புடைய மாதரும் பரத்தை யருமலாத் தெரிவையர் புவிமேற், பிறந்தநாட் பிறந்தான் போலு நெஞ் சகத்தைப் பிரிநடை யுரியனு மொருவ, னிறந்ததன் னிச்சை யெவணமவ் வண்ண மிகத்திலுந் செயப்படா துடலைத், துறந்தகா லையிலு நரகில்வீழ்த் தியம தூதுவர் வருத்தலி னன்றே. (92)

ப - ரை. சிறந்த - (மகளிர் இலக்கண மெல்லாம்) சிறந் துள்ள, கற்பு - கற்பு, உடைய - உடைய, மாதரும் - மாதரும், பரத்தையரும் - வேசை மாதரும், அலா - அல்லாத, தெரிவையர் - வியபிசார மாதர், புவி மேல் - புவியின்கண்ணே, பிறந்த - பிறந்த, நாள் - நாளிலே, பிறந்தான் - பிறந்தவன், போலும் - போலும், நெஞ்சகத்தை - (நெஞ்சகத்திலே வஞ்சகத்தை வைத்துக் கொண்டு தவத்தோர் நடை போல் வாக்குக் காயங்களில்) நெஞ்சகத்தை, பிரி - பிரிந்து, நடை - (பிறர்க்குக் காட்டு) நடைக்கு, உரியன் - உரியன், ஆம் - ஆகிய, ஒருவன் - ஒருவன், தன் - தனது, இறந்த - மிகுந்த, இச்சை - ஆசை, எவணம் - எப்படியோ, அவ் வண்ணம் - அப்படி, இகத்திலும் - இம்மையிலும், செயப்படாது - செய்யக் கூடாதபடியினுலும், உடலை - உடம்பினை, துறந்த - நீங்கிய, காலையிலும் - (மறுமைக்) காலத்திலும், யம - யம, தூதுவர் - தூதுவர், நரகில் - நரகத்தில், வீழ்த்தி - வீழ்த்தி, வருத்தலின் - வருத்தலினுலும், எ - று. அன்று - ஏ - அசை.

பொ - ரை. எ - து. மகளிர் இலக்கண மெல்லாம் சிறந் துள்ள கற் புடைய மாதரும், வேசை மாதரும், அல்லாத வியபிசார மாதர், புவியின்கண்ணே பிறந்த நாளிலே பிறந்தவன் போலும்,

நெஞ்சகத்திலே வஞ்சகத்தை வைத்துக் கொண்டு, தவத் தோர் நடை போல், வாக்குக் காயங்களில், நெஞ்சகத்தைப் பிரிந்து பிறர்க்குக் காட்டு நடைக்கு உரிய ஞகிய ஒருவன், தனது மிகுந்த ஆசை யெப்படியோ, அப்படி இம்மையிலும் செய்யக் கூடாத படியினுலும், உடம்பினை நீங்கிய மறுமைக் காலத்திலும், யம தூதுவர் நரகத்தில் வீழ்த்தி வருத்தலினுலும், எ - று.

கற்புடைய மகளிருக்கு இம்மை மறுமைகளிலும் இன்பம். பரத்தையருக்கு இம்மையில் இன்பம். வியபிசார மாதருக்கு இம்மை மறுமைகளிலுந் துன்பம். அவர் போலச் சுத்த தவத்தி னர்க்கு நிராசை முதலியவற்ருல் இம்மையிலும், தபோ பலத்தால் மறுமையிலும் இன்ப மென்பதும், இல் வாழ்வானுக்கு இம்மையில் இன்ப மென்பதும், கூடா வொழுக்கம் உடையோனுக்கு இம்மை மறுமைகளிலும் துன்ப மென்பதும் காண்க. வியபிசார மாதர் தன்மை போல், நெஞ்சகத்தைப் பிரி நடை யுடையோன் தன்மையு மிருத்தலிற், 'பரத்தையருமலாத் தெரிவையர் புவிமேற் பிறந்த நாட் பிறந்தான் போலும்' என்ருர். 'எங்குள புனன் மற்' றென்பது முதல், இந் நான்கு பாட்டாலும் தவத்தோர்கள மரம் விழிமெய் களினல் மகளிரை நினைக்க லாகா தென்றும், பார்க்க லாகா தென்றும், கூட லாகா தென்றும் கூறிய வாறு காண்க. (கூஉ)

மைப்படு விழியா ரின்பமோர் முள்ளி மலரின்வாய்த்
தேனையொப் பெனக்கண், டொப்பில்பே ரின்பம் வேண்டி
ஞேன் வேண்டி யுலகர்வே றெவைகொடுத் திடினுந்,
துய்ப்பமற் றுடுப்ப விரண்டுமே யன்றித் தொடுவஞே
பிறிதிவற் றினுக்கூர், குப்பைசா ரிடம்புக் கிடுதலி னவற்
றைக் குறித்தொரோ ரிடம்புகா மையினே. (93)

ப - ரை. மை - மை, படு - பொருந்திய, விழியார் கண்ணினை யுடைய மாதரால் (வரும்), இன்பம் - இன்பம், ஓர் - ஒரு, முள்ளி - முள்ளி, மலரின் வாய் - மலரின்கண் (உள்ள), தேனை - தேனுக்கு, ஒப்பு - சமானம், என - என்று, கண்டு - கண்டு (துறந்து), ஒப்பு - ஒப்பு, இல் - அற்ற, பேர் இன்பம் - பேரின்பத்தை, வேண்டினேன் - (அடைய) விரும்பினேன், உலகர் - உலகத்தார், வேண்டி - (தன்னை) வேண்டி (க் கொண்டு), வேறு - வேறே, எவை - எவற்றினை, கொடுத்திடினும் - கொடுத்தாராயினும், துய்ப்ப - உண்பனவும், உடுப்ப - உடுப்பனவும் (ஆகிய), இரண்டுமே - இரண்டுமே, அன்றி - அன்றி, பிறிது - பிறிது (ஒன்றனையும்), தொடுவனோ - (கையினாலும்) தீண்டுவனோ, [ஆனால் இவை யிரண்டையும் வாங்கலாமோ வென்னில்] இவற்றினுக்கு - இவற்றினைக் குறித்து, ஊர் - ஊரினிடத்தும், குப்பை - குப்பை, சார் - சார், இடம் - இடத்தும், புக்கிடுதலின் - செல்லுகையால் (இவை வாங்கிக் கொள்ள லாகும்), அவற்றை - மற்றையவற்றினை, குறித்து - குறித்து, ஒரு ஓர் - ஒரு, இடம் - இடத்திலே, புகாமையின் - செல்லாமையால் (அவற்றினை வாங்கலாகாது), எ - று. ஏ - அசை.

பொ - ரை. எ - து. மை பொருந்திய கண்ணினை யுடைய மாதரால் வரும் இன்பம் ஒரு முள்ளி மலரின்க ணுள்ள தேனுக்குச் சமான மென்று கண்டு துறந்து, ஒப் பற்ற பே ரின்பத்தை அடைய விரும்பினேன், உலகத்தார் தன்னை வேண்டிக் கொண்டு வேறே எவற்றினைக் கொடுத்தா ராயினும், உண்பனவும், உடுப்பனவு மாகிய இரண்டுமே யன்றிப் பிறி தொன்றனையும், கையினாலும் தீண்டுவனோ, ஆனால் இவை யிரண்டையும் வாங்கலாமோ வென்னில், இவற்றினைக் குறித்து ஊரி னிடத்தும், குப்பை சா ரிடத்தும், செல்லுகையால், இவை வாங்கிக் கொள்ள லாகும், மற்றையவற்றினைக் குறித்து, ஒ ரிடத்திலே செல்லாமையால் அவற்றினை வாங்க லாகாது, எ - று.

இல் வாழ்க்கை யின்பத்தை அற்ப மெனத் துறந்து பேரானந் தத்தை அடையத் தொடங்கினேன், தன்னைப் பிறர் வந்து பின் சென்று எவற்றினைக் கொடுப்பினும், உண்பனவும், உடுப்பனவு மன்றிப் பிறி தொன்றனையும் அங்கீகரிக்க லாகா தென்பது கண்டு கொள்க.

'மைப்படு விழியா ரின்பமோர் முள்ளி மலரின்வாய்த் தேனை யொப் பெனக்கண்டு' என்றதற்கு உதாரணம்: ஆநந்த போதம். (68) "கள்ளக் கோலக்க ருங்குழன் மாதர்பான், முள்ளித் தேனை மு ளிர்துயர் முத்தியாம், வெள்ளத் தேனைவி ரும்பும்வி டாயினு, னௌ்ளிற் போதுமி ராதுட னேகினன்." எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கூ)

தனைநனி யிரந்து வருந்திமற் றொருவன் சந்தந மாதிய பூசி, யினமலர் மாலை புனையினு முனியா விழுத்து வை தடித்துதைத் துடலிற், பினைமல மாதி பூசினு மன்னேன் பிரியமப் பிரியமொன் றின்றி, வினைவழி முனைவ னைந்தொழில் புரியும் விதத்தையே நோக்கியுண் மகிழும். (94)

ப - ரை. மற்று - பிறன், ஒருவன் - ஒருவன் (வந்து), தனை - தன்னை, நனி - மிகவும், வருந்தி - வருந்தி, இரந்து - வேண்டி (க் கொண்டு), சந்தநம் - சந்தநம், ஆதிய - முதலிய, பூசி - பூசி, இனம் - நாநா (வாய் உள்ள), மலர் - மலர்களினால் (இயற்றப்பட்ட), மாலை - மாலைகளை, புனையினும் - தரித்தா னாயினும், முனியா - (அவை யன்றிக்) கோபித்து, இழுத்து - இழுத்து, வைது - வைது, அடித்து - அடித்து, உதைத்து - உதைத்து, உடலில் - உடம்பின் கண்ணே, பினை - பின்னர், மலம் - மலம், ஆதி - முதலியவற்றை, பூசினும் - பூசின னாயினும், அன்னேன் - அந்தத் தவத்தினேன்,

பிரியம் - (நன்று செய்தா னென்றும், தீது செய்தா னென்றும் கருதி) விருப்பும், அப்பிரியம் - வெறுப்பும், ஒன்று - சிறி தாயினும், இன்றி - இல்லாமல், வினை - (தனது) நல் வினை தீ வினைகளுக்கு, வழி - ஈடாக, முனைவன் - (அவன் அவள் அது முன்னிலையாகச் சுக துக்கங்களை ஊட்டுதற்கு) இறைவன், புரியும் - செய்யும், ஐ - பஞ்ச, தொழில் - கிருத்தியம் (என்று அறிந்து), விதத்தையே - (அப் பஞ்ச கிருத்தியம் செய்யும்) விதத்தையே, நோக்கி - பார்த்து, உள் - உள்ளே, மகிழும் - மகிழ்ந்து (இருப்பான்), எ - று.

பொ - ரை. எ - து. பிறனொருவன் வந்து தன்னை மிகவும் வருந்தி வேண்டிக் கொண்டு, சந்தன முதலிய பூசி, நாநாவா யுள்ள மலர்களினால் இயற்றப்பட்ட மாலைகளைத் தரித்தா னாயினும், அவை யன்றிக், கோபித்து இழுத்து வைது அடித்து உதைத்து உடம்பின் கண்ணே பின்னர் மல முதலியவற்றைப் பூசினா னாயினும், அந்தத் தவத்தினோன், நன்று செய்தா னென்றும், தீது செய்தா னென்றும் கருதி, விருப்பும் வெறுப்பும் சிறி தாயினும் இல்லாமல், தனது நல் வினை தீ வினைகளுக்கு ஈடாக அவன் அவள் அது முன்னிலை யாகச் சுக துக்கங்களை ஊட்டுதற்கு இறைவன் செய்யும் பஞ்ச கிருத்திய மென்று அறிந்து, அப் பஞ்ச கிருத்தியஞ் செய்யும் விதத்தையே பார்த்து உள்ளே மகிழ்ந்திருப்பான், எ - று.

'ஒருவன் சந்தன மாதிய பூசி யின மலர் மாலை புனையினு முனியா விழுத்துவை தடித் துதைத் துடலிற் பினை மலமாதி பூசினும்' என்றதற்கு உதாரணம்: பெருந்திரட்டு. (69) "வையினும் வாழ்த்தினு மலர்கொ டேத்தினும், வெய்ய வாவிடை வீழ நாக்கினு, மெய்யினு மெறியினு மியாது செய்யினு, நைவொடு மகிழ்வில ஞானி சீலமே." எனவரும். மற்றும் வருவனவற்றாற் காண்க. (கூசு)

தந்தைதாய் பலமா தியகொடுத் திடவுந் தக்கைபுண் செவியினுக் கிடவு, மைந்தவா வெனலுங் குதித்தெழுந் தோடி வருதல்போ குதல்செயு மகவி, னைந்தொழில் புரியு மெந்தையூழ் வழியீந் தருள்சுக மாதிய வருங்காற், சிந்தையுள் விழைந்து முற்செலா ரழிந்து பிற்செலார் மாசறத் தெளிந்தோர். (95)

ப - ரை. தந்தை - தந்தையும், தாய் - தாயும், பலம் - (முப்) பழம், ஆதிய - முதலிய (பழங்களை), கொடுத்திடவும் - கொடுக்கவும், புண் - புண் (பொருந்திய), செவியினுக்கு - செவிக்கு, தக்கை - தக்கை, இடவும் - இடவும், மைந்த - மைந்த, வா - வா, எனலும் - என்று அழைத்தவுடனே, குதித்து - குதித்து, எழுந்து - எழுந்து, ஓடி - ஓடி, வருதல் - வருதலும், போகுதல் - (குதித் தெழுந் தோடிப்) போகுதலும், செயும் - செய்யும், மகவின் - பிள்ளை போல், ஐ - பஞ்ச, தொழில் - கிருத்தி யங்களையும், புரியும் - பண்ணுகின்ற, எந்தை - எமது (தந்தை யாகிய) இறைவன், ஊழ் - ஊழ், வழி - வினைப்படியே, ஈந்து - கொடுத்து, அருள் - அருளிய, சுகம் - சுக, ஆதிய - துக்கங்கள், வருங் கால் - வரு மிடத்து, சிந்தையுள் - (சுகம் என்று) மநத்தின் கண், விழைந்து - விரும்பி, முன் - முன், செலார் - சென்று பற்றார், அழிந்து - (துன்பம் என்று மநத்து ஈடு) அழிந்து, பின் - பின், செலார் - சென்று இடையார், மாசு - (மூக்) குற்றங்களும், அற - அற, தெளிந்தோர் - (வேத ஆகமங்களைத்) தெளிந்த பெரியோர், எ - று.

பொ - ரை. எ - து. தந்தையுந், தாயும் முப் பழ முதலிய பழங்களைக் கொடுக்கவும், புண் பொருந்திய செவிக்குத் தக்கை யிடவும், மைந்த வா வென்று அழைத்த வுடனே, குதித் தெழுந் தோடி வருதலும், குதித் தெழுந் தோடிப் போகுதலும், செய்யும்

பிள்ளை போல், பஞ்ச கிருத்தியங்களையும் பண்ணுநின்ற எமது தந்தை யாகிய இறைவன், ஊழ் வினைப் படியே கொடுத் தருளிய சுக துக்கங்கள் வரு மிடத்துச், சுக மென்று மநத்தின்கண் விரும்பி முன் சென்று பற்றார். துன்ப மென்று மநத் தீ டழிந்து பின் சென் றிடையார், முக் குற்றங்களும் அற வேதாகமங்களைத் தெளிந்த பெரியோர், எ - று.

இவை யிரண்டு பாட்டாலும் தவத்தினர், சீவர்கண் முன்னிலை யாகச் சுக துக்கங்கள் வந்த விடத்து, அச் சீவச் செய லாக நாடாது சிவச் செய லாக நாடி, விருப்பு வெறுப் பின்றிச் சம பாவனையோடு இருக்க வேண்டு மென்று கூறிய வாறு காண்க. (கரு)

இத்தரை யிடைப்பா ழாயவா லயமற் றிருண்மிகு முடுக்கரா திகளிற், சுத்தமெய்த் தவரெப் பொழுதடைந் துறினுந் தோன்றாற தச்சமங் கவர்பா, லத்தனிவ் வுடலைப் புறக்குஞான் றழிப்பா ரிலையவ னேபினு மழிக்கின், வைத்திவண் புரப்பா ரிலையெனுந் துணிவு மநத்தினு ளிருத்தலி னன்றே. (96)

ப - ரை. இ - இந்த, தரையிடை - பூமியின்கண்ணே, பாழ் ஆய - பாழ், ஆலயம் - கோயில், இருள் - இருள், மிகு - மிகுந்த, முடுக்கர் - (மலைக்) கெவி, ஆதிகளில் - முதலிய இடங்களிலே, சுத்த - பரிசுத்த மாகிய, மெய் - சத்திய, தவர் - தவத்தோர், எப் பொழுது, எக் காலத்திலே, அடைந்து - சென்று, உறினும் - இருந்தா ராயினும், அங்கு - அவ் விடத்திலே, அவர்பால் - (பாம்பு முதலியவற்றால் துன்பம் வரும் என்று) அவரது மநத்தின்கண்ணே, அச்சம் - பயம், தோன்றாற - தோன்றாத, அத்தன் - இறைவன், இவ் வுடலை - (தான் படைத்த) இவ் வுடலை, புரக்கும் - காக்கு, ஞான்று - நாளில், அழிப்பார் - அழிப்பார், இலை - (ஒருவரும்) இல்லை,

அவனே - (படைத்துக் காக்கும்) அவனே, பினும் - பின்னரும், அழிக்கின் - அழிக்குமிடத்தில், இவண் - இந் நிலத்தின்கண், வைத்து - வைத்து, புரப்பார் - காப்பார், இலை - (ஒருவரும்) இல்லை, எனும் - என்னும், துணிவு - நிச்சயம், மநத்தினுள் - (அவாது) மநத்தின்கண்ணே, இருத்தலின் - இருத்தலினால், எ - று. மற்று - அன்று - ஏ - அசை.

பொ - ரை. எ - து. இந்தப் பூமியின்கண்ணே பாழ்ங் கோயில் இருண் மிகுந்த மலைக் கெவி முதலிய இடங்களிலே, பரிசுத்த மாகிய சத்திய தவத்தோர், எக் காலத்திலே சென் றிருந்தா ராயினும், அவ் விடத்திலே பாம்பு முதலியவற்றால், துன்பம் வரு மென்று, அவாது மநத்தின்கண்ணே பயம் தோன்றாது. இறைவன் தான் படைத்த இவ் வுடலைக் காக்கு நாளில், அழிப்பார் ஒருவரும் இல்லை; படைத்துக் காக்கும் அவனே பின்னரும் அழிக்கு மிடத்தில், இந் நிலத்தின்கண் வைத்துக் காப்பார் ஒருவரும் இல்லை; என்னும் நிச்சயம் அவாது மநத்தின் கண்ணே இருத்தலினால், எ - று.

இதனுள்ளே, பாழ்ங் கோயில் முதலிய விடங்களிலே, ஏகாந்த மா யிருக்கும் போது, இராக் காலங்களிலும் சிவச் செயலை நாடிப் பயப்படா திருக்க வேண்டு மென்று கூறிய வாறு காண்க. (கசு)

ஊனையோம் புதல்கை விடுத்துனை யுவப்பா ருணர்வ ரென் றுளுடைய நம்பி, தானுரைத் தமையா னுடல் விழைந் திடினத் தத்துவ நிலையுங்கை தவறி, யீநமார் பிறப்புற் றிடுவனெந் தொழிற்கு மிறையதி காரியென் றெண்ணு, ஞாநமொன் றனையே தொடருமோர் புருட னண் ணுவன் பரகதி திண்ணம். (97)

ப - ரை. ஊனை - (ஊன் பொருந்திய) உடம்பினை, ஓம்புதல் - பாது காத்தல், கை விடுத்து - கை விட்டு, உனை - உனது திரு வடியை, உவப்பார் - விரும்புவார், உணர்வர் - (அதனை) அறிவார், என்று - என்று. ஆள் உடை - (என்னை) ஆளாக வுடைய, நம்பி - சுந்தரப் பெருமா ளையனார், உரைத்தமையால் - ஓதினமையால், தான் - தான், உடல் - உடலை, விழைந்திடின் - (பாது காத்தற்கு) விரும்பிடின், அ - அந்த, தத்துவ - பா தத்துவ, நிலையும் - நிலைமையை, கை தவறி - (அறியும் அறிவும் தன்னை விட்டு நீங்கித், தன்னால் உடலைப் பாது காக்கக் கூடாமையால் அவ் வுடலும்) நீங்கி, ஈனம் - (மறுமைக்கண்) இழிவு, ஆர் - பொருந்திய, பிறப்பு - பிறப்பினையும், உற்றிடுவன் - அடைவன் (ஆதலின்), ஐ - பஞ்ச, தொழிற்கும் - கிருத்தியத்துக்கும், இறை - இறைவனே, அதிகாரி - அதிகாரி, என்று - என்று, எண்ணு - அறிந்து (இவ் வுடலை அவ் விறைவன் வசமாக ஒப்பித்து), ஞானம் - ஞானம், ஒன்றனையே - ஒன்றனையுமே, தொடரும் - (விடாது) பற்றும், ஓர் - ஒரு, புருடன் - புருஷன், பரகதி - பரகதியினை, நண்ணுவன் - அடைவான், திண்ணம் - (இது) உண்மை (ஆம்), எ - று.

பொ - ரை. எ - து. ஊன் பொருந்திய உடம்பினைப் பாது காத்தல் கை விட்டு, உனது திரு வடியை விரும்புவார் அதனை அறிவா ரென்று, என்னை ஆளாக வுடைய சுந்தரப் பெருமா ளையனார் ஓதினமையால், தான் உடலைப் பாதுகாத்தற்கு விரும்பிடின், அந்தப் பாத்துவ நிலைமையை அறியும் அறிவும் தன்னை விட்டு நீங்கித், தன்னால் உடலைப் பாது காக்கக் கூடாமையால் அவ் வுடலும் நீங்கி, மறுமைக்கண் இழிவு பொருந்திய பிறப்பினையும் அடைவ னாதலின், பஞ்ச கிருத்தியத்துக்கும் இறைவனே அதிகாரி யென்று அறிந்து, இவ் வுடலை அவ் விறைவன் வச மாக ஒப்பித்து, ஞாந மொன்றனையுமே விடாது பற்றும், ஒரு புருஷன் பரகதியினை அடைவான், இது உண்மை யாம், எ - று.

'ஊனையோம்புதல் கைவிடுத் துனை யுவப்பா ருணர்வர்' என்ற தற்கு உதாரணம்: தேவாரம். (70) "தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய், வானைக் காவல் கொண்டு நின்று ரறியா நெறியானே, யானைக் காவி லரனே பரனே யண்ணு மலையானே, யூனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே." எ - ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (கஎ)

உள்ளதுண் டாமற் றில்லதின் றெனவெண் காடரோ திடுதலி னுறுமூழ், தள்ளொணு மையினெவ் விதத்தினு நுழைந்து தவம்புரி காலையூ னுயிரை, விள்ளல்செய் திடினு ஞானசா தகனுண் மேவுமவ் வாதனை யொடும்போய்த், தெள்ளிய போக முண்டுமீண் டடைவன் சிவமதுற் பவம தொன் றிரண்டில். (98)

ப - ரை. உள்ளது - உள்ளது, உண்டாம் - (ஒளிப்பினும்) உண்டாம், இல்லது - இல்லது, இன்று - (ஒரு காலத்தும்) இல்லை, என - என்று, வெண் காடர் - திரு வெண் காட நாயனுர், ஓதிடு தலின் - ஓதுதலினுலே, உறும் - பொருந்தாநின்ற, ஊழ் - ஊழ் வினையை, தள்ள - (யாவராலும்) தள்ள, ஒணுமையின் - கூடாமை யால், தவம் - (தான்) தவத்தினை, புரி காலை - பண்ணும் காலத் தில் (அந்த ஊழ்வினை), எ - எந்த, விதத்தினும் - விதத்தால் ஆயினும், நுழைந்து - (வந்து) பொருந்தி, ஊன் - (தன்) உடம் பினையும், உயிரை - உயிரினையும், விள்ளல் - வேறுக்குதல், செய் திடினும் - செய்தாலும், ஞான சாதகன் - ஞான சாதக னுனவன், உள் - (தன்) உள்ளத்தின்கண், மேவும் - மேவிய, அ - அந்த, வாதனையொடும்- (சுத்த) வாதனை யுடனே, போய் - (ஊர்த்த லோகங் களிலே) சென்று (இருந்து), தெள்ளிய - சுத்த, போகம் - போகங் களை, உண்டு - அநுபவித்து, மீண்டு - (பின்னர்) மீண்டும் (பூமியின்;

கண் வந்து), ஒன்று - ஒரு, உற்பவமது - சநநம், இரண்டில் - இரண்டு (சநநத்திலே பரிபூரண ஞாநத்தைப் பெற்று), சிவமது - சிவத்தினை, அடைவன் - அடைவான், எ - று. "சிவமது, உற்பவமது, என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி," மற்று - அசை.

பொ - ரை. எ - து. உள்ளது ஒளிப்பினும் உண்டாம், இல்லது ஒரு காலத்தும் இல்லை யென்று, திரு வெண் காட நாயனுர் ஓதுதலினுலே, பொருந்தாநின்ற ஊழ் வினையை யாவ ராலும் தள்ளக் கூடாமையால், தான் தவத்தினைப் பண்ணுங் காலத்தில், அந்த ஊழ் வினை எந்த விதத்தா லாயினும் வந்து பொருந்தித் தன் னுடம்பினையும், உயிரினையும் வேறாக்குதல் செய் தாலும், ஞாந சாதக னுனவன், தன் னுள்ளத்தின்கண் மேவிய அந்தச் சுத்த வாதனை யுடனே ஊர்த்த லோகங்களிலே சென் றிருந்து, சுத்த போகங்களை அநுபவித்துப், பின்னர் மீண்டும் பூமியின்கண் வந்து, ஒரு சநநம், இரண்டு சநநத்திலே, பரிபூரண ஞாநத்தைப் பெற்றுச் சிவத்தினை அடைவான், எ - று. (கூஅ)

அருந்தவ விலக்கிவ் வுடற்பரிப் பதுதா னச்சமா
திகடரு மூலர், திருந்துநஞ் சிந்தை சிவன்கணே யாவர்
வரினுமென் றமையிற்பே திப்பான், பொருந்தினும்
வானோ ரெதிர்முதிர் கொலைவெம் பூதமா தியவளைந்
திடினு, மிருந்ததஞ் சமாதி நிலைகுலை யாதோ ரெண்ணிய
வெண்ணியாங் கடைவர். (99)

ப - ரை. அரும் - அரிது (ஆகிய), தவ - தவத்தினுக்கு, விலக்கு - மாறுபாடு, இவ் - இவ், உடல் - உடம்பினை, தான் - தாம், பரிப்பது - பாது காக்குதல், அச்சம் - (அதனுல்) பயம், ஆதிகள் - (ஆசை அபிமாநம்) முதலியன, தரும் - (மநத்தின்கண்) உண்டாம் (ஆதலில்), யாவர் - (தவத்தினுக்கு இடையூறு செய்

தற்கு) யாவர், வரினும் - வந்தா ராயினும், நம் - நமது, சிந்தை - சிந்தை, சிவன்கணே - சிவனது திரு வடியின்கண்ணே, திருந்தும் - திருந்தாநிற்கும், மூலர் என்றமையில் - என்று திரு மூல நாயனூர் கூறினமையால், பேதிப்பான் - (மநத்திஃனப்) பேதிக்கும் பொருட்டு, எதிர் - (தமது) எதிரே, வானோர் - தேவர்கள், பொருந்தினும் - வந்தா ராயினும், முதிர் - முதிர்ந்த, கொலை - கொலேயினை செய்கின்ற, வெம் - வெவ்விய, பூதம் - பூதங்கள், ஆதிய - முதலியவை, வளைந்திடினும் - வளைந்து கொண்டன வாயினும், தம் - தாம், இருந்த - இருந்த, சமாதி - சமாதி, நிலை - நிலைமை, குலையாதோர் - வழுவா திருந்தோர், எண்ணிய - (தாம்) எண்ணிய (வீட் டின்பத்திஃன), எண்ணி ஆங்கு - எண்ணிய வாறே, அடைவர் - அடைகுவார், எ - று.

பொ - ரை. எ - து. அரி தாகிய தவத்தினுக்கு மாறுபாடு இவ் வுடம்பிஃனத் தாம் பாது காக்குதல், அதனுல் பயம் ஆசை அபிமாநம் முதலியன மநத்தின்கண் உண்டா மாதலின், தவத்தி னுக்கு இடையூறு செய்தற்கு, யாவர் வந்தா ராயினும், நமது சிந்தை சிவனது திரு வடியின்கண்ணே திருந்தாநிற்கு மென்று, திரு மூல நாயனூர் கூறினமையால், மநத்திஃனப் பேதிக்கும் பொருட்டுத் தமது எதிரே தேவர்கள் வந்தா ராயினும், முதிர்ந்த கொலையிஃனச் செய்கின்ற வெவ்விய பூதங்கண் முதலியவை வளைந்து கொண்டன வாயினும், தா மிருந்த சமாதி நிலைமை வழுவா திருந்தோர், தாம் எண்ணிய வீட் டின்பத்திஃன எண்ணிய வாறே அடைகுவார், எ - று.

'இத் தரை' யென்னும் பாட்டு முதல், இந் நான்கு பாட்டாலும், தவத்தினோர்கள் தாம் உடம்பிஃனப் பாது காத்தல் கை விட்டு, இவ் வுடம்பிஃனப் படைத்த இறைவனே, காத்தலும், அழித்தலும், செய் வான், அவனை யன்றிப் பிற ரொருவராலும், காத்தல் அழித்தல்

செய்யக் கூடா தென்று அறிந்து, அவ் விறைவன் செயலை நாடிப் பய மாதிக ளின்றி, ஞாந சமாதி கூட வேண்டு மென்று கூறிய வாறு காண்க.

'அருந்தவ விலக்கிவ் வுடற் பரிப்பது தான்' என்றதற்கு உதாரணம்: தேவாரம். (71) "நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன், றென்க டம்பைத்தி ருக்காக் கோயிலான், றன்க டன்னடி யேனையுந் தாங்குத, லென்க டன்பணி செய்துகி டப்பதே." எ - ம், 'திருந்துநஞ் சிந்தை சிவன்கணே யாவர் வரினும்' என்றதற்கு உதாரணம்: திரு மந்திரம். (72) "இருந்தவ ருந்தியெ ழிற்றவஞ் செய்யும், பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே, யிருந்திந் திரனே யெவரே வரினுந், திருந்துநஞ் சிந்தை சிவனவன் பாலே." எ - ம், 'சமாதி நிலை குலையாதோர் எண்ணிய வெண்ணியாங் கடைவர்' என்றதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம். (73) "எனக்கீ தென்னு முணர்வுடைமை யிடர் விட் டகலா துணர்வின்மை, யநர்த்த மில்லா வீடளிக்கு மாசை யேதிங் கதுசெய்வாய், சநிப்பில் சிவமெங் கணுமுளது சாந்தஞ் சுபஞ்சித் துருவென்னுங், கனத்த விந்த வொருநினைவே கருமத் தியாக மிராகவனே." எ - ம், வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க. (கக)

தேவர்மா முநிவ ரசுரர்வா ளரக்கர் சித்தர்வித் தியாதரர் முதலோர், யாவரும் விரும்பிச் சித்திபுத் திகளு மெட்டுணை யச்சமா தியவுண், மேவுறு தகற்றித் தவம் புரிந் தடைந்தான் மேலதா மூலபண் டார, மோவற வவையே குடிகொளென் போனெஞ் சுடையரா லடையவும் படுமே. (100)

ப - ரை. தேவர் - தேவர்களும், மா - மகத் தாகிய, முனிவர் - முனிவர்களும், அசுரர் - அசுரர்களும், அரக்கர் - இராக்கதர்களும், சித்தர் சித்தர்களும், வித்தியாதரர் - வித்தியாதாரும், முதலோர் யாவரும் - (என்று சொல்லாநின்ற) இவர்கள் முதலியவர்களும், சித்தி - (அஷ்ட மா) சித்திகளையும், புத்திகளும் - (மே லாகிய ஊர்த்த) போகங்களையும், விரும்பி - விரும்புங் காலை, அச்சம் - பயம், ஆதிய (ஆசை கோபம் அபிமாநம்) முதலியவை, எள் - எள், துணை - மாத்திர மாயினும், உள் - மநத்தின்கண் மேவுறாது - பொருந்தாது, அகற்றி - மாற்றி, தவம் - தவத்தினை, புரிந்து - பண்ணி, அடைந்தால் - (அவற்றினை) அடைந்தா ராலுல், மேலது ஆம் - (அந்தச் சித்தி புத்திகளுக்கு) மேலாய் உள்ள (வீட் டின்ப மாகிய), மூல பண்டாரம் - மூல பண்டாரத்தினை, அவை - அந்தப் பய முதலியவை, ஒவு - (தாமே) விட்டு, அற - நீங்காது, குடி - குடி, கொள் - கொண்டிருக்கின்ற, என் - என், போல் - போலும், நெஞ்சு - மநத்தினை, உடையரால் - உடையவரால், அடையவும் - அடையவும், படுமே - கூடுமோ, எ - று. 'மேலது' என்பதில், அது பகுதிப் பொருள் விகுதி. ஏ - அசை.

பொ - ரை. எ - து. தேவர்களும், மகத் தாகிய முனிவர் களும், அசுரர்களும், இராக்கதர்களும், சித்தர்களும், வித்தியாதாரு மென்று சொல்லாநின்ற இவர்கள் முதலியவர்களும், அஷ்டமா சித்திகளையும், மே லாகிய ஊர்த்த போகங்களையும், விரும்புங் காலைப், பயம் ஆசை கோபம் அபிமாநம் முதலியவை எண் மாத்திர மாயினும், மநத்தின்கட் பொருந்தாது மாற்றித், தவத்தினைப் பண்ணி, அவற்றினை அடைந்தா ராலுல், அந்தச் சித்தி புத்தி களுக்கு மேலா யுள்ள, வீட் டின்ப மாகிய மூல பண்டாரத்தினை, அந்தப் பய முதலியவை தாமே விட்டு நீங்காது, குடி கொண் டிருக்கின்ற என் போலு மநத்தினை யுடையவரால், அடையவுங் கூடுமோ, எ - று. (௧00)

ஒருவனுக் கிருளற் றுரியசிற் சொரூப முள்ளவா விளங்கினன் றறுமிப், பருவா லுருவப் பற்றுமற் றதுநேர் படுமள விறைபுரி தருமைங், கருமமெவ் விடத்துங் கண்டு தற் செயலைக் கைவிடுத் தச்சமா தியவுண், மருவுறு தகற்றித் தவஞ்செயல் வழக்கால் வாழியெங் குரவனீ டூழி. (101)

ப - ரை. ஒருவனுக்கு - ஒரு புருஷனுக்கு, இருள் - (அஞ்ஞான) இருட்டு, அற்று - நீங்கி, உரிய - (தனக்கு) உரிய, சித் - ஞான சொரூபம் - சொரூபம், உள்ள வா(று) - உள்ள படியே, விளங்கின் - விளங்கு மாயின், இ - இந்த, பருவரல் - துன்பம் செய்யாநின்ற, உருவ - தேக, பற்று - பற்று, அன்று - அன்றைக்கு, அறும் - நீங்கும், அது - அந்த ஞான சொரூபம், நேர் - (தனக்கு) நேராய் (வந்து), படும் - லபிக்கும், அளவும் - அளவும், இறை - இறைவன், புரிதரு - செய்யாநின்ற, ஐ - பஞ்ச, கருமம் - கிருத்தியங்களை, எவ் வீடத்தும் - எவ் விடத்திலும், கண்டு - பார்த்து, தன் - சீவ, செயலை - செயலை, கை விடுத்து - விட்டு நீங்கி, அச்சம் - பயம், ஆதிய - முதலிய துர்க் குணங்கள், உள் - மனத்தின்கண்ணே, மருவுறு - பொருந்தாது, அகற்றி - மாற்றி, தவம் - தவத்தினை, செயல் - செய்வதே, வழக்கு - முறைமையாம், எம் - எமது, குரவன் - ஞானாசாரியன், நீடு ஊழி - நீடு ஊழி (காலமும்), வாழி - வாழக் கடவன், எ - று. மற்று - ஆல் - அசை.

ஸ்ரீ காசிகாநந்த ஞானாசார்ய ஸ்வாமிகள்
இயற்றிய,
வைராக்ய தீபப் பத வுரை
முற்றுப் பெற்றது.

---

பொ - ரை. எ - து. ஒரு புருஷனுக்கு அஞ்ஞான விருட்டு நீங்கித், தனக் குரிய ஞாந சொரூபம் உள்ளபடியே விளங்கு மாயின், இந்தத் துன்பம் செய்யாநின்ற தேகப் பற்று அன்றைக்கு நீங்கும். அந்த ஞாந சொரூபம் தனக்கு நேராய் வந்து லபிக்கு மளவும், இறைவன் செய்யாநின்ற பஞ்ச கிருத்தியங்களை எவ் விடத்திலும் பார்த்தச், சீவச் செயலை விட்டு நீங்கிப், பய முதலிய துர்க் குணங் கள் மநத்தின்கண்ணே பொருந்தாது மாற்றித், தவத்தினைச் செய்வதே முறைமை யாம். எமது ஞாநாசாரியன் நீடூழி காலமும் வாழக் கடவன், எ - று, (க0க)

வைராக்ய தீபப் பொழிப் புரை
முற்றுப் பெற்றது.

---

வைராக்ய தீபம்
முற்றுப் பெற்றது.